# கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்

★

# நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்

★

# கிறிஸ்தவ ஜீவியம்

அருள்திரு. சா. பரமானந்தம் ஐயர்

# 1. கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்

**"கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல"**
**(ரோமர் 8:9)**

என் ஊழியத்தின் ஆரம்பத்தில் நான் தென் இந்தியாவிலுள்ள, பல சபைகளிலும் ஆவிக்குரிய கூட்டங்களை நடத்திவந்தேன். ஒரு கிராமத்துக்கு நான் போயிருந்தபோது அங்குள்ள சபையைப்பற்றி உபதேசியார் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். அவர் தேவ பக்தியுள்ளவர். அது புதிதாக கிறிஸ்து மார்க்கத்துக்கு வந்த சபை. அவர்கள் இந்துக்களாயிருந்தபோது அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வியாச்சியம் நடந்துகொண்டிருந்தது. இதிலே மிஷன்காரர் உதவி செய்து வெற்றி கிடைத்தால் தாங்கள் எல்லாரும் வேதத்தில் சேர்ந்துவிடுவதாக வாக்குக் கொடுத்தார்கள். வெற்றி கிடைத்தது. எல்லாரும் குடும்ப சகிதமாக வேதத்தில் சேர்ந்தார்கள். அவர்களுக்காக அங்கே ஒரு சிறு கோவிலும் கட்டப்பட்டது. உபதேசியார் என்னைப் பார்த்து : ஐயா, இவர்கள் மார்க்கத்தில் சேர்ந்த போதிலும் முன்னிருந்தபடியேதான் இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப்பட்டாலன்றி இவர்கள் மார்க்கத்தில் சேர்ந்ததில் பிரயோஜனமில்லை. அதைப்பற்றித்தான் நீங்கள் முக்கியமாய்ப் பிரசங்கிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதைப்போல் உண்டான சபைகள் பல.

நான் சிறுவனாயிருந்தபோது, ஒரு கிராமத்து ஜனங்களெல்லாரும் மேல் ஜாதியாருக்கும் தங்களுக்குமுள்ள நிலத்தகராறில் மிஷன்மூலம் வெற்றி பெற்றதால் வேதத்தில் சேர்ந்தார்கள். அக்கிராமத்துக்கருகில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த ஒரு வாய்க்காலில் காலஞ் சென்ற கால்டுவெல் அத்தியக்ஷரவர்



களும் பல குருக்களுமாகச் சேர்ந்து அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததை நான் கூடயிருந்து பார்த்தேன். கொஞ்சக் காலம் வேதத்திலிருந்தபின் மிஷனார் தங்களைக் கவனிக்கவில்லை என்று கோபித்துக்கொண்டு இவர்கள் மறுபடியும் இந்து மார்க்கத்துக்குப் போய்விட்டார்கள். இப்படிச் சேருகிறவர்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்து அவரை ஜீவனாக ஏற்றுக்கொண்டிருப்பார்களானால் என்ன நேரிட்டாலும் பின்வாங்க மாட்டார்கள். அவர்கள் இந்துக்களாயிருந்தபோதும் கிறிஸ்தற்றவர்களே, வேதத்தில் சேர்ந்த பின்பும் கிறிஸ்தற்றவர்களே. வருகிறவர்கள் குடும்பமாக வந்தாலும் சரி, கிராமமாக வந்தாலும் சரி, கிறிஸ்துவை அவர்கள் அறிந்து அவரை ரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அது அவர்களுக்கும் நல்லது; சபைக்கும் நல்லது. மூவாயிரம் பேர் சபையில் சேர்க்கப்பட்ட தெப்படி? முதலாவது அவர்கள் இரட்சகரிடம் சேர்ந்து, அப்புறம் சபையில் சேர்க்கப்பட்டார்கள். **"இரட்சிக்கப்படுகிறவர்களைக்** கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்" (அப். 2:47). "அநேக ஜனங்கள் **கர்த்தரிடமாய்ச்** சேர்க்கப்பட்டார்கள்" என்று திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது (அப். 11:21, 24). கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவருக்குள் பிழைப்பவர்களின் கூட்டமே சபையாகும்.

# 2. கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களால் சபைகளுக்குச் சங்கடம்

கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்கள் என்று சொல்லும்போது இந்துக்களாயிருந்து புதிதாக வேதத்தில் சேருகிறவர்களை மாத்திரம் குறிக்காது. கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்கள் சபைகளில் எக்காலமும் இருந்தே வருகிறார்கள். தங்களைக் **கிறிஸ்தவர்கள்**

என்று சொல்லிக்கொண்டபோதிலும் தேவ பார்வையில் அவர்கள் கிறிஸ்தில்லாதவர்களே. கிறிஸ்து மார்க்கத்துக்குரிய ஆராதனைகள் ஆசாரங்களை அவர்கள் அனுசரித்தபோதிலும் கிறிஸ்துவுக்கு அவர்கள் **ஜீவியத்தில்** இடமில்லாததால் அவர்களில் ரட்சிப்பின் **மாறுதல்** இல்லை. அவர்கள் பேச்சு, செய்கை, நடக்கையினாலே, அவர்கள் கிறிஸ்துவை உடையவர்களோ, கிறிஸ்தற்றவர்களோ என்பதை அறியலாம். உலகிலுள்ள மார்க்கங்களில் கிறிஸ்து மார்க்கமும் ஒன்று என்று மற்றவர்கள் பேசுகிறார்களேயன்றி இது தேவமார்க்கம், இது ரட்சிப்பின் மார்க்கம் என்பதை அவர்கள் அறியவில்லை. **கிறிஸ்தவர்கள்** என்னும் பேர் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டதல்ல. அவர் ஒரு **மார்க்கத்தை** உண்டாக்கும்படி வந்தவரல்ல. **கிறிஸ்துதான் கிறிஸ்து மார்க்கம்.** மகிமைக்கு வழி அவர் தான். தம்மை நம்பி ஏற்றுக்கொண்டவர்களை **சீஷர்** என்று அழைத்தார். அவர் அப்போஸ்தலரை அனுப்பின போது : "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் **கிறிஸ்தவர் களாக்குங்கள்** என்று சொல்லாமல், ***சீஷர்களாக்குங்கள்"*** என்று கட்டளையிட்டார். ***சீஷர்கள்*** என்பது தான் ஆண்டவர் தமது அடியாருக்குக் கொடுத்த பேர். சுவிசேஷத்திலும் நடபடிப் புஸ்தகத்திலும் **சீஷர்கள்** என்னும் சொல் ஏராளமாய் வருகிறது. கிறிஸ்தவர்கள் என்னும் சொல்லோ மூன்று இடங்களில் மாத்திரம் வருகிறது. அந்தியோகியாவில் ***சீஷர்களைக்*** கவனித்த மற்றவர்கள் இவர்களைக் **கிறிஸ்தவர்கள்** என்றார்கள். அகிரிப்பா பவுலைப் பார்த்து : நீ என்னைக் **கிறிஸ்தவனாக்கி** விடுவாய்போலிருக்கிறதே என்றான். பேதுரு பாடுபடும் **கிறிஸ்தவனைப்பற்றி** எழுதுகிறார். சீஷர்களாயிருப்பவர் களுக்குத்தான் கிறிஸ்தவர்கள் என்னும் பேர் தகுமேயன்றி, எல்லாருக்கும் தகாது. **ஒருவன் தன்னைக் கிறிஸ்தவன்** என்று சொல்வது லேசு; கிறிஸ்துவின் ***சீஷன்*** என்று சொல்லுவதோ



கஷ்டம். ஆண்டவரிடம் கற்றுக்கொண்டு அனுதினமும் அவர் பின்செல்லு அல்லது அவரைப் பின்பற்றுகிறவனே சீஷன். அப்படிப்பட்ட ***சீஷர்களைக்*** கொண்டுதான் ஆண்டவர் தமது **சபையை** ஸ்தாபித்தார். இன்று சபைகளில் இருக்கிறவர்கள் எப்படிப்பட்டவர்கள்? "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல." பின்னே, அவன் யாருடையவன்? கிறிஸ்தற்ற மனுஷர் தங்கள் ஜென்ம சுபாவத்தைக் காண்பிப்பார்களேயன்றி வேறு விதமாய் நடக்க முடியாது. சபையில் காணப்படும் சகல குழப்பங்களுக்கும் விரோதங்களுக்கும் இவர்கள் காரணமாயிருக்கிறார்கள்.

## 3. குருக்களுக்கும் சபையாருக்குமுள்ள சம்பந்தத்திலும் சங்கடங்கள் உண்டு

**சபையார்** ஆண்டவருக்கு உகந்தவர்களாய் நடந்து கொள்ளவேண்டும் என்று நாம் விரும்புவது போலவே, **குருக்களும்** ஆண்டவருக்குப் பிரியமான ஊழியம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறோம். **கிறிஸ்தற்ற** சபையார் நடுவில் ஒரு நல்ல போதகர் வேலை செய்வாரானால் அவர் கவலைக்கு அளவிராது. தேவபக்தியுள்ள ஓர் சபையில் உதவாத போதகர் ஒருவர் இருப்பாரானால் சபையார் சஞ்சலப்படாதிருக்க மாட்டார்கள். யாழ்ப்பாணத்தில் எனக்குத் தெரிந்த இரண்டு மூன்று குடும்பத்தார் சபையைவிட்டு விலகித் தங்கள் வீடுகளிலேயே ஆராதனையை நடத்திக்கொண்டிருந்தார்கள், சபையை விட்டு ஏன் பிரிந்தீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள்: அந்தப் போதகருடைய ஜீவியத்தில் கிறிஸ்து இல்லை. அவர் நடத்தும் ஆராதனை பிரசங்கங்களில் ஆவியுமில்லை, ஜீவனுமில்லை. எவ்வளவு காலத்துக்கு இந்தச் சித்திர வதையைச் சகித்துக்கொண்டிருப்பது? நாங்கள் சபையை விட்டு

விலகி ஒருமனதோடு ஆண்டவரைத் தொழுதுவருகிறோம். அவர் எவ்வளவோ கிருபையாய் எங்களை நடத்தி வருகிறார் என்றார்கள். சபைகளிலுள்ளவர்கள் எழுப்புதலுள்ள ஆவியின் கூட்டத்தாரோடு சேர்ந்துகொள்ள விரும்புவதற்குக் காரணம் இதுதான். கிறிஸ்தற்ற சபைகளுக்கு கிறிஸ்தற்ற ஊழியர்களின் குறைவு தெரியாது. ஜீவன் பெற்ற தேவமக்கள் ஒரு நிமிஷத்தில் கண்டுகொள்வார்கள். இப்படியிருக்க ஒரு சபையில் கிறிஸ்தற்ற போதகரும், கிறிஸ்தற்ற சபையாரும் இருந்தால் நிலைமை எப்படியிருக்கும்?

## 4. கிறிஸ்தற்ற போதகரும் கிறிஸ்தற்ற சபையாரும்

இதைப்போல் மோசமும் பரிதாபமுமான விஷயம் வேறில்லை. மிஷனெரிமார் பிரியத்தினாலோ சபையாரின் அழைப்பினாலோ போதகர்களாக ஏற்படுத்தப்படுகிறோம். நமக்குள் **கிறிஸ்துவை** ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவருக்கென்றே பிழைக்கும் உத்தம ஊழியர்களுமுண்டு. அநேகர் பட்டம் பெற்றபோதிலும் அவர்களில் ரட்சிப்பின் மாறுதல் இல்லை. ஆண்டவர்மீது அன்பில்லை. ஆத்தும வாஞ்சை இல்லை. ஆராதனைகள் சிறப்பாய் நடக்கலாம். பிரசங்கம் சாமர்த்தியமாய்ச் செய்யப்படலாம். என்றாலும் உள்ளத்தை அசைக்கும் தேவாவியின் வல்லமை காணப்படுவதில்லை. நாம் வேத சாஸ்திரம் கற்று, பட்டம் பெறுவதாலே தேவ ஊழியராகமாட்டோம். ஆண்டவர் பேதுருவைப் பார்த்து: உனக்கு என்பேரில் **அன்புண்டா** என்று கேட்டுத் தமது ஊழியத்தில் ஈடுபடுத்தினார். ஒருவன் எனக்கு ஊழியம் செய்ய விரும்பினால் **"என்னைப் பின்பற்றக் கடவன்"** என்றார். அன்புடன் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் உத்தம ஊழியனாவான்.



கிறிஸ்தற்ற போதகர்களுக்கு ஜனங்களை வசப்படுத்தக் கூடிய சாமர்த்தியமுண்டு. சபையாரைச் சந்திப்பதில் தவறார்கள். எந்தெந்தக் குடும்பத்தில் எப்படிப் பேசவேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும். அவரவருக்குப் பிரியமாகப் பேசி அவர்கள் அனுதாபத்தையும் சிநேகத்தையும் சம்பாதித்துக் கொள்வார்கள். கிறிஸ்தற்ற சபையாருக்குத் தங்களைப்போன்ற போதகர்கள் மேல் அதிகப் பற்றுதல் உண்டு. உற்சாகமாகக் காணிக்கை கொடுப்பார்கள். போதகர் இஷ்டம்போல் நடப்பார்கள். இப்படிப்பட்ட போதகர்களுக்கும் சபையாருக்குமுள்ள சிநேகம் உலக சம்பந்தமானதேயன்றி தேவ அன்பினாலும் ஆவிக்குரிய ஐக்கியத்தாலும் உண்டானதல்ல. நாம் கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவரை அறிகிற அறிவில் வளருவோமானால், அவரது அன்பினால் நிறைந்து ஆத்ம வாஞ்சைகொண்டிருப்போமானால், சபையாரின் ரட்சிப்பைக் குறித்து அதிகக் கவலையுள்ளவர்களாயிருப்போம். நமது ஊழியத்தின் பலனாக அநேகர் ரட்சிக்கப்படுவார்கள். கிறிஸ்தற்ற குருமாரின் ஊழியத்தில் **ரட்சிப்பின் நோக்கம்** இராது. வைத்திய சாஸ்திரம் கற்றுக்கொள்ளுகிறவர்களின் நோக்கம் அநேகமாய் **சம்பாத்தியமே தவிர** நோயாளிகளைக் குணமாக்கும் ஒரே நோக்கமுள்ளவர்கள் அபூர்வம். தேவ ஊழியராகிய நமது நோக்கம் சம்பாத்தியமாயிருக்குமானால், அதுவே நமது கண்ணும் கருத்துமாயிருக்கும்; ஊழியம் கடமையாயிருக்கும். நம்மில் ரட்சிப்பின் மாறுதலோ நிச்சயமோ இல்லாத போது, மற்றவர்களுடைய ரட்சிப்புக்காக எப்படிக் கவலைப்படக்கூடும்? நாம் எவ்வளவு திறமையாக வேலை செய்தாலும் அது மாம்ச முயற்சியேயல்லாமல் ஆவியின் ஊழியமாகாது. உலகத்தில் மனுஷர் பற்பல வேலைகளைச் செய்து வருகிறதுபோல நாமும் செய்து வருகிறோம். ஆனால் அவர்களுக்குள்ள அவ்வளவு ஜாக்கிரதையும் கருத்தும்

ஆண்டவர் ஊழியத்தில் நமக்கில்லை. உலகில் பிரயோஜனமற்ற ஊழியனை எஜமான் வைத்திருக்க மாட்டான். கர்த்தருடைய ஊழியத்திலோ உதவாதவர்கள் காலமெல்லாம் இருந்து கெடுக்கிறார்கள்.

இப்படிப்பட்ட குருமார் வேலை செய்த சபைகளில் கிறிஸ்துவின் உத்தம ஊழியர் வருவார்களானால், கிறிஸ்தற்ற சபையார் ஜென்ம சுபாவத்தாராயிருப்பதால் இவர்களுடைய அருமை அவர்களுக்குத் தெரியாது. முந்தின போதகர்களையும் அவர்கள் பேசின விகடங்களையும் நினைத்து மெச்சிக் கொள்வார்கள். ஆகா, அவர் எவ்வளவு நல்லவர், எவ்வளவு கனிவாய்ப் பேசுவார், இவர் அவரைப்போல் இல்லை என்பார்கள். “தங்கள் இச்சைக்கேற்ற போதகர்கள்” மேல் இவர்களுக்குப் பற்றுதல் அதிகம். ஆவிக்குரிய ஊழியர்களையோ வெறுப்பார்கள். மாம்சத்துக்குரிய யூதர்கள் ஆவிக்குரிய ஆண்டவரை அறியாமல் தானே அவரைப் பகைத்துக் கொன்றார்கள். சபைகளுக்கு ஆண்டவர் **தெரிந்தெடுத்து** அனுப்பும் ஊழியர்கள் பாக்கியவான்கள். அவர்களை ஏற்றுக்கொள்ளும் சபைகளும் பாக்கியமுள்ளவைகள்.

## 5. குருப்பட்டத்தின் நோக்கம் என்ன?

குருமாரான நமக்கு காலைமாலை ஆராதனைகள் நடத்துவதும், ஞானஸ்நானம் கொடுப்பதும், நற்கருணை பரிமாறுவதும், கலியாணம் முடிப்பதும், மரித்தவர்களை அடக்கம் செய்வதும், ஜெபக் கூட்டங்களை நடத்துவதுமான பல வேலைகள் உண்டு. இவைகளை ஒழுங்காய் நடத்தும்போது நாம் திருப்தியடைகிறோம். சபையாருக்கும் தேவ ஊழியம் நடந்தேறுவதாகத் தோன்றும். புறம்பான இவ்வேலைகளை நிறைவேற்றுவதே நமது ஊழியத்தின் **முடிவான நோக்கமல்ல.** **குருப்பட்டம் பெறாத** யாராவது ஒரு சகோதரன்



இவ்வேலைகளை நம்மை விடத் திறமையாய்ச் செய்யவுங் கூடும். அப்படியானால் அபிஷேகம் பெற்ற குருக்களாக நாம் விசேஷித்துச் செய்கிறதென்ன? “என் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்” என்று ஆண்டவர் சொன்னார். பிதா தமது குமாரனை எதற்காக அனுப்பினார்? நம்மைப்போல் ஆராதனைகளை நடத்தும் படிக்கல்ல. பாவிகளை **ரட்சிக்கும் படிக்கே** அனுப்பினார். ஆண்டவர் உலகத்தில் எத்தனையோ மகத்தான அற்புதங்களை நடப்பித்திருந்தும், உன்னதமான சத்தியங்களைப் போதித்திருந்தும், நமது ரட்சிப்புக்கான **வழியை** உண்டாக்காமற்போனால் பிதா அவரை அனுப்பின **நோக்கத்தில்** தவறினவராவார். அதே நோக்கத்துடன் ஆண்டவர் நம்மையும் அனுப்பியிருக்கிறார். சபையார் **கிறிஸ்து** மூலமாய் ரட்சிக்கப்படும்படி நாம் உழைக்காவிட்டால் நமது வேலைகள் யாவும் வியர்த்தமாகும். நாம் ரட்சிக்கிறவர்கள் அல்ல; கர்த்தரே ரட்சிக்கிறவர். ஆனால் சபையார் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப்படும்படிக்கு நாம் அன்போடும் ஆவியின் பலத்தோடும் ரட்சிப்பின் வழியைத் தெளிவாய் எடுத்துக்கூற வேண்டும். உத்தம ஊழியத்தை ஆண்டவர் கூடயிருந்து ஆசீர்வதிக்கிறார். ஆயிரம் ஆராதனைகள் நடந்தாலும் சாத்தான் சட்டைபண்ண மாட்டான். ஆனால் ஒரு ஆத்துமா ரட்சிக்கப்படுவதையோ அவன் சகிப்பதில்லை.

சபையார் ரட்சிக்கப்பட்டு ஆண்டவருக்குப் பிரியமாக நடந்துகொள்ளாததினாலேதான் சபைகளில் குழப்பங்களும், போராட்டங்களும், விரோதங்களும், பிரிவினைகளும் காணப்படுகின்றன. ஆலயம் நிறைய ஜனங்கள் கூடி, ஆரவாரத்தோடு ஆராதிப்பதைக் கண்டு திருப்தி யடைந்துவிடக் கூடாது. அவர்கள் நடக்கையில் மாறுதலுண்டா? கிறிஸ்துவின் சிந்தை அவர்களில் காணப்படுகிறதா என்று பார்க்கவேண்டும்.

நான் சிறுவனாகச் சேர்ந்திருந்த சபையில் காலை மாலை ஆராதனை ஒழுங்காய் நடக்கும். ஞாயிறுதோறும் நற்கருணை பரிமாறப்படும். பண்டிகைகளும் பரிசுத்தவான்கள் திரு நாட்களும் சிறப்பாய்க் கொண்டாடப்படும். ஆனால் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொள்வது, ரட்சிப்பின் மாறுதலடைவது, ஆவியின் வல்லமை பெறுவது, அன்பாய் நடந்துகொள்வது முதலான பிரதான சத்தியங்கள் போதிக்கப்படுவதில்லை. கண்ட பலன் என்ன? சபையார் பற்பல பாவங்களால் மேற்கொள்ளப்பட்டுக் கெட்டார்கள். உலக மக்களானார்கள். கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கத்தின் முடிவு அதுதான்.

## 6. மிஷனெரிகள் வேலை

மிஷனெரிமார் நம் தேசத்தில் செய்துள்ள வேலைகளை மறக்க முடியாது. அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்களும், கல்விச்சாலைகளும், ஆஸ்பத்திரிகளும், கைத்தொழிற்சாலை களும் ஞாபகசின்னங்களாக இருக்கின்றன. மேல் வகுப்பாரால் ஒடுக்கப்பட்டுத் தவித்த குடும்பங்களும், கிராமங்களிலுள்ள ஏழை ஜனங்களும் அடைந்த மாறுதல்கள் கொஞ்சமல்ல. மிஷனெரிமார் இவர்களைச் சபைகளில் சேர்த்து, மிகுந்த பணத்தைச் செலவு செய்து கல்வியைப் புகட்டினார்கள். வேத சாஸ்திரத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். மற்றவர்களால் அற்பமாக எண்ணப்பட்ட இவர்களிலிருந்து புறப்பட்ட போதகர்கள் எத்தனை! பிரசங்கிகள் எத்தனை! உபாத்தியாயர்கள் எத்தனை! வைத்தியர்கள் எத்தனை! சர்க்கார் அதிகாரிகள் எத்தனை! “பழையவைகள் ஒழிந்தன, சகலமும் புதிதாயின”. பெற்றுக்கொண்ட கல்விக்கும் சம்பாத்தியத்திற்கும் தக்கபடி உடை நடை பாவனைகளில் மேன்மையும் நாகரீகமும் பெற்றோம். ஓர் காலத்தில் நம்மை அடக்கி ஒடுக்கி



அதிகாரத்துடன் வேலை கொண்ட மேல் வகுப்பார் அதிகாரிகளான நமக்கு முன்பாக வாய்பொத்தி, கைகட்டி, பயபக்தியுடன் நிற்பதும் உண்மையல்லவா? நம்மைத் தேடி வருகிறவர்களும் நமது தயவை நாடி வருகிறவர்களுமான இந்து சிநேகிதர் எத்தனை! இவைகளை நினைக்கும்போது “என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி, என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே” என்று போற்றக் கடனாளிகளாயிருக்கிறோம்.

இது வாழ்க்கையில் முன்னேற்றம். வாழ்க்கையின் **முன்னேற்றத்தை** பக்தி மார்க்கம் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. அவபக்தர்களான அநேகர் மேலான பதவிகளிலிருந்து செல்வமாய் வாழுகிறதைக் காண்கிறோம். மிஷனெரிமார் குருக்களுடைய ஊழியம் இந்தப் புறம்பான சீர்திருத்தங்களோடு முடிந்துபோகவில்லை. இரட்சகர் இந்தப் புறம்பான அந்தஸ்தையும் நாகரீகத்தையும் கொடுக்கும்படி தமது ஜீவனை விட்டவரல்ல. பணமுண்டானால் இப்படிப்பட்ட முன்னேற்றத்தை யாரிடத்திலும் காணலாம். பணம் பாவிகளை ரட்சிக்காது. ஓர் சமயம் ஒரு பிராமண உத்தியோகஸ்தரிடம் கிறிஸ்துவைப்பற்றிப் பேசினபோது அவர் : எங்களுக்கேன் உபதேசிக்கிறீர்கள்? பகவான் செயலால் எங்களுக்கொரு குறைவுமில்லை. அந்தத் தாழ்ந்த வகுப்பாரை வேதத்தில் சேர்த்து, அவர்களை **முன்னுக்குக்** கொண்டுவாருங்கள் என்றார். அவர் கண்ட கிறிஸ்து மார்க்கம் அவ்வளவுதான். அவரைப்போலவே அநேகர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேதத்தில் சேர்ந்தால் படிப்பு, உத்தியோகம், பிழைப்பு, கலியாணம் நடக்கும் என்று பொதுவாய்ப் பேசிக்கொள்ளு கிறார்கள். அவைகளல்ல, அவைகளைப் பார்க்கிலும் மேலான ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம் என்று காட்ட

வேண்டியது நமது கடமை. அப்படிப்பட்ட ரட்சிப்பின் மாறுதல் நம்மில் உண்டா? இல்லையென்றால் இந்தக் கல்வியும், அந்தஸ்தும், சம்பாத்தியமும் மேட்டிமைக்கும் சகலவித சங்கடங்களுக்கும் ஏதுவாகும். இப்படிப்பட்டவர்களாலே சபைகளில் குதர்க்கங்களும் பிரிவினைகளும் உண்டாகிற தென்பதை அறிவோம். அந்தஸ்தில் உயர்ந்தோமே தவிர ஆவியில் உயர்ந்தோமில்லை. ஆகையால் மிஷனெரிமார் எவ்வளவுக்குப் புறம்பான நன்மைகளைச் செய்கிறார்களோ, அவ்வளவுக்கு அதிகமாய் தங்கள் விசாரணைக்குட் பட்டவர்களின் **ஆத்ம ரட்சிப்புக்காக** உழைக்கவும் வேண்டும். பற்பல வேலைகளை மேல்விசாரணை செய்வதும், சம்பளம் போடுவதுமே தங்கள் வேலை என்று நினைக்கக்கூடாது. தேவ பக்தியுள்ள ஒரு மிஷனெரி : "வேலைகளை மேல் பார்க்கவும் சம்பளம் போடவுமா நான் சீமையிலிருந்து இந்தியாவுக்கு வந்தேன்? மற்றவர்களைக் கிறிஸ்துவிடம் நடத்துகிறதற்கல்லவோ நான் என்னை ஆண்டவருக்குப் பிரதிஷ்டை செய்து வந்தேன்" என்று விசனத்தோடே கூறினார். நமதாண்டவர் ஊழியர்களை ஏற்படுத்தி மேல் விசாரணை செய்யும்படி வந்தவரல்ல. அவர் தாமே இடைவிடாது உழைக்கும் ஊழியனாக வந்தார். "நான் ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவே வந்தேன்" என்றார்.

## 7. வேறு வேலைகள் கூடாதா?

அப்படியானால் குருப்பட்டம் பெற்றவர்கள் வேறு **வேலைகளில்** இருக்கக்கூடாதோவென்று கேட்கலாம். தடையின்றி இருக்கலாம். அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் சபைகளில் மாத்திரமல்ல, பற்பல துறைகளிலும் வேலை செய்யவேண்டியது **அவசியம்.** இது அவர்களுக்குப் பெரிய **சிலாக்கியம். குருப்பட்டம்** பெற்ற மிஷனெரிமார் போதகர்கள்,



கல்விச் சாலைகளில் உபாத்திமார்களாகவும், கைத்தொழிற் சாலையின் தலைவர்களாகவும், விவசாயத் தொழில் பயிற்றுவிக்கும் உத்தியோகஸ்தராகவும், அச்சு வேலையை நடத்தும் அதிகாரிகளாகவும் இருந்து வருகிறார்கள். அவர்கள் இவ்விதமான வேலைகளில் ஈடுபடுவது தவறென்று நாம் ஒருக்காலும் சொல்ல முடியாது. பவுல் கூடார வேலை செய்யவில்லையா? எல்லா விடங்களிலும் ஆண்டவருக்குச் **சாட்சிகள்** வேண்டும். எல்லாரும் ஆராதனைக்குப் போகிறவர்கள் அல்ல. ஆகையால் ஒரு போதகருக்கில்லாத சிலாக்கியமும் சந்தர்ப்பமும் பற்பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் தேவ ஊழியர்களுக்குக் கிடைத்திருக்கிறது. கூடார வேலை செய்த பவுலுக்கு ஆத்துமாக்கள் ரட்சிக்கப்பட வேண்டுமென்பதுதான் அவர் ஜீவியத்தின் ஒரே நோக்கமாயிருந்தது. நாம் எந்த வேலையிலிருந்தாலும் மற்றவர்களை ஆண்டவரிடம் நடத்தும் வாஞ்சையுள்ளவர் களாயிருக்க வேண்டும். கிறிஸ்து நமக்குள் வசிப்பது உண்மையானால் **ஆத்ம வாஞ்சை** தானாகவே வரும். இதிலே நாம் தவறுவோமானால் மற்ற வேலைகளை நடத்துவதில் நாம் எவ்வளவு சாமர்த்திய முள்ளவர்களா யிருந்தாலும், ஆண்டவர் அழைத்த அழைப்பும், நாம் பெற்றுக்கொண்ட குருப்பட்டமும் வீணாகும். இப்படிப்பட்ட புறம்பான வேலைகளை மாத்திரம் செய்தால் போதும் என்று நினைப்போமானால் குருப்பட்டம் பெறாத திறமைசாலிகள் நமக்குள் இருக்கவேயிருக்கிறார்கள். ஓர் மிஷன் பாடசாலையில் மாணாக்கருக்கு **வேதபாடம்** கற்பிக்க இந்து உபாத்தியாயர் ஒருவரை ஏற்படுத்தியிருந்தார்கள். மற்றப் பாடங்களைப் போலவே வேத பாடத்தையும் அவர் திறமையாகக் கற்றுக் கொடுத்தார். ஆனால் மாணாக்கரில் ஒருவரையாவது ரட்சிப்பின் வழியில் அவர் நடத்தினவரல்ல. அவரைக் குற்றப்படுத்த முடியாது. ஏனென்றால் அவர் கிறிஸ்துவை

அறிந்தவருமல்ல, ரட்சிக்கப்பட்டவருமல்ல. ஆனால் குரு அபிஷேகம் பெற்றவர்கள் தங்கள் விசாரணைக்குட் பட்டவர்களின் ரட்சிப்புக்காக கவலைப்படாமல், புறம்பான வேலைகளைச் செய்வதே போதும் என்றிருந்தால் அவர்கள் அபிஷேகம் பெற்றது எதற்காக? நாம் எந்த வேலையிலிருந்தாலும் கிறிஸ்துவோடுள்ள **அன்பிலும் ஐக்கியத்திலும்** நிலைத்திருப்போமானால் நாம் அறியாமலே நமது ஜீவியம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும். நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்கும்படி ஆண்டவர் அருள் செய்வார்.

தேவ ஊழியத்தை நிறைவேற்றும்படி குருப்பட்டம் பெற்றவர்களில் சிலர் உலக விவகாரங்களில் அதிகச் சிரத்தையுள்ளவர்களா யிருக்கிறார்கள். கட்சிகளை வைத்துக் கொண்டு விசாரணை செய்வதிலும், நியாயஸ்தலம் சென்று வழக்காடுவதிலும், வீடுகள் நிலங்கள் வாங்குவது விற்பதிலும் அதிக உற்சாகமுள்ளவர்கள். ஜனங்கள் தங்கள் வழக்குகள் பிராதுகளை எடுத்துக்கொண்டு இவர்களிடம் வந்தவண்ண மாயிருப்பார்கள். கர்த்தருடைய ஊழியத்தைப் பார்க்கிலும் இப்படிப்பட்ட காரியங்களில் இவர்களுக்குப் பிரீதி அதிகம். ஆவிக்குரிய ரட்சிப்பின் வேலையில் இவர்கள் படுமோசம். மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரிய வேலையை எப்படிச் செய்ய முடியும்? இவர்களுக்குள்ள அறிவையும் திறமையையும் நாம் பாராட்டுகிறோம். ஆனால் இவர்கள் தங்களை ஆண்டவருக்குப் பூரணமாய் ஒப்புக்கொடுத்து, தங்கள் வரங்களை சபையாரின் ரட்சிப்புக்கென்று உபயோகிப்பார்களானால் எவ்வளவோ பாக்கியம்! அப்படி யில்லையென்றால் இந்த ஊழியத்தை விட்டு விலகி, தங்கள் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற வேறு வேலைகளைத் தெரிந்துகொண்டு, தங்கள் பிழைப்பை நடத்துவது உத்தமம். அப்படிச் செய்யாமல் கிறிஸ்தற்ற ஊழியர்களாகிய இவர்கள் வழக்கம்போல் வேலை



செய்துகொண்டு போவார்களானால் சபைகள் பாழாய்ப் போகும். உத்தம ஊழியர்கள் இருந்து வேலை செய்யவேண்டிய சபைகளில் **கிறிஸ்தற்ற** குருக்கள் இருப்பதைப்போல் மோசமான காரியம் வேறில்லை. இவர்களைப்போலவே சபையாரும் உலக மக்களாகிறார்கள்.

## 8. குருமாருக்கு இக்காலத்தில் மதிப்பில்லையா?

வேதபாரகர் பரிசேயர் ஜனங்களிடமிருந்து வந்தனங் களையும், ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் **“விரும்பினார்கள்”** என்பதை ஆண்டவர் கடிந்துகொண்டார். உத்தம ஊழியர்கள் அவைகளை விரும்புவதில்லை. அவர்களுக்குப் புகழ்ச்சியும் சரிதான், இகழ்ச்சியும் சரிதான். ஆனால் தேவ ஊழியர்களை மதித்து அவர்களிடத்தில் அன்பாயிருப்பது தேவ மக்களின் லட்சணம். அது அவர்களுக்கு ஆசீர்வாதம். குருக்களுக்கு ஓர் காலத்திலிருந்த மதிப்பு இப்பொழுது இல்லை என்பதும் உண்மைதான். அக்காலத்தில் சபையார் தங்கள் போதகர்களைக் காண்பார்களானால்: “ஸ்தோத்திரம் ஐயா” என்று பணிந்து வணக்கம் செய்வதல்லாமல் அதிகம் பேசமாட்டார்கள். போதகர் ஏதாகிலும் விசாரித்தால் ஆணாகிலும் பெண்ணாகிலும் பயபக்தியோடே பதில் சொல்லுவார்கள். குருக்களும் சபையார் மேல் அன்பு வைத்து ஊக்கமாய் வேலைசெய்து வருவார்கள். சபையாருக்கும் போதகருக்குமுள்ள சம்பந்தம் தகப்பனுக்கும் மக்களுக்குமுள்ள சம்பந்தம்போலிருக்கும். குருமாரே சபைக் காரியங்களில் சகல அதிகாரமுள்ளவர்களாயிருந்தார்கள். கமிட்டித் தொந்தரவுகள் கிடையாது. கலெக்டர், தாசில்தார் முதலான சர்க்கார் உத்தியோகஸ்தருக்குள்ள மதிப்பைவிட சபையார் தங்கள் போதகர்களை அதிகமாய் மதித்து வந்தார்கள். அந்த

அருமையான காலம் மறைந்தது. காரணம் என்ன? சபையாரின் மதிப்புக்கு அபாத்திரரான மனுஷர் போதகர்களாக இருப்பதினாலேயா? அல்லது சபையார் கல்வியிலும் சம்பாத்தியத்திலும் உயர்ந்து மேட்டிமை கொண்டதினாலேயா? காரணம் இருபக்கத்திலும் இருக்கலாம்.

சமீபத்தில் நான் ஒரு போதகரைப் பார்த்து: நீங்கள் நல்ல வயதும் பலமும் சுகமுமாயிருக்கிறீர்களே; பின்னை ஏன் வேலையை விட்டு நீங்கினீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் : **கமிட்டிமார்** கையில் நான் பட்டபாடு போதுமென்று வேலையைவிட்டு விலகினேன். இப்போது மாதச் சம்பளம் இல்லாதே போனாலும் எவ்வளவோ சமாதானத்தோடிருக்கிறேன் என்றார். கமிட்டிமாராலே சங்கடங்கள் விளைவது போலவே **சபையாராலும்** குருக்களுக்குச் சஞ்சலங்கள் நேரிடுகின்றன. **திருநெல்வேலியில்** C.M.S. குருவாகயிருந்து காலஞ்சென்ற தாவீது ஐயர் தம்மை **ஒரு மந்தைக்கல்** என்று சொல்லுவார். அருத்த மென்னவென்று கேட்டால்: ஊர் மாடுகளை வீடுகளிலிருந்து அவிழ்த்துவிட்டவுடனே அவைகளெல்லாம் சேர்ந்து கிராமத்துக்குச் சமீபமாயுள்ள ஓர் இடத்தில் மந்தையாகக்கூடும். அங்கே ஒரு கல் நட்டப்பட்டிருக்கும். அங்கே கூடுகிற மாடுகள் நமைச்சலுள்ள தங்கள் உடம்பை அந்தக் கல்லில் தேய்த்துவிட்டு மேய்ச்சலுக்குப் போகும். அதுபோல நானும் சபையிலுள்ள பலரும் தேய்க்கும் மந்தைக்கல் போலிருக்கிறோம் என்பார். **யாழ்ப்பாணத்தில்** கல்விமானான ஒரு போதகர் இருந்தார். அக்காலத்தில் அவரோடே நான் பேசிக்கொண்டிருக்கையில் அவர் பெருமூச்சுவிட்டு: நான் ஒரு **கால்பந்து** என்றார். அது என்னவென்று கேட்டதற்கு அவர் : பிள்ளைகள் கால்பந்து உதைத்து விளையாடுகிறதில்லையா? அந்தப் பந்து எப்பக்கம் போனாலும் உதைக்குத் தப்பாது. அதேபோல சபையிலுள்ள பலராலும் நான் உதைபடுகிறேன் என்றார். ஐயோ, பரிதாபம்!



ஒரு பெரிய சபையில் பணச்செருக்குள்ள ஒரு தலைவர் இருந்தார். அவர் தெய்வ பயமற்றவர். அவருடைய மனைவி வியாதியாயிருந்தார். போதகர் அந்தம்மாளைப் பார்க்கும்படி வீட்டுக்குள் பிரவேசித்தபோது அவர் போதகரைப் பார்த்து : மனுஷா, இப்போத்தானா உன்கண் திறந்தது? அம்மா வியாதியாயிருக்கிறார்களே, உடனே வந்து பார்க்கக்கூடாதா? நான் கொடுத்துத் தானே, நீ தின்னனும் என்று பலவாறாய்த் திட்டினார். சற்றுப் பொறுத்து போதகர் முழங்கால் படியிட்டு கண்ணீர் சிந்தி ஜெபம் பண்ணினார். தன் மனைவிக்காகக் கண்ணீர் விடுகிறாரென்று ஐயா நினைத்துக்கொண்டார். போதகரோ, இந்த வேலை செய்வதில் இப்படியெல்லாம் ஏச்சுப் பேச்சுக் கேட்கவேண்டியதிருக்கிறதே கடவுளே! என்று உள்ளம் உடைந்து கண்ணீர் விட்டமுதாரேயல்லாமல் மற்றப்படியல்ல.. இந்த விஷயத்தை அந்தப் போதகரே எனக்குச் சொன்னார். ஒரு குருவைப் பார்த்து: உங்கள் மக்களில் யாராவது குரு வேலைக்கு வருகிறார்களாவென்று கேட்க, அவர் : எனக்கு விருப்பந்தான், ஆனால் என் மக்கள் என்னைப் பார்த்து: அப்பா, நீங்கள் சபையில் படுகிற பாடுகளைக் கண்டபின் நாங்கள் எப்படி அந்த வேலையை விரும்புவோம் என்கிறார்கள் என்றார். **கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கமே** இவ்வளவு கேட்டுக்கும் நிந்தைக்கும் காரணம். யாருக்குள் தெய்வ பயமில்லையோ அவர்கள் மனுஷரை மதிக்கமாட்டார்கள். அந்த அநீதியுள்ள நியாயாதிபதியைப்போல "தேவனுக்குப் பயப்படாதவர்களும் மனுஷரை மதியாதவர்களுமான" ஆட்கள் சபைகளில் இருக்கிறார்கள். அவர்களால் உண்டாகும் குழப்பங்களும் கலகங்களும் மிகுதி.

போதகர்கள் சகலத்தையும் சகிப்பவர்கள் என்பதினாலே சபையார் அவர்களுக்கு விரோதமாக எதையும் பேசலாம்,

எதையும் செய்யலாம் என்று துணிவு கொண்டிருக்கிறார்கள். நமது பொறுமையைக் கோழைத்தனமென்று நினைக்கிறார்கள். நான் சிறுவனாயிருந்தபோது **தடிக்கம்புப்** போதகர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு விரோதமாக யாராவது எழும்பினால், தங்கள் அங்கியையும் அங்கியின்மேல் கட்டியிருக்கும் கறுப்புக் கயிற்றையும் கழற்றி ஓரிடத்தில் வைத்துவிட்டு, ஐயர்ப் பட்டமே! கொஞ்ச நேரம் நீ இங்கேயிரு என்று சொல்லி, தடிக்கம்பை எடுத்துக்கொண்டு: யார் பேசினவன்? இப்போ வந்து பார் என்று கர்ச்சிப்பார்களாம். அப்படிப்பட்ட தடிக்கம்புக் கிறிஸ்து மார்க்கம் இக்காலம் இல்லை. நாம் அப்படிச் செய்கிறதாயிருந்தால் அது ஆண்டவர் சிந்தைக்கு விரோதமும், தீமையைச் சகித்துக்கொள்ளவேண்டுமென்று நாம் போதிப்பதற்கு விரோதமாகவுமிருக்கும். போதகர் ஊழியத்தில் பாடுகள் இருப்பதுபோலவே, தேவமக்கள் மூலமாய் அவர் அருளும் ஆறுதல்களும் உண்டு என்பது நிச்சயம்.

## 9. குருக்களும் பாடுள்ள மனுஷர்தானே

போதகர்கள் பரத்திலிருந்து தோன்றிய **அசரீரிகள்** அல்ல. அவர்கள் சபையாரைப்போலவே பாடுள்ளவர்கள். அவர்களுக்கும் பலவிதக் கவலைகளும் கஷ்டங்களும் உண்டு. என்றாலும் அவர்கள் சோர்ந்து போகாமல் ஆண்டவருடைய வேலையை உத்தமமாய் ஒழுங்காய் நிறைவேற்ற வேண்டியவர்கள். தங்கள் ஊக்கமான ஊழியத்தால் ஆலயத்தில் கூடிவரும், பல நிலைமையுள்ள ஜனங்களைக் கிறிஸ்துவுக்குள் ஊன்றக் கட்டவேண்டியவர்கள். தங்களுக்குள்ள குடும்பக் கஷ்டங்களை தேவபலத்தால் சகித்துக்கொண்டு, அவருடைய கிருபையைச் சார்ந்து, பற்பல கவலைகளாலும் பாடுகளாலும் மனஞ்சோர்ந்து தவிக்கும் மக்களை, தங்கள் ஊக்கமான ஜெபத்தாலும் திருவசனப் போதனையாலும் உயிர்ப்பித்து,



அவர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்த வேண்டியவர்கள். கவலையோடும் மனவேதனையோடும் ஆராதனைக்கு வந்தவர்கள் மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் வீடுகளுக்குத் திரும்பும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு ஆராதனையும் சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்கவேண்டும். போதகர்கள் இவ்விதமான பலனுள்ள ஊழியஞ் செய்வதற்கு தேவகிருபையும், சபையாருடைய அன்பும் அனுதாபமும் அவசியம். இதை மறந்து யாராவது சபையில் குழப்பங்களையும் பிரிவினைகளையும் உண்டாக்குவார்களானால் உத்தம ஊழியர்கள் எவ்வளவோ வேதனையோடும் பெருமூச்சோடும் கண்ணீரோடும் வேலைசெய்ய வேண்டியதாயிருக்கும். “அவர்கள் **துக்கத்தோடே** அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே” என்கிறார் (எபி. 13:17). “கொஞ்சம் புளித்த மா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கும்.” “ஒரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்பட நேரிடும்.” எல்லாருமல்லவே, சில துஷ்டராலேதானே சபையில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. இது மிகவும் பயங்கரமான விஷயம்! நமது பலவீனங்களை, பாவங்களை அநேகமாய்ப் பொறுத்துக்கொள்ளும் தேவன் தமது **ஊழியருக்கும் ஊழியத்துக்கும் இடைஞ்சல்** உண்டாக்குகிறவர்களை தப்பவிட மாட்டார். “பக்தர், சித்தர், பரமஞானிகள் சித்தம் கலங்கிட தீவினை மூண்டிடும்” என்னும் சொல் பொய்யல்ல. சூரிய உஷ்ணத்தில் மைல்கணக்காய் நடக்கலாம்; சூரிய உஷ்ணம்பெற்ற மணலிலோ சூடு பொறுக்காமல் துள்ளிவிழ நேரிடும். மோசேக்கு எதிர்த்து நின்ற ஜனங்களைப்பற்றித் தேவன் சொன்னதென்ன? “கொஞ்சம் விலகு மோசே, ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன்” என்றார். அப்படியே செய்தார்.

குருக்களை அதிகமாய் மதித்து அவர்களிடம் எப்போதும் பக்திவிநயமாய் நடந்துகொள்ளும் ஒரு சகோதரனை அறிவேன். யாராவது ஒருவர் போதகர்களைக் குறைவாய்ப் பேசினால் அவர் சகிக்கமாட்டார். எந்தச் சபையைச் சேர்ந்த போதகரென்றாலும் சரி, எல்லாரிடமும் அவருக்கு குரு பக்தி உண்டு. குருக்களில் உத்தமர்கள் இருப்பதுபோல உதவாதவர்களும் இருக்கிறார்களே என்று யாராகிலும் சொன்னால், அதைப்பற்றி உனக்கென்னையா? நல்லவரானாலும் கெட்டவரானாலும் ஆண்டவருக்கல்லவோ அவர் உத்திரவாதி. நீ அவருக்கு எதிர்த்து நின்று உன்னை ஏன் கெடுத்துக்கொள்ளுகிறாய்? நீ தாயின் வயிற்றில் இருந்தபோது சுகமான பேறுகாலத்துக்காக அவர் ஜெபித்தார். நீ குழந்தையாயிருந்த போது உன்னைக் கையிலேந்தி ஞானஸ்நானம் கொடுத்தார். உனக்குத் திடப்படுத்தல் பாடம் கற்றுக்கொடுத்தார். உன்னை நற்கருணையில் சேர்த்தார். உனக்கு நிச்சயதார்த்தம் செய்துவைத்தார். உன் கலியாணத்தையும் முடித்து வைத்தார். உத்தியோக சம்பந்தமாய் சிபாரிசுக் கடிதம் எழுதிக்கொடுத்தார். சந்தோஷ துக்க காலங்களில் உன் வீட்டுக்கு வந்து ஜெபித்து ஆறுதல்படுத்தினார். நீ மரிக்க நேரிட்டால் ஜெபம் செய்து மரியாதையாக அடக்கம் செய்பவரும் அவரே. இவ்வாறு முதலிலிருந்து கடைசிவரை சகல காரியங்களையும் உனக்காக நடத்திவைக்கும் உன் ஞானத் தகப்பனுக்கு விரோதமாக நீ எழும்புவதும் பேசுவதும் சரியா என்று கேட்பார். போதகர்களை நேசித்து ஊழியத்தில் அவர்களை உற்சாகப்படுத்துகிறவர்கள் கர்த்தரால் **ஆசீர்வாதம்** பெறுகிறார்கள் என்பதும், அவர்களைப் பகைத்து, மனங்கலங்கவைத்து, ஊழியத்துக்கு இடையூறு செய்கிறவர்கள் கர்த்தரால் **தண்டிக்கப்படுகிறார்கள்** என்பதும் சபைகள் திட்டமாயறிந்த விஷயம். அவர்கள் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்ளுகிறார்கள்.



# 10. சபை உத்தியோகஸ்தர்

சபைகள் வெகுகாலமாக மிஷனெரிமார் பார்வையிலிருந்தன. அவைகள் சுய ஆதரவும் சுய ஆளுகையுமுள்ளதாக வேண்டுமென்று முயற்சி எடுத்ததின் பேரில் பல சபைகள் சுயாதீனம் பெற்றன. இந்தச் சுயாதீனம் கிறிஸ்துவுக்குள்ளானதாயிருந்தால் நல்லது. இல்லையானால் சபைகளில் குழப்பங்களும் பல சங்கடங்களும் ஏற்படும். குருக்களோடு சேர்ந்து சபையின் காரியங்களைக் கவனித்து நடத்த **சபைக் கமிட்டிகள்** ஏற்பட்டன. கமிட்டி அங்கத்தினர் **தேவ பக்தியுள்ளவர்களாயிருந்தால்** சபைக்கு எவ்வளவோ ஆசீர்வாத மாயிருப்பார்கள். பொதுவாய் அப்படி வாய்க்கிறதில்லை. சபையார் தங்கள் இஷ்டத்துக்கேற்ற போதகர்களைத் தெரிந்து கொள்வதுபோல கமிட்டி அங்கத்தினரும் தெரிந்துகொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு தெரிந்து கொள்ளப்படுகிறவர்கள் தங்களுக்கு அதிக ஓட்டுகள் கிடைக்கும்படி கையாடும் முறைகளும் எடுத்துக்கொள்ளும் பிரயாசங்களும் இவ்வளவு அவ்வளவல்ல. சட்ட சபையிலும் நகரசபையிலும் தேர்தல் நடக்கும் காலத்தில் தேர்தலுக்கு நிற்பவர்கள் பணங்களைச் செலவு செய்து ஓட்டுகளைச் சம்பாதிப்பதும், கார்களில் அவர்களை ஏற்றிக்கொண்டுபோவதும் எப்படி வழக்கமோ, அதேமாதிரி நமது சபைகளிலும் நடப்பது எவ்வளவு விசனமான காரியம்! தேவபக்தியுள்ளவர்கள் தங்களைச் சபை உத்தியோகஸ்தராகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆத்திரப்படமாட்டார்கள். நாம்தான் அவர்களை வருந்தி அழைக்கவேண்டும். அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டால் சபையின் நல்வாழ்வுக்காக போதகரோடு சேர்ந்து உழைப்பார்கள். தெரிந்துகொள்ளப் படவில்லை யென்றால் தேவ சித்தத்திற்குக் கீழடங்கி

எப்போதும் போல அமைதியாய் நடந்துகொள்வார்கள். **கிறிஸ்தற்ற** கிறிஸ்தவர்களோ தேர்தலில் தாங்கள் தவறிப்போன தற்காக எரிச்சலடைந்து சபையில் குழப்பத்தையும் பிரிவினைகளையும் உண்டாக்குவார்கள். சபையை விட்டுப் பிரிந்தும் போவார்கள். கமிட்டி மெம்பர்கள் போதகர்களை உற்சாகப்படுத்தி அவர்கள் ஊழியத்திற்கு ஆதரவாயிருக்க வேண்டியவர்கள். எல்லாரும் அப்படி நடக்கிறதில்லை. போதகர்களை ஆளவேண்டும், அவர்களை ஆட்டி வைக்கவேண்டும் என்கிற நோக்கங்கொண்டவர்கள் சபைகளில் இருக்கிறார்கள். சபைகளெங்கும் போதகர்களுக்கும் கமிட்டிமார்களுக்குமுள்ள போராட்டத்தை இங்கே எடுத்துக்கூற இடமில்லை. ஆராதனையில் போதகர் தமது பிரசங்கத்துக்கு ஏற்ற ஞானப்பாட்டை அறிவிக்க, கமிட்டி மெம்பர் ஒருவர் கின்னரக்காரரிடம்போய் வேறு ஞானப்பாட்டை வாசிக்கச் செய்தார். எவ்வளவு துணிகரம்! கோவில் ஊழியர்களான உபதேசிமார், உபாத்திமார், கோவில் பியூன், தோட்டக்காரன் முதலானவர்கள் தங்கள் பிழைப்புக்காக சந்தர்ப்பம்போல் சாய்கிறவர்கள். கமிட்டிமாரின் கை பலமாயிருந்தால், போதகர் அவர்களுக்கு அடங்கியிருக்கிறார் என்று கண்டு கமிட்டிமார் தயவைச் சம்பாதிக்கப் பார்ப்பார்கள். போதகரைப்பற்றிக் கமிட்டிமாருக்குச் சொல்லி அவர்களுடைய அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். இந்தத் தைரியத்தினால் ஆலய வேலைக்காரர் போதகர்களை மதிப்பதில்லை.

ஏழைகளாயினும் **தேவ பக்தியுள்ளவர்களை** உதவிக்காரராகத் தெரிந்தெடுப்பது நல்லது. அப்படிச் செய்யாமல் பணக்காரர், கல்விமான்கள், உயர்ந்த உத்தியோகஸ்தர் முதலானவர்களை நியமிப்பது சபைகளுக்கு வழக்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட பெரியோர் **தேவ பக்தர்களாயிருந்தால்** எவ்வளவோ பாக்கியம்! எல்லாரும்



அப்படி இல்லை. இவ்வாறு தெரிந்துகொள்ளப்படும் கனவான்கள் போதகர்களைப் பார்க்கிலும் சகல விஷயத்திலும் மேலான அந்தஸ்துள்ளவர்களாயிருப்பதாலும், சபைக் காரியங்கள் இவர்கள் விசாரணைக் குள்ளிருப்பதாலும் **இவர்கள் தயவு** போதகருக்கு வேண்டியதாயிருக்கிறது. இவர்களால் தங்களுக்கு எந்தவகையிலும் கஷ்டம் நேரிடாதபடி போதகர்கள் இவர்களுக்குப் பிரியமாய் நடந்து கொள்ளவேண்டியதிருக்கிறது. அதிகாரிகள் குடும்பங்களை அடிக்கடி சந்திக்கவேண்டும். அதுபோலவே அதிகச் சங்கப்பணம் கொடுக்கிற தனவந்தர் குடும்பங்களையும் ஒழுங்காய்ச் சந்திக்கவேண்டும். அவர்கள் கோபித்துக் கொண்டால் சபை வருமானம் குறைந்துபோகும். ஆங்கிலேய திருச்சபையைச் சேர்ந்த ஒரு போதகர் என்னைப் பார்த்து : “பக்தியாவது ஒண்ணாவது, பணம் பிரிப்பதிலேயே எங்கள் பிராணன் போகிறது. எந்தக் குரு அதிகப்பணம் சேகரிக்கும் திறமையுள்ளவரோ அவரே சிறந்த தேவ ஊழியன் என்பது கண்காணிமார் எண்ணம்” என்றார். ஆகவே சபை வருமானத்தினிமித்தம் போதகர்கள் கமிட்டிமார்களிடமும், பணக்காரரிடமும், சபையாரிடமும் **பக்குவமாய்** நடந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதுவா கர்த்தருடைய ஊழியம்?

இவைகளைக் கவனிக்கும்போது தேவனைச் சேவிப்பதிலும் மனுஷனைச் சேவிப்பதே பிரதானமாகத் தோன்றுகிறது. “நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் **நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லவே”** என்கிறார் பவுல் (கலாத். 1:10). சபை வேலை நடப்பதற்கு பெரிய மனுஷாளுடைய ஆதரவு வேண்டிய திருப்பதால் அவர்களைப்

பிரியப்படுத்தும்படியான **சோதனை** அல்லது **பலவீனம்** குருமாருக்குண்டு. சர்க்காரில் உயர்ந்த பதவியிலிருந்தவரும் அவர் மனைவியாரும் ஒரு சபையில் அங்கங்களாயிருந்தார்கள். அந்தச் சபைக் குருவின் கவனமெல்லாம் அவர்கள் பேரிலேயே இருக்கும். அவர்களை அடிக்கடி சந்திப்பார். அவர்கள் ஆராதனைக்கு வந்தால் ஆசனத்தில் வெகுநேரம் உட்கார்ந்திருப்பது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்று போதகர் தமது பிரசங்கத்தைப் பதினைந்து நிமிஷத்தில் முடித்துவிடுவாராம். இதை அந்தச் சர்க்கார் உத்தியோகஸ்தரே ஒரு கூட்டத்தில் சொல்லிப் போதகரைப் புகழ்ந்து பேசினதை நான் கேட்டேன். மேலும் சபையில் முக்கியஸ்தரான ஆணோ பெண்ணோ மரித்தால் குடும்ப ஆறுதலுக்காகவும், ஞாபகார்த்தமாகவும் ஜெபக்கூட்டங்கள் வைப்பதுண்டு. இறந்தவர்களிடம் எத்தனை குற்றம் குறைவுகள் இருந்த போதிலும், அவர்கள் **கிறிஸ்தற்றவர்களாகவே** மரித்திருந்த போதிலும் வீட்டாரைப் பிரியப்படுத்தும்படி அவர்களை அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்து பேசும் சோதனையும் பலவீனமும் போதகர்களுக்கிருக்கிறது. இறந்துபோனவர்கள் ரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் என்பது எல்லாரும் அறிந்த விஷயமானால் அவர்களில் காணப்பட்ட நற்குணங்களை எடுத்துப்பேசலாம். ஆனால் இப்படிப்பட்ட ஜெபக்கூட்டங்களில் இறந்துபோன ஆட்களைப் பற்றி அதிகமாய் வர்ணிப்பதைவிட கிறிஸ்து பரத்தில் வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவதையும், விசுவாசிகள் அழிந்துபோகாமல் அவரிடம் பத்திரமாக இருக்கிறார்கள் என்பதையும், அந்த நித்திய மகிமையில் பிரவேசிப்பதற்கு இங்கே நாம் தகுதியுள்ளவர்களாகவேண்டும் என்பதையும்பற்றிப் பேசி ஜெபித்தால் எல்லாருக்கும் அது ஆசீர்வாத செய்தியா யிருக்கும், குடும்பத்தினருக்கும் ஆறுதலாயிருக்கும், ஆண்டவருக்கும் பிரியமாயிருக்கும். நரஸ்துதியும் வீண்



புகழ்ச்சியும் தேவ ஊழியருக்குத் தகாது. ஆலய ஆராதனை முடிந்தவுடனே முந்தித் தன வந்தர்களிடம் ஓடி, கைகுலுக்கிப் பேசுவதும் நமக்கு வழக்கம். தேவ மக்கள் எவ்வளவு ஏழைகளாயிருந்தாலும் அவர்களையே நாம் பிரதானமாய்த் தேடி, பட்சமாய்ப் பேசி அனுப்பவேண்டும். இவ்விதமான பட்ச பாதத்தை யாக்கோபு பலமாய்க் கண்டிக்கிறார். ஆண்டவரும் தேவாலயத்தில் தாம் கண்ட ஐசுவரியவான்களையல்ல, அந்த ஏழை விதவையைப் புகழ்ந்து பேசினார். வேலை கர்த்தருடையது. நமது கண்கள் கர்த்தரையே நோக்கியிருந்தால் அவர் தமது வேலையைக் கைவிட மாட்டார்.

## 11. ஆலோசனைச் சங்கமும் சபைகளும்

சபைக் கமிட்டிகளுக்கு மேலாக **ஆலோசனைச் சங்கம்** இருக்கிறது. இது வருஷந்தோறும் கூடி சபைகளுக்குரிய காரியங்களை ஆலோசிக்கும். போதகர்களை ஏற்படுத்தல், மாற்றுதல், சம்பளம் விதித்தல், சிக்கலான விஷயங்களை ஆலோசித்தல் முதலான பல வேலைகள் இச்சங்கத்துக்கு உண்டு. இவ்வாறு பலவருஷங்களாகக் கூடி எத்தனையோ விஷயங்களைக்குறித்து ஆலோசனை செய்துவந்தபோதிலும் சபைகளின் **ஆவிக்குரிய நிலைமையோ** பரிதாபமாகவே இருக்கிறது. கேடு பெருகிக்கொண்டே போகிறது. மனுஷர் திருடினால் அல்லது கலகஞ்செய்தால் சர்க்கார் அவர்களைப் பிடித்துத் தண்டிப்பார்களே தவிர, அவர்கள் கடவுள் பக்தர்களாய் நடக்கவேண்டுமென்று ஞானோப தேசம் செய்வது சர்க்கார் வேலையல்ல. நமது காரியமோ வேறு. சபைகளின் ஆவிக்குரிய காரியங்களைப் பிரதானமாய்க் கவனிக்கவேண்டியது ஆலோசனைச் சங்கத்தின் கடமை. ஆலோசனைச் சங்கம் ஆவிக்குரியதாயிருந்தால் சபைகளும் ஆவிக்குரியதாயிருக்கும். ஆலோசனைச் சங்கத்தார் தங்கள் இஷ்டப்படி வேலைகளை

நடத்தப் பார்ப்பார்களானால் காரியம் வாய்க்காது. மேலும் சங்கத்துக்கு வருகிறவர்கள் அநேகமாய் மிஷனெரிமார் கையின்கீழ் வேலை செய்கிறவர்களாயிருக்கிறோம். தர்க்கிக்கும் ஒரு விஷயத்தில் நமது நியாயம் எப்படி இருந்தபோதிலும் அதிகாரிகளின் நோக்கத்திற்கு இணங்கிப்போகவேண்டியதா யிருக்கிறது. மனுஷன் பெட்டியைச் செய்வான் மரத்தை உண்டாக்க அவனால் ஆகுமா? ஆகாது. மனுஷன் குளத்தை வெட்டுவான், மழையை உண்டாக்க அவனால் ஆகுமா? ஆகாது. ஆலோசனைச் சங்கம் பல கமிட்டிகளை ஏற்படுத்தி எவ்வளவு திறமையோடும் யூகத்தோடும் காரியங்களை நடத்தினாலும் **கர்த்தர்** கூடயிருந்து தமது ஆவியினால் போதித்து நடத்தாவிட்டால் நமது ஆலோசனைகள் விருதாவாகும். ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை? பெறாதவர்கள் எத்தனை? இராப்போஜனக்காரர் எத்தனை? பிள்ளைகள் எத்தனை? சபைப் பராமரிப்புக்காக சபையார் கொடுப்ப தெவ்வளவு? மிஷன்காரர் கொடுப்ப தெவ்வளவு? ஐரோப்பியர் கொடுப்பதெவ்வளவு? மற்றவர்கள் கொடுப்பதெவ்வளவு? காலமெல்லாம் இவ்வாறு கணக்குப் பார்த்து என்ன பலனைக் கண்டோம்? நடபடிப் புஸ்தகத்தில் மூவாயிரம் ஐயாயிரம் என்று தொகை வருகிறது மெய்தான். ஆனால் அது **ரட்சிக்கப்பட்டவர் களின்** தொகையே யல்லாமல் பணக் கணக்குமல்ல, மற்றக் கணக்குமல்ல.

சபைகளில் ஞான ஜீவன் இல்லை, வல்லமை இல்லை, அன்பில்லை, சகோதர ஐக்கியமில்லை, ஆத்தும வாஞ்சை இல்லை. பற்பல பாவங்களாலும் கவலைகளாலும் மேற்கொள்ளப்பட்டுத் தவிப்பவர் அநேகர். நிர்விசாரிகள் ஏராளம். தேவகுமாரன் எதற்காகப் பாடுபட்டு மரித்தாரோ அந்த **நோக்கம்** சபைகளில் நிறைவேறாவிட்டால் இப்படிப்பட்ட சபைகளால் ஆண்டவருக்கு அவமானமே தவிர மகிமையில்லை.



இதற்குப் பரிகாரம் தேடாவிட்டால் நமது அலுவல் கூட்டங்கள் யாவும் வீண் பிரயாசங்களாகும். நமது **ஜீவியத்தை மாற்றி** நம்மைத் தமக்குச் **சொந்தமாக்கிக் கொள்ளும்படிக்கே** ஆண்டவர் தமது ஜீவனைக் கொடுத்தார். பாவங்களால் உண்டான கேடுகளுக்கு நாம் தப்பி, திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக வேண்டுமென்பதே ஆண்டவரும் அவரடியார்களும் போதித்த முக்கிய போதனை. இவ்வாறு நமது ஜீவியம் மாற்றப்படாததினாலேதான் சகலவித குழப்பங்களையும் போராட்டங்களையும் அடிதடிகளையும் சபைகளில் காண்கிறோம். போலீஸ் பந்தோபஸ்தில் ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. எவ்வளவு அவமானம்! சபைகள் பக்தி விருத்தியடைந்து வளருமானால் ஆலோசனைச் சங்கத்துக்கு அதிக வேலையிராது. சங்கம் கூடும் மூன்று நாட்களில் தேவ சமூகத்தில் நாம் கூடி, ஆவிக்குரிய காரியங்களைப்பற்றிப் பேசி, புதுப் பலத்தோடே திரும்பிப் போகலாம். “சபைக்கடுத்த பல கவலைகளோடே நாங்கள் இங்கே வந்து மூன்று நாட்கள் தங்கியிருந்தும் கவலைகளோடேயே சபைகளுக்குத் திரும்பிப்போக வேண்டிய தாயிருக்கிறது” என்று ஒரு போதகர் புலம்பிச் சொன்னார். ஒருவன் தன்னிடத்தில் இல்லாததை எப்படிக் கொடுப்பான்? சங்கத்தை நடத்தும் தலைவர்கள் ஆவிக்குரிய பக்தர்களாயிருந்தால் கூட்டம் எல்லாருக்கும் ஆசீர்வாதமாயிருக்கும். நமது ஆலோசனைச் சங்கத்தின் நடபடிகள் ஆண்டவருக்குப் பிரியமாயிருக்கிறதா? பல வருஷங்களாக இராப்பகலாய் எழுதிவைத்திருக்கும் மினிட்டுப் புஸ்தகங்களின் குவியல்களைக் கண்டு அவர் மகிழ்ச்சி யடைகிறாரா? **கிறிஸ்தற்ற கிறிஸ்து** மார்க்கத்துக்கு எவ்வகையிலும் சுகமேயில்லை. சபைகளிலுள்ள குறைவுகளை விசாரித்து ஆலோசனை சொல்லும்படி சங்கப் பிரதிநிதிகள்

வரும்போது : இதோ ஆண்டவருடைய அடியார் நம்மிடம் வருகிறார்கள், அவர்களை அன்புடன் ஏற்றுக் கொண்டு, அவர்கள் ஆலோசனையை மதிப்புடன் கேட்போம் என்று சபையார் அவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கவேண்டியது நியாயம். தற்காலமோ அப்படியல்ல. சபைகளைச் சந்திக்க வருகிறவர்கள் துக்கத்தோடே திரும்பிப்போக வேண்டியதா யிருக்கிறது. ஆலோசனைச் சங்கம் பலவிதத்திலும் தத்தளிக்கிறது. எவ்வளவுக்குச் சட்டங்களும் விதிகளும் பெருகுகிறதோ அவ்வளவுக்கு மீறுதலும் எதிர்ப்பும் பெருகுகிறது. ஆலோசனைக் கூட்டத்தில் அடிக்கடி எழுந்து பேசும் நிபுணர்கள் இருக்கிறார்கள். தேவ ஊழியத்திலோ இவர்கள் முழுமோசம். நமது சபைகளையும் சபையின் காரியங்களையும் ஆண்டவருடைய ஆலோசனைக்கும் நடத்துதலுக்கும் ஒப்புக்கொடாமல் நமது தலைமையை நிலை நாட்டுவோமானால் கடைசிவரை சபைகளில் தொந்தரவுகள் இருந்துகொண்டே இருக்கும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பிரதானமாகத் தேடாமல் விதிகளையும் சட்டங்களையுமே அச்சிட்டுக்கொண்டிருந்தால் தீமைகள் ஒழியப்போவதில்லை.

## 12. தென் இந்திய சபை

வெகுகாலமாக எதிர்பார்த்த சபை **ஐக்கியம்** 1947-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் கைகூடிவந்தது சந்தோஷமான காரியம். ஐக்கியம் யாவராலும் விரும்பப்படத்தக்கது. இதிலே தென் இந்திய ஐக்கிய சபைகள், மெதடிஸ்து சபைகள், இங்கிலாந்து சபைகள் ஒன்றாகச் சேர்ந்தன. இந்த ஐக்கியம் எப்படிப்பட்டது? இந்த ஐக்கியத்துக்காக உழைத்தவர்கள் ஆண்டவர் ஒற்றுமைக்காக ஜெபித்த வசனங்களை மேற்கோளாக அடிக்கடி எடுத்துப் பேசினார்கள். இரட்சகர் பிதாவை நோக்கி : "பிதாவே, நீர் என்னிலேயும் நான்



உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவேண்டும்" என்றும், "நீர் எனக்குத் தந்தவர்கள் **நம்மைப்போல்** ஒன்றாயிருக்க வேண்டும்" என்றும், "நாம் **ஒன்றாயிருக்கிறது போல** அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டும்" என்றும் திரும்பத் திரும்பச் சொல்லி ஜெபித்தார். ஆண்டவர் வேண்டிக்கொண்ட ஐக்கியம் எப்படிப் பட்டது? நாம் கொண்டாடுகிற ஐக்கியம் எப்படிப்பட்டது? உலகத்தில் **ஐக்கிய சங்கங்கள்** பல உண்டு. அவர்கள் நிருவகிக்கும் காரியங்களிலேதான் ஐக்கியமே தவிர, அங்கத்தினருக்குள் அன்போ ஐக்கியமோ இருக்கவேண்டு மென்பது அவசியமல்ல. அதுபோல நாமும் சபை ஆளுகை, ஆராதனைகள், கொள்கைகளில் ஐக்கியத்தைத் தேடுவோமானால் ஆண்டவர் செய்த ஜெபத்தை ஆதாரமாக எடுத்துப் பேசுவது சரியல்ல. ஆண்டவர் வேண்டிக்கொண்ட ஐக்கியம் ஆட்களைப்பற்றினது. "நம்மைப்போல்," "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல்" **அவர்களும் நம்மில்** ஒன்றாயிருக்க வேண்டும் என்கிறார். ஆராதனைகள், கொள்கைகள், ஆசாரங்களைப்பற்றி ஒரு வார்த்தை கிடையாது. பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள ஐக்கியம் மகா ஆழமானது, அன்புக்குரியது, ஆவிக்குரியது, ஜீவனைப்போன்றது. அதேமாதிரி ஐக்கியம் விசுவாசிகளான நமக்குள்ளும் உண்டாகவேண்டுமென்பது அவரது ஊக்கமான வேண்டுதல். இது ஒரேநாளில் ஆகிற காரியமல்ல. கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள ஐக்கிய அளவுக்குத்தக்கபடி நமக்கும் உடன் விசுவாசிகளுக்கும் ஐக்கியமுண்டாகும். இந்த **அன்பின் ஐக்கியத்தையே** நாம் பிரதானமாகத் தேட வேண்டும். மற்றப்படி ஆயிரம் சுன்னங்கள் ஒன்று சேர்ந்தாலும் சுன்னங்களா யிருப்பதுபோல, புறம்பான காரியங்களில்மாத்திரம் நாம் ஐக்கியப்படுவோமானால் அது ஆண்டவர் பார்வையில் ஐக்கியமாகாது.

**ரோமைச்** சபைகள் உலகமெங்கும் திரளாய்ப் பெருகியிருக்கின்றன. அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமை

என்னமாயிருந்தபோதிலும், போப்பாண்டவன் தலைமைக்குள் இவைகளிருப்பதால் **ஒரே சபை** என்றெண்ணப்படுகிறது. இவர்கள் ஒற்றுமை ஆண்டவர் வேண்டிக் கொண்ட ஒற்றுமையா? ஆங்கிலேய திருச்சபையைச் சேர்ந்த குருக்களில் ஒரு வகுப்பாருக்கு ரோமைச் சபையோடு சேர்ந்துகொள்ள வெகு ஆசை. இதற்காக இவர்கள் ரோமைச் சபைக் குருக்களைப்போல் உடைகள் உடுத்தி, அவர்களைப்போல் ஆராதனையும் நடத்தினார்கள். இவர்களுக்கு ஆங்கில கத்தோலிக்கர் என்று பெயர். ஆண்டவன் சாமிக்கோ இவர்களைச் சேர்த்துக்கொள்ள மனமில்லை. கத்தோலிக்க சபைகளுக்கும் மற்ற சபைகளுக்கும் **கிறிஸ்து ஒருவரே** ரட்சகராயிருந்தும் அவர்கள் பார்வையில் நாம் பதிதர்களாக எண்ணப்படுவது எவ்வளவு துயரமான காரியம்! ஆத்மீக விஷயத்தில் இந்துக்களோடாவது நாம் தாராளமாகச் சம்பாஷிக்கலாம் போலிருக்கிறது. கத்தோலிக்க சபைகளோடு சம்பந்தப்படுவது அவ்வளவு கஷ்டமாயிருக்கிறது. சில வருஷங்களுக்குமுன் தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்த ஓர் ஆலயத்தில் இராப்போஜன ஆராதனை நடந்தபோது போதகர்களின் உடைகள், நற்கருணைப் பதார்த்தங்கள், அவைகளைப் பரிமாறின முறைகளை நான் கவனித்து; ஆராதனைகள் வெகு சாதாரணமாக நடக்கும் இவ்வாலயத்தில் இந்த மாறுதல்கள் எப்படி வந்ததென்று கேட்க அவர்கள்: நாம் இங்கிலாந்து திருச்சபையோடு ஐக்கியமாகும்படி இப்போதே ஆயத்தப்படுகிறோம் என்றார்கள். ஆண்டவர் வேண்டிக் கொண்ட ஐக்கியம் எப்படிப்பட்டது? இவர்கள் தேடின உடுப்பு ஐக்கியம் எப்படிப்பட்டது? அன்பனாகிய யோவான் : "நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" என்கிறார். வேறே



புறம்பான ஆசாரங்கள் கொள்கைகளைப்பற்றி யோவான் ஒன்றுமே பேசவில்லை.

பல சபைகள் சேர்ந்து **தென் இந்திய சபை** என்னும் பேரால் இன்று அழைக்கப்பட்டபோதிலும் கஷ்டங்கள் நீங்கினபாடில்லை. தாங்கள் பிறந்து வளர்ந்த கோவிலை விட்டு வேறொரு சபையில் சேர்ந்து ஆராதிப்பது கஷ்டமாகத் தானிருக்கிறது. ஐக்கிய சபைகளில் ஒன்று நீண்ட காலமாகப் பிடித்திருந்த கொள்கைகளைத் தள்ளிவிட்டு மற்ற சபையின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது கஷ்டம்தான். இதனாலேதான் "நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுங்கள், நாங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுக்கிறோம்" என்று பேரம் பேசவேண்டியதாயிற்று. சபைகளில் பல வித்தியாசங்கள் இருந்தபோதிலும் அன்பினால் நிறைந்த தேவ மக்களுக்கு மற்ற விசுவாசிகளோடு ஐக்கியப்படுவது கஷ்டமல்ல. பெந்தே கொஸ்தே நாளில் தேவாவியானவர் இறங்கி சீஷர்களை நிரப்பினபோது, கிறிஸ்துவின் **அன்பின் ஜீவனாலே** அவர்கள் நிரப்பப்பட்டபடியால், பற்பல வித்தியாசங்களுள்ள **திரளான** விசுவாசிகள் **"ஒரே இருதயமும் ஒரே மனமும்"** உள்ளவர் களானார்கள். அவர்கள் தேவ அன்பினால் நிறைந்தபடியால் யாதொரு நிபந்தனைகள் இல்லாமலும், கமிட்டிகள் கூடி எப்படி ஐக்கியப்படலாமென்று வருஷக் காலங்களாக விவாதிக்காமலும் நிமிஷத்தில் ஒற்றுமையடைந்தார்கள். அருமை ரட்சகரின் சிந்தையுள்ள தேவ மக்கள் தாங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர்களாயினும் மற்ற விசுவாசிகளோடு ஐக்கியமாகும்படி எப்பொழுதும் ஆயத்தமாகவே இருப்பார்கள். ஒரு சபையில் அல்ல. பல சபைகளிலும் அன்பினால் நிறைந்த மக்களின் ஐக்கிய சபை இருக்கவேயிருக்கிறது.

# 13. பல மிஷன்கள்

"உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்றும், நான் கேபாவைச் சேர்ந்தவன் என்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் ஆவிக்கேற்றபடி நடவாமல் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷர் மார்க்கமாய் நடக்கிறீர்களே. இதனால் உங்களுக்குள்ளே வாக்குவாதமும் போதகங்களும் இருக்கின்றன. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? திருச்சபையாகிய சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையாகிய அவரைப் பற்றிக்கொள்ளாமல் புறம்பான ஆசாரங்களிலும் கொள்கைகளிலும் பற்றுதல் வைத்து வைராக்கியம் பாராட்டுவதினாலே பிரிவினைகள் உண்டாகிறது" என்று பவுல் கொரிந்து சபையை எச்சரிக்கிறார்.

சபைப் பிரிவினைகளுக்கு ஆண்டவர் பக்கத்தில் எவ்விதக் காரணமுமில்லை. சபைத் தலைவர்கள் என்றெண்ணப்பட்ட மனுஷராலேயே பிரிவினைகள் உண்டாயின. நமக்குள் பிரிவினையை உண்டாக்கின பற்பல உபதேசங்களும் சடங்குகளும் அந்நிய தேசத்திலிருந்து நம் தேசத்திற்கு இறக்குமதியாக வந்ததேயல்லாமல் நம்மிலிருந்து உண்டானவைகள் அல்ல. **பல மிஷன்களைச்** சேர்ந்த பல மிஷனெரிகள் தங்களை அனுப்பின சங்கங்களுக்கு உத்தரவாதிகளாய் இருக்கிறார்கள். தம் தம் கொள்கைகளை ஸ்தாபிப்பது அவர்கள் கடமையாயிருக்கிறது. அதுபோல அந்தந்த மிஷன்களைச் சேர்ந்த நம் தேசத்தவரும், அந்தந்த மிஷன் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு வேலை செய்ய வேண்டும். ஒரு மிஷனில் வேலை போய்விட்டால் இன்னொரு மிஷனில் அவர் சேர்ந்து, முந்தின மிஷன் கொள்கைகளைத் தள்ளிவிட்டு, புதிதாய்ச் சேர்ந்துகொண்ட மிஷன் கொள்கைகளை ஊக்கமாய்ப் பிரஸ்தாபிப்பார். ஏன் இப்படி



என்று கேட்டால் **பிழைப்பு** பிரதானமேயன்றி **கொள்கை** பிரதானமல்ல என்பார். **தென் இந்திய சபையின்** ஐக்கியத்தாலே அந்தப் பிழைப்புக்கும் ஆபத்து வந்ததென்று ஒருவர் சொன்னார். ஏன் என்று கேட்க அவர் : ஒரு சபையில் வேலை போனால் வேறொரு சபையில் வேலை தேடலாம் என்னும் நம்பிக்கை இதுவரை இருந்தது. இப்போது இந்தச் சபைகள் ஒன்று சேர்ந்து பிஷப் ஆளுகைக்குள்ளிருப்பதால் இத்துடன் சம்பந்தப்படாத வேறே சபைகளைத் தான் தேடிப் போக வேண்டும் என்றார். ஐக்கியமான சபைகள் எல்லாக் காரியங்களிலும் ஒன்று போலிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. ஒரு தோட்டத்தில் பற்பல நிறங்களுள்ள புஷ்பங்களைப் பார்ப்பது எவ்வளவு அழகு! ஆனால் அந்தத் தோட்ட முழுவதும் வெண்ணிறப் புஷ்பங்களாலே நிறைந்திருந்தால் **பருத்திக்காடுபோல்** அல்லவா தோன்றும். மனுஷருடைய ஏற்பாடுகளும் கொள்கைகளும் மாறி மறைந்துபோகும். அவைகளிலே பிடிவாதம் பண்ணிப் பிரிந்து நிற்பது வீண் பெருமையும் அறிவீனமுமாகும். **கிறிஸ்துவை** நமது கண்முன் நிறுத்தி அவரது அன்பினால் நிறைந்து, அவரது சாயலுக்கொப்பாக மாற்றப்படுவதை நாம் பிரதானமாகத் தேடினால் ஆண்டவர் வேண்டிக்கொண்ட **மெய்யான ஐக்கியத்தை** நமக்குள்ளே காணலாம். மற்றப்படி எழுத்திலேதான் **"தென் இந்திய சபையே"** தவிர உண்மையிலே நமக்குள் ஐக்கியம் வராது. தனித்த ஒரு சபையிலேயே குழப்பங்கள் இருக்கும்போது, வித்தியாசங்களுள்ள பல சபைகள் சேருவதினால் ஐக்கியம் ஏற்படுமா? தேவ அன்பும் சகோதர அன்புமே திருச்சபையின் அழகு. அப்படிப்பட்ட ஐக்கியத்தை ஆண்டவர் வாய்க்கச் செய்வாராக.

# 14. தேவ ஊழியமும் பொருள் சகாயமும்

தேவ ஊழியம் நடந்தேற **பொருள் சகாயம்** வேண்டும். ஆண்டவர் ஊழியத்தில் அவர் பணத்திற்காகக் கவலைப்பட்டவரல்ல. என்றாலும் பக்தியுள்ள ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்து வந்தார்கள். மக்கெதோனியா அகாயாவிலிருந்த விசுவாசிகள் எருசலேமிலுள்ள சகோதரருக்கு பொருள் சகாயம் செய்தார்கள். இதுபோலவே அப்போஸ்தலனுடைய வேலைக்காகவும் சபைகள் பொருள் சகாயம் அனுப்பின. பணம் தன்னிலே கெட்டதுமல்ல, பிரயோஜனமற்றதுமல்ல. அதைச் சம்பாதிக்கிற விதத்திலும் செலவு செய்கிற விதத்திலும்தான் அதன் நன்மையோ தீமையோ இருக்கிறது.

தேவ ஊழியம் நடந்தேறும்படி **ஆண்டவருக்குப் பிரியமான விதமாய்ப்** பொருள் கொடுக்கப்படவேண்டும்; **அவருக்குப் பிரியமான விதமாகவே** பொருளைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும். சர்க்கார் அதிகாரத்தோடே வரி வசூல் செய்வதுபோல நமது காரியம் இருக்கக்கூடாது. சபை சம்பந்தமாகப் பலவித செலவுகள் இருப்பதாலும், ஊழியர்களுக்குச் சம்பளம் போட வேண்டியதிருப்பதாலும், எந்தெந்த வகையாய் பணம் சேகரிக்கலாம் என்னும் **கவலை** நம்மை ஆண்டுகொள்ளுகிறது. சபையாரின் வருமானத்தைக் கண்டறிந்து, அந்த வீதத்தின்படி ஆலய வரியை ஏற்படுத்தி, ஆட்களை அனுப்பி பணவசூல் செய்கிறோம். சிலர் சந்தோஷமாகக் கொடுக்கலாம். சிலர் வழக்கத்தை அனுசரித்து மாதச் செலவுகளோடு ஓர் செலவாகக் கொடுக்கலாம். சிலர் கஷ்டத்தோடு கொடுக்கலாம். சிலர் கொடாதபடி காலங் கடத்தலாம். பாக்கிகளை வசூலிக்கத் தக்க சமயங்களும் வரும். ஞானஸ்நானம், கலியாணம், சாவு முதலான காரியங்களுக்காக சபையார் குருவிடம் வரும்போது பாக்கிப் பணம் வசூலிக்கப்



படுவதாகக் கேள்விப்படுகிறோம். ஓட்டுக் கொடுக்கும் காலத்தில் பணம் பாக்கியுள்ளவர்கள் தங்களுக்கு ஓட்டுரிமை போய்விடாதபடி கடன் வாங்கியாவது தொகையைச் செலுத்தி விடுவார்கள் என்பதையும் அறிகிறோம். காணிக்கை விஷயத்திலும் ஏற்பாடுகள் உண்டு. சம்பளத்தை விசாரித்துச் சங்கப் பணம் விதிக்கப்படுகிறது. அதற்கு ஏற்பட்ட காணிக்கையைச் செலுத்தாவிடில் காரியம் நடக்காது. ஒரு ஆலயத்தில் விவாகம் நடந்த சமயத்தில் அதில் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்பட்ட காணிக்கையைச் செலுத்த முடியாதிருந்தார்கள். குருவோ பணம் செலுத்தாவிட்டால் தாலி கொடுப்பதில்லை என்று பிடிவாதமாயிருந்தார். உடனே கலியாணக்காரர், தங்கள் வீட்டுக்குச் சென்று தாங்களே கலியாணத்தை முடித்துக்கொண்டார்கள். வேறொரு ஆலயத்தில் கலியாண ஆராதனை நடந்தபோது, தாலி கொடாதபடி அப்படியே நின்றுகொண்டிருந்த போதகரைக் கவனித்து, ஏன் ஆராதனை நின்றுபோனதென்று என் பக்கத்திலிருந்தவரைக் கேட்டேன். “காணிக்கை வைக்கவில்லை, தாலி கொடுக்கவில்லை” என்றார்.

இவைகளையும் இவைபோன்ற காரியங்களையும் யோசிக்கும்போது நமது மனதுக்கு எவ்வளவோ வேதனையாயிருக்கிறது. உலகத்தார் தங்கள் காரியங்களை எவ்வாறு நடத்துகிறார்களோ அதுபோலதானே சபைகளின் காரியங்களும் இருக்கின்றன. கோவில் வரி சம்பந்தமாக நியாயஸ்தலம் சென்று வழக்காடுவதையும் அறிவோம். எப்போப் பார்த்தாலும் **“பணம் பணம்”** என்று போதகர்கள் பஞ்சரிக்கிறார்களே என்று சபையார் முறு முறுப்பதையும் கேட்டிருக்கிறோம். கிறிஸ்துவுக்குள்ளான சபையின் காரியமோ வேறு. உத்தம ஊழியம் நடக்க வேண்டுமென்பதும், சபையார் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுமே நமது பிரதான நோக்கம்.

**பணம்** நாம் பிரசங்கிக்கும் சுவிசேஷமல்ல. அதைப் பற்றி நாம் பேசுவதில்லை. தொகை குறிப்பதில்லை. கட்டாயமாக வாங்குவதில்லை. ஞானஸ்நானத்தில், கலியாணத்தில் காணிக்கை வைப்பவர்கள் உண்டு; வைக்காதவர்களுமுண்டு. இருபட்சத்தாருக்கும் நமது பணிவிடை ஒன்று போலவே நடந்தேறும். இந்தப் பரிசுத்த ஊழியத்தை தேவ பராமரிப்புக்கு விட்டிருக்கிறோம். கர்த்தருடைய ஊழியத்திற்கு சபையார் எவ்வளவு கொடுப்பார்களோ **அது அவரவருடைய இஷ்டம்.** அது அவர்களுக்கும் ஆண்டவருக்குமுள்ள காரியம். கர்த்தர் மோசேயைப் பார்த்து: "மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்கு" என்றார். "அவனவன் விசனமாயுமல்ல கட்டாய மாயுமல்ல, **தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்"** என்று ஆவியானவர் பவுல் மூலம் கற்பித்தார். அதுவே **பண விஷயத்தில்** நமது பிரமாணம். **"பணம் வாங்கவரவில்லையே"** என்று கேட்டிருக்கிறார்களே தவிர **"பணம் பணம்"** என்று தொந்தரவு கொடுக்கிறார்களே என்று சபையார் குறைகூறினதில்லை. பொருள் சகாயத்தை ஏற்றுக் கொள்ளும்படி மக்கெதோனியாச் சபைகள் அப்போஸ்தலரை மிகவும் வேண்டிக்கொண்டதாக வாசிக்கிறோம் (2. கொரி. 8:4). பணம் சேகரிப்பதற்காக எவ்விதமான உலக முறைகளையோ விற்பனைகளையோ, நாடகம் வேடிக்கைகளையோ நாங்கள் கையாடுவதில்லை. எல்லாரும் சிரிக்கும்படி பொருள்களை விகடம் பேசி ஏலம் போடும் வழக்கம் நல்லதல்ல. ஒரு முட்டையையோ, ஒரு சீப்பு பழத்தையோ இருவர் போட்டி போட்டுக்கொண்டு இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் என்று உயர்த்தி விடுகிறார்கள். அதைச் செலுத்துவதும் பிந்திக் கஷ்டமாகிவிடுகிறது. ஆண்டவருடைய வேலைக்கென்று நேரே கேட்டால் கொடுக்க மனமற்றவர்கள், **வேடிக்கை பார்க்க** டிக்கட்டுகள் மூலம் சந்தோஷமாய்க் கொடுக்கிறார்கள்.



இவ்விதமான தகாத முறைகளால் சேகரித்த பணத்தை ஆண்டவர் சமூகத்தில் வைத்து: "ஆண்டவரே உமது ஜனம் உமது ஊழியத்துக்காகக் கொடுத்த காணிக்கையை ஆசீர்வதியும்" என்று சொல்வது முழுப் பொய்யல்லவா?

பணம் சேகரிப்பதற்காக நாம் மனுஷரைப் பிரியப் படுத்தவோ முகஸ்துதி பேசவோ வேண்டாம். ஒரு தனி விசுவாசி தனக்கு வேண்டிய காரியங்களுக்காக கர்த்தரை நம்பிப் பிழைப்பதுபோல, நமது சபையின் காரியங்களையும் ஆண்டவருக்கு ஒப்புவித்து அவரையே சார்ந்து பிழைக்க வேண்டும். **தேவ ராஜ்யத்தையே நாம் பிரதானமாய்த் தேடும்போது** ஆண்டவர் தமது ஊழியத்தைக் காப்பாற்றுகிறார். ஆசீர்வாதம்பெற்ற தேவமக்கள் தங்களால் இயன்றதை உற்சாகமாய்க் கொடுக்கிறார்கள். தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவர்கள் தங்கள் பணத்தைக் கொடுப்பது பெரிய காரியமல்ல. ஆராதனைகளும் பிரசங்கங்களும் தேவ ஊழியமாயிருப்பதுபோல, அவ்வூழியம் நடந்தேறும்படி பொருள் சகாயம் செய்வதும் **தேவ ஊழியம்** என்பதை அவர்கள் அறிவார்கள் (2 கொரி. 9:12). உற்சாகமாகக் கொடுப்பவர் களுக்கும் கொடுக்க முடியாமலிருப்பவர்களுக்கும் நமது பணி விடையில் வித்தியாசமிருக்கக்கூடாது. **பணத்தையல்ல** அவர்களுடைய **ரட்சிப்பையே** நாம் பிரதானமாகத் தேட வேண்டும். அப்படியே இஷ்டம்போல் விட்டுவிட்டால் வருமானம் குறைந்துபோகாதா? ஒருவேளை குறையலாம். ஆனால் வேலைக்கு அதனால் பாதகம் ஏற்படுவதில்லை.

வருமானம் சொற்பமாயுள்ள சபையில் தேவாசீர்வாதம் இல்லையென்றோ, ஏராளமான பணத்தைச் சேர்த்து வைத்திருக்கும் சபையில் ஆசீர்வாதம் பெருகிவிட்டதென்றோ யார் சொல்லக்கூடும்? மதுரை மீனாட்சி அம்மையார் ஆலயத்தின் வருமானத்துக்கு நிகருண்டா? அதிகப் பண வருமானமுள்ள ஓர்

சபையின் போதகரைப் பார்த்து: உங்களுக்குப் பணக்குறை வில்லையே என்றேன். அதற்கு அவர் : பணக்குறைவுமில்லை, பிசாசின் கோஷ்டத்துக்கு அளவுமில்லை. சபை அங்கத்தினருக்குள் அன்போ ஐக்கியமோ கிடையாது. எப்போப் பார்த்தாலும் போராட்டமும் பிரிவினையும்தான் என்று பெரு மூச்சுவிட்டார். **பணத்தைக்கொண்டு சபைகளின் நிலைமையை மதிப்பது சரியல்ல.** “முதலில் பணம், அப்புறம் ஊழியம்” என்பது மிஷன்களின் ஏற்பாடு. சபையின் மகிமை ஆவிக்குரிய **ஐசுவரியமேயன்றி** பணப்பெருக்கமல்ல. “தரித்திரர் என்று எண்ணப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்கக்கூடிய” தேவமக்கள் சபைகளில் இருக்கிறார்கள். “வெள்ளியும் பொன்னும் எங்களிடத்தில் இல்லை” என்று சொன்ன ஏழைகள் பிறவிச் சப்பாணியை நடக்கச் செய்தார்கள். ஒருவனுடைய உண்மையான குணப்படுதல் **அற்புதத்திலும்** மேலானது. உலக முழுவதும் அதற்கு ஈடாகாது. ஆண்டவர் சொன்ன “பெரிய கிரியைகள்” அதுதான். ஒரு சபையிலுள்ள ஏராளமான பணத்தைக் கண்டு தேவதூதர்கள் சந்தோஷப்படாமல் அந்தச் சபையில் ஒரு பாவி **மனந்திரும்புவதைக் கண்டு** மிகுந்த சந்தோஷப்படுகிறார்கள். தேவராஜ்யத்தின் **வேலையைப்பற்றி** எவ்வளவோ தாராளமாய் ஊக்கமாய்ப் பேசின ஆண்டவர் அதற்காகப் **பணம்** சேகரிப்பதைப்பற்றி ஒரு **வார்த்தைக்கூடச்** சொல்லவில்லை. மேலும் **பொருளைப்பற்றி** அவர் பேசும்படி நேரிட்ட சமயங்களிலெல்லாம் அவருடைய கண்டிப்பான **எச்சரிப்பைத்** தான் கேட்கிறோம். இப்படிச் சொல்வதினாலே பணம் வேண்டியதே இல்லை என்பது நமது கருத்தல்ல. பணம் பெரிய காரியங்களைச் செய்யும். மனுஷர் கண்டு புகழக் கூடிய காரியங்களை நடப்பிக்கும். பணம் விசாலமான **நிலத்தை** வாங்கும். உயர்ந்த கோபுரங்களுள்ள **ஆலயங்களைக்** கட்டும். **போதகர்கள் பிரசங்கிகளை** ஏற்படுத்தும். புதிதாய் வேதத்தில்



சேருகிற ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு **நிலங்கள், வீடுகள், ஆடுமாடுகளை** வாங்கிக் கொடுக்கும். ஆனால் **பாவிகளை ரட்சிக்கும் வல்லமை** பணத்துக்கில்லை. தேவ ஈவாகிய பரிசுத்த ஆவியைப் பணத்தினால் வாங்க நினைத்த சீமோனை பேதுரு பலமாய்க் கண்டித்தார். ஆவிக்குரிய ஊழியரால் ஆவிக்குரிய வேலை நடக்கும் போது ஆண்டவர் அவர்களை ஆதரிக்காமல் விடார். “வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்” என்றும், “சுவிசேஷத்தை அறிவிக்கிற 1 கொரி 9:14 சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும்” என்றும் கட்டளையிட்ட கர்த்தர் தமது உத்தம ஊழியரையும் அவர்கள் ஊழியத்தையும் கைவிடமாட்டார்.

சபைகளின் காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு போகும் இச்சமயத்தில் பிரபல்யமான கிறிஸ்தவ சங்கங்களை நாம் மறக்கலாகாது. கிறிஸ்தவ வாலிபர் சங்கம் (Y.M.C.A.); கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் சங்கம் (Y.W.C.A.); கிறிஸ்தவ மாணாக்கர் சங்கம் (S.C.M.); கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம் (C.E.S.); எனப் பல சங்கங்களை அறிவோம். மகா சிறந்த நோக்கத்துடன் இவைகள் ஆரம்பிக்கப்பட்டன. சிறியவர்களும் பெரியவர்களும் ரட்சிப்பின் மாறுதலடைந்து கிறிஸ்துவின் சாட்சிகளாக உழைக்கவேண்டுமென்பதே அந்தச் சிறந்த நோக்கம். அக்காலத்தில் ஜெபதபங்களும், வேத ஆராய்ச்சிகளும், கிறிஸ்துவைப்பற்றிய போதனைகளும் சிரேஷ்டமாய் நடந்தேறின. இன்று அச்சங்கங்களின் நிலைமை என்ன? சபைகள் எப்படிப் பரிதாபமான நிலைமைக்கு வந்துவிட்டதோ; அதேபோல சாத்தானின் தீய வல்லமைகள் இச்சங்கங்களையும் ஆண்டுகொண்டன. இப்பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரிக்க நேரிட்டிருக்கிறது. “எம்மதமும் சம்மதம்” என்ற சமரச நிலைமைக்கு வந்திருக்கிறது.

சங்கங்களுக்கு உதவிபுரிந்த பரோபகாரிகள் சுயதேசம் போய்விட்டபடியால் சங்கங்களைக் காப்பாற்ற வேறு வழிகளைத் தேடும் சிரமம் ஏற்பட்டது. இதனால் சாப்பாட்டு விடுதிகளும், சப்பாத்துக் கடைகளும், ஜவுளிக் கடைகளும் ஸ்தாபனத்தைச் சூழ்ந்து பெருகின. வருஷக் கடைசியில் கார்னிவல் என்னும் பேரால் நடனப் பெண்களைக் கொண்டுவந்து நாட்டியங்கள் ஆடவைத்தும், சினிமா நடிகர்களை அழைத்து அபிநயக் கூத்துகளைக் காண்பித்தும் **கிறிஸ்தவ** சங்க வேலைக்காகப் பணம் சேகரிப்பது எவ்வளவு துயரமான விஷயம்! ஓர் காலத்தில் இப்படிப்பட்ட காரியங்களை நினைக்கவும் முடியுமா? ஓர் சிறிய தவறானாலும் சபையின் கண்டிப்பு பலமாயிருக்குமே. உலக வல்லமை, சபைகளை ஆண்டுகொண்டபடியால் நாம் உணர்ச்சியற்றுப் போனோம். "என்னைப் பணிந்துகொள்ளும், எல்லாம் உமக்குத் தருவேன்" என்று நமதாண்டவரைச் சோதித்த சாத்தான் சபைகளையும் சங்கங்களையும் தன் கைவசப்படுத்திக்கொண்டான். தகாத வழியில் பணம் சம்பாதிப்பதைவிட வேலைகளை மூடிவிடுவது நல்லது. அக்காலமும் நெருங்கி விட்டது.

## 15. கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம் இருக்க முடியுமா?

இதை நான் எழுதிக்கொண்டிருக்கையில் **"கிறிஸ்தற்ற கிறிஸ்துமார்க்கம்"** இருக்கமுடியுமா என்று ஒருவர் என்னைக் கேட்டார். சரியான கேள்வி. இருக்கமுடியாதென்று சொன்னேன். இது **"அநீதியுள்ள நியாயாதிபதி"** என்று ஆண்டவர் சொன்னதைப்போலிருக்கிறது. நீதியுள்ளவனே நியாயாதிபதி. நீதியற்றவன் நியாயதிபதியல்ல. என்றாலும் பேச்சுக்கு அப்படிச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. நல்லதம்பி என்பது ஒருவன்



பேர். அவனோ கெட்டதம்பியா யிருக்கிறான். அப்படி யிருந்தாலும் நல்லதம்பி என்றே அவனைக் கூப்பிடுகிறோம். **கிறிஸ்தற்றவன் கிறிஸ்தவனல்ல. கிறிஸ்தற்ற மார்க்கம் கிறிஸ்து மார்க்கமல்ல.** அப்போஸ்தலர் எங்கும் சென்று கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். விசுவாசித்தவர்கள் **கிறிஸ்துவை** ஏற்றுக் கொண்டு ரட்சிக்கப்பட்டார்கள். பவுலுடைய பிரசங்கப்பொருள் **கிறிஸ்து.** "நாங்களோ **கிறிஸ்துவைப்** பிரசங்கிக்கிறோம்" என்றார். கிறிஸ்து மார்க்கத்துக்கு **கிறிஸ்துவே** ஆதியும் அந்தமுமா யிருக்கிறார். சபைகளில் **மனுஷர் ஏற்படுத்தின** காரியங்களை நாம் முக்கியப்படுத்தி **கிறிஸ்துவை** இழந்தோம். எங்கே அவருக்கு இடமில்லையோ அங்கே அவரது மகிமைக்கு இடமில்லை. தங்கள் பாவத்தால் கர்த்தரின் சமுகத்தை இழந்த இஸ்ரவேலர், கர்த்தருடைய **பெட்டியால்** தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று நினைத்து, மகா ஆரவாரத்தோடு அதைக் கொண்டுவந்து, பெலிஸ்தரோடே யுத்தம் பண்ணினார்கள். பெட்டியும் பிடிபட்டது; பெரிய அழிவும் உண்டானது. **கர்த்தரற்ற** மனுஷருக்கு கர்த்தருடைய **பெட்டியால்** பிரயோஜனமென்ன? **கிறிஸ்தற்ற** மனுஷருக்கு கிறிஸ்து **மார்க்கத்தால்** பிரயோஜனமென்ன? ஆலயமோ ஆலயமில்லையோ, சபையோ சபை இல்லையோ, போதகரோ போதகர் இல்லையோ, **கிறிஸ்து இல்லாமல்** நமக்கு ரட்சிப்பு இல்லை. இவர் மாம்சத்தில் வெளிப்பட்ட **கடவுள்.** கடவுளுடைய மகிமையின் பிரகாசம். சூரியனை நாம் பார்க்க முடியாது. அது பூமியைச் சுற்றியுள்ள ஆகாயத்தின் மூலமாய் தன் பிரகாசத்தை மட்டுப்படுத்தி தன்னை நமக்கு வெளிப்படுத்துகிறது. கடவுளை அவர் இருக்கிறபடி காணவோ அறியவோ முடியாது. மாம்சத்தில் வந்த கிறிஸ்து மூலமாய் நமது நிலைமைக்குத் தக்கதாக தேவன் தம்மை அளவுக்குட்படுத்தி வெளிப்படுத்துகிறார். "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றார். நமக்கு வேண்டிய

சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கின்றன. கடவுளைத் தேடி நாம் வானத்துக்கு ஏறவேண்டியதில்லை. எல்லையில்லா ஆகாயத்தைச் சுற்றி அலையவேண்டியதில்லை. "நானும் பிதாவும் ஒன்று" என்றார். கிறிஸ்துவைச் சொந்தமாக்கி அவராலே பிழைக்கிறவன் அவருக்குள்ளான ஆசீர்வாதங் களைப்பெற்று அனுபவிக்கிறான். இது வீண் பேச்சல்ல **கிறிஸ்தற்ற** மனுஷன் சகலத்தையும் இழந்துபோகிறான்.

ஆகையினால்தான் கிறிஸ்து **தம்மையே** நமக்குக் காண்பிக்கிறார். தம்மை முக்கியப்படுத்துவதால் இவர் பிதாவைக் கனவீனம் பண்ணவில்லை. நாம் **பிதாவை** நோக்கினால் அவர் கிறிஸ்துவை நமக்குக் காண்பித்து : "இவர் என் நேசகுமாரன், இவருக்குச் செவி கொடுங்கள்" என்கிறார். நாம் **ஆவியானவரை** நோக்கினால் அவர் கிறிஸ்துவை நமக்குக் காண்பித்து அவரை நமக்குள் மகிமைப்படுத்துகிறார். ஆகையால்தான் **கிறிஸ்து** நடுநாயகனாக எல்லாரையும் தம்மிடம் அழைக்கிறார். மனுமக்களுக்கு கிறிஸ்து சகலத்திலும் சகலமுமாயிருக்கவேண்டு மென்பது தேவ தீர்மானமாகயிருக்கிறது. **"என்னிடத்தில்** வாருங்கள்", **"என்னிடத்தில்** விசுவாசமாயிருங்கள்", **"என்னிடத்தில்** கற்றுக்கொள்ளுங்கள்", **"என்னைப்** பின்பற்றுங்கள்", **"என்னிடத்தில்** அன்பாயிருங்கள்", **"என்னில்** நிலைத்திருங்கள்", **"என்னையல்லாமல்** உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்கிறார். நமக்கு **எல்லாம்** அவரே. இப்படியிருக்க, **கிறிஸ்தற்ற** தேவ அறிவினால் பிரயோஜனம் என்ன? **கிறிஸ்தற்ற** விசுவாசப்பிரமாண அறிக்கையால் பிரயோஜனம் என்ன? **கிறிஸ்தற்ற** ஆராதனைகளால் பிரயோஜனம் என்ன? **கிறிஸ்தற்ற** பிரசங்கக் கேள்விகளால் பிரயோஜனம் என்ன? கிறிஸ்தற்ற நற்கருணையால் பிரயோஜனம் என்ன? "மதிகேடரே குருடரே எது பிரதானம்" என்று சபைகளைக் கேட்கிறார். தேவனுடைய



சகல பரிபூரணத்தையும் தமக்குள் உடையவராகிய **கிறிஸ்து ரட்சகரை** நாம் சொந்தமாக்கிக்கொள்ளாமல், அசட்டையாயிருந்து கிறிஸ்துமார்க்கத்தின் பேராலே நாம் எத்தனை காரியங்களைச் செய்தாலும் பிரயோஜனம் என்ன? **"கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கமே"** சபைகளில் காணப்படும் சகல குழப்பங்களுக்கும் கேடுகளுக்கும் காரணமாயிருக்கிறது. தலையில்லாச் சரீரமும் கிறிஸ்தற்ற சபையும் ஒன்றுதானே.

ஆலயத்தின் அலங்காரக் காட்சிகளைக் கண்டு ஏமாந்து போகக்கூடாது. ஓர் இரவில் ஒரு பெரிய ஆலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருந்தபோது, ஒரு மனுஷன் கோபுரவாசலில் நின்று உள்ளேயிருந்த பீடத்தையும் ஆராதனை நடத்தினவரையும் பார்த்தான். மேலிருந்து கீழ்வரை தொங்கின அழகான திரைகளையும், மேஜையின் மேல் போட்டிருந்த பட்டுகளையும், மேஜையின் இருபக்கங்களிலும் ஜோதியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்த விளக்குகளையும், குருவானவர் தரித்திருந்த பளபளப்பான உடுப்புகளையும், பாடகர் வரிசையையும் கண்ட போது அவன் பரவசமடைந்து : ஆகா, இவ்வாலயம் **சுவர்க்கலோகம்** போலிருக்கிறதே என்றான். அலங்கார விஷயத்தில் ரோமைச் சபை ஆலயங்களின் அழகுக்கும், குருக்களுடைய அலங்கார உடைகளுக்கும் எதுவும் இணையாகாது. புறம்பான அலங்காரங்கள் மனுஷருக்குள் **பரவசத்தை** உண்டாக்கலாம், ஆத்துமாவை ரட்சிக்காது. சிறுவயது முதல் சடங்காச்சார ஆராதனைகளில் பழகினவர்களுக்கு அதுவே மார்க்கமாகிறது. எழுப்புதலும் பரவசமும் ரட்சிப்பல்ல. மேலும் நீண்டகாலப் பழக்கத்தால் பரவசம் படுத்துக்கொள்ளும். ஆகாயவிமானம் முதல் முதல் வந்தபோது ஜனங்களுக்கிருந்த ஆச்சரியம் கொஞ்சமல்ல. இப்போது அதை ஏறிட்டுப் பார்ப்பார் இல்லை. அழகிலும் ஆராதனைகளிலும் எருசலேம் ஆலயத்துக்கு நிகருண்டா?

ரட்சண்ய கர்த்தாவை அவர்கள் அறியாமல் போனபடியால் அவர்களும் அழிந்தார்கள், அவர்கள் ஆலயமும் அழிந்தது. அதுபோலவே நமக்கும் சம்பவிக்கலாம். ஜீவனுள்ள ரட்சகரை அறிந்து அவரை ஏற்றுக்கொள்ளாமல் இப்படிப்பட்ட புறம்பான ஆசாரங்களிலே பற்றுதல் வைப்பவர்கள் மோசம் போவார்கள். "மனுஷருக்குள் **மேன்மையாய்** எண்ணப்படுகிறவைகள், கர்த்தருடைய பார்வையில் **அருவருப்பாயிருக்கின்றன.**" சபையார் ரட்சிக்கப்படத்தக்கதாகக் கிறிஸ்துவைப் போதிக்காமல் சடங்காச்சாரங்களாலே அவர்களை மயக்கி மோசஞ் செய்வது கொடிய பாதகமாகும். ஆவியும் உண்மையுமற்ற அலங்கார ஆராதனையைவிட ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் குடிசைக் கோவில் மேல்.

## 16. கிறிஸ்தற்ற நிலைமையின் மோசம்

அப்போஸ்தலன் எபேசியரைப் பார்த்து : "அக்காலத்திலே நீங்கள் **கிறிஸ்துவைச்** சேராதவர்களாயிருந்தீர்கள்; இப்பொழுதோ கிறிஸ்து இயேசுவுக்குள் சமீபமானீர்கள்" என்கிறார். **"முன்னே, இப்பொழுது"** என்னும் வார்த்தைகள் நிருபங்களில் திரும்பத்திரும்ப வருகின்றன. அவைகள் கிறிஸ்தற்ற முந்தின நிலைமையையும், அவரை ஏற்றுக்கொண்டபின் உண்டாகும் மாறுதலையும் காண்பிக்கின்றன. கிறிஸ்து யார் யாருக்குள் பிரவேசிக்கிறாரோ அவர்கள் முன்னிருந்தபடி இருக்கவேமாட்டார்கள். இது எக்காலத்திலும் உண்மை. ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது மெய்யானால் அவன் தன்னைக் குறித்து : **"முன்னே, இப்பொழுது"** என்று பேசுகிறான். முன்னே இரக்கம் பெறவில்லை; இப்பொழுது இரக்கம் பெற்றேன். முன்னே அந்தகாரம், இப்பொழுது வெளிச்சம். முன்னே பகை, இப்பொழுது சமாதானம். முன்னே சாவு இப்பொழுது ஜீவன்.



முன்னே பிரிவினை, இப்பொழுது ஒற்றுமை. முன்னே வம்பன், இப்பொழுது அன்பன். முன்னே உலகத்தான், இப்பொழுது பரலோகத்தான் என்று சொல்லும் கிருபை பெற்றிருக்கிறான். ஒருவனுடைய குணத்தையும் நடக்கையையும் மாற்றாத மார்க்கம் தேவமார்க்கமல்ல. அது "கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்". சபையிலுள்ளவர்கள் இந்த ரட்சிப்பின் மாறுதல்களைப் பெற்றிருப்பார்களானால் சபைகள் ஜீவ தண்ணீருள்ள நதிகளாயிருக்கும். நாம் கிறிஸ்துவின் சிந்தையால் நிறைந்து, ஒருவருக்கொருவர் அன்பும், அனுதாபமும், இரக்கமும், சமாதானமும், பொறுமையும், நன்மை செய்யும் சுபாவமும் உள்ளவர்களாய் நடந்துகொள்வோம். இந்தத் தெய்வீக லட்சணங்கள் ஏன் சபைகளில் இல்லை? **கிறிஸ்துவுக்கு அங்கே இடமில்லை.** நமது ஜீவனாகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல், ஆராதனைகளை நடத்துவதும் பற்பல வேலைகளைச் செய்வதுமாயிருக்கிறோம். நமது **ஜீவியம்** ஆண்டவருக்குப் பிரியமில்லாதிருக்க, நமது **வேலைகள்** எப்படி அவருக்குப் பிரியமாயிருக்கும்? இதைக் கொஞ்சமும் நாம் யோசிக்கிறதில்லை. நமது ரட்சகரும் ராஜாவுமாகிய **கிறிஸ்துவை** சகலத்திலும் சகலமாக்காமல் சபைகளுக்கு நற்காலம் வரப்போகிறதில்லை. நமது தனி ஜீவியத்திலும், குடும்பங்களிலும், சபைகளிலும், கமிட்டிகளிலும், ஆலோசனைச் சங்கங்களிலும் ஆண்டவர் பூரண ஆளுகை செய்யவேண்டியது அவசியம். சபைகள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அதுதான் வழி.

நாம் ஒரு சபையைச் சேர்ந்திருப்பதே போதும் என்று நினைக்கக்கூடாது. சபையல்ல **கிறிஸ்துவே** நமது ரட்சிப்பு. **கிறிஸ்தற்ற மனுஷனுக்கு** ரட்சிப்பில்லை, ஜீவன் இல்லை, சமாதானம் இல்லை, நம்பிக்கை இல்லை, நற்குணமில்லை, இனி வெளிப்படும் மகிமையில் பங்கில்லை. ஒருவன் கிறிஸ்துவை உடையவனும் கிறிஸ்தற்றவனுமாயிருக்க முடியாது.

அவன் ஜீவன் பெற்றவனும் ஜீவனற்றவனுமாயிருக்க முடியாது. **கிறிஸ்துவே** நமது ஜீவன். அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவனுக்கு அவர் **இப்போதே** ஜீவனாகிறார். குடும்பங்களிலும் சபைகளிலும் நாம் காண்கிற சகல குழப்பங்களுக்கும் சங்கடங்களுக்கும் காரணம் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு பிழைக்காததினாலேதான். கலியாணமான வாலிப மணமக்கள் வருஷக்காலமாகப் பிரிந்திருப்பது எவ்வளவு துயரமான விஷயம்! இம்மையின் வாழ்வு ஓர் சிறிய பிரயாணம். நாம் ஒரே தரம் இவ்வழி நடக்கிறோம். இம்மை மறுமை என்று இரண்டில்லை. நமது ஜீவியம் ஒரே தொடர்ச்சியாக இருக்கிறது. எவ்வித நிலைமையில் உலகை விடுகிறோமோ அதே நிலைமையிலே தான் மறுமைக்குட் பிரவேசிப்போம். நாம் மறுபடியும் இங்கே வந்து நமது ஜீவியத்தைச் சரிப்படுத்தவும் நற்கிரியைகளைச் செய்யவும் முடியாது. ஏனென்றால் “ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும்” தேவ ஏற்பாடாயிருக்கிறது. இங்கே கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொண்டவர்களுக்கு அந்த நாள் பாக்கியமான நாள். கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்து நியாயாதிபதியாக வெளிப்படுவது கொடிய சஞ்சலமான நாளாயிருக்கும்.

சகோதரரே! இதுவரை நமது மார்க்கத்துக்கடுத்த பல காரியங்களைச் சிந்தித்தோம். நமது ஆராதனைகளிலும், வேலைகளிலும், சங்கங்களிலும் ஆண்டவருக்குப் பூரணமான இடம் கொடுக்கப்படாததால் விளைந்த பாவங்களையும் பல சங்கடங்களையும் உணர்ந்தோம். என்ன செய்யப்போகிறோம்? ஒன்று நாம் **கிறிஸ்துவைச் சொந்தமாக்கிப் பிழைக்கும்** கிறிஸ்தவர்களாயிருக்கிறோம்; அல்லது இன்னும் **கிறிஸ்தற்ற** கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். இது நமக்கு நிச்சயமாய்த் தெரியும். அவர் நமக்குள்ளே இருந்தால் வெளியே நின்று அவர்



தட்டவேண்டியதில்லை. சர்வலோகங்களையும் சொல்லால் உண்டாக்கும் சர்வ வல்லமையுள்ள ஆண்டவருக்கு நமது **சம்மதமின்றி** நம்மை ரட்சிக்க முடியாது. மனமில்லாதவர்களை அவர் கட்டாயமாய் ரட்சிக்கிறதாயிருந்தால் உலகத்தார் யாவரையும் ஒரே நிமிஷத்தில் மகிமையில் சேர்த்திருப்பார். அப்படியானால் “உன்னைச் சேர்த்துக்கொள்ள எத்தனை தரமோ நான் **மனதாயிருந்தேன்,** உனக்கோ **மனதில்லாமற்போயிற்று** என்றும்; உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு **மனதில்லையே”** என்றும் அவர் கண்ணீர்விட்டுப் புலம்பவேண்டியதென்ன? நம்மைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள இந்நிமிஷத்திலும் அவர் வாஞ்சையோடிருக்கிறார். பற்பல வகையாய் நம்மைச் சொந்தமாக்கிக்கொள்ளவும் முயற்சிக்கிறார். அவரைத் தொட்ட நிமிஷத்தில் ஆச்சரியமான மாறுதல் நம்மில் உண்டாகும். அவர் நமக்குள் வசிக்க இடம் பெற்றால் நாமும் ஆசீர்வதிக்கப்பட்டு அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் இருப்போம் என்பது நிச்சயம்.

**தேவ ஊழியருக்கு** ஒரு வார்த்தை. **கிறிஸ்துவே** ரட்சிக்கிறவர் என்பது உண்மையாயினும் ரட்சிப்பின் **சுவிசேஷத்தை** நமது கைகளில் தந்திருக்கிறார். “எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு **அவரையே** நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்; அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்” என்று அப்போஸ்தலன் மேற்கொண்ட தீர்மானம் நம்மையும் ஆண்டுகொள்ளட்டும். உலகமே பாழாய் அழிந்துபோகிற இக்காலத்தில் நாம் அசதியாயிருப்பது சரியல்ல. பலத்த சோதனையான காலம் இப்பொழுது சபைகளுக்கு

வந்திருக்கிறதென்பதை மறக்கவேண்டாம். சபையிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படி ஜெப சிந்தையோடும் ஆவியின் பலத்தோடும் உழைப்போமாக. பிழைப்பு, கடமை, மனுஷர் புகழ்ச்சி, பேர்ப்பிரஸ்தாபம், சம்பாத்தியம் என்னும் நோக்கங்களைத் தூர எறிந்துவிட்டு, கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து, ஆத்ம வாஞ்சையுடன் கிறிஸ்துவைப் பிரசங்கிப்போமானால் கட்டாயம் பலன் கிடைக்கும். ஆராதனைதோறும் பிரசன்னமாயிருக்கிற ஆண்டவர் உத்தம ஊழியத்தை ஆசீர்வதித்து அநேகரைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்வார். நாம் மகிமையில் பிரவேசிக்கும்போது கிறிஸ்துவின் அளவற்ற அன்பின் பெருக்கத்தையும், கிருபையின் ஐசுவரியத்தையும் கண்டு, இங்கே இருந்தபோது ஆண்டவருக்காக இன்னும் அதிகமாய் உழைத்தோமில்லையே, இன்னும் அநேகரை ரட்சிப்பின் வழியில் நடத்தினோமில்லையே என்று உணர நேரிடும். ஆகையால் ஆண்டவர் கொடுத்த வேலையை நாம் சுகத்தோடும் பலத்தோடும் இருக்கும்போதே உண்மையோடும் ஊக்கத்தோடும் நிறைவேற்றுவோம். “எப்படியாகிலும் சிலரை ரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்” என்று சொன்ன பவுலின் வாஞ்சை நம்மையும் ஆண்டுகொள்ளட்டும். கர்த்தர் நம்மை அழைக்கும் வேளை வரும்போது: “ஆண்டவரே, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த வேலையை உமது கிருபையால் செய்து முடித்தேன், என் பிழை பொறுத்தருளும் ஸ்வாமி” என்று சொல்லி அவரிடம் சேரும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

“கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்”

*****

# நீங்கள்
# அறியாதிருக்கிற
# ஒருவர்

# முகவுரை

உலகிலுள்ள சபையாரனைவருக்கும் கிறிஸ்தவர்கள் என்பது பொதுப் பெயர். இப்பெயர் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டதல்ல. கிறிஸ்துவின் உத்தம அடியாரைக் கவனித்த மற்றவர்களால் இப்பெயர் உண்டாயிற்று. கிறிஸ்து உலகத்தில் ஒரு மதத்தை ஸ்தாபிக்கவோ, உபதேசம் தந்துபோகவோ வந்தவரல்ல. அவர் தம்மையே நமக்குத் தந்த தியாகேசனாக வந்தார். **கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்; கிறிஸ்துவை உடையவர்களே கிறிஸ்தவர்கள்.** இவைகளைப் பிரிக்க முடியாது. இங்கேதான் கிறிஸ்து மார்க்கத்துக்கும் மற்ற மதங்களுக்கும் வித்தியாசமிருக்கிறது. உலகில் காலா காலங்களில் சாஸ்திரிகள், ஞானிகள், சாதுக்கள், ரிஷிகள், குருக்கள், மகாத்துமாக்கள் தோன்றி மக்களுக்கு உபதேசம் செய்து மறைந்தார்கள், மக்கள் அவ்வுபதேசங்களைப் படித்து வருகிறார்கள். உபதேசம் தந்தவர்களைக் காணோம். “எங்களை நம்புங்கள், நாங்கள் உங்களை ரட்சிப்போம்” என்று அவர்கள் சொல்லவில்லை; கிறிஸ்து மார்க்கமோ உபதேசங்களை மாத்திரம் சார்ந்ததல்ல. கிறிஸ்துவாகிய **ஆளைச்** சார்ந்தது. **கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்,** கிறிஸ்து இல்லையேல் கிறிஸ்து மார்க்கமும் இல்லை. மற்றவர்களைப்போல் அவர் மறைந்துபோனவரல்ல. அவர் என்றென்றும் பிழைத்திருக்கிறார். தேவனுடைய சகல பரிபூரணமும் நிறைந்தவராய் விசுவாசிகளின் உள்ளங்களில் வசிக்கிறார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

**கிறிஸ்தவர்கள்** என்னும் பேர் மிகவும் அருமையானது. சீஷர்களாயிருப்பவர்களுக்குத்தான் கிறிஸ்தவர்கள் என்னும் பேர் தகுமேயன்றி மற்றவர்களுக்கல்ல. ஆண்டவர் தமதடியாரைச் சீஷர்கள் என்று அழைத்தார். சீஷர்கள் லட்சணங்கள் எவையென்பதையும் விவரித்தார். அவர் அப்போஸ்தலரை



அனுப்பினபோது: நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் **கிறிஸ்தவர்களாக்குங்கள்** என்று சொல்லாமல் **சீஷர்களாக்குங்கள்** என்றார். சுவிசேஷத்திலும் நடபடிப் புஸ்தகத்திலும் சீஷர்கள் என்னும் சொல் நூற்றுக்குமேல் வருகிறது. கிறிஸ்தவன் என்னும் சொல்லோ மூன்றே இடங்களில் மாத்திரம் வருகிறது. ஒருவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்வது இலேசு; சீஷன் என்று சொல்வதோ கஷ்டம். கிறிஸ்துவிடம் கற்றுக்கொண்டு அனுதினமும் அவர் பின்சென்று அல்லது அவரைப் பின்பற்றி, அவரது சாயலுக்கொப்பாக வளருகிறவன் சீஷன். சீஷர்களைக் கொண்டுதான் ஆண்டவர் தமது சபையை ஸ்தாபித்தாரேயன்றி வேதக்காரரைக் கொண்டல்ல.

**கிறிஸ்து கிறிஸ்து என்று நாம் வாசிப்பிலும், ஜெபத்திலும், பாட்டிலும், பேச்சிலும், பிரசங்கத்திலும் தாராளமாகச் சொல்லுகிறோம். அவர் யார்** என்பதைக் கொஞ்சமாகிலும் அமர்ந்து யோசித்தோமா? அவரது **தெய்வீக உன்னத மகத்துவங்களை** நம்பினோமா? நம்பினதுண்டானால் ஆச்சரியத்தால் பரவசமடைவோம். பயபக்தியுடன் அவரைப் பணிந்து கொள்வோம். அவரையே ஒப்பற்ற செல்வமாகக் கொண்டாடுவோம். நாம் எங்கேயிருந்தாலும், எந்நிலைமையிலிருந்தாலும் அவரை மறக்கவோ அவரைவிட்டு விலகவோ முடியாதபடி அவரே நமக்குள் ஜீவனாயிருப்பார். இந்த அனுபவமுள்ள தேவ மக்கள் இங்குமங்குமாக இருக்கிறார்கள். மற்றவர்களைப்பற்றி என்ன?

விசுவாசப்பிரமாணத்தைக் காலமெல்லாம் சொல்லுகிற அவிசுவாசிகள் அநேகர். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற கிறிஸ்தற்றவர்கள் அநேகர். ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ச் சென்றும் ஆண்டவரை அறியாதவர்கள் அநேகர். அடிக்கடி நற்கருணையில் சேர்ந்தும் ஆண்டவரோடு ஐக்கியமில்லாதவர்கள் அநேகர். எத்தனை பிரசங்கங்களைக் கேட்டும் குணத்தில் சற்றும் மாறாதவர்கள் அநேகர். இவர்கள்

தண்ணீரற்ற கிணறுகள். கனியற்ற விருக்ஷங்கள். உயிரற்ற சரீரங்கள். சாரமற்ற உப்புகள். மணமற்ற புஷ்பங்கள். பிரகாசமற்ற விளக்குகள். கிறிஸ்து உலகத்துக்கு வந்த நோக்கம் தங்களில் நிறைவேறியிருக்கிறதாவென்று இவர்கள் யோசிக்கிறதில்லை. என் நடுப்பிராயம் வரை நானும் இதுபோலவே கிறிஸ்துவை அறியாதவனாயிருந்தேன். கிருபையுள்ள ரட்சகரோ என்பேரில் கண்ணோக்கமாயிருந்தாரென்பது பிந்தி வெளிப்பட்டது.

கிறிஸ்துவை நாம் ஜீவனாக ஏற்றுக்கொண்டு பிழைப்பது மெய்யானால் நமது குணம் கட்டாயம் மாறும். அவர் தமது ஆவியின் மூலம் நமக்குள் பிழைப்பதால் அவர் **சிந்தை** நமக்குக் கிடைக்கும். நாம் அவரில் நிலைத்திருப்பதால் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமான **கனிகளைக்** கொடுப்போம். நமது குறைவுகளை நாம் உணர்ந்து கிறிஸ்துவின் அடியார்களாக வேண்டுமென்பதே இச்சிறு புஸ்தகத்தின் நோக்கம். ஒரு ஆளைக் குறித்தோ அல்லது ஒரு சபையை நினைத்தோ இது எழுதப்பட்டதல்ல. சபைகள் சங்கங்களின் தற்கால நிலைமையைக் கவனித்தும், தேவ ஊழியர் நிறைவேற்றவேண்டிய வேலையின் உத்தரவாதத்தை உணர்ந்தும் இது எழுதப்பட்டது. இச்சிறு புஸ்தகம் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி ஆண்டவர் அருள்செய்வாராக.

**எஸ். பரமானந்தம்**



# பொருளடக்கம்

## கிறிஸ்துவை அறிவதும் அவரைச் சேவிப்பதும்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **I.** | **நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்** | ... | 55 |
| | 1. யூதர்கள் கிறிஸ்துவை அறியவில்லை | ... | 57 |
| | 2. யூதஜாதி தங்கள் மேசியாவை அறியாமற் போனது ஆச்சரியம் | ... | 58 |
| | 3. யூதர்கள் கிறிஸ்துவை அறியாமற்போன காரணம் | ... | 62 |
| | 4. அப்படியானால் நம்மைப்பற்றி என்ன? | ... | 65 |
| | 5. நமது அறிவு எப்படிப்பட்டது? | ... | 71 |
| | 6. அறிவின் பலன்கள் எவை? | ... | 77 |
| | 7. இந்த அனுபவ அறிவு நமக்கு எப்படிக் கிடைக்கும் | ... | 90 |
| **II.** | **வீண் ஓட்டம், வீண் பிரயாசம்** | ... | 96 |
| | 1. வீணான காரியங்கள் | ... | 96 |
| | 2. வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப் பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சி | ... | 114 |

# நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்

## ONE WHOM YOU KNOW NOT

**'நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்'.**

- யோ. 1 : 26.

நோயாளி தன் நோய் நீங்கும்படி வைத்தியனைத் தேடுவான்; மற்றபடி தேடமாட்டான். நமது காரியமும் அது போலவே. ஆபத்து அவசரமானால்: இயேசுவே ரட்சியும்; பாவமுண்டானால்: ஆண்டவரே மன்னியும்; கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள சம்பந்தம் அவ்வளவுதான். அவரை இன்னாரென்று அறியாததே இதற்குக் காரணம். அவரை இன்னாரென்று நாம் அறிந்திருந்தால் ஒரு நிமிஷமாவது அவரை விட்டுப் பிரியமாட்டோம். அவரே நமது இடைவிடாத தேட்டமாயிருப்பார். **இயேசுகிறிஸ்து** உன்னத ஞானக் களஞ்சியம். தெய்வத்தின் சகல பரிபூரணமும் அவருக்குள் அடக்கம். அவரை அறிவதில் நமக்கு நித்திய ஜீவனும் நித்திய மகிமையும் உண்டு. அந்த அறிவு நமக்குக் கிடைப்பது இலேசன்று. அவர் உலகத்தில் பிரவேசித்தபோது தம்மைக் கடவுள் என்றோ, **தேவகுமாரன்** என்றோ, **கிறிஸ்து** என்றோ விளம்பரஞ் செய்யவில்லை. தாம் கிறிஸ்து என்பதைப் பிரஸ்தாபிக்க வேண்டாமென்று சீஷர்களை எச்சரித்தார். இதன் இரகசியம் என்ன? அவர் தம்மை தேவகுமாரன் என்று சொல்வதாலே அதன் உண்மையை ஜனங்கள் அறிந்து கொள்ள முடியாது. அவரை இன்னாரென்று அறியும் அறிவு நமக்குள்ளே



தானாக உதிக்கவேண்டும். அந்த அறிவை நமக்குள் உண்டாக்கும்படி அவர் மனுஷர் நடுவில் சஞ்சரித்தார். அதாவது, மனுஷர் அவரது ஜீவியம், உபதேசம், கிரியைகள் மூலமாய் அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பினார். ஏனென்றால் கிறிஸ்துவின் தெய்வீகம் **உள்ளத்தில்** வெளிப்படவேண்டுமே தவிர, புஸ்தக அறிவாலும் மற்றவர்கள் சொல்வதாலும் வராது.

ஆண்டவர் தமது ஊழியத்தின் முடிவில், தம்மை இடைவிடாது பின்சென்ற ஜனங்கள் தம்மை **இன்னாரென்று** கண்டுகொண்டார்களா என்பதை அறிய விரும்பினார். அவர் தமது சீஷர்களைப் பார்த்து : 'ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்' என்று கேட்டார். சிலர் உம்மை எலியா வென்றும், சிலர் எரேமியாவென்றும், சிலர் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவரென்றும், சிலர் யோவான் ஸ்நானகன் என்றும், இவ்வாறு பலரும் பலவிதமாய்ப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். இதனாலே அவர் மனம் சோர்ந்து போகவில்லை. தம்மைப்பற்றிய அறிவு புறம்பேயிருந்தல்ல, ஆவியினால் உள்ளத்தில் வெளிப்படவேண்டுமென்பதை அவர் அறிவார். சரி, நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று தமது சீஷர்களையே கேட்டார். 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என்று பேதுரு பதிலளித்தார். காற்றும் கடல் கோஷ்டமும் அதிசயமாக நின்றபோது படவிலிருந்த சீஷர்கள்: 'மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி அவரைப் பணிந்து கொண்டார்கள்'. இதேமாதிரி நாத்தான்வேலும் மார்த்தாளும் 'நீர் தேவனுடைய குமாரன்' என்று அறிக்கை செய்தார்கள்.' இது பிதாவின் வெளிப்படுத்தலாலும் அற்புதங்கண்ட பிரமிப்பாலும் உண்டான அறிக்கைகள். கிறிஸ்துவைப்பற்றிய திட்டமான ஸ்திரமான அறிவு சீஷர்களுக்கு ஆவியானவரின் நிறைவைப் பெற்றபின்பே

கிடைத்தது. மோசே, எலியா, தாவீது, பேதுரு, பவுல் முதலானவர்கள் ஜனங்களைப் பார்த்து, நீங்கள் எங்களை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்கிறதாயிருந்தால் நீங்கள் இன்னாரென்று நிமிஷத்தில் சொல்லிவிடுவார்கள். கிறிஸ்துவின் காரியமோ அப்படியன்று. அவர் தோற்றத்தில் சாதாரணமான மனுஷன்; ஆனால் அவரைக் கவனித்தவர்களோ மற்றவர்களைப் போல் அவரும் ஒரு மனுஷன்தான் என்று சொல்ல ஏதுவில்லை. 'இவர் யாரோ? இவர் எப்படிப்பட்டவரோ?' என்று பிரமித்தார்கள். இங்கேதான் சூட்சம் இருக்கிறது.

## 1. யூதர்கள் கிறிஸ்துவை அறியவில்லை

கிறிஸ்து வனாந்தரம் சென்று, சோதனைகளில் வெற்றியடைந்து, மறுபடியும் யோர்தான் நதிக்கரை வந்து, ஜனங்கள் நடுவில் தோன்றினார். அவர் தமது ஊழியத்தை ஆரம்பிக்கப்போகிறார். ஸ்நானக யோவான் அவரைக் கண்டு: ஜனங்களே, 'நீங்கள் **அறியாதிருக்கிற** ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்' என்று விளம்பரஞ்செய்தார். 'நானும் இவரை அறியாதிருந்தேன், நானும் இவரை அறியாதிருந்தேன்' என்று இருமுறை கூறி, தேவன் தனக்குக்கொடுத்த அடையாளத்தின் மூலமாக அவரை **தேவகுமாரன்** என்றறிந்து அவரைக் குறித்துச் சாட்சி கொடுத்து வருகிறேன் என்றார். யோவானுடைய சாட்சியை யூத அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள வில்லை. அறியப்படாதவராகவே கிறிஸ்து அவர்கள் நடுவில் தோன்றினார். கடைசிவரை அறியப்படாதவராகவே போய்விட்டார். அவர் ஒரு சமயம் அவர்களைப் பார்த்து : 'நீங்கள் என்னை **அறியீர்கள்'** நான் எங்கேயிருந்து வந்தேன் என்றும் அறியீர்கள்' என்றார். பெந்தெகோஸ்தே நாளில் பேதுரு அவர்களைப் பார்த்து : 'நீங்களும் உங்கள் அதிகாரிகளும் **அறியாமையினாலே** இதைச் செய்தீர்கள்' என்றார்.



'எருசலேமின் குடிகளும் அவர்கள் அதிகாரிகளும் அவரை **அறியாமல்** அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள் என்று பவுலும் சொன்னார் (அப். 13:27). ஆண்டவர் தங்களைச் சந்திக்கும் காலத்தை, அதாவது தங்களைச் சந்திக்கிறவர் இன்னாரென்பதை யூதர்கள் அறியாமற்போனபடியால் அவர்களுக்காகக் கண்ணீர் விட்டழுதார். அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்த சமயத்தில் : 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று **அறியாதிருக்கிறார்களே'** என்று மன்றாடினார். அதாவது, இக்கொடிய பாதகங்களை **யாருக்குச் செய்கிறோம்** என்பதை அவர்கள் **அறியவில்லை.** தங்களைத் தேடிவந்த இரட்சகரை யூதர்கள் முதலிலிருந்து கடைசிவரை **அறியாமலே** போனார்களென்பதை ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் திட்டமாக அறிவித்திருப்பதை இங்கே காண்கிறோம்.

## 2. யூதஜாதி தங்கள் மேசியாவை அறியாமற்போனது ஆச்சரியம்

உலகத்தில் வேறு எந்த ஜாதி அவரை அறியாமற் போனாலும் யூதர்கள் அவரை அறிந்திருக்கவேண்டியது. தேவன் இவர்களைத் தமது சொந்த ஜனமாகத் தெரிந்து கொண்டு, மேசியா வரும்போது எத்தடையுமின்றி அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அவர்களைப் பக்குவப்படுத்தி வந்தார். மனுஷன் பாவஞ்செய்தபோது அவனை ரட்சிக்கும்படி **ஸ்திரீயின் வித்து** தோன்றுவாரென வாக்களித்தார். 'ஸ்திரீயின் வித்து' என்ற வார்த்தையில் கிறிஸ்துவின் **அற்புதப் பிறப்பு** மறைந்து நிற்கிறது. தீர்க்கதரிசிகளைக்கொண்டு மேசியாவைப் பற்றியுள்ள சகல குறிப்புகளையும் விவரமாய் அறிவித்து வந்தார். ஆதியாகமம் தொடங்கி மல்கியாவரை **கிறிஸ்து மயமாகவே** இருக்கிறது. அவர் எந்த நாட்டில், எந்த ஊரில், எந்த வம்சத்தில்,

எவ்விதமாகப் பிறப்பாரென்றும், அவரது ஜீவியமும், போதனை, கிரியைகள் எப்படிப்பட்டவை களாயிருக்குமென்றும், சீஷர்களில் ஒருவன் துரோகியாவான், மற்றவர்கள் ஓடிப்போவார்களென்றும், சத்துருக்கள் அவரைப் பிடித்து அவமானப்படுத்தி, பாடுபடுத்தி, சிலுவையிலறைந்து கொல்லுவார்களென்றும், அவரோ கல்லறையைவிட்டெழுந்து, பரலோகத்திற்குப்போய் பரிசுத்த ஆவியை அருளுவாரென்றும் வெகு தெளிவாக அறிவித்திருந்தார். இவ்வாறு கிறிஸ்துவைப் பற்றிய காரியங்கள் யாவும் பழைய எற்பாட்டில் அடங்கியிருக்கிறது. இவை தவிர, அவர்களுடைய ஆலயம், ஆராதனைகள், பலவித பலிகள், சடங்குகள் சகலமும் **கிறிஸ்துவை** வெளிப்படுத்தும் அடையாளங்களாயிருந்தன. தேவன் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பும்போது எத்தடையுமின்றி அவரை ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அவர் தமது ஜனமாகிய இஸ்ரவேலை இவ்வாறு பலவிதத்திலும் ஆயத்தப்படுத்தி வந்தார். உலகத்தில் வேறு எந்த ஜாதிக்கும் இவ்வளவு கிருபையும், வெளிப்படுத்துதல்களும், ஆசீர்வாத வாக்குகளும், அரிய சிலாக்கியங்களும் அருளப்பட்டதில்லை. இவர்களைக் கொண்டு உலகத்தில் பரம ஒளியைப் பரவச் செய்யவேண்டுமென்பது தேவ ஏற்பாடாக இருந்தது. அவர் தங்கள் நடுவில் தோன்றினவுடனே: ஆ, இவரே எங்கள் மேசியா, இவருக்காகக் காத்திருந்தோம், இதோ எங்கள் நடுவில் வந்து விட்டாரே என்று அவர்கள் ஏகமனதாய் அவரை வாழ்த்தி, ஏற்றுக்கொண்டிருக்க வேண்டியது நியாயம். அவர்களோ அவரை முற்றிலும் அறியாமற்போனார்கள். அவரது மாசற்ற ஜீவியத்தை அறிவார்கள், ஒப்பற்ற போதனையைக் கேட்டார்கள், அற்புத செயல்களைக் கண்டார்கள். இவைகள் மூலமாய்த் தேவன் தமது குமாரனை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். ‘நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும்



நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு **வெளிப்படுத்தினார்’** என்று பேதுரு யூத ஜனத்தைப் பார்த்துச் சொன்னார் (அப். 2:22). அப்படியிருந்தும் அவரை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளாதது மாத்திரமன்று, அவர்கள் அவரை முழுப்பகையாய்ப் பகைத்து, தந்திரமாகப் பிடித்து, அநியாய விசாரணை செய்து, சிலுவையிலறைந்து கொன்றார்கள். இவை யாவற்றையும் கவனிக்கும்போது யூதர்கள் அவரை அறியாமறபோனது நமக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரிய மாயிருக்கிறது.

அப்படியானால் கிறிஸ்துவைப்பற்றி யூத அதிகாரிகளுக்கு ஒன்றுமே தெரியாதா? அவர்களுக்கு எவ்வளவோ தெரியும். அவர் வளர்ந்த ஊர், பெற்றார், தொழில் முதலான காரியங்களை அறிவார்கள். அவர் செய்த போதனைகளையும் அற்புத கிரியைகளையும் அறிவார்கள். இந்தப் **புறம்பான அறிவு** அதிகாரிகளுக்கு மாத்திரமன்று, அவரை இடைவிடாது பின்சென்ற திரளான ஜனங்களுக்கும் இருந்தது. ‘நீங்கள் என்னை அறிவீர்கள் நான் எங்கேயிருந்து வருகிறேன் என்றும் அறிவீர்கள்’ என்று ஆண்டவர் சொன்னது இந்தப் புறம்பான அறிவைப்பற்றித்தான். இந்தப் **புறம்பான அறிவு** அவர்களை ரட்சிக்கவில்லை. அவரது பிறப்பு வளர்ப்பைப் பற்றிய குறைவான எண்ணம் அவர்கள் கண்களைக் குருடாக்கின படியால் தங்கள் நடுவில் வந்தவரை **இன்னாரென்று** அறியாமற் போனார்கள். அவர்கள் அவரை இழிவாய் நினைத்துக் கொண்டதால் அவரது போதனைகளுக்குச் செவி கொடாமற்போனார்கள். மறுக்க முடியாத அவரது அற்புத கிரியைகளைத் தீயோனுடைய பலத்தைக்கொண்டு செய்தாரென்று சொன்னார்கள். இவ்வாறு அவரைக் குறித்து இடறலடைந்து கெட்டார்கள். ‘இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான்; இது எவன்மேல் விழுமோ

அவனை நசுக்கிப்போடும்' என்று ஆண்டவர் சொன்னபடியே அவர்கள் காரியம் ஆயிற்று.

கிறிஸ்துவைப்பற்றிய **புறம்பான சரித்திர அறிவு** நல்லது. அவர் நம்மைப்போல் மாம்சத்தையும் ரத்தத்தையும் உடையவராகி நமக்குள் வந்ததால் அவரை மாம்சத்தின்படி அறியாமலிருக்கமுடியாது. மாம்சத்தில் வெளிப்பட்ட அவரே கடவுளுடைய குமாரன் என்பதையும் நாம் அறியவேண்டும். ஒருவரும் கண்டிராத தேவனை நமக்கு வெளிப்படுத்தவே தமது மாம்ச சரீரத்தைக் கருவியாகக் கொண்டார். 'கிறிஸ்துவை மாம்சத்தின்படி மாத்திரம் அறியோம்' என்று பவுல் சொன்னார். ஏனென்றால் நசரேயனாகிய இயேசு பரலோகத்திலிருந்து மகிமையுடன் வெளிப்பட்டு பவுலை ஆட்கொண்டார். அவர் தன் ஆண்டவரை **உன்னத மகிமையில்** கண்டு ரட்சிக்கப்பட்டவர். ஆகையால் அவர் எழுதிய நிருபங்கள் கிறிஸ்துவின் உன்னத தெய்வீக மகிமைகளை நமக்குக் காண்பிக்கின்றன. கிறிஸ்துவில் வெளிப்படும் **தெய்வீக மகிமையைக்** காண்பவனே கிறிஸ்துவை அறிந்தவன். கிறிஸ்துவில் **தேவனைக் காணாதவன்** அவரை அறிந்தவனல்ல. பிலிப்பு பிதாவைக் காணும்படி விரும்பினபோது ஆண்டவர் அவரைப் பார்த்து: பிலிப்புவே, இவ்வளவு காலம் **நான்** உங்களோடுகூடயிருந்தும் **நீ என்னை** அறியவில்லையா? என்றார். ஆண்டவரே, உம்மை நன்றாய் அறிவோம், ஆனால் 'பிதாவை எங்களுக்குக் காண்பியும்; அது எங்களுக்குப் போதும்' என்றார் பிலிப்பு. பிலிப்புவே **நீ என்னை அறியவில்லை,** அறிந்திருந்தால் பிதாவைக் காண்பியும் என்று நீ கேட்கவே மாட்டாய். நான் பிதாவை வெளிப்படுத்துவதற்காகவே வந்தேன். பிதாவே என்னில் காணப்படுகிறார். என்னைக் காண்கிறவன் என்னில் பிதாவைக் காண்கிறான். என்னை அறிகிறவன் என்னில் பிதாவை அறிகிறான். நான் என் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள். அது



சங்கடமாயிருந்தால் என் கிரியைகளைப் பார்த்தாகிலும் நம்புங்கள் என்றார். கிறிஸ்துவை மகாத்துமாவாக, அரிய போதகராக, அற்புத மூர்த்தியாக, சத்தியத்திற்காக உயிர் கொடுத்தவராக மாத்திரம் பேசுகிறவர்கள் அவரை அறிந்தவர்களல்ல. அவரை மாம்சத்தில் வந்த கடவுளாகக் கண்டவர்களே அவரை அறிந்தவர்கள். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிற இந்தத் **தெய்வீக ஒற்றுமையை** அறிந்தவனே என்னை அறிந்தவன் என்கிறார். இந்த மேலான அறிவு யூதர்களுக்கு இருந்திருந்தால் அவர்கள் அவரைப் பாவி, பிசாசு பிடித்தவன், பாவிகளின் தோழன், போஜனப்பிரியன், ஜனங்களை வஞ்சிக்கிறவன், தேவதூஷணம் பேசுகிறவன், ஓய்வுநாளை மீறுகிறவன் என்று பலவாறாய் அவரைத் தூஷித்திருக்கமாட்டார்கள். 'கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்' என்று பிலாத்து கேட்டான். ஒன்று அவரை ராஜாவாக அவன் ஏற்றுக்கொண்டு பாத நமஸ்காரம் செய்ய வேண்டும், அல்லது அவரைச் சிலுவையிலறையும்படிக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். நடுநிலைமை கிடையாது. தேவன் தமது குமாரனை ஒவ்வொரு மனுஷனுக்கு முன்பாக நிறுத்தி நீ என் குமாரனை என்ன செய்யப்போகிறாய் என்று கேட்கிறார். நான் இரண்டிலொரு பதில் சொல்லியாகவேண்டியது. யூதர்கள் பதில் சொல்லி விட்டார்கள். பிலாத்துவும் சொல்லி விட்டான். நாம் என்ன சொல்லுவோம்?

## 3. யூதர்கள் கிறிஸ்துவை அறியாமற்போன காரணம்

'இனம் இனத்தை அறியும்' என்றபடி ஆவிக்குரியவர்கள் ஆவிக்குரிய ஆண்டவரை அறிந்துகொள்வார்கள். ஒரு கிராமத்தில் பலத்த விசுவாசமும் ஜெபசிந்தையுமுள்ள

கிறிஸ்தவர் ஒருவர் இருந்தார். அவரைக் காணும்படி ஆவல்கொண்டிருந்த வேறொரு ஜெப பக்தன் வேறொரு ஊரில் வசித்தார். ஒருவரையொருவர் சந்திக்கமுடியாமல் நாட்கள் சென்றன. பதினைந்து மைல் தூரத்தில் ஒரு பெரிய சந்தை கூடுவது வழக்கம். வியாபார சம்பந்தமாயும், பொருள்கள் வாங்கும்படியும் பலவிடங்களிலிருந்து திரளான ஜனங்கள் அங்கே போவார்கள். இந்த ஜெப பக்தனும் சந்தைக்குப் போயிருந்தார். இவர் ஜனநெருக்கத்தினூடே நடந்துபோகையில் எதிரே வருகிற ஒரு மனுஷனைக் கண்டார். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டு அன்புடன் ஒருவரையொருவர் தழுவினார்கள். அறிமுகப்படுத்துவார் அங்கில்லாதிருந்தும் அவர்கள் ஒருவரையொருவர் இன்னா ரென்று அறிந்துகொண்டார்கள். நான் என்று எப்படி கண்டீர்களென ஒருவர் கேட்க, உங்கள் **முகம்** உங்களை வெளிப்படுத்தினது என்று மற்றவர் சொன்னார். மோசேயையும் எலியாவையும் சீஷர்கள் மறுரூப மலையில் இனமறிந்து கொண்டதும் இதுபோலவே. ஆவிக்குரிய மரியம்மாளும் எலிசபெத்தும் சந்தித்த காட்சியை யார் மறக்கமுடியும்? பூரணராக்கப்பட்டவர்களாக நாம் மறுமைக்குள் பிரவேசிக்கும் போது எண்ணமுடியாத திரளான பரிசுத்தவான்களை நாமே இனமறிந்து கொள்வோம்.

ஆண்டவர் தமது ஜனமாகிய யூதரைத் தேடிவந்தபோது அவர்கள் ஆத்மநிலைமை மகா மோசமாயிருந்தது. தேவாலயமும், ஆராதனைகளும், பலிகளும், பண்டிகைகளும் மக்களை மயக்கிவிட்டன. ஆலய அதிகாரிகளோ நரகத்தின் மக்களா யிருந்தார்கள். உலகப் பற்றிலும் பொருளாசையிலும், அதிகாரப் பெருமையிலும் மாயத்திலும் அமிழ்ந்துபோனார்கள். பரிசுத்தமோ, தாழ்மையோ, அன்போ, இரக்கமோ கிடையாது. கல்லறைக்கு ஒப்பான இந்த மாயக்காரர் புறம்பான உடையிலும்



நடையிலும் தோற்றத்திலும் நீதிமான்களைப் போல் வேஷம் போட்டு ஜனங்களை ஏமாற்றினார்கள். இப்படிப்பட்ட மாயக்காரர் அன்பின் அவதாரியை எப்படி அறிய முடியும்? ஒளியாகிய அவர் அவர்கள் நடுவில் வந்திருந்தும் அவர்கள் இருளின் மக்களாயிருந்தபடியால் அவரை அறியாமற் போனார்கள். வேதாகமத்தை அவர்கள் அடிக்கடி படித்து வந்தும் அவர்கள் ஜென்ம சுபாவத்தாராயிருந்ததால் வேத வாக்கியங்களை நம்பாமலும் அறியாமலும் போனார்கள். மனுஷருடைய கற்பனைகளைப் பிரதானமாக்கி தேவ போதனைகளை அவமாக்கினார்கள். சகல சீர்கேடுகளும் நிறைந்த அவர்கள் தங்கள் மேசியா வந்தபோது அவரை அறிந்து ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமையில் இல்லை.

அவரை இன்னாரென்று அறியாததினாலேதானே அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அறியாமையால் செய்தது குற்றமாகுமா? கிறிஸ்துவைப்பற்றி ஒன்றுமே அறியாதவர்கள் விஷயத்தில் இந்த நியாயம் ஒருவேளை பொருந்தும். கோர்ட்டில் ஒருவன் நீதிபதியைப் பார்த்து: அந்தச் சட்டம் எனக்குத் தெரியவே தெரியாது துரைகளே, அடியேனுக்கு மன்னிக்க வேண்டுமெனக் கேட்கிறான். அவன் மன்னிக்கப்படலாம். யூதர்களுக்கோ எவ்விதத்திலும் போக்குச் சொல்ல இடமேயில்லை. மேசியா வரும்போது தடையின்றி அவரை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக தேவன் இவர்களை ஆயத்தப்படுத்தி வந்தாரென்பதை ஏற்கெனவே கவனித்தோம். அப்படியிருந்தும் அவர்களுடைய பாவம் அவர்கள் கண்களைக் குருடாக்கினபடியால் அவரை அறியாமற்போய் ஆக்கினைக் குரியவர்களானார்கள். உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ **அறியாமற்போனபடியால்** உன் பேரில் குற்றமில்லை என்று ஆண்டவர் சொல்லாமல் இந்த நகரமும் சிறந்த ஆலயமும் அழியும்; உன் ஜனங்களும் அழிவார்கள் என்று கண்ணீரோடே

சொன்னார். அப்படியே ஆயிற்று. தங்கள் மேசியாவை அறியாமற்போன யூதர்களுடைய சரித்திரம் இந்த இரண்டாயிர வருஷ காலமாக உலகிற்கே எச்சரிப்பாயிருக்கிறது. தீர்க்க தரிசிகள் சொன்னபடியே அவர்களுடைய அவிசுவாசத்தினாலே உலகத்தின் நானா திசைகளிலும் சிதறுண்டு சகிக்க வொண்ணாத் துயரங்களை அனுபவிக்கிறார்கள். ‘தேசமிழந்த ஜாதியும், ஜாதியை இழந்த தேசமும்’ என்பது அவர்களைப் பற்றிய பழமொழியாயிற்று. இப்போது சுயதேசம் திரும்பு கிறார்கள்.

## 4. அப்படியானால் நம்மைப்பற்றி என்ன?

யூதர்களைப்பற்றி இதுவரை பேசினது போதும். கிறிஸ்தவர்களாகிய நம்மைப்பற்றி என்ன? நாம் கிறிஸ்துவை அறிந்திருக்கிறோமா? கிறிஸ்துவை அறியாமலா நாம் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம்? ஞானஸ்நானம் பெற்று, நற்கருணை சேர்ந்து, ஆலயத்தில் ஆண்டவரைத் தொழுது கொண்டு, மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிற நம்மைப் பார்த்து இப்படிக் கேட்கலாமா? நாம் கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவோ அறிந்திருக்கிறோமே என்று சொல்லலாம். அது சரிதான். நாம் சிறுவர்களாயிருந்தபோது ஓய்வுநாள் வகுப்பில் கிறிஸ்துவை நமக்குக் கற்றுக் கொடுத்தார்கள். சுவிசேஷத்தைப் படிக்கும்போது கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ளுகிறோம். ஆராதனைகளுக்குப் போகும்போதெல்லாம் குருமாருடைய போதனைகள் மூலமாய் அவரைப் பற்றி அறிந்து கொள்ளுகிறோம். அவரை ‘தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர்’ என்று விசுவாசப் பிரமாணத்தில் அறிக்கையிடுகிறோம். அப்படியிருக்க, நம்மைக் கிறிஸ்துவை அறியாதவர்களென்று யார் சொல்லலாம்? நம்மை அந்த யூதரோடு ஒப்பிடுவது சரியா



என்று கேட்போம். கிறிஸ்தவ கிராமம் ஒன்றில் ஒரு சிறந்த தேவாலயமுண்டு. அச்சபை மூப்பர்களில் ஒருவர் அவ்வூரில் ஸ்திதிபந்தர். அவருடைய ஜீவியமோ பரிதாபம். அவருக்குக் கோபம் வந்தால் கால் தொடங்கித் தலைவரை நடுங்குவார். தூஷணமும் தாராளமாகப் பேசுவார். ஒரு ஓய்வுநாள் காலை ஆராதனையில் நான் அவர் பக்கத்திலிருந்தேன். அன்று நிசேயா விசுவாசப் பிரமாணம் வாசிக்கப்பட்டது. நமது மூப்பர் வாய்திறந்து சத்தமாய் ‘தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர்’ என்று சொன்னதைக் கவனித்தேன். ஆராதனை முடிந்தபின் அவர் கூடவே போய், மூப்பனாரே! தெய்வத்தில் தெய்வம், ஜோதியில் ஜோதி, மெய்த்தேவனில் மெய்த்தேவன் என்று மகா உற்சாகமாய்ச் சொன்னீரே, அது உமக்கு எப்படித் தெரியும் என்று கேட்டேன். எனக்கென்ன தெரியும்? அப்படிச் சொல்லச் சொல்கிறார்களே என்றார். சபையாருடைய காரியங்கள் அநேகமாய் அப்படித்தானிருக்கிறது. அது என்ன? அது எப்படி என்று விசாரிக்கும் ஆராய்ச்சிக் குணம் நமக்கில்லை. நம் மேதாவிகள் கற்றுக்கொடுத்ததைக் கிளிப்பிள்ளைகளைப்போல் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதனால் சபைகளில் ஞானவளர்ச்சி இல்லை. ஜீவியத்தில் மாறுதல் இல்லை. ஆவிக்குரிய விசாலமான பார்வை இல்லை. ஆண்டவரைப் பற்றிய அனுபவ அறிவில்லை.

புறதேச மிஷனெரிகளால் நமது தேசத்துக்குக் கிடைத்த நன்மைகள் மிகுதி. அவர்கள் ஓரிடத்தைத் தெரிந்து கொண்டு, அங்கே தங்கி, சுற்றிலுமுள்ள கிராமங்களைச் சந்தித்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். பள்ளிக் கூடங்களை ஸ்தாபித்து, கிராமப் பிள்ளைகளைச் சேர்த்துக் கல்வி கற்பிக்கிறார்கள். மார்க்கத்தில் சேர்ந்த ஜனங்கள் சபை கூடி ஆராதிக்கும்படி அவர்களுக்கு ஆலயங்களைக் கட்டுகிறார்கள்.

கல்வியில் தேர்ந்த மாணாக்கரை உபாத்திமாராக்குகிறார்கள். வேத சாஸ்திரப் பாடசாலையை ஏற்படுத்தி தகுந்த மாணாக்கருக்கு வேத சாஸ்திரம் கற்றுக்கொடுக்கிறார்கள். இதிலே தேர்ச்சி பெற்றவர்களைப் பிரசங்கிமார் போதகர்களாக நியமிக்கிறார்கள். இவர்களுக்குச் சம்பளம் கொடுத்துப் பராமரிக்கும் உபகாரியுமாயிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் முதலிலிருந்து கடைசிவரை சபையாருக்கும் மிஷன் ஊழியர் களுக்கும் பலவிதத்திலும் நன்மைசெய்யும் தகப்பன்மார்களைப் போலிருக்கிறபடியால் எல்லாருடைய கண்களும் அவர்களையே நோக்கிக்கொண்டிருப்பது இயற்கை.

மேலும் இவ்வாறு சபைகளைச் சேருகிறவர்கள் அந்தந்த மிஷன் கொள்கைகள் அனுஷ்டானங்களுக்குக் கட்டுப் பட்டவர்களா யிருக்கவேண்டும். மிஷனெரிமார் எந்தெந்த மிஷன்களைச் சேர்ந்தவர்களோ, அந்தந்த மிஷன் கொள்கைகள் ஆசாரங்களை இந்தியாவிலுள்ள சபைகளில் ஏற்படுத்து கிறார்கள். தங்களை அனுப்பின தாய்ச் சங்கங்களுக்கு அவர்கள் உண்மையாயிருக்க வேண்டும். வேறுவிதமாய் நடந்தால் சீமைக்குத் திரும்பவேண்டியதுதான். அதுபோலவே இங்கே அவர்கள் ஸ்தாபித்த சபைகளும் அந்தந்த மிஷன் கொள்கைப்படியே நடக்கவேண்டும். வேறு விதமாய் நடந்தால் சபையைவிட்டு விலக நேரிடும். இதுவே சபைகளுக்குள் காணப்படும் வித்தியாசங்களுக்கும் பிரிவினைகளுக்கும் காரணம். சபைகளிலுள்ள மக்களும் வலையில் அகப்பட்ட மீன்களைப்போல சுயாதீனமின்றி தாங்கள் கற்றுக்கொண்ட கொள்கைகளில் ஊறிப்போய், தாங்கள் கற்றுக்கொண்டவை தங்களுக்குப் பிறப்புச் சுதந்தரம்போல் எண்ணி, தம் தம் மிஷன்களைக் குறித்துப் பெருமையடைகிறார்கள்.

இவைகளைக் குறித்து நாம் குறைகூறுவதில்லை. எந்த வகையிலாகிலும் ஜனங்கள் இரட்சிக்கப்படவேண்டுமென்பதே



நமது கருத்து. ஆனால் மிஷனெரிமார் என்ன கற்பித்தார்களோ அதையே சொல்லிக்கொண்டிருப்போம் என்பது அடிமைத்தனம். ஆண்டவர் நம்மைச் சுயாதீனத்திற்கு அழைத்திருக்கிறார். 'அவர்கள் அப்படிச் சொல்லச் சொல்கிறார்களே என்று அந்த மூப்பன் சொன்னமாதிரி நாம் நடக்காமல், கிறிஸ்துவை அறியும் அறிவில் வளருவதற்கு ஆவிக்குரிய சுய ஆராய்ச்சி அவசியம். எந்த மனுஷனுக்கும் நாம் அடிமைகளாகாமல் கிறிஸ்துவுக் குள்ளான சுயாதீனத்தில் நாம் நிலைகொண்டிருக்கவேண்டும். ஆவிக்குரிய காரியங்களில் மிஷனெரிகளுக்கோ, அவர்கள் கொண்டுவந்த கொள்கைகளுக்கோ நாம் அடிமைகள் அல்ல. மேலே நாம் கவனித்தபடி மிஷனெரிமார் முதலிலிருந்து கடைசிவரை பலவித நன்மைகளுக்குக் காரணமாயிருப்பதால் எல்லாருடைய கவனமும் அவர்கள்பேரிலேயே போகிறது. அவரே கண்கண்ட தெய்வமாகிறார். ஆராதனைக்கு ஒரு மிஷனெரி வந்தால் மற்றவர்களோடு சேர்ந்து பணிவோடும் தாழ்மையோடும் கர்த்தரைத் தொழுதுகொள்வது கஷ்டம். எப்பொழுதும் எல்லாவற்றையும் மேல் விசாரணை செய்வது அவர்கள் வழக்கமாகையால், ஆராதனையில் சகலமும் கிரமமாய் நடக்கிறதாவென்று பார்க்கவும் நேரிடுகிறது. ஆராதனையை நடத்தும் நாட்டுப் போதகர் அங்கே வந்திருக்கும் தமது மிஷனெரியை மறக்கமுடியாது. பக்கத்திலிருக்கும் சம்பள எஜமானை மறந்து பரம எஜமானை நினைப்பது எப்படி? வாசிப்பிலோ ஜெபத்திலோ ஏதாவது ஒன்றில் போதகர் தவறினால் மிஷனெரி அந்நேரத்திலேயே அவரைத் திருத்துவதுண்டு. சிலர் ஆராதனை முடிந்தபின் அதைப் பற்றிப் பேசுவார்கள். தென் இந்தியாவில் ஓர் பெரிய ஆலயம். அங்கு நடக்கும் ஆராதனைகள் சடங்காச்சாரங்களோடு சேர்ந்து சிறப்பாகத் தோன்றும். அங்கே பிரசங்கிக்கும் போதகர் கல்வியிலும் வேத சாஸ்திரத்திலும் கீர்த்தி பெற்றவர். ஜனங்களுக்குப் பிரயோஜனப்படத்தக்க விதமாய் எப்போதும்

பிரசங்கிப்பார். தேவ காரியங்களில் விசாலமான பார்வை யுடையவர். ஒரு நாள் அவர் பிரசங்கித்ததை மிஷனெரி கவனித்து, ஆராதனை முடிந்தபின் ஒரு கடிதம் எழுதி: நீர் உமது பிரசங்கத்தில் **இயேசு** என்றும், **கிறிஸ்து** என்றும் அடிக்கடி சொல்லுகிறீர். அது சரியல்ல : அதை இனிமேல் நிறுத்தி, **நமதாண்டவர்** என்றே எப்பொழுதும் சொல்லவேண்டுமென்று எச்சரித்தார். இதை வாசித்ததும் அந்தப் போதகர் கவலைகொண்டு, நான் என்ன செய்வேன், எப்பொழுதும் உபயோகித்த பதங்கள் வந்து விடுமே. நமதாண்டவர், நமதாண்டவர் என்று சொல்ல எனக்கு ஞாபகமிருக்குமோ? ஒருவேளை தவறி இயேசு கிறிஸ்து என்று சொல்லிவிட்டால் மிஷனெரி என்னைக் கண்டிப்பாரே என்று மனஞ்சோர்ந்து வாடினார். மிஷனெரியைப் பற்றிய பயமே அவர் மனதிலிருந்தபடியால் அவர் பிரசங்கத்தில் எப்போதுமுள்ள உயிரும் உற்சாகமும் அன்றுமுதல் அகன்றன. கடவுள் காரியத்தில் ஒரு மனுஷனுடைய இஷ்டப்படியே எல்லாரும் நடக்கவேண்டுமென்பது கொடிய அடிமைத்தனமேயன்றி வேறல்ல.

இவ் விஷயத்தில் ரோமச்சபை மகா கண்டிப்புள்ளது. கத்தோலிக்க சபையைச் சேர்ந்த ஒருவரைப் பார்த்து: உங்கள் விசுவாசந்தான் என்னவென்று கேட்டதற்கு அவர்: சபை என்ன போதிக்கிறதோ அதுதான் என் விசுவாசம்; அதற்குமேல் நமக்கென்ன என்றார். ஒருவருக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், விளங்கினாலும் விளங்காவிட்டாலும், திருச்சபை சொல்வதற்கு மறுவார்த்தையின்றிக் கீழ்ப்படிய வேண்டுமென்பது கத்தோலிக்கச் சபையின் அதிகாரம். அந்த சபையைச் சேர்ந்த சர்க்கார் டாக்டர் ஒருவர் எனக்குப் பழக்கம். ஒருநாள் நான் அவரைப் பார்த்து: உங்கள் ஆத்தும இரட்சிப்புக்காக என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு



அவர்: எனக்கு ஆஸ்பத்திரியிலும் வீட்டிலும் போதுமான வேலை இருக்கிறது. என் ஆத்தும காரியங்களைக் கவனிக்க எனக்கு நேரமில்லை. அதை எங்கள் **சாமியார்** பார்த்துக்கொள்வார் என்றார். உங்களுக்கு வயிறு இருக்கிறதே, உங்களுக்குப் பதிலாக சாமியார் சாப்பிட்டால் உங்கள் பசி நீங்கிப் போகுமா என்று கேட்டேன். பதில் இல்லை. எத்தனை குருக்களும், சாமியாரும் நமக்கிருந்தாலும், எவ்வளவு சிறப்பான ஆராதனைகள் நடந்தாலும் நாம் **தனித்தனியே** ஆண்டவருக்கு உத்தரவாதிகளென்பதை மறக்கக்கூடாது. மிஷனெரிகளோ, குருமார்களோ அவர்களுடைய ஜீவியமும் போதனைகளும் நமக்குப் பிரயோஜனமாயிருந்த போதிலும் நாம் **தனித்தனியே** ஆண்டவரைத் தேடி அவரை **அறிகிற அறிவில்** வளரவேண்டுமென்பது தேவசித்தமாயிருக்கிறது. **'அவனவன்** தன் சரீரத்தில் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படி நாம் எல்லாரும் **கிறிஸ்துவின்** நியாயாசனத்துக்குமுன் வெளிப்படவேண்டும்.' அவ்வேளையில் நமக்காகப் பிணைப்பட்டு நம்மைத் தப்புவிக்க எந்தக் குருவாலும், சாமியாராலும், பிஷப்பாலும் முடியாது. நாமே நமக்கு உத்திரவாதிகளாக நிற்போம். மேலும் நமதாண்டவர் மொத்தமாக அல்ல, **ஒவ்வொருவருக்காகவும்** தமது உயிரைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அவர் மொத்தமாக அல்ல, தனித்தனி மனுஷனோடு பேசுகிறார். **'ஒருவன்** தாகமாயிருந்தால்,' **'ஒருவன்** என்னைப் பின்பற்றி வர விரும்பினால்', **'ஒருவன்** எனக்குச் சீஷனாயிருக்க வேண்டுமானால்,' **'ஒருவன்** எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால்,' 'மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் **எவனோ',** 'என் வசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவன் **எவனோ',** 'செய்யாதவன் **எவனோ', 'ஒருவன்** என்னிடத்தில் அன்பாயிருந்தால்' என்று **தனித்தனி** மனுஷனோடு பேசுகிறார். நாம் தனித்துப் பிறந்தோம், தனித்து மரிப்போம், தனித்து கர்த்தர்

முன் நின்று கணக்கொப்புவிப்போம். இது விஷயத்தில் மற்றவர்கள் அதிகாரிகள் அல்ல. நாம் விஷயத்தைவிட்டு வெகுதூரம் போய்விட்டதுபோல் தோன்றும். ஆனால் கிறிஸ்துவை அறியும் அறிவுக்கு இவைகள் முட்டுக்கட்டைகளாயிருப்பதால் இவைகளை இங்கே சொல்லாமல் விடமுடியவில்லை.

## 5. நமது அறிவு எப்படிப்பட்டது?

கிறிஸ்துவைப்பற்றிய நமது அறிவு எப்படிப்பட்டதென்பதை இப்போது கவனிப்போம். அறிவு : **கேள்வி அறிவு, அனுபவ அறிவு** என இருவகைப்படும். கேள்வி அறிவு அவசியம். கேள்வி அறிவில்லாமல் அனுபவ அறிவு வராது. விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி திருவசனப் போதனையினால் வரும். கேள்வி அறிவுக்கும் அனுபவ அறிவுக்கும் எவ்வளவோ வித்தியாசம்! 'என் காதினால் உம்மைக் குறித்துக் **கேள்விப்பட்டேன்;** இப்பொழுதோ **என் கண் உம்மைக் காண்கிறது.** ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்' என்று யோபு சொன்னார். இந்த அனுபவ அறிவினால் அவர் கர்த்தரிடமிருந்து இரட்டத்தனையான ஆசீர்வாதத்தைப் பெற்றார். அநேகர் கேள்வி அறிவிலேயே நின்றுவிடுகிறார்கள். ஆகையால் அவர்கள் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதல் இல்லை. கேள்வி அறிவுக்கும் அனுபவ அறிவுக்கும் உள்ள வித்தியாசத்தை இப்போது பார்ப்போம்.

**(1) கேள்வி அறிவில் ரட்சிப்பில்லை; அனுபவ அறிவோ ஆசீர்வாதத்தைத் தரும்.** சகேயு மிகுந்த ஐசுவரியமுள்ள வனாயிருந்தான். என்கிலும் அவனுக்குச் சமாதானமோ சந்தோஷமோ கிடையாது. சுய ஜனமாகிய



யூதர்கள் அவனை ஒரு சண்டாளனைப்போல் வெறுத்துத் தள்ளிவிட்டார்கள். எல்லாமிருந்தும் சமாதானமற்ற இந்த மனுஷன் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவர் ஈனர், நீசர் யாவரையும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுகிறார். அவர் ஒருவரையும் புறக்கணிக்கிறவரல்ல என்று கேள்விப்பட்டான். அந்தக் **கேள்வி அறிவு** அவனை ரட்சிக்கவில்லை. தான் கேள்விப்பட்ட அவரைக் காணவேண்டுமென்கிற ஆவல் உண்டாயிற்று. அவர் போகும் பாதையிலுள்ள மரத்திலேறி அவரைப் பார்க்கக் காத்துக்கொண்டிருந்தான். ஆண்டவர் அங்கே வந்தவுடனே நின்று சகேயுவைப் பார்த்து: சீக்கிரமாக இறங்கிவா, இன்று நான் உன் வீட்டிலே தங்கப்போகிறேன் என்றார். கேள்விப்பட்ட ரட்சகரை முகமுகமாய்ச் சந்திக்கும் சிலாக்கியம் கிடைத்தது. ஆண்டவரை அவன் எற்றுக்கொண்ட நிமிஷத்தில் ரட்சிக்கப்பட்டான். அவனுடைய திரளான ஆஸ்தியில் பாதி ஏழைகளுக்குப் போனது; மறு பாதி அவன் அநியாயமாய் வாங்கின எல்லாருக்கும் திருப்பிக் கொடுக்கப்பட்டது. மனுஷர் பார்வையில் ஏழையானான். தேவபார்வையில் ஒப்பற்ற ஐசுவரியவானானான். ஏனென்றால் **கிறிஸ்து** அவனுக்கு அழியாச் செல்வமானார். கேள்வி அறிவல்ல, அனுபவ அறிவே அவனை ரட்சித்தது.

பெரும்பாடுள்ள ஸ்திரீயின் நிலைமை மிகுந்த பரிதாபம். இவளும் ரட்சகரைப்பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டாள். **கேள்விப்பட்டும்** அவள் நோய் நீங்கவில்லை. அவரை எப்படியாவது சந்திக்கத் தீர்மானித்தாள். பெரிய கூட்டத்தில் நுழைந்து வந்து அவரைத் தொட்டாள். கிறிஸ்துவின் வல்லமை அவளைக் குணமாக்கிற்று. இதுவே அனுபவ அறிவு. கேள்வி அறிவல்ல, அனுபவ அறிவே அவளை ரட்சித்தது. எரிகோவின் வழியில் பிச்சை கேட்டுக்கொண்டிருந்த பர்த்திமேயு என்னும் குருடன் அவரைப்பற்றி மற்றவர்களால் கேள்விப்பட்டான்.

மற்றவர்கள் கண்களைத் திறந்தவர் தன் கண்களைத் திறக்கமாட்டாரா? அவர் இந்த வழி வரமாட்டாரா? என்று காத்துக்கொண்டிருந்தான். கிறிஸ்துவைப்பற்றிய கேள்வி அறிவு அவன் கண்களைத் திறக்கவில்லை. ஆண்டவர் அவன் பக்கமாக ஒருநாள் வந்தார். உடனே தன் கண்களைத் திறக்கும்படி அவரைக் கெஞ்சினான். அவர் அவன் கண்களைத் திறந்தார். எவ்வளவு மாறுதல்! எவ்வளவோ சந்தோஷம்! இதுதான் அனுபவ அறிவு. கேள்விப்படுவது நல்லது; ஆனால் அனுபவ அறிவிலேதான் ஆசீர்வாதமுண்டு. நாசரேத்தூரார் கிறிஸ்துவின் வல்ல கிரியைகளைக் குறித்து எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தார்கள். இதனால் அவர்களுக்கு யாதொரு நன்மையும் கிடைக்கவில்லை. தாங்கள் கேள்விப்பட்ட ஆண்டவரை அவர்கள் ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் கெட்டார்கள். நமது சபைகளில் அநேகர் கேள்வி அறிவுக்காரராகவே இருக்கிறார்கள். அவர்கள் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதல் இல்லை. தங்கள் ஜீவியத்தில் **மாறுதலடையாதவர்கள்** கிறிஸ்துவை அறிந்தவர்கள் அல்ல. கேள்வி அறிவுக்காரரைக் குறித்து யோவானும் பவுலும் சொல்வதைக் கேட்போம். 'அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை' (1 யோவா. 2:4). பவுல் சொல்லுகிறதென்ன? 'அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோம் என்று அறிக்கை பண்ணுகிறார்கள், தங்கள் கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள். இவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ் செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்' (தீத்து 1:16).

மனுஷர் மூலமாகவும் புஸ்தகங்கள் மூலமாகவும் கிறிஸ்துவைப்பற்றி நாம் அறிந்துகொள்வது நல்லது. ஆனால்



நாம் அவரை முகமுகமாய்ச் சந்திக்காவிட்டால் இந்தக் கேள்வி அறிவினால் நமக்குப் பிரயோஜனமில்லை. சமாரியா ஸ்திரீ ஊருக்குள் போய் கிறிஸ்துவைப்பற்றி அறிவித்தாள். ஊரார் அதைக் கேட்டு கிறிஸ்துவைத் தங்களோடு இருக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அங்கேதான் அவர் **இன்னாரென்பது** வெளிப்பட்டது. அவர்கள் விசுவாசிகளாகி அந்த ஸ்திரீயைப் பார்த்து: அம்மா நீ கிறிஸ்துவைப்பற்றி எங்களுக்கு அறிவித்தாய், 'ஆகிலும் உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய் **கிறிஸ்துவாகிய உலக ரட்சகர்** என்று **அறிந்து** விசுவாசிக்கிறோம்' என்றார்கள். இதுவே அனுபவ அறிவு. அவர்களைப்போல நமது சபையிலுள்ளவர்கள் தங்கள் போதகர்களைப் பார்த்து: ஐயா, உங்கள் பிரசங்கங்களுக்காக நன்றியாயிருக்கிறோம். ஆகிலும் உங்கள் போதனைகளினிமித்தமல்ல, நாங்களே கிறிஸ்துவிடம் சென்று அவரது ரட்சிப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்று ஜீவியத்தில் மாறுதலடைந்திருக்கிறோம் என்று சொல்லக்கூடுமானால் எவ்வளவோ பாக்கியம்! இவ்வித அனுபவம் அநேகரிடம் இல்லை.

**(2) கேள்வி அறிவு சந்தேகமுள்ளது, அனுபவ அறிவோ நிச்சயமுள்ளது.** தென் தேசத்து ராஜ ஸ்திரீ இதற்குச் சிறந்த திருஷ்டாந்தமாயிருக்கிறாள். அவள் சாலமோனுடைய ஞானத்தைக் குறித்தும் ஐசுவரியத்தைக் குறித்தும் தன் தேசத்தில் கேள்விப்பட்டுக்கொண்டிருந்தாள். அவைகளை அவள் நம்பமுடியவில்லை. இதன் உண்மையை அறியும்படி அவள் புறப்பட்டு எருசலேம் சேர்ந்து அரசனையும் அவனுக்குரிய காரியங்களையும் கண்டு பிரமிப்படைந்து: ராஜாவே, நான் உம்மைக் குறித்து என் தேசத்தில் **கேள்விப்பட்ட செய்தி** மெய்யாயிற்று. நான் வந்து அவைகளை என் கண்களால் காணுமட்டும் **அவைகளை நான் நம்பவில்லை.** இவைகளில்

பாதிகூடக் கேள்விப்படவில்லை. நான் கேள்விப்பட்டதைப் பார்க்கிலும் உமது ஞானமும் செல்வமும் அதிகம் என்று அரசனைப் போற்றினாள். தன் தேசத்திற்கு அவள் திரும்பினபின் சாலொமோனைப்பற்றிச் சந்தேகத்தோடல்ல, **முழு நிச்சயத்தோடே** பிரஸ்தாபித்திருப்பாள். கேள்வி அறிவு சந்தேகமுள்ளது, அனுபவ அறிவு நிச்சயமுள்ளது. விசுவாசிக்கிறோம் விசுவாசிக்கிறோம் என்று விசுவாசப் பிரமாணத்தைக் காலமெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிற அவிசுவாசிகள் அநேகர். அவர்கள் கிறிஸ்துவைச் சந்திக்காதபடியால் அவரைப்பற்றி அவர்களுக்கு நிச்சயமில்லை. 'நான் விசுவாசித்திருக்கிறவர் **இன்னாரென்று அறிவேன்'** என்று பவுல் சொன்னதுபோல சொல்லக்கூடியவர்களே கிறிஸ்துவை அனுபவத்தில் அறிந்தவர்கள். அந்த ராஜ ஸ்திரீயைப்போல இயேசு மகாராஜாவைச் சந்தித்து அவரோடு சம்பாஷிக்கிறவர்கள் தாங்கள் கேள்விப்பட்டதைப் பார்க்கிலும் **அதிகமான அன்பையும் கிருபையையும்** அவரில் கண்டு பிரமிப்பார்கள். அவரை ஊக்கத்தோடு பிரஸ்தாபிக்கும் அனுபவ சாட்சிகளாவார்கள்.

**(3) கேள்வி அறிவு ஒரு பக்கமுள்ளது. அனுபவ அறிவு இரு பக்கமுள்ளது.** ஒருவரைப்பற்றி மற்றவர்கள் மூலமாய் நாம் எவ்வளவோ கேள்விப்பட்டு அறிந்துகொள்ளலாம். இதனாலே நாம் அவரை அறிந்தவர்கள் அல்ல. ஒரு ஊரில் பிரபு ஒருவர் இருந்தார். அவரோடே கொஞ்சமும் பழகாத ஒரு மனுஷன் பிரபுவின் வேலைக்காரர் மூலமாய் அவரது மனைவி, மக்கள், வீடுகள், ஆஸ்திகள், வியாபாரம், வருமானம் முதலிய சகல காரியங்களையும் விசாரித்து அறிந்துகொண்டான். ஒருநாள் அந்தப் பிரபுவை இவன் வழியில் கண்டு ஒரு சிநேகிதனைப்போல நெருங்கி, அவருடைய சுகத்தையும் மனைவி மக்கள் க்ஷேமத்தையும்



விசாரித்துக் கை குலுக்கப் போனான். அவர் எரிச்சலடைந்து: நீ யார்? உன்னை நான் அறியமாட்டேன், உனக்கு இவ்வளவு துணிகரமா? விலகிப்போ என்று கடிந்துகொண்டார். இவன் என்ன பதில் சொல்லுவான்? ஆனால் இவன் பிரபுவோடு பழகி ஒருவரோடொருவர் பேசி, இருவரும் சிநேகிதர்களா யிருப்பார்களானால் அந்தப் பிரபு தானே முந்தி அவனுக்குக் கை கொடுத்திருப்பார். கேள்வி அறிவு ஒரு பக்கமுள்ளது; அனுபவ அறிவு இரு பக்கமுள்ளது. இதுபோலவே அநேகர் கடைசி நாளில் திண்டாடுவார்கள். இவர்கள் கிறிஸ்துவோடு நெருங்கிப் பழகினவர்கள் அல்ல. இவர்களுக்கு ஆராதனைகள் உண்டு, நற்கருணை உண்டு. போதகர்கள் மூலமாய்க் கிறிஸ்துவைப் பற்றிய கேள்வி அறிவுண்டு. இவைகளை அனுசரிப்பதாலே தாங்கள் கிறிஸ்துவை அறிந்துகொண்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஆண்டவர் என்ன சொல்லுவார்? 'அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள், நீங்கள் எவ்விடத்தாரோ, நான் ஒருகாலும் உங்களை அறியேன்' என்பார். கிறிஸ்துவைச் சொந்தமாக்கிப் பிழைக்காததால் அவர்கள் நம்பியிருந்த ஆராதனைகள், ஸ்நானங்கள், நற்கருணைகள், பண்டிகை ஆசரிப்புகள் யாவும் வீணாயின. இவர்கள்தான் கேள்வி அறிவுக்காரர். முடிவு எவ்வளவு பரிதாபம்! எவ்வளவு ஏமாற்றம்! கிறிஸ்துவைத் தவிர மற்றெல்லா ஆசரிப்புகளும் இவர்களுக்கு உண்டு.

**அனுபவ அறிவு இரு பக்கமுள்ளது.** 'நான் என் ஆடுகளை **அறிந்தும்** என் ஆடுகளால் **அறியப்பட்டும்** இருக்கிறேன்' என்கிறார். இங்கே ஆண்டவர் தமது பிள்ளைகளை அறிந்திருக்கிறார், மக்களும் அவரை அறிந்திருக்கிறார்கள். இது இரு பக்கத்து அறிவு. நாம் அவரை அறிந்திருக்கிறோம்; அவரும் நம்மை அறிந்திருக்கிறார். இது அவருக்கும் நமக்குமுள்ள

அன்பின் ஐக்கியமாயிருக்கிறது. அனுபவ அறிவிலிருந்து அன்பும், அன்பிலிருந்து ஐக்கியமும், ஐக்கியத்திலிருந்து கிறிஸ்துவின் சாயலும் உண்டாகிறது. இப்படிப்பட்டவர்களைப் பார்த்து: நான் ஒருக்காலும் உங்களை அறியேன் என்று ஆண்டவர் சொல்லவேமாட்டார். 'தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருக்கும்படி நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்' (1 கொரி. 1:9).

## 6. அறிவின் பலன்கள் எவை?

கிறிஸ்துவை அறியும் **அனுபவ** அறிவினால் நமக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் எவை? ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் அவரை அறியும் அறிவினால் கிடைக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் கவனிப்போம்.

**(1) கிருபையும் சமாதானமும் நமக்குள் பெருகும். 'கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவினால்'** உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது (2 பேது. 1:2). இகபர வாழ்வு சகலமும் தேவ கிருபையினால் ஆகிறது. தேவ கிருபை தேவனைப்போல் சர்வ வல்லமையுள்ளது. பெரிய வெள்ளம் புரண்டு வரும்போது எதிரேயுள்ள சகலத்தையும் வாரிக்கொண்டு போவதுபோல, உலகத்தின் பாவம் பிரமாண்டமாய்ப் பெருகின இடத்தில் **கிருபை** அதைவிடப் பிரமாண்டமாய்ப் பெருகி அதை மேற்கொண்டதென்பது நிச்சயம். தேவ கிருபையை மேற்கொள்ளும் வல்லமை கிடையாது. நாம் இருப்பதும் அசைவதும் பிழைப்பதும் அவர் கிருபைதான். ஒன்றைக் குறித்தும் நாம் பெருமை பாராட்டமுடியாது. இம்மையின் ரட்சிப்பும் நித்திய மகிமையும் அவர் கிருபைதான்.



இதனாலேதான் தாவீது: 'ஜீவனைப் பார்க்கிலும் உமது **கிருபை** நல்லது' என்றார். பவுலின் பலவீனங்கள் நிந்தைகள் துன்பங்களில்: 'என் **கிருபை** உனக்குப் போதும்' என்று ரட்சகர் சொன்னார். சொன்னபடியே தமது கிருபையின் ஐசுவரியத்தை அவருடைய ஜீவியம், ஊழியத்திலே பலமாய் விளங்கச் செய்தார். நாம் நமது ஒன்றுமில்லாமையை உணர்ந்து கிறிஸ்துவின் கிருபையில் பிழைக்கும்போது சகலமும் நமக்கு நன்மையாயிருக்கும். கிருபையற்ற மனுஷன் நரகத்திலிருக் கிறான். கிருபைக்காகக் கெஞ்சின ஆயக்காரப் பாவி நிமிஷத்தில் நீதிமானாக்கப்பட்டான். தன் சுய நீதியை நம்பின மாயக்காரப் பரிசேயன் ஆக்கினைக்குரியவனானான். **கிருபை** என்றால் என்னவென்பதை விளக்குவது கஷ்டம். அனுபவத்தில் அதைக் கொஞ்சம் அறிந்திருப்பதால் விளக்கலாம். எத்தகுதியுமற்ற பாவிகள் மீது தேவன் பரிதாபங்கொண்டு தமது நன்மைகளை இலவசமாய்ப் பொழிந்தருளும் அவரது அன்பின் செய்கையை கிருபை என்று சொல்லலாம்.

தேவகிருபை நமக்குள் பெருகும்போது **தேவ சமாதானமும்** பெருகும். தேவ சமாதானம் நிகரற்ற செல்வம். ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்திகளிருந்தும் அவனுக்குச் **சமாதானம்** இல்லையென்றால் அவன் உயிரோடே செத்தவன். உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. சத்துருவாகிய சாத்தான் மனுமக்களை சர்வ நாசம் பண்ணுகிறான். இவைகள் என்னமாய் முடியுமோவென்று அறிஞர்கள் கலங்கித் தவிக்கிறார்கள். இவைகளின் மத்தியிலே ஆண்டவர் தமது மக்களை வைத்திருக்கிறார். சகல சங்கடங்களும் போராட்டங்களும் அழிவுகளும் நிறைந்த உலகத்திலே தேவ சமாதானம் நம்மை ஆளவேண்டியது அவசியம். வேறெதையும் ஆண்டவர் பரிகாரமாகக் கொடுக்கவில்லை. 'உலகத்தில் உங்களுக்கு **உபத்திரவமுண்டு,** என்னிடத்தில் உங்களுக்குச்

**சமாதானம்** உண்டு' என்றார். இரகசியம் என்ன? சத்துருக்கள் ஆரவாரஞ் செய்யும்போது, சகல ஆயுதங்களும் நமக்கிருந்தும், நமது நெஞ்சம் கலங்கி, கால்கள் தள்ளாடி, வாயுளறித் தவிக்கிறதாயிருந்தால் அவ்வாயுதங்களால் நமக்குப் பிரயோஜனமில்லை. ஒன்றுமில்லாவிட்டாலும் **தேவ சமாதானம்** பலத்த அரண்போல் நமது **இருதயத்தைக்** காக்குமானால் அதற்கொப்பான வெற்றியில்லை. அதைத்தான் நமதாண்டவரிடம் காண்கிறோம். பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் அவரைச் சூழ்ந்துகொண்டும் நெருக்கியும், அவருக்குள் இருந்த தேவ சமாதானக் கோட்டையை உடைக்க அவைகளால் முடியவில்லை. ஆகையால் அவர் தமது அடியாருக்குத் தமது **சமாதானத்தையே** சுதந்தரமாக வைத்துப் போகிறதாகச் சொன்னார். இவ்வாறு **தேவ கிருபையும் தேவ சமாதானமும்** கர்த்தராகிய இயேசுவை அனுபவமாய் அறிந்தவர்களிடம் பெருகும்.

**(2) சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும் தேவையான நன்மைகள் கிடைக்கும்.** 'தமது மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை **அறிகிற அறிவினாலே** ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்லமை நமக்குத் தந்திருக்கிறது' (1 பேது. 1:3). நாம் கிறிஸ்துவை இன்னாரென்று அறியும்போது நம்மையும் நமது சகல காரியங்களையும் மனப்பூர்வமாக அவருடைய பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் ஒப்புவிக்கிறோம். அதன் பலனாக அவர் நமது சரீர வாழ்வுக்குத் தேவையான சகல நன்மைகளையும், ஆவிக்குரிய நித்திய ஆசீர்வாதங்களையும் அருளுகிறார். இம்மைக்கும் மறுமைக்கும் உரிய ஆசீர்வாதம் கிறிஸ்துவுக்குள் சம்பூர்ணமாயிருக்கின்றன. பரமபிதாவை அறியாத உலகத்தாரைப்போல் நாம் கவலைப்பட்டுக் கலங்க மாட்டோம். நாம் கிறிஸ்துவுக்காகவும்



அவரது ராஜ்யத்திற்காகவும் பிழைத்து உழைக்கும்போது அவர் திருவாக்குப் படியே சகலமும் தாராளமாய்க் கொடுக்கப்படுகிறது. அவரை **இன்னாரென்று அறியாதிருப்பதும்,** அவருக்கென்று பிழைக்காமலும் உழைக்காமலுமிருப்பதும், எல்லாக் கவலை களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமாகிறது. பஞ்சத்தினால் லட்சாலட்சம் ஜனங்கள் நம் தேசத்தில் செத்தார்கள். தம்மை அறிந்திருக்கும் மக்களை 'பஞ்சத்திலும் உயிரோடு காப்பதாக' வாக்குப் பண்ணியிருக்கிறார். அதுபோலவே கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார். எல்லாம் கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள அன்பின் ஐக்கியத்திற்குத்தக்கபடி இருக்கும்.

**(3) நமது ஜீவியம் கனிகள் நிறைந்ததாயிருக்கும்.** 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை **அறிகிற அறிவு** உங்களை வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது' (2 பேது. 1:8). நீண்டகாலக் கிறிஸ்தவர்களாயிருந்தும் ஆவிக்குரிய விஷயத்தில் அநேகர் வீணரும் கனியற்றவர் களுமாயிருக்கிறார்கள். அவர்கள் கேள்வி அறிவுக்காரரே தவிர, கிறிஸ்துவை அனுபவத்தில் அறிந்தவர்களல்ல. கிறிஸ்தவர்கள் என்கிற பேரே தவிர, கிறிஸ்துவின் சிந்தையோ சாயலோ கிடையாது. உயர்தரக் கல்வியுண்டு, நாகரிகமுண்டு, நற்குணமோ இல்லை. கிறிஸ்தவர்களுக்குப் பிறந்ததால் கிறிஸ்தவர்களேயொழிய, கிறிஸ்துவை அறிந்து அவரைச் சொந்தமாக்கிக்கொண்ட கிறிஸ்தவர்கள் அல்ல. **சபைகளில்** உண்டாகும் சகல சச்சரவுகளுக்கும் குழப்பங்களுக்கும் இப்படிப்பட்ட மனுஷரே காரணம். குணங்கெட்ட குமாரர் குமாரத்திகளால் **குடும்பங்களில்** பெற்றோருக்கு எவ்வளவோ தொல்லைகள் விளைகின்றன. விவாகமான பெண்ணோ ஆணோ கிறிஸ்துவின் சிந்தையுள்ள நற்குணசாலி களாயிருந்தால் சம்பந்திகளான இரு குடும்பங்களையும்

அன்பிலும் ஐக்கியத்திலும் ஒரே குடும்பமாக இணைத்து விடுவார்கள். விவாகமான ஆண்கள் பெண்கள் மூர்க்கமுள்ளவர்களும் அடங்காதவர்களுமாயிருந்தால் இரு குடும்பங்களுக்கும் விரோதத்தை உண்டாக்கி, ஒருவரையொருவர் வெறுக்கவும், பேச்சு வார்த்தை கூடயில்லாமல் அந்நியரைப்போல் பிரிந்துபோகவும் செய்து விடுவார்கள். கிறிஸ்துவை இன்னாரென்று அறியாமலும் அவரை ஏற்றுக்கொள்ளாமலுமிருப்பதால் கசப்பான கனிகளை இவர்கள் கொடுக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் அவரோடுள்ள ஐக்கியத்தில் பிழைக்கிறதாயிருந்தால் தேவனுக்கு மகிமையான கனிகளை நிச்சயமாகவே கொடுப்பார்கள். பிறருக்கும் ஆசீர்வாதமாயிருப்பார்கள். 'நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதால் என் பிதா மகிமைப்படுவார்; எனக்கும் சீஷராயிருப்பீர்கள்' என்றார் (யோ. 15:8).

**(4) உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பச் செய்கிறது.** 'கர்த்தரும் ரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவை **அறிகிற அறிவினாலே** உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள்' (2 பேது. 2:20). உலகமும் அதிலுள்ள காரியங்களும் ஆவிக்குரிய ஜீவியத்திற்குக் கொடிய சத்துருக்கள். உலகம் இன்று மகா மோசமான நிலைமையிலிருக்கிறது. நமது ஜீவியம் கெட்டுப் பாழாய்ப்போவதற்கு வேண்டிய தீமைகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போகிறது. விசுவாசம் பறந்துபோகிறது. 'மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகியிருக்கிறது' என்று தேவன் ஆதியிலே சொன்னார். இப்பொழுதோ கோடாகோடி மடங்கு பெருகிவிட்டது. வஞ்சகமும் மோசமுமான பாவக் கவர்ச்சியிலிருந்து தப்புவதற்கு நமது சுய பலம் போதாது. மேதாவிகளோடு பழகுகிறவன் அற்பரின் சகவாசத்தை விரும்பான். உயர்ந்த வஸ்திரம்



தரித்தவன் கந்தையை விரும்பான். ராஜபோஜனம் சாப்பிடுகிறவன் கூழை விரும்பான். மேலான பலத்தைக் கொண்டுதான் இழிவான பாவவல்லமையிலிருந்து நாம் தப்பமுடியும். சர்வத்தையும் படைத்தவரும், சர்வத்துக்கும் ரட்சகரும், சர்வத்தையும் பராமரித்து நடத்துகிறவரும், சர்வத்துக்கும் நியாயாதிபதியுமான மாட்சிமை தங்கிய இயேசுகிறிஸ்துவை அறிந்து, **அவரிலே ஆனந்திக்கிறவன்** உலகத்தின் அசுத்தங்களில் சிக்கிக்கொள்ளமாட்டான். அனுபவ அறிவுள்ளவர்கள் இதன் உண்மையை அறிவார்கள்.

**(5) ஜெப வாஞ்சையை உண்டாக்குகிறது.** 'தாகத்துக்குத் தா என்று உன்னிடம் கேட்கிறவர் **இன்னாரென்பதை** நீ அறிந்திருந்தால் நீயே அவரிடம் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவதண்ணீரைக் கொடுத்திருப்பார்' (யோ. 4:10). அநேகருக்கு ஜெபம்பண்ண மனமில்லை. அநேகரிடத்தில் தனி ஜெபம் கிடையாது. எங்களுக்கு ஜெபம் பண்ணத் தெரியாது என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். நம்மைப் பெற்ற தாய் தகப்பனோடு பேச நமக்கு மனமில்லையென்றோ, பேசத்தெரியாதென்றோ சொல்லுவோமா? ஆண்டவர் என்ன சொல்லுகிறார். என்னை இன்னாரென்று **நீ அறிந்திருந்தால், நீயே** கேட்டிருப்பாய்; ஆசீர்வாதம் பெற்றிருப்பாய்; உன்னை ஒருவரும் ஜெபிக்கும்படி ஏவவேண்டியதில்லை என்கிறார். ஆபத்து அவசர காலத்தில்: ஆண்டவரே, கர்த்தாவே என்று கதறுகிறோம். நாம் மாத்திரமல்ல, மனுஷர் யாவருக்கும் இந்த வழக்கம் இருக்கிறது. யோனா இருந்த கப்பலுக்கு ஆபத்து வந்தபோது அவனவன் தன்தன் தெய்வத்தைப் பார்த்துக் கூப்பிட்டானாம். ஒரு சிறுமியின்மேல் நாய் பாய்ந்து விழுமானால் பக்கத்தில் போகும் மனுஷனைப் பார்த்து; ஐயா, ஐயா என்று கதறுவாள். அந்த மனுஷனை இவள்முன் அறிந்திருக்க வேண்டியதில்லை. ஆபத்தில் கதறுவது மனுஷர்

இயல்பு. கடவுள் யாரோ எப்படிப்பட்டவரோ என்று தெரியாவிட்டாலும் மனுஷர் தங்கள் ஆபத்துகளில் தெய்வமே, தெய்வமே என்று கதறுகிறார்கள்.

ஆண்டவர் விரும்புகிற ஜெப ஜீவியம் அதன்று. கிறிஸ்துவின் தெய்வீக மகத்துவத்தையும் அவரது அளவற்ற ஐசுவரியத்தையும் நாம் அறியும்போது அவரோடு பேசாமலும் நமக்குத் தேவையான சரீர ஆத்தும நன்மைகளுக்காக அவரிடம் கேட்காமலும் இருக்கமுடியாது. இடைவிடாமல் அவரைச் சிந்திப்பதும், அன்பராகிய அவரோடு அந்நியோந்நியமாகச் சம்பாஷிப்பதும் நமக்கு ஆனந்தமாயிருக்கும். வியாதியில் அவஸ்தைப்படுகிறவன் வைத்தியனை ஆவலோடு தேடுகிறான். இது வைத்தியன் மீதுள்ள அன்பினால் அன்று. தான் பிழைக்கவேண்டுமென்கிற ஆத்திரத்தாலேயே. வியாதி தீர்ந்துவிட்டால் அப்புறம் வைத்தியரை அவன் ஏன் நினைக்கப்போகிறான்? கிறிஸ்தவர்களில் அநேகர் ஆண்டவரை வைத்தியனைப்போலவே நடத்துகிறார்கள். அவரை **இன்னார்** என்று நாம் அறியாததே இதற்குக் காரணம். அதற்காக இதற்காக அல்ல. கரும்பின் ருசிக்காக நாம் கரும்பை விரும்புவது போல கிறிஸ்துவை கிறிஸ்துவுக்காகவே தேடுவோம். அவரை அறிந்தவர்கள் ஒரு நிமிஷமும் அவரை விட்டுப்பிரிய விரும்பார்கள். ஆராதனை ஜெபங்களும், கூட்ட ஜெபங்களும் போதுமென்றிராமல் எப்பொழுதும் அவர் அன்பில் நிலைத்திருந்து அவருக்குள்ளிருக்கும் ஆசீர்வாதங்களை அனுபவிப்பார்கள். தம்மை இன்னாரென்று அறிந்து பற்றிக்கொண்ட மக்களுக்கு எவ்வளவோ செய்ய ஆண்டவர் ஆவலாயிருக்கிறார்.

**(6) நித்திய ஜீவனைக் கொடுக்கிறது.** 'ஒன்றான மெய்த்தேவனான உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு



கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்' (யோ. 17:3). தேவனையும் அறியவேண்டும், இயேசுகிறிஸ்துவையும் அறிய வேண்டுமென்றால் **இரண்டு** அறிவாயிருக்கிறதே என்று நினைப்போம். **கிறிஸ்துவை அறிகிற அறிவே தேவனை அறிகிற அறிவு** என்பதை ஆண்டவர் திட்டமாகப் போதித்திருக்கிறார். கிறிஸ்துவை அறிந்தவர்களின் அனுபவமும் அதுதான். இதன் சம்பந்தமாக ஆண்டவர் சொன்னவைகளைப் பொழிப்புரையாகக் கவனிப்போம். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடம் வரான். நானே பிதாவுக்கு வழி. என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். நான் பிதாவில் இருக்கிறேன், பிதா என்னில் இருக்கிறார். நானும் பிதாவும் ஒன்று. என்னை விசுவாசிக்கிறவன் பிதாவை விசுவாசிக்கிறான். என்னைக் காண்கிறவன் பிதாவைக் காண்கிறான். என்னை அறிகிறவன் பிதாவை அறிகிறான். என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் பிதாவை ஏற்றுக் கொள்ளுகிறான். என்னைக் கனம்பண்ணுகிறவன் பிதாவைக் கனம்பண்ணுகிறான். என்னைப் பகைக்கிறவன் பிதாவைப் பகைக்கிறான். மேற்கூறிய வசனங்களின் இரகசியமென்ன? ஒருவனும் கண்டிராதவரும் காணமுடியாதவருமான கடவுளை கிறிஸ்து தம்மிலே வெளிப்படுத்துகிறார் என்பதே அவ்வசனங்களின் கருத்து (யோ. 1:18இல் காண்க). கிறிஸ்துவைப்பற்றி நாம் எவ்வளவோ அறிந்திருந்தாலும், அவர் **மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள்** என்பதையும், **தேவனை தம்மில் வெளிப்படுத்துகிறார்** என்பதையும் அறியாமற்போனால் நாம் கிறிஸ்துவை அறிந்தவர்கள் அல்ல. பிலிப்பு பிதாவை கிறிஸ்துவில் காணத் தவறிப்போனதால் ஆண்டவர் பிலிப்புவைப் பார்த்து: பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உன்னோடு கூடயிருந்தும் **நீ என்னை அறியவில்லையா?** என்னை நீ அறிந்திருந்தால்

பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கேட்டிருக்கவே மாட்டாய். என்னை அறிந்தவன் பிதாவை அறிந்தவன். நான் என் ஜீவியத்திலும், போதனையிலும், கிரியைகளிலும் **என்னையல்ல,** பிதாவையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன். நான் என் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ நம்புகிறதில்லையா? இதன் உண்மையை சீக்கிரத்தில் நீ அறிவாய் என்றார். அந்தப்படியே அவர்கள் ஆவியானவரைப் பெற்றபோது, அந்த ஆவியானவர் கிறிஸ்துவின் தெய்வீக மகத்துவத்தை அவர்கள் இருதயத்தில் வெளிப்படுத்தினார். அவர்கள் கிறிஸ்துவில் பிதாவைக் கண்டதால் **கிறிஸ்துவே** அவர்களுக்குச் சகலமுமானார். தேவனைக் காண்பியும் என்கிற பேச்சு அது முதல் ஒழிந்தது.

இப்படியிருக்க, இக்காலத்தில் சிலர்: கிறிஸ்து, தேவனை வெளிப்படுத்த வந்தது வாஸ்தவந்தான். தேவனைப்பற்றி அவர் நமக்குப் போதித்துவிட்டார். இனி நாமும் கிறிஸ்துவைப்போல தேவனோடு பழகி, அவரைப்போல தேவனை நம்பி, அவரைப்போல தேவசித்தப்படி பிழைப்பதற்குக் கிறிஸ்து நமக்கு மாதிரியாயிருக்கிறார். இனி நாம் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டிராமல் அவர் காண்பித்த கடவுளிடம் நாமே நேராகப் போகவேண்டியது என்கிறார்கள். இது வீண்பேச்சேயன்றி உண்மையன்று. தாமே பிதாவை வெளிப்படுத்துகிறவர், தம்மிலேதான் பிதாவைக் காண வேண்டுமென்று கிறிஸ்து போதித்தாரேயல்லாமல், நான் உங்களுக்குப் பிதாவைப்பற்றிப் போதித்துவிட்டேன், இனி உங்கள் பாடு, அவர் பாடு. நீங்களே நேரில் அவரைத் தேடிக் கண்டுகொள்ளவேண்டியதென்று அவர் சொல்லவே இல்லை. இதைப் பரீட்சிக்கும்படி கிறிஸ்துவை ஒரு வாரம் ஒதுக்கிவைத்து, **நேரே கடவுளைத் தேட** ஆரம்பித்தேன். அவ்விதம் கடவுளைத் தேட நான் ஆரம்பித்தபோது என்



அருமை ரட்சகரும் அவர் பிதாவைப்பற்றிச் சொல்லியிருக்கும் திருவாய்மொழிகளுமே என் மனதுக்கு வந்தன. ஆகா, இது சரியல்லவே, நான் கிறிஸ்துவை அறியாத ஒரு மனுஷனைப்போல, தேவனை நேரே தேடி அவரோடு பழக வேண்டுமென்று முயற்சித்தேன். கண்ட பலன் என்ன? அத்தேனே ஞானிகளைப்போல அறியப்படாத கடவுளைத் தடவினேன். வானத்தில் வெறும் ஆகாயத்தையும் அந்த காரத்தையும் கண்டேனே தவிர, என் அருமை ரட்சகரில் நான் கண்டு ஆனந்தித்த அன்புள்ள பிதாவைக் காணேன். இம்மையிலும் மறுமையிலும் பிதாவாகிய தேவனை அறிவதற்கு **கிறிஸ்துவே வழி.** நாம் கிறிஸ்துவுக்குச் செலுத்தும் சகல கனமும் மகிமையும் ஸ்தோத்திரமும் பிதாவுக்கே சேரும். நாம் பிதாவினிடம் போனால்: இவர் என் நேச குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்கிறார். நாம் ஆவியானவரிடம் போனால்: இவரே தேவகுமாரன், அவரை விசுவாசித்துப் பற்றிக் கொள்ளுங்கள் என்கிறார். கிறிஸ்து நடுநாயகமாயிருக்கிறார். ஆகையால் **இரண்டு அறிவல்ல,** கிறிஸ்துவை அறிவதே பிதாவை அறிவது. இப்படியிருக்க, இயேசுகிறிஸ்துவை மற்ற குருக்கள், ஞானிகள், சாஸ்திரிகள், மகாத்துமாக்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்கள் மிஷனெரிகள், பிஷப்புகளாயிருந்தாலும் சரி, அவர்கள் கிறிஸ்துவின் தெய்வீக மகிமையை அறிந்தவர்களுமல்ல, நம்பினவர்களுமல்ல.

இந்த அறிவு நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறது. தம்மை அறிவதே நித்திய ஜீவன் என்கிறார். அவரை இன்னாரென்று அறிந்தவன் அவருக்குள் ஜீவன் இருப்பதையும், அவரே நித்திய ஜீவனாயிருப்பதையும் காண்கிறான். ‘குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்’ என்ற வேத வாக்கின்படி அவரையே தனக்கு ஜீவனாக

ஏற்றுக்கொண்டு அவருக்குள் பிழைக்கிறான். அவரை ஜீவனாக ஏற்றுக் கொள்ளாதவன் அவரை அறிந்தவனல்ல. **உலகத்தாருக்கு** இந்த ஒரே வாழ்வுதான் வாழ்வு, மறு வாழ்வை அறியார்கள். ஆகையால் ஆண்டவர் சொல்லுகிறபடி உலக நன்மைகளையே இவர்கள் ஆவலோடே நாடித் தேடுகிறார்கள். எவ்வளவு அனுபவிக்கமுடியுமோ அவ்வளவையும் அனுபவிக்கவேண்டும். ஆசைக்கோர் அளவில்லை. இன்று இருப்போம், நாளைக்குச் சாவோம், அப்புறம் என்ன என்பது போல் **இம்மைக்கென்றே** சகல காரியங்களையும் தேடுகிறார்கள். மறுமையைப்பற்றிய அறிவோ நம்பிக்கையோ அவர்களுக்கில்லை. ஆகையால் இவர்களுக்கு ஒரு சந்தோஷமானால் பெரிய சந்தோஷம்; துக்கமானால் சகிக்கமுடியாத துக்கம். லாபமானால் எவ்வளவோ பூரிப்பு; நஷ்டமானால் விழுந்துபோவார்கள். மரணமானால் எல்லாம் ஒழிந்தது. அருமையானவர்களை இனி ஒருபோதும் காணப் போகிறதில்லையே. இனி உயிர் இருந்தென்ன, வாழ்ந்தென்ன வென்று உத்தமிகளான மனைவிகள் தங்கள் உயிரையும் மாய்த்துக்கொள்ளுகிறார்கள். தற்கொலை சர்க்காருக்கு விரோதமானதால் உடனே சாகாவிட்டாலும், உயிரை அலட்சியஞ்செய்து பட்டினியாய்க் கிடந்து சாகாமல் சாகிறவர்களும் உண்டு. கிறிஸ்துவை அறிந்தவர்களுடைய காரியமோ வேறு. ‘கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கியிருக்கிறார்’. மரணம் இவ்வாழ்வின் முடிவாயிராமல் மறுமைக்குள் பிரவேசிக்கும் வாசலாயிருக்கிறது. **நித்திய ஜீவன்** நமது பங்கு. **நித்திய ஜீவன்** என்பது எக்காலமும் வெறுமெனே உயிரோடிருப்பதல்ல. முடிவில்லாமல் நாம் உயிரோடிருக்க மாத்திரம் நேரிடுமானால் அது சகிக்க முடியாத தொல்லையாகும். நித்திய ஜீவன் என்பது தேவ மகிமைக்குள் பிரவேசித்து, இரட்சிப்பில் வளர்ந்து,



பரமபாக்கியங்களை அனுபவித்து, கிறிஸ்துவைக் குறித்தும் மறுமையைக் குறித்தும் இங்கே நாம் அறியமுடியாதிருந்த பரம இரகசியங்களை அறியும் அறிவில் தேறி, அறிவுக்கெட்டாத அன்பிலே பெருகி, இடைவிடாது மகிழ்ச்சியோடே ஆண்டவரைச் சேவிக்கிற ஜீவியமாகும். ஆகவே மறுமையின் நித்திய வாழ்வு சலிப்பாயிராமல் ஆனந்த பாக்கியமாக இருக்கும் (தீத்து 2:13).

**(7) நமக்கு ஒப்பற்ற மேன்மையாயிருக்கிறது.** ‘கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை **அறிகிற அறிவின் மேன்மை’** என்கிறார் பவுல் (பிலி. 3:8). உலகத்தில் மனுஷர் தங்களுக்கு மேன்மை, அந்தஸ்தை எவ்வளவோ தேடுகிறார்கள். உலக மேன்மை பலவிதமாயிருக்கிறது. ஐசுவரியம், வீடு வாசல்கள், தோட்டம் துறவுகள், நிலங்கரைகள், தேகபலம், கல்வி, சாஸ்திர அறிவு, சங்கீதம், நகைகள், உடைகள் இப்படிப்பட்டவைகளில் மேன்மை பாராட்டுகிறார்கள். உத்தியோகங்களிலும் மேன்மை உண்டு; மாஜிஸ்டிரேட், கலெக்டர், ஜட்ஜு, டாக்டர், திவான், கவர்னர், வைஸிராய் முதலிய உத்தியோகங்கள் உலகில் மேன்மையாக மதிக்கப்படுகின்றன. இது தவிர சர்க்கார் கொடுக்கும் ராவ் சாகிபு, ராவ் பகதூர், திவான் பகதூர், ஸர், எம்.எல்.ஏ., மேயர் முதலான பட்டங்கள் மேன்மையாக எண்ணப்படுகின்றன. இவைகளுக்காக மனுஷர் எவ்வளவோ பிரயாசப்படுகிறார்கள்; ஏராளமான பணத்தையும் செலவிடுகிறார்கள். இவைகள் நிலைப்பதில்லை.

சிறந்த கல்விமானும் தர்க்க சாஸ்திரியுமாகிய பவுலோ இப்படிப்பட்டவைகள் ஒன்றிலும் தமக்கு மேன்மையைத் தேடவில்லை. பவுல் சிறந்த கல்விமான் என்று ரோமை தேசாதிபதி பெஸ்துவும் அறிக்கையிட்டான். அவர் உலகத்தில் எவ்வளவோ மேன்மையுடன் வாழக்கூடியவர். அப்படியிருந்தும் கிறிஸ்துவை **அறிகிற அறிவின் மேன்மைக்காக** எல்லா

வற்றையும் குப்பையென்று தள்ளிவிட்டார். 'நான் விசுவாசித்திருக்கிறவர் **இன்னார் என்று அறிவேன்'** என்று அவர் சொன்னபடியே **கிறிஸ்துவின் தெய்வீக மகத்துவங்களை** அறிந்த அவருக்கு உலகமும் அதன் மகிமைகள் யாவும் அற்பமும் குப்பையுமாகத் தோன்றின. கிறிஸ்து யார், அவர் எப்படிப்பட்டவர் என்னும் அறிவினாலே தம்மையே ஜீவபலியாக அவருக்கு ஒப்புக்கொடுத்து, தேவராஜ்யத்தின் சுவிசேஷத்தை எங்கும், எல்லாருக்கும் பிரசங்கிக்கும்படி அவர் செய்த பிரயாணங்களும், கிறிஸ்துவின் நாமத்திற்காக மரணபரியந்தம் அவர்பட்ட பாடுகளும் அவமானங்களும் கொஞ்சமல்ல. என்னத்திற்காக இவ்வளவு பாடுகளையும் மனப்பூர்வமாய்ச் சகித்தார்? உலகத்தில் என்ன பலனைக் கண்டார்? எல்லாரும் துடைத்து எறியும் அழுக்குக்கு ஒப்பானார். இதுதான் கண்ட பலன். ஒன்றில் இவர் பித்தனாயிருக்கவேண்டும், அல்லது தேவ பக்தனாயிருக்க வேண்டும். அவரது ஜீவியம், ஊழியத்தால் உலகத்திற்குக் கிடைத்திருக்கும் திரளான ஆசீர்வாதங்களைக் கவனிக்கும் போதும், இன்னும் அவரது நிருபங்களால் திருச்சபைகளுக்குக் கிடைக்கிற நன்மைகளைப் பார்க்கும்போதும், அவர் விசேஷித்துத் தெரிந்துகொள்ளப்பட்ட உன்னதமான கர்த்தருடைய உத்தமதாசன் என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்துவை அறிகிற அறிவில் தமக்கு ஒப்பற்ற மேன்மையிருந்தபடியால் உலகத்தின் மகிமையையோ அவமானத்தையோ அவர் சட்டைபண்ணவில்லை. கிறிஸ்துவின் அடியாரை உலகம் அற்பமாய் நினைக்கிறது. ஆனால் 'மனுஷருக்குள்ளேயே **மேன்மையாக** எண்ணப்படுவது தேவனுக்கு முன்பாக **அருவருப்பாயிருக்கிறது'** என்று தேவ குமாரன் சொன்னார். அவர் உலகத்தால் வரும் மகிமையை விரும்பவில்லை. உலகமோ அவரை வெறுத்து, அவமானப் படுத்திக் கொன்றது. அவரோ இன்று வானத்திலும் பூமியிலும்



சகல அதிகாரங்களையும் உடைய ராஜாதி ராஜனும் கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறார். அவருடைய தெய்வீக மகிமை அவரை அறிந்து பிழைப்பவர்களுக்கே உரியதாகும். தேவ பார்வையில் அருவருப்பான இந்த உலக மேன்மைகள் மனுஷருடைய மரணத்தோடே அழியும். 'அவன் மரிக்கும் போது அவன் மகிமை அவனைப் பின்பற்றிச் செல்லாது'. உலகத்தில் மேன்மை பெற்றவனாயிருந்தும் **தேவ அறிவு** இல்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான் (சங். 49:20). கிறிஸ்துவை அறிகிற அனுபவ அறிவோ நித்திய கன மகிமையுள்ளது.

## 7. இந்த அனுபவ அறிவு நமக்கு எப்படி கிடைக்கும்?

**(1) கிரயம் கொடுத்துச் சம்பாதிக்க வேண்டும்.** பவுல் அப்படியே செய்தார். 'என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்; அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டம் என்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன்' (பிலி. 3:8,11) எந்தப் பொருளானாலும் அது சிறிதோ பெரிதோ அதற்குரிய கிரயம் கொடாமல் அது நமக்குச் சொந்தமாவதில்லை. பொருளின் மதிப்புக்குத் தக்கபடி கிரயமும் இருக்கும். துணிப்புடவையின் கிரயமும் பட்டுப்புடவையின் கிரயமும் ஒன்றல்ல. கிறிஸ்துவைப் பற்றிய அறிவு நிகரற்ற பொக்கிஷம். அந்த அறிவால் கிடைக்கும் மேன்மையையும் நித்திய பாக்கியங்களையும் அறிந்த விசுவாசிகள், **எல்லா வற்றையும் கொடுத்து** அந்த அறிவைச் சம்பாதிக்கிறார்கள். நிலத்தில் பொக்கிஷம் கண்டவன் தனக்குள்ளதெல்லா வற்றையும் விற்று அந்தப் பொக்கிஷத்தைச் சொந்த மாக்குகிறான். முத்து வியாபாரி தனக்குள்ள தெல்லாவற்றையும்

விற்று முத்தைச் சொந்தமாக்குகிறான். இவர்களிருவரும் தாங்கள் விற்றுப்போட்டவைகளுக்காகத் துக்கப்படாமல் சம்பாதித்துக்கொண்ட செல்வத்திலே மகிழ்ச்சியடைந்தார்கள். நாம் உலக இன்பங்களையும் பாவ சந்தோஷங்களையும் அனுபவிக்க நாடுகிறோம். மனுஷரால் வரும் புகழ்ச்சியை விரும்புகிறோம். இவைகளை விட்டுப் பிரிய நமக்கு மனமில்லை. அப்படியிருக்க கிறிஸ்துவைப் பற்றிய மேலான அறிவு நமக்கு எப்படி கிடைக்கும்? கிறிஸ்துவை அறியாத கிறிஸ்துமார்க்கம் நமக்கு எதற்கு?

பிராமணக் குலத்தில் பிறந்த சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இளமையிலேயே சங்கீதத்தில் பிரீதி. இதை மற்றவர்கள் அறியார்கள். இவன் சங்கீத அறிவைச் சம்பாதிக்கும்படி தீர்மானித்து, புகழ்பெற்ற ஒரு பாகவதரை அண்டினான். அவன் எதற்காகத் தன்னிடம் வந்தான் என்பதை பாகவதர் அறியவில்லை. இவன் பாகவதருக்கு ஒரு வேலைக்காரனைப்போல் சகல பணிவிடைகளையும் செய்து வந்தான். பெற்றோர் பையனைப் பார்த்து: மகனே உனக்கு வீட்டில் ஒரு குறைவுமில்லையே, இந்த வேலையில் ஏன் ஈடுபட்டாயென்று அழைத்தார்கள். அவன் புன்சிரிப்போடு: நீங்கள் கவலைப்படவேண்டாம், நான் சீக்கிரம் வந்துவிடுவேன் என்றான். பாகவதர் வெளியே பாட்டுக் கச்சேரி நடத்தப் போனால் இவனும் கூடவே சென்று அவருக்கு வேண்டிய காரியங்களைச் செய்வான். இவனுக்குத் தன்பேரில் இவ்வளவு பிரியம் ஏன் என்று பாகவதரே ஆச்சரியப்படுவார். நடந்ததென்ன? அவன் வேலைக்காரன் போலதானிருப்பான். ஆனால் அவன் கவனம் முழுவதும் பாகவதர் பாடும் பாட்டுகள் இராகங்களின் பேரில் போகும். அருமையான கீர்த்தனை களையும் இராகங்களையும் அப்படியே உட்கொள்வான். வெகு துரிதமாக அரிய பெரிய இராகங்களைக் கற்றுக்கொண்டான். வெளியே அவன் தனித்துப்போகும்போது இராகங்களைப் பாடி



அப்பியாசித்துக்கொள்வான். அவனுக்குள் மறைவாக நடந்த இந்தச் சங்கீத வளர்ச்சியைப்பற்றி பாகவதருக்கோ, பெற்றோருக்கோ, மற்றவர்களுக்கோ தெரியாது. கொஞ்சக் காலத்திற்குள்ளாக தேறின சங்கீத வித்வானாகிவிட்டான். அவனுக்கு நல்ல சாரீரமுமிருந்தது. அவன் தன் இனிய குரலில் உருக்கமான இராகங்களைப் பாடக் கேட்டவர்கள் பரவசமடைந்து அவனைப் புகழ்ந்தார்கள். பெற்றோருக்கு இருந்த சந்தோஷமும் பெருமையும் கொஞ்சமன்று. சமையல் வேலைக்காரப் பையன் சங்கீத வித்வானானான். சங்கீத அறிவைச் சொந்தமாக்கும்படி தனக்கு **லாபமாயிருந்தவை களையும் மேன்மையாய் இருந்தவைகளையும்** விட்டுப் பிரிந்தானல்லவா? உலகில் அரிய பெரிய காரியங்களைச் செய்தவர்களும், நூதன இரகசியங்களைக் கண்டுபிடித்தவர் களும், தங்கள் நேரம் பலம் செல்வத்தைக் கிரயமாகக் கொடுத்துத் தானே அவைகளைச் சம்பாதித்தார்கள். எப்பேர்ப்பட்ட கல்வியும் சாஸ்திரமும் கிறிஸ்துவை அறியும் **அறிவுக்கு** ஒப்பாகுமா? கிறிஸ்தவர்களில் அநேகர் கேள்வி அறிவுக்காரரே தவிர அனுபவ அறிவுள்ளவர்கள் அல்ல. ஏனென்றால் இந்த ஒப்பற்ற அறிவைச் சம்பாதிக்கும்படி கிரயம் கொடுக்க அவர்களுக்கு மனமில்லை. அழிந்துபோகும் உலகத்தில் பற்றுதல் வைத்து, இம்மையிலும் மறுமையிலும் நம்மை ஆசீர்வதிக்கிற கிறிஸ்துவின் **மேலான அறிவை** இழந்துபோகிறார்கள். கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்கள் கண்ட பலன் என்ன?

**(2) கிறிஸ்துவின் அன்பில் பிழைக்கவேண்டும்.** 'என்னிடத்தில் அன்பாயிருக்கிறவனுக்கு என்னை வெளிப் படுத்துவேன்' (யோ. 14:21). ஆண்டவர் **தம்மை நமக்குள் வெளிப்படுத்தாமல்** நாமாக அவரை அறிந்துகொள்ள முடியாது. தமது அன்பில் பிழைக்கிறவர்களுக்கு அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவின் **தெய்வீக அறிவு** அன்பன் யோவானுக்கு அதிகமாய் வெளிப்பட்டதைக் காண்கிறோம். நாம்

நமது அன்பர்களுக்கு நமது இரகசியங்களைச் சொல்வோமே யன்றி அந்நியருக்குச் சொல்லமாட்டோம். அது போலவே கிறிஸ்துவின் ரகசியம் அன்பர்களிடமிருக்கிறது. முன்னே நாம் கவனித்த திருஷ்டாந்தப்படி சங்கீதம் தன்னில் பிரியமுள்ள வனுக்கே தன் ரகசியத்தை வெளிப்படுத்தும்; மற்றவர்களுக்குக் காதுகள் இருந்தும் செவிடரே. சிருஷ்டிப்பு தன்னில் பிரியமுள்ளவனுக்கே தன் அழகை வெளிப்படுத்தும்; மற்றவர்களுக்குக் கண்கள் இருந்தும் குருடர்களே. ஆகையால் அவரில் அன்பில்லாதவர்களின் அறிவு, கேள்வி அறிவே தவிர அனுபவ அறிவன்று. ‘ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வினிடத்தில் அன்புகூராமற்போனால் அவன் சபிக்கப்பட்டவனா யிருக்கக்கடவன். கர்த்தர் வருகிறார்’ (1 கொரி. 16:22).

**(3) கிறிஸ்துவை அறியும்படியான ஆவலும் ஆராய்ச்சியும் அவசியம்.** ‘நம்முடைய கர்த்தரும் ரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை **அறிகிற அறிவிலும் வளருங்கள்’** (2 பேது. 3:18). வளருங்கள் என்பது முயற்சியைக் காண்பிக்கிறது. நாம் எவ்வளவு பிரயாசப் பட்டாலும் கிறிஸ்துவைப் பூரணமாய் அறியமுடியாது. ‘கிறிஸ்துவின் **அளவற்ற** ஐசுவரியம்’ என்று பவுல் சொல்லுகிறார். **அளவற்ற** என்பது அறிவுக்கெட்டாதது, ஆராய்ந்து முடியாதது. அறிவுக்கெட்டாததை எப்படி அறியமுடியும்? கிறிஸ்துவின் அன்பைக் குறித்தும் அது ‘அறிவுக்கெட்டாதது’ என்று பவுல் சொல்லுகிறார். அறிவுக்கெட்டாதது என்று சொன்னவரே நாம் அதை ‘அறிந்துகொள்ள வல்லவர்களாக வேண்டுமென்றும்’ சொல்லுகிறார் (எபே. 3:19). கிறிஸ்துவின் அன்பைப் பூரணமாய் ஒருவரும் அறியமுடியாது. அந்த அன்பை அறிவதற்கு நித்தியம் வேண்டும். நித்தியத்திற்கோ முடிவில்லை. ஆகையால் அவரது அன்பை அறிவதற்கும் முடியவில்லை. அவரது பூரண அன்பைக்கிரகிக்க முடியா விட்டாலும் நமது உள்ளம் நிரம்ப அவரது அன்பை ருசிக்கலாம்.



நமது வாஞ்சையின் அளவுக்குத்தக்கபடி அவரது அன்பைக் குறைவின்றி அனுபவிக்கலாம். குவிந்துகிடக்கும் ஏராளமான கனிகளைத் தின்னமுடியாவிட்டாலும், நமது ஆசை தீர, நமது வயிறு நிறையத் தின்னலாம். கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியத்தை நாம் அனுபவிப்பதும் அது போலவே. சமுத்திரம் முழுவதும் குடத்திற்குள் வராவிட்டாலும் குடம் நிரம்பியிருப்பதே போதும்.

கிறிஸ்துவின் அறிவில் **வளரவேண்டும்** என்கிறார். குழந்தை பிறந்த நாளில் புருஷனாகிறதில்லை. படிப்படியாய் வளர்ந்து புருஷனாகிறான். கல்வியை அற்பமாக ஆரம்பிக்கும் மக்கள் அதைத் தொடர்ந்து படித்துப் பேரறிஞராகிறார்கள். கிறிஸ்து நமது ஞானக் களஞ்சியம். அவரை அறியும்படி நாம் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். ‘நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு என்னைத் தேடுவீர்களானால் தேடும்போதே என்னைக் காண்பீர்கள்’ என்றும், ‘தேடுகிறவன் எவனும் கண்டடைகிறான்’ என்றும் சொல்லுகிறார். நிர்விசாரிகளுக்கும் சோம்பேறிகளுக்கும் கிறிஸ்து தம்மை வெளிப்படுத்துவதில்லை. அவரை அறியும்படியான வாஞ்சை அநேகருக்கு இல்லாததினாலேதான், அவர்கள் கேள்வி அறிவுக்காரரா யிருக்கிறார்களேயன்றி, ஜீவியத்தை மாற்றி ஆசீர்வதிக்கக்கூடிய அனுபவ அறிவு அவர்களுக்கு இல்லை.

ஒரு மனுஷனை வேளாவேளை காண்பதினால் அவனை அறியமுடியாது. அவனோடு நெருங்கிப் பழகினால் மாத்திரம் அவனை அறியமுடியும். பொது ஆராதனைகள், ஜெபக் கூட்டங்கள், வேதவாசிப்புக் கூட்டங்கள் நல்லது. ஆனால் கூட்டத்தில் அல்ல; ஆண்டவரைத் தனித்துச் சந்தித்து அவரோடு சம்பாஷிப்பவர்களே அவரை அறிவார்கள். அன்பர் இருவருடைய கனிவான சம்பாஷணைக்கு மூன்றாவது ஆள் ஒரு தடை. கிறிஸ்துவை அறியும் அறிவில் வளர்ந்தவர்கள் எல்லாரும் அவரோடு அதிகமான நேரம் தனித்திருந்தவர்களே.

இதன்றி, அவரைப்பற்றி நமக்கு அறிவிக்கிற சுவிசேஷத்தையும் நிருபங்களையும் ஆராய்ந்து படிக்கவேண்டும். அப்பொழுது ஆவியானவர் வசனத்தின் மூலமாய்க் கிறிஸ்துவை உள்ளத்திற்கு வெளிப்படுத்துவார். திருவசன ஆராய்ச்சியால் கிறிஸ்து நிச்சயப்படுகிறார். ஆவியின் அனுக்கிரகம் பெற்ற தேவமக்கள் எழுதியுள்ள புஸ்தகங்களைப் படிக்கவேண்டும். நமக்கே எல்லாம் தெரியும் என்கிற எண்ணத்தை ஒழித்து, சகல பரிசுத்தவான்களோடும் சேர்ந்து கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ந்து பெருக வேண்டும். ஆவிக்குரிய அனுபவமுள்ள கிறிஸ்துவின் அடியாரோடு சேர்ந்து சம்பாஷிக்க வேண்டும். ஆண்டவருக்கு அது பிரியம். ஆண்டவர் அதைக் கவனிக்கிறார்.

கிறிஸ்துவை **இன்னார்** என்று அறியும் மெய்யான அறிவு நமக்குக் கிடைக்கும்போது அவரைத் தவிர வேறொன்றிலும் நாம் பற்றுதல் வைக்கமாட்டோம். இனி நானல்ல அவரே ஜீவனாயிருப்பார். அவர் நம்மிலும் நாம் அவரிலும் நிலைத்திருக்கும் அனுபவம் கிடைக்கும். நாம் அவரை மறக்கவோ, அவர் நம்மை மறக்கவோ முடியாது. இந்த ஐக்கியம் நம்மைப் படிப்படியாய் அவருடைய **சாயலுக்கொப்பாக** மாற்றும். அவர் சிந்தை நமக்குண்டாயிருக்கும். இவர்களே கிறிஸ்தவர்கள், விசுவாசிகள், சீஷர்கள். ஜீவனாகிய கிறிஸ்துவைச் சொந்தமாக்காமல், கிறிஸ்துமார்க்க ஆசாரங்களை அனுசரிக்கிறவர்கள் கெட்டுப்போவார்கள். அவர்கள் விதைத்ததை அறுப்பார்கள். அருமையான சகோதரனே, சகோதரியே, என்ன நினைக்கிறாய்? ஆண்டவர் இந்நேரம் உன்னோடு பேசவில்லையா? கிறிஸ்துவைப்பற்றிய உன் அறிவு **கேள்வி** அறிவா, **அனுபவ** அறிவா? அனுபவ அறிவினால் உன் ஜீவியம் மாற்றப்பட்டு ஆண்டவருக்குப் பிரியமானதாயிருக்கும். அநேகருக்கு ஆசீர்வாதமாயுமிருக்கும். கிறிஸ்தற்றவன் கிறிஸ்தவனல்லன்.



II

# வீண் ஓட்டம், வீண் பிரயாசம்

## VAIN RUN, VAIN LABOUR

**'நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்.' - பிலி. 2 : 14.**

ஒரு மனுஷன் தன் நிலத்தில் பாடுபட்டுப் பயிர்செய்து கடைசியில் பலனற்றுப்போனால் அவன் பட்டபாடுகளும் பிரயாசங்களும் வீணாகும். ஒருவன் மிகுந்த திரவியம் செலவுசெய்து பெரிய வீட்டைக் கட்ட, அஸ்திபார மோசத்தால் அந்த வீடு விழுந்து அழியுமானால், அவன் செய்த செலவு **வீணாகும்.** ஒரு மாணாக்கன் பிரயாசப்பட்டு வருஷமெல்லாம் படித்துப் பரீட்சையில் தவறுவானானால் அவன் முயற்சிகள் **வீணாகும்.** நாம் சிரமப்பட்டுச் செய்யும் காரியங்கள் வீணாய்ப்போவதைச் சகிக்கமாட்டோம். வீணாய்ப் போகுமானால் எவ்வளவோ துக்கம்! சரீரத்துக்குரிய காரியங்களில் இவ்வளவு கவலைப்படுகிற நாம் ஆவிக்குரிய **நித்திய காரியங்களில்** கவலைப்படுகிறோமா? அது எப்படியானால்தான் என்ன வென்பதுபோலிருக்கிறோம். ஆகையால் பிரசங்க வாக்கியத்தைப்பற்றிப் பேசுமுன் வீணான காரியங்களைப்பற்றி வேதம் போதிக்கிறதென்னவென்பதை முந்திக் கவனிப்போம்.

### 1. வீணான காரியங்கள்

**(1) வீணான மனுஷன்.** யாக்கோபு தமது நிருபத்தில் **'வீணான** மனுஷனே' என்கிறார் (யாக். 2:20). ஒருவன் தன்னை தேவன் உலகத்தில் அனுப்பின நோக்கத்தை

அறியாமலும் அந்த நோக்கத்தை அவர் **கிருபையினால்** தன் வாழ்க்கையில் நிறைவேற்றாமலும் போனால் அவன் வீணனாகிறான். யோவான் ஸ்நானகன் பிறப்பைக்குறித்து தேவதூதன் சகரியாவை நோக்கி : ‘உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும் என்றும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்’ என்றும் சொன்னான். அதல்லவா பிள்ளை. தேவன் தன்னை உலகத்தில் அனுப்பின நோக்கத்தை நிறைவேற்றின பிள்ளை. துரோகியான யூதாஸ்காரி யோத்தைக் குறித்து ஆண்டவர்: ‘கேட்டின் மகன் கெட்டுப் போனான்’ என்றும், ‘அந்த மனுஷன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும்’ என்றும் சொன்னார். அவர் வீணனானான். சொற்கேளாத துஷ்டப்பிள்ளைகளைக்குறித்துப் பெற்றோர் துயரமடைந்து; இவனுக்கு ஒரு சாவு வராதா? எங்கேயாவது விழுந்து இவன் சாகமாட்டானா என்று புலம்புவதைக் கேட்டிருக்கிறோம். மற்றவர்களை அவமானப்படுத்தி, அக்கிரமமான காரியங்களை நடப்பிக்கிற அயோக்கியரைக் குறித்துப் பொதுவாய் ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள்? கடவுள் ஆக்கினை இன்னும் இவர்களுக்கு வராதிருக்கிறதே, இன்னும் இவர்களுக்குக் குழி வெட்டப்படவில்லையே என்று வயிறெரிந்து பேசுகிறார்கள். ஈனர் துஷ்டரை யாவரும் போற்றலாம். ஆனால் அவர்கள் எப்பொழுது சாவார்கள் என்பதே உள்ளத்தின் எண்ணம். வீணர்கள் சிருஷ்டிகருக்கு அவமானமும் மனுஷருக்குச் சஞ்சலமுமாயிருக்கிறார்கள். வேத வாக்கியம் கூறுகிறபடி வீணான மனுஷருடைய சிந்தனைகள் வீண்; அவர்கள் பேச்சுகள் வீண்; அவர்கள் செய்கைகள் வீண். ஒரு மனுஷன் வீணனாகும்போது அவனுடைய சகல காரியங்களும் வீணாகும். ‘வீண் சிந்தனைகளை வெறுக்கிறேன், வீணரோடே நான் சேருவதில்லை’ என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். அவர்கள் ‘வீண் சிந்தனைக்காரர், வீண்



பேச்சுக்காரர், வீண் அலுவல்காரர்’ என்று பவுல் சொல்லுகிறார். ‘மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கொப்புவிக்கவேண்டும்’ என்று ஆண்டவர் சொல்லுகிறார். தேவன் யாதொரு நோக்கமில்லாமல் ஒருவரையும் உலகத்திற்கு அனுப்பவில்லை. அந்த நோக்கத்தை அறிந்து பிழைக்காமல் சம்பாதிப்பதும் சாப்பிடுவதுமே போதுமென்றிருந்தால் நமக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமென்ன? கல்வியும் சாஸ்திரமும் நாகரிகமும் உள்ளவர்களைப்பற்றி என்ன? தேவன் கிருபையாய் அருளிய வரங்களை அவருடைய மகிமைக்கென்று உபயோகிக்காமற் போனால் அவர்களும் நோக்கத்தில் தவறிய வீணர்களாவார்கள் (ரோம. 1:21). கடந்த இரண்டு பயங்கரமான உலக யுத்தத்திற்கும், சொல்லமுடியாத அழிவுகளுக்கும் காரணம் சாஸ்திர அறிவையும் நாகரிகத்தையும் பெற்ற வீணர்கள்தானே. தேவன் தங்களை உலகத்தில் அனுப்பின நோக்கத்தை அறிந்து நிறைவேற்றாமல், அருமையான காலத்தை வீணாக்கி, ஆண்டவர் அருளின கிருபையை அவமாக்கி, ஆசீர்வாதமாயிருக்கவேண்டிய ஜீவியத்தைப் பாழாக்கி, நிர்விசாரிகளாய்க் காலங்கழித்த வீணர்களுடைய முடிவு பயங்கரமாயிருக்கும்.

**(2) வீண் சபை கூடுதல்.** ‘நீங்கள் சபையிலே கூடி வந்திருக்கும்போது உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன். தேவனுடைய சபையை அசட்டை பண்ணுகிறீர்களா?’ (1 கொரி. 11:18-22). உலகத்தின் ரட்சிப்புக்காக ஆண்டவர் **திருச்சபையை** ஸ்தாபித்தார். தம்மை ஏற்றுக்கொண்டு தங்கள் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதலடைந்தவர்களை சபையின் அங்கத்தினராக அவரே சேர்த்துக்கொண்டுவந்தார் (அப். 2:47). அவர்கள் தங்கள் இரட்சகரை உலகத்திற்கு வெளிப்படுத்தும் சாட்சிகளாகவும்,

தேவ ராஜ்யத்திற்காக உழைக்கிறவர்களாகவும் இருக்கும்படி உன்னத ஆவியினால் அவர்களைப் பலப்படுத்தினார். வல்லமையான ஊழியம் நடந்தது. அநேகர் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். மிஷன்களோ, ஆலயங்களோ கிடையாது. கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொண்ட விசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானார்கள். சுவிசேஷத்தைக் கேட்டு ஆண்டவரை ஏற்றுக்கொண்டவர்கள் முதலாவது **கர்த்தரிடம்** சேர்ந்து, பின்பு விசுவாசிகளின் கூட்டமாகிய சபையில் **அவராலே** சேர்க்கப்பட்டார்கள். ஜனங்கள் இவர்களிடம் காணப்பட்ட மாறுதலினிமித்தம் இவர்களை மேன்மைப் படுத்தினார்கள் (அப். 5:13). எருசலேமிலிருந்த சபைக்கு மிகுந்த துன்பமுண்டானபோது சபையார் பலவிடங்களிலும் சிதறுண்டுபோனார்கள். இப்படிச் சிதறுண்டுபோனவர்களாலே அங்கங்கே சபைகள் உண்டாயின. ‘யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்குமுள்ள **சபைகள்** சமாதானம் பெற்று பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்துபெருகின’ (அப். 9:31). சபைகளுக்கு இருக்கவேண்டிய லட்சணங்களை இங்கே காண்கிறோம். திருச்சபை உண்டான காலந்தொடங்கி அதற்கு உள்ளும் புறமும் எத்தனையோ விரோதங்களும் ஆபத்துகளும் நேரிட்டிருந்தும், ‘பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை’ என்று ரட்சகர் சொன்னபடி சபை இந்நாள்வரை நிலைநிற்கிறது. திருச்சபையால் உலகத்திற்கு உண்டான நன்மைகள் கொஞ்சமல்ல. உலகத்தில் மகத்தான பதவிகளிலிருந்தவர்களும் மனுமக்களுக்கு அரிய பெரிய நன்மைகளைச் செய்தவர்களும் யார்? **திருச்சபையின்** மக்கள் அல்லவா? சீர்கெட்ட மனுஷரையும், தீவுகளில் சஞ்சரிக்கும் மிலேச்சர்களையும் சீர்ப்படுத்துவதற்கென்று தங்கள் வரத்தையும், பணத்தையும்,



பிராணனையும் ஒப்புக் கொடுத்தவர்கள் யார்? **சபையில்** வளர்ந்த மக்கள் அல்லவா? தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளா விட்டாலும் பலவகைகளிலும் சீர்திருத்தம், நாகரிகம், பொது ஜன ஊழியம் முதலான சிறந்த லட்சணங்களை புறமதஸ்தர் எங்கேயிருந்து கற்றுக் கொண்டார்கள்? சபையிலுள்ள கிறிஸ்துவின் அடியாரிடம் இருந்தல்லவா? திருச்சபைக்குப் புறம்பேயுள்ளவர்கள் எவ்வளவு நிபுணரானாலும் இந்தப் பரிசுத்தவான்களோடு ஒப்பிடமுடியுமா? முடியாது.

காலம் செல்லச் செல்ல சபையின் காரியம் வேறுவிதமாயிற்று. ஆவிக்குரிய சபை கலப்புள்ளதாயிற்று. சகலத்துக்கும் ஆண்டவரையே நம்பிப் பற்றிக்கொண்டிருந்த சபை **அரசாங்க சபையாக** மாறி தனக்கு வேண்டிய பராமரிப்பையும் மானியத்தையும் பெற்றுக்கொண்டது. குருக்களுக்குக் கொழுத்த சம்பளமும், சகல சௌகரியங்களும் ஏற்பட்டிருந்தபடியால் அக்காலத்தில் அநேகர் குருத்தொழிலை நாடினார்கள். அரசாங்க சபை உலகில் செல்வாக்குள்ளதாயிற்று. சபையை உலகம் ஆண்டுகொண்டது. பொதுவாகப் புறம்பான ஆடம்பரங்களில் மனுஷருக்கு அதிகப் பிரியம். அநேகர் பற்பல நோக்கங்களோடு சபையில் சேர்ந்தார்கள். கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த மக்களாலும் சபையின் தொகை பெருகிற்று. பணப் பெருக்கமும், குருக்கள் உடை அலங்காரமும், ஆராதனையின் சிறப்பும், ஆலய அழகும் எவ்வளவாயிருந்த போதிலும் சபையின் ஜீவனாகிய **கர்த்தர்** அங்கேயில்லாவிட்டால் அந்தச் சபை என்னத்திற்காகும்? லவோதிக்கேயா சபை தன்னைக் குறித்து: ‘நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை’ என்றும் பெருமை பாராட்டினது. ஆனால் அது **கிறிஸ்தற்ற** சபையாயிருந்தது. ஏனென்றால் ஆண்டவர் அந்தச்

சபையைப் பார்த்து: 'இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன்' என்கிறார். அவர் சபைக்குள்ளிருந்தால் வெளியே நின்று தட்டவேண்டிய தென்ன? லவோதிக்கேயா சபை தன் அக்கிரமங்களையும் பாவங்களையும் சீர்கெட்ட நிலைமையையும் உணரவில்லை. ஆகையால் ஆண்டவர் அதைக் கடிந்துகொண்டு : 'நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியால் நான் என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்' என்றார். தென் இந்தியாவிலுள்ள சபைகளின் நிலைமை என்ன? சபைகளில் அங்கங்கே உத்தம விசுவாசிகள் இருந்த போதிலும், கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களும் திரளாயிருக்கிறார்களே. இவர்கள் எத்தனை வருஷம் சபைகளில் இருந்த போதிலும், ஆராதனைகளுக்குப் போனபோதிலும், கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொள்ளாததால் இவர்கள் ஜீவியத்தில் மாறுதல் இல்லை. சகல சங்கடங்களுக்கும் குழப்பங்களுக்கும் அடிதடிகளுக்கும் காரணம் இவர்கள்தான். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமலும், அவர்மூலமாய் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளாமலும் இவர்கள் எதற்காக சபையிலிருக்கிறார்கள்? இப்படிப்பட்டவர்கள் கூடிவருகிற சபைகள் **வீணான** சபைகளாகும். இவர்கள் 'சபையாகக் கூடுவதை ஆண்டவர் சகிக்கமாட்டேன்' என்கிறார் (ஏசா. 1:13). ஆலயம் எவ்வளவு பிரமாண்டமாயிருந்தபோதிலும், ஆராதனைகள் எவ்வளவு சிறப்பாய் நடந்தாலும், பணம் ஏராளமாய்க் குவிந்தாலும், பலவித சங்கங்கள் முயற்சியாய் வேலை செய்தாலும் **கிறிஸ்துவுக்கு** அங்கே இடமில்லையானால் சகலமும் வீணாகும். இந்த ஆடம்பரமான சபையைப் பார்த்து ஏழைச் சபைகள் நமக்கு அப்படியில்லையே என்று நினைக்கலாம். சிறு குடிசைக் கோவிலானாலும் அங்கே ஆராதிக்கும் ஏழைகள் கிறிஸ்துவின் உத்தம அடியார்களாயிருப் பார்களானால் அந்தக் கோவில் ஒரு சிறிய மோட்சம் போலிருக்கும்.



**(3) வீண் ஜெபங்கள்,** 'நீங்கள் ஜெபம்பண்ணும்போது அஞ்ஞானிகளைப்போல **வீண் வார்த்தைகளை** அலப்பாதேயுங்கள்' (மத். 6:7). பிள்ளைகள் தங்கள் வீடுகளிலும், ஓய்வு நாள் பாடசாலையிலும் ஜெபம் செய்யக் கற்றுக்கொள்ளுகிறார்கள் : இது நல்ல காரியம். இந்தப் பழக்கத்தால் அவர்கள் பெரியவர்களாகும்போது ஜெபம்பண்ணுவது அவர்களுக்கு இலகுவாயிருக்கிறது. ஜெபம் இன்னதென்று அவர்களுக்குத் தெரியுமா? யாரை நோக்கி ஜெபிக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்களா? அநேகர் ஜெபம்பண்ணுவதற்குக் கொஞ்சமும் தயங்கமாட்டார்கள். இவர்கள் ஜெபிக்கும் போது தேவனைப்பற்றியும் பாவங்களைப்பற்றியும் மனுஷரைப் பற்றியும் வர்ணிப்பதில் சாமர்த்தியமுள்ளவர்கள். இவர்கள் வாயிலிருந்து அலங்காரமான வார்த்தைகள் அடுக்கடுக்காய்ப் புறப்படும். ஜெபம் இன்னதென்று இவர்கள் அறிவார்களா? வேறு சிலர் ஜெபம்பண்ணும்போது ஒருவன் தன் எதிரியோடு மூர்க்கமாய் சண்டைபோடுவதுபோலிருக்கும். அவர்கள் தொண்டையின் குமுறலான இரைச்சலும், வீடு அதிரத்தக்கதான வைராக்கியமுள்ள ஆர்ப்பரிப்பும், செவிடுபடும்படியான கை தட்டுதலும் கர்த்தருக்குள் ஆழமும் அமைதலுமான ஜீவியம் செய்கிறவர்களைத் திகைக்க வைக்கும். ஜெபத்தில் இப்படிப்பட்ட கோஷ்டத்தையும் ஆரவாரத்தையும் நமது ஆண்டவரிடமாவது, அப்போஸ்தலர், பரிசுத்தவான்களிடமாவது நாம் காண்பதில்லை. இன்னும் சிலர் ஜெபித்தால் 'செத்தவன் கையில் வெற்றிலை பாக்கு' கொடுத்தது போலிருக்கும். நெடுங்கால நோயாளி மற்றவர்களுக்கு விளங்காதபடி தங்கள் வாய்க்குள்ளே முணுமுணுக்கிறது போல, இவர்கள் **ஜெபத்தில் உயிர்** என்பது கிடையாது. தாழ்ந்த தொனியில் ஏற்றம் இறக்கமில்லாமல் ஒரேவிதமாய் ஜெபித்துக்கொண்டு போவார்கள். முழங்காலில் நிற்பவர்கள் தங்கள் பொறுமையை

இழந்து மனதுக்குள் திட்டுவதுமுண்டு; இவன் எப்போ முடிக்கப்போகிறான் என்று சங்கடப்படுகிறவர்களுமுண்டு. என்னைவிட்டுப் பார், நான் ஜெபிக்கிறேன் என்று சபதம் கூறும் துணிகரக்காரரும் இருக்கிறார்கள். ஜெபமாவது என்னவென்று இவர்கள் அறிந்தார்களா? கிறிஸ்தற்ற மனுஷருடைய ஜெபம் பாவமல்லவா? நாம் செய்துவருகிற அநேக பாவங்களோடு, தெய்வ பயமின்றி சபைகளெங்கும் செய்யப்பட்டுவரும் துணிகரமான ஜெபங்களும் பாவங்கள் அல்லவோ? ‘அவன் ஜெபம் பாவமாகக்கடவது’ என்று வேதம் வீணாய்ச் சொல்லவில்லை. பவுல் குணப்படுமுன் எத்தனையோ ஜெபங்கள் செய்திருக்கக் கூடும். அப்படியிருந்தும் ‘அவன் **இப்பொழுது** ஜெபம் பண்ணுகிறான்’ என்று ஆண்டவர் சொன்னார். அற்புதமாக மாறின பவுல் இப்பொழுது ஜெபிக்கிறார்.

ஜெபம் என்றால் என்ன? ஜெபத்தில் யாரோடு பேசுகிறோம் என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? நம்மையே நோக்கி ஜெபிக்கிறதா? மனுஷரை நோக்கி ஜெபிக்கிறதா? விண்ணப்பம் பண்ணுகிற விஷயத்தை நோக்கி ஜெபிக்கிறதா? அல்லது தேவனை நோக்கி ஜெபிக்கிறதா? தனி ஜெபத்தைப் பற்றிப் பேசுகிறோம். தனி ஜெபம் என்பது ‘தேவனும் மனுஷனும்’ என்று அருத்தம். தனி ஜெபத்தில் நாம் முகமுகமாய் ஆண்டவரைச் சந்திக்கிறோம்; அவரும் நம்மைச் சந்திக்கிறார். தேவனிடத்தில் சேருகிறவன் அவர் தனக்கு முன்பாக இருப்பதை உணர வேண்டும் (எபி. 11:6). தேவனை நோக்காத ஜெபங்கள் வீண் ஜெபங்களாகும். தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவர் எங்கிருந்து வந்தார்? அவர் எவ்வளவு காலமாயிருக்கிறார்? அவர் எப்போது உண்டானார்? அவருடைய வல்லமை எப்படிப்பட்டது? அவருடைய மகிமை எப்படிப்பட்டது? வானத்திலும் பூமியிலுமுள்ள பிரபஞ்சமனைத்தையும் அவர் எப்படி உண்டாக்கினார்? யாதொரு ஆதாரமில்லாமல் மகா



பிரமாண்டமான சர்வலோகங்களையும் எல்லையில்லா அகண்ட ஆகாயத்தில் எப்படித் தொங்கவைத்தார்? அவைகள் விழுந்துவிடாமலும், ஓட்டத்தில் ஒன்றோடொன்று மோதி அழிந்துபோகாமலும், அவைகளை இத்தனை யுகங்களாக எவ்வாறு தாங்கி வருகிறார்? மனுஷன் பூமியில் சஞ்சரித்து சௌகரியமாய் வாழும்படி அவனுக்கு வேண்டிய சகல பொருட்களையும் வகைவகையாகவும் திரள்திரளாகவும் உண்டாக்கி வைத்து மறைந்து கொண்ட இந்த **இறைவன்** யார்? உணர்வற்றவர்களும் நன்றியற்றவர்களும் துரோகிகளுமாகிய நமக்கு வானமும் பூமியும் பணிவிடை செய்யும்படி ஏற்பாடு செய்த **பகவான்** எங்கே? இப்படிப்பட்ட தெய்வீகமான கேள்விகளை **வீணர்கள்** விரும்புவதில்லை. ஒருவன் உலகக் காரியங்களில் எவ்வளவு ஆராய்ச்சிக்காரனும் நிபுணனு மாயிருந்தாலும், ஆவிக்குரிய ஆராய்ச்சியில்லையென்றால் அவன் மனுஷனா? ஆவிக்குரிய ஆராய்ச்சியில்லாத வீணர்கள் ஜெபிக்க யோக்கியர்கள் அல்ல. நித்திய வாசியாகிய சிருஷ்டி கர்த்தர் எப்படிப்பட்டவர் என்று ஒருவன் அமர்ந்து யோசிப்பானானால் ஜெபத்தில் அலங்காரமான வர்ணிப்புகளும், ஆரவாரமான கோஷ்டங்களும், துணிகரமான வார்த்தைகளும், தூக்க மயக்கமான முணுமுணுப்புகளும் பறந்துபோகாதா? மகிமையின் ஆண்டவரை நீ தரிசிப்பாயானால் உன் தேகம் சிலிர்த்து, நீ மிகுந்த பயபக்தியடைந்து, அவர் பாதத்தில் சாஷ்டாங்கம் பண்ணாதிருப்பாயா? தேசாதிபதியைப் பார்க்கப்போகிறவன் எவ்வளவு அடக்க ஒடுக்கமாய் அவர்முன் நின்று பயபக்தியுடன் பேசுகிறான். அவர் பேசும்போது எவ்வளவோ வணக்கத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறான். சர்க்காரில் பெரிய உத்தியோகஸ்தரிடம் பேசப்போகிறவன் கண்களை உருட்டிக் கொண்டும், கைத்தாளம் போட்டுக் கொண்டும் பலத்த சத்தத்தோடு பேசுவானானால் அவனைப் பைத்தியக்காரனென்று துரத்திவிடமாட்டார்களா? கிறிஸ்தவன்

பணிந்துகொள்ளுகிற கடவுள் மனுஷனிலும் அற்பமான வரல்லவா? ஆகையால்தான் மனுஷனுக்குக் கொடுக்கிற அவ்வளவு மரியாதைகூட நமது ஆண்டவருக்கு இல்லை. 'உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவுகொண்டாய்' என்று தேவன் சும்மாவா சொன்னார்?' நாம் நினைத்துக் கொள்ளுகிற தேவன் எப்படிப்பட்டவரோ அதுபோலதானே நமது ஜெபங்களும் இருக்கும். கிறிஸ்தற்ற மனுஷருடைய ஜெபங்கள் ஆண்டவர் சொல்லுகிறபடி வீண் வார்த்தைகளை அலப்புவதாகும்.

**(4) வீண் ஆராதனை.** 'மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து **வீணாய் எனக்கு ஆராதனை** செய்கிறார்கள்' (மத். 15:9). கிறிஸ்தவர்களாகிய நமக்கு நமது வாழ்க்கையில் ஆலயங்களும் ஆராதனைகளும் மிகவும் பிரதானம். தென் இந்தியாவில் பல மிஷன்கள் வேலை செய்கின்றன. இந்த மிஷன்கள் அங்கங்கே கட்டின ஆலயங்கள் அநேகமிருக்கின்றன. அந்தந்த மிஷனைச் சேர்ந்த சபையார் கும்பல் கும்பலாக ஆலயம் சென்று ஆராதனை செய்துவருகிறார்கள். சிலர் ஆலயத்தை விரும்பாமலும் ஆராதனைக்குப் போகாமலும் இருக்கலாம். என்றாலும் அநேகக் குடும்பங்கள் ஆராதனைக்குப் போகத் தவறுவதில்லை. தம்மை வீணாகத் தேடும்படி ஆண்டவர் நமக்குச் சொல்லவில்லை. உண்மையோடு கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் நிச்சயமாகவே அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று அவரால் நடத்தப்படுகிறார்கள்.

அப்படியானால் 'வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்' என்று ஆண்டவர் ஏன் சொன்னார்? யாரைக் குறித்துச் சொன்னார்? **வேதபாரகர் பரிசேயரைப்** பார்த்துச் சொன்னார். அவர்கள் பாரம்பரியத்தைத் தங்கள் ஆராதனைகளில் நுழைத்து தேவனுடைய கற்பனையை மீறி



நடந்தார்கள். அவர்களும் யூத ஜனங்களும் தங்கள் வாயினால் தேவனிடம் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் மாத்திரம் அவரைக் கனம் பண்ணினார்கள். அவர்கள் இருதயமோ வெகுதூரம் விலகியிருந்தது. தேவனருளிய சத்திய போதனையை அவர்கள் விட்டுவிட்டு மனுஷர் உண்டாக்கின கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்தார்கள். ஆகையால் அவர்கள் நடத்திவந்த ஆராதனைகள் **வீண் ஆராதனைகளாயிற்று.** அந்த ஆராதனைகள் அவர்களுக்கு ஆக்கினையாயிருந்ததேயொழிய ஆசீர்வாதமாயிருக்கவில்லை.

நாம் தேவனை வஞ்சிக்க முடியாது. ஒரு மனுஷன் துயரமான சத்தத்தோடும் புலம்பலோடும் கண்ணீரோடும் நம்மிடம் வந்து: என் பெண்சாதியும் பிள்ளைகளும் பேதியில் மாண்டு போனார்கள், எனக்குத் திக்கில்லை ஐயாவே என்று சொன்னால், நாம் பரிதபித்து அவனுக்கு உதவிசெய்ய விரும்புவோம். அவன் இருதயத்தையோ உண்மையையோ நாம் அறியோம். ஆண்டவரோ ஆலயத்தில் கூடியிருக்கிற எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிறார். அவரை ஏமாற்ற ஒருவராலும் முடியாது. நமது வாய் எவ்வளவு சத்தமாய்ப் பாடினாலும், நமது உதடுகள் எவ்வளவு உற்சாகமாய் அவருடைய நாமத்தைப் போற்றினாலும், **உள்ளத்தில் உண்மையில்லாவிட்டால்** நமது ஆராதனைகள் வீணாகும். இதைத்தான் தற்காலத்துச் சபைகள் விசேஷமாய்க் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். குருவானவர் வாசிக்கும் போது சபையார் மறுமொழி சொல்வது வழக்கம். கற்பனைகள் வாசிக்கப்படும்போது: கர்த்தாவே இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும் என்கிறோம். காலமெல்லாம் ஏவியருளும் என்று சொல்லிக்கொண்டிருந்தால் கைக்கொள்வது எப்போ? ஒரு தகப்பன் தன் மகனைப் பார்த்து மேஜையிலிருக்கும் புஸ்தகத்தை எடுத்துவா என்று

சொல்லும்போது, மகன் தகப்பனைப் பார்த்து: அப்பா நீர் சொன்னபடி செய்ய என் இருதயத்தை ஏவியருளும் என்றால்: என்னடா ஏவுகிறது, போய் எடுத்து வாடா என்று அதட்டமாட்டானா? ஆண்டவர் கற்பிப்பதை நாம் செய்ய விரும்பும்போது அவர் கிருபை அருளுகிறார். நாம் எவ்விதமாகப் பிதாவைத் தொழுதுகொள்ள வேண்டுமென்பதை இரட்சகர் நமக்குத் திட்டமாய்ப் போதித்திருக்கிறார். 'நாம் **ஆவியோடும் உண்மையோடும்'** தொழுது கொள்ள வேண்டுமென்று பிதா விரும்புகிறார். இதை அநேகர் கவனிக்கிறதில்லை. ஆராதனையை நடத்துகிற குருக்களாகிய நாமும் இது விஷயத்தில் தவறிப் போகிறோம். இனிமையான பாடல்களும், ஒழுங்கான ஆராதனைகளும், 'உத்தமமான ஆராதனைகள் என்று ஏமாறவேண்டாம். உத்தமமான ஆராதனைகள் ஆராதிக்கிறவர்களுடைய **உத்தம ஜீவியத்தைப்** பொருத்திருக்கிறது. ஜெப புஸ்தகத்திலுள்ள சுருக்க ஜெபங்கள் மகா அருமையானவைகள். அவைகள் வாசிக்கிறவர்களுக்கு மனதிலிருந்து ஜெபிக்கவேண்டிய கஷ்டமில்லை. நமது ஜீவியம் எப்படியிருந்தால்தான் என்ன? மணி அடித்தவுடனே அங்கியைப் போட்டுக்கொண்டு, ஜெப புஸ்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டால் காரியம் முடிந்ததென்கிற துணிகரம் உதவாது. ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமானால் ஆவியோடும் உண்மையோடும் ஜீவிக்க வேண்டும்.

தேவாராதனையில் முக்கியமான விஷயம் **தேவசமுகம்.** 'கர்த்தர் தமது ஆலயத்திலிருக்கிறார்'. 'என் நாமத்தினால் எங்கே கூடுகிறீர்களோ, அங்கே நான் உங்கள் நடுவில் **இருக்கிறேன்'** என்று ஆண்டவர் வாக்குப் பண்ணியிருக்கிறார். உண்மையுள்ள ஆண்டவர் தமது வாக்குத் தவறாமல் ஆராதனை தோறும் நமது நடுவில் பிரசன்னமாகிறார். நாம் இதை உள்ளபடி உணர்ந்தால்



நமக்குள் எவ்வளவோ பயபக்தி உண்டாகும். வீண் டம்பமும் அவபக்தியும் நிர் விசாரமும் நம்மில் காணப்படமாட்டா. பெட்டிக்குள்ளிருக்கும் பட்டுகளை உடுத்திக்கொள்வதற்கும், நகைகளை எடுத்து மாட்டிக்கொள்வதற்கும், தலை நிறைய பூக்களை அடுக்கிப் புறப்படுவதற்கும் ஞாயிறு ஆராதனைகளை ஆவலோடு எதிர்பார்ப்பவர்கள் அநேகர். இதுவா **பரிசுத்த அலங்காரத்தோடு** கர்த்தரைத் தொழுதுகொள்வது? விக்கிரக பக்தன் பணிந்துகொள்ளும்போது தன் மேல்வஸ்திரத்தை எடுத்துத் தன் அறையில் கட்டி, வாய்பொத்தி, கை உயர்த்திக் கும்பிட்டு, சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்குகிறான். அவ்வளவு பயபக்திகூட நமக்கில்லையே. ஜனங்கள் ஆராதனைக்கு வருகிற விதத்தையும், அவர்கள் ஆசனங்களில் உட்கார்ந்திருக்கிற மாதிரியையும், அவர்கள் கண்கள் அங்குமிங்கும் நோக்குவதையும், அவர்கள் எண்ணங்கள் பல காரியங்களில் செல்லுவதையும், பக்கத்திலிருப்பவர்களோடு சத்தமாய் அவர்கள் பேசுவதையும் கவனித்தால் இதன் உண்மை விளங்கும். ஆராதனைகள் நமக்கு நீண்ட காலப் பழக்கமாயிருக்கிறபடியால் **பயபக்தி** அற்றுப்போகிறது. தேவசமுக உணர்ச்சி யில்லாமற்போனால் ஆண்டவருக்குப் பிரியமான ஆராதனை செய்ய முடியாது. நமது ஆராதனைகளில் ஜெபம், ஞானப்பாட்டு, கீர்த்தனை, வேத வாசிப்பு, சங்கீதம், பிரசங்கம் முதலியவை அடங்கியிருக்கின்றன. போதகர் ஜெபிக்கையில் நமது மனம் விண்ணப்பங்களோடு தொடர்ந்து செல்லவேண்டும். திருவசனம் வாசிக்கப்படுகையில் கர்த்தர் நம்மோடு பேசுகிறார் என்று கீழ்ப்படியும் சிந்தையுடன் கவனிக்கவேண்டும். முதலாம் பாடம் வாசித்து முடிந்தது; இரண்டாம் பாடம் வாசித்து **முடிந்தது** என்று ஒருவர் வாசித்து முடிப்பதும், சபையார் கேட்டும் கேளாமலும் இருப்பதும் சரியல்ல. ஞானப்பாட்டு, சங்கீதம், கீர்த்தனை பாடுகையில் அவைகளிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து

கருத்தோடே பாடவேண்டும். நமது கவனம் வேறெங்கும் போகக்கூடாது. 'நான் ஆவியோடு விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" என்று பவுல் சொன்னது ஞாபகமிருக்கட்டும். கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப் படுகையில் அவர் தமது வசனத்தின் மூலமாய் நமக்கு என்ன சொல்லுகிறாரென்று ஆவலோடும் பணிவோடும் செவிகொடுக்க வேண்டும். இவ்வாறு தம்மை உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்களை ஆண்டவர் ஆசீர்வதிக்காமல் விடார். தென் இந்தியச் சபைகளிலுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் இவ்வாலோசனையின்படி நடக்கத் தங்களை ஒப்புக்கொடுப்பார் களானால் ஒரு பெரிய மாறுதலை சபைகளெங்கும் காணலாம். மற்றப்படி நாம் **வீணாராதனைக்**காரராகிக் கெட்டே போவோம். இப்போதிருக்கிறபடி சபைகளைக் கவனித்தால் புறம்பான ஆசாரங்களையும் மாம்ச முயற்சிகளையும் காண்கிறோமேயன்றி, சபையார் ஆசீர்வதிக்கப்படத்தக்க ஆவியின் வல்லமையைக் காணோம். ஆராதனை விஷயம் சபையாரைப் பார்க்கிலும் குருக்களையே அதிகமாய்ப் பொறுத்திருக்கிறது. இதற்கு யாதொரு சந்தேகமில்லை. ஆகிறதும் நம்மாலே, அழிகிறதும் நம்மாலே என்பதை நாம் மறுக்க முடியாது. நாம் கர்த்தருக்கு நம்மை முழுவதுமாய் ஒப்புவித்து, அவர் நமக்குள் வசிக்க இடங்கொடுத்து, அவரையே சார்ந்து ஆராதனை நடத்துவோமானால், அவரே நமக்குள்ளிருந்து சபையார் இருதயங்களில் கிரியை செய்வார். இது இலேசான காரியமன்று. தேவ ஊழியரில் அநேகர் இது எவ்வளவு கஷ்டமான காரியம் என்று தள்ளிவிட்டு, எப்பொழுதும்போல உண்மையற்ற ஆராதனைகளை நடத்தி தங்கள் கடமையைக் கழித்துவிடலாம். அவர்களும் கெடுவார்கள், அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட சபையும் கெடும். 'இத்தருணத்தில் **ஒருமனப்பட்டு'** என்னும் ஜெபம் மிகவும் அருமையானது. அதைக் காலை மாலை



ஆராதனைகளில் சொல்லுகிறோம். ஆனால் ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதலடையாதவர்கள் பல மனப்பட்டவர்களே யன்றி ஒருமனப்பட்டவர்களல்ல. நாம் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலே பிழைக்கும் வரை ஜெபத்தில் **ஒருமனம்** இருக்க முடியாது.

**(5) வீண் காணிக்கை. 'இனி வீண் காணிக்கைகளைக்** கொண்டு வரவேண்டாம்' என்கிறார் (ஏசா. 1:13). காணிக்கைகளைப்பற்றி 'கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்' என்னும் பிரசங்கத்தில் சொல்லியிருப்பதால் இங்கே சுருக்கமாகவே கவனிப்போம். வீண் காணிக்கைகள் என்று ஆண்டவர் சொன்ன காரணமென்ன? அவர்களுடைய அக்கிரமங்களும் பொல்லாப்புகளுமே காரணம். அவர்களுடைய **காணிக்கைகள்** ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்றும், தீமை செய்வதை விட்டுவிலகி நன்மை செய்யக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் எச்சரிக்கிறார். ஆண்டவருடைய ஊழியத்திற்காக நாம் கொடுக்கும் காணிக்கைகள் அவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்திற்குத் தக்கபடியிருக்கும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரது இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற்றனுபவிக்கிறவர்கள் அவருடைய பரிசுத்த ஊழியம் நடந்தேறும்படி உற்சாகமாய்க் கொடுக்கிறார்கள். ஆண்டவர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். மக்கெதோனியா நாட்டுச் சபைகளைக் குறித்து: அவர்கள் **கொடிய தரித்திரராயிருந்தும்** தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்; அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும் தங்கள் திராணிக்கு **மிஞ்சியும்** கொடுக்கத் தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள்; தேவன் அவர்களுக்கு அளித்த கிருபையினாலே அப்படிச் செய்தார்கள் என்று அப்போஸ்தலன் அவர்களைப் புகழுகிறார். நம்மில் அநேகர் உதாரத்துவமாய்க் கொடுக்கக்கூடிய

நிலைமையிலிருந்தும் அற்பமாகவே கொடுக்கிறார்கள். கொடிய தரித்திரரான மக்கெதோனியாச் சபையார் தங்கள் **திராணிக்கு மிஞ்சி** உதாரமாய்க் கொடுத்திருக்க, நம்மில் கொடுக்கத் திராணியுள்ளவர்கள் அற்பத்தனமாய்க் கொடுப்பானேன்? கிறிஸ்துவின் மூலமாய் விளங்கின தேவ கிருபையையும், அவரது அளவற்ற அன்பையும் இவர்கள் அறிந்தவர்களல்ல. இவர்கள் **கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்கள்**. இப்படிப்பட்டவர்களுடைய காணிக்கை ஆண்டவருக்கு அருவருப்பு. யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, காணிக்கை வந்து சேர்ந்தால் போதுமென்பது நமது கோரிக்கை. **'ஆபேலையும் அவன் காணிக்கையையும்** கர்த்தர் அங்கீகரித்தார்; **காயீனையும் அவன் காணிக்கையையும்** அவர், அங்கீகரிக்கவில்லை' என்னும் ஆதித்தீர்ப்பு இன்னும் உண்மையாகவேயிருக்கிறது. ஒருவனுடைய காணிக்கை ஆண்டவருக்குப் பிரியமாயிருக்க வேண்டுமானால், முந்தி அவன் ஜீவியம் அவருக்குப் பிரியமாயிருக்கவேண்டும். முந்தி ஆபேல் அங்கீகாரம்; பிந்தி அவன் காணிக்கை அங்கீகாரம். கர்த்தருக்குப் பிரியமாய் நடக்காதவர்கள் செலுத்தும் காணிக்கைகள் வீண் காணிக்கை களாகும். தங்களையே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவர் களுக்குத் தங்கள் பணம் பெரிய காரியமல்ல. தேவ ஊழியத்தைப்போலவே அவ்வூழியம் நடக்கும்படி பொருள் சகாயம் செய்வதும் **தேவ ஊழியம்** என்பதை அவர்கள் திட்டமாய் அறிவார்கள். ஆகையால் அவர்கள் உதாரணமாகவும் உற்சாகமாகவும் கொடுக்கிறார்கள். அங்கங்கே ஏற்பட்டிருக்கும் சபைகளை அந்தச் சபையாரே ஆதரிக்க வேண்டியது கடமை. சபையார் எல்லாரும் இரட்சிப்பின் மாறுதலடைந்து, ஆண்டவருடைய அன்பில் நடந்துகொள்வார்களானால், அவர்கள் சமுசாரிகளாயிருந்தாலும், வியாபாரிகளாயிருந்தாலும், எவ்விதமான வேலைகளிலிருந்தாலும், தங்கள் மத்தியில் நடந்துவரும் ஊழியத்தை உற்சாகமாய் ஆதரிப்பார்கள். அதுவே ஒழுங்கு. யோசுவா தேசத்தை இஸ்ரவேல் கோத்திரங்களுக்குச்



சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுத்தபோது லேவிக் கோத்திரத்திற்கு சுதந்திரம் கொடுக்கவில்லை. கர்த்தரே அவர்கள் சுதந்திரம். அவர்கள் தேவ ஊழியரானபடியால் தங்கள் நடுவில் குடியிருந்த லேவியரை ஜனங்களே போஷித்தார்கள். அதுபோல் சபையார் உத்தம ஊழியங்களைக் கைவிடுகிறதில்லை. தாங்கள் அனுபவிக்கும் நன்மைகளைப் போதகரும் அனுபவிக்க வேண்டும் என்பது அவர்கள் ஆசை. குருக்களும் சபையாரும் ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்துகொள்ளும் போது தமது ஊழியத்துக்குத் தேவையான சகாயத்தை அவர் கொடாமலிரார். கிறிஸ்தற்ற மனுஷருடைய வீண் காணிக்கைகளை நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை.

**(6) வீண் ஊழியம்.** 'ஒருவன் கட்டினது வெந்து போனால் அவன் நஷ்டமடைவான்' (1 கொரி. 3 : 15). பரிசுத்த பவுல் கர்த்தருடைய ஊழியத்தில் மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவர். ஆனால் ஒரு **பயம்** எப்பொழுதும் அவருக்குள்ளிருந்தது. அதாவது, தாம் செய்கிற வேலை **வீணாகப்** போகக்கூடா தென்பது. இதைப்பற்றிப் பலவிடங்களிலும் பேசியிருக்கிறார். 'நான் ஓடுகிறதும் ஓடினதும் **வீணாகாதபடிக்கு'** என்கிறார் (கலா. 2:2). மறுபடியும் கலாத்தியரைப் பார்த்து: 'நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது **வீணாய்ப் போயிற்றோ** என்று பயந்திருக்கிறேன்' என்கிறார் (கலா. 4:11). தெசலோனிக்கேயரைக் குறித்து : 'எங்கள் வேலை **வீணாய்ப் போகத்தக்கதாக** சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தின துண்டோ?' என்று கேட்கிறார் (1 தெச. 3:5). இதைப்பற்றி விஸ்தரித்துப் பேசுகிறபோது: இந்த ஊழியத்திற்கு இயேசு கிறிஸ்துவே அஸ்திபாரமென்றும், அதன்மேல் கட்டுகிறவன் என்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவனென்றும் அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையானதென்று அக்கினி பரிசோதிக்குமென்றும், அவன் கட்டினது நிலைத்தால் அவனுக்குப் பலனுண்டு, வெந்து

போனால் அவன் பட்டபாடு வீணாகுமென்றும் சொல்லுகிறார் (1 கொரி. 3 :11-15). தாம் செய்கிற ஊழியம் வீணாகக்கூடா தென்பது அப்போஸ்தலனுடைய உறுதியான தீர்மானம். அப்படியாகாதென்கிற **நிச்சயமும்** அவருக்கிருந்தது (பிலி. 2:14).

போதகர்களும் பிரசங்கிகளுமாகிய நமக்கு இவ்வளவு கவலை உண்டா? உலகத்திலுள்ள எல்லா வேலைகளுக்கும் நமது ஊழியத்திற்கும் பெரிய வித்தியாசமுண்டு. மனுஷன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் காரியமில்லை. அவன் தன் வேலையைத் திறமையாய்ச் செய்வானானால் அதுவே உலக அதிகாரிகளுக்குப் பிரியம். ஒரு சர்க்கார் வைத்தியர் ஜனங்களுக்குள்ளே மகா கேவலமாய் நடந்துகொண்டார். அவரைப்பற்றி மேல் அதிகாரிகளுக்குப் பிராது செய்தபோது: அவர் வேலைதான் எங்களுக்குக் காரியமென்று சொல்லிவிட்டார்கள். உங்கள் நடக்கை எப்படியிருந்தாலும் பரவாயில்லை. உங்கள் வேலைதான் எனக்கு வேண்டுமென்று ஆண்டவர் சொல்லுகிறதாயிருந்தால் நம்மில் அநேகருக்கு ரொம்பச் சந்தோஷமாயிருக்கும். ஆனால் அதற்கு வழியில்லை. ஆண்டவர் நமது **ஜீவியத்தையும் ஊழியத்தையும்** ஒன்றாய் இணைத்திருக்கிறார். நமது **ஜீவியத்தில்** கிறிஸ்துவை உலகத்துக்கு வெளிப்படுத்தும் **மாதிரிகளாகவும்** நமது **வேலையில்** மற்றவர்களைக் கிறிஸ்துவண்டை நடத்தும் **பிரசங்கிகளாகவும்** இருக்கும்படி நம்மை ஏற்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவோடு ஐக்கியமில்லாத மனுஷர் தங்கள் அறிவினாலும் சுயபலத்தினாலும் அதிக வேலைகள் செய்கிறவர்களாகக் காண்பிக்கலாம். அவைகள் மாம்ச முயற்சிகளேயல்லாமல் ஆவியினாலுண்டாகும் கனிகள் அல்ல. ஆண்டவர் நமது வேலைகளைக் **கனிகளென்று** அழைக்கிறார். கொடிகள் கனி கொடுக்கவேண்டுமானால் செடியில் நிலைத்திருக்கவேண்டும். செடியில் நிலைத்திராத கொடிகள் கனி கொடுக்கமாட்டா.



'என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது' என்கிறார். அவரே நம்மைக் கனி கொடுக்கச் செய்கிறவர். அப்படியானால் கிறிஸ்துவில் நிலைத்திராத மனுஷன் எவ்வளவு வேலைகளைச் செய்தாலும் அவைகள் வீண் முயற்சிகளாகுமே தவிர கனிகளாகா. இப்படிப்பட்டவர்களுடைய வேலைகளை ஆண்டவர் தமது அக்கினியால் பரிசோதிக்கும் நாளில் சகலமும் எரிந்து சாம்பலாகும். பட்டபாடெல்லாம் வீணும் நஷ்டமுமாகும். வீண் ஓட்டமும் வீண் பிரயாசமுமாய் முடியும்.

## 2. வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சி

இவ்வளவு நிச்சயம் அப்போஸ்தலனுக்கு எப்படிக் கிடைத்தது? தாம் செய்த ஊழியம் வீணாய்ப் போகாதென்றும், அழியாது நிலைத்திருக்கும் என்றும் நிச்சயமுள்ளவராயிருந்தார். அந்த நிச்சயம் அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. நமது வேலைகளைக் குறித்து இவ்வளவு நிச்சயமும் மகிழ்ச்சியும் நமக்குண்டா? நான் நாற்பது வருஷம் வேலை செய்திருக்கிறேன், ஐம்பது வருஷம் உழைத்திருக்கிறேன் என்று பெருமையாய்ப் பேசுகிறோமே. வேலையின் பெருக்கமல்ல, வேலையின் **தன்மையே** பிரதானம். ஆண்டவருடைய மூன்று வருஷ ஊழியம் இன்றும் உலகத்தை ரட்சிக்கும் தேவ பலமாயிருக்கிறது. கர்த்தருடைய சமூகத்தில் நமது வேலைகளைப் பரிசோதனை செய்வோமானால் நாம் துக்கப்படாமலிருக்க முடியாது. ஒரு சமயம் பெருமாள்குளம் என்ற கிராமத்தில் கூட்டங்களை நடத்தும்படி ஒரு மாலை நேரத்தில் போய்ச் சேர்ந்தேன். அவ்வேளை ஆலயத்தில் ஆராதனை நடந்தது. ஆராதனைக்கு இடையூறு செய்யாதபடி வெளியே ஜன்னல் ஓரமாய் நின்றேன். ஆராதனை நடத்தினவர் வேதத்தில் முதல்தரமான பரிசுகள் பெற்றவர். அவர்

வாசிப்பையும், ஜெபத்தையும், பிரசங்கத்தையும் கவனித்தேன். என் மனதுக்கு வேதனையாயிருந்தது. ஆராதனை முடிந்ததும் சபையார் வெளியேறுகையில் நான் ஆலயத்திற்குள் உபதேசியாரண்டை போனேன். ஐயா, எப்போ வந்தீர்கள் என்று ஆச்சரியத்தோடு கேட்டார். நான் முன்னதாகவே வந்து விட்டேன்; வெளியே ஜன்னல் பக்கமாய் நின்றேன் என்றேன். அப்படியானால் **என் பிரசங்கத்தைக்** கவனித்தீர்களோ என்றார். நான் கவனித்து ஆவதென்ன? ஆலயத்திலிருந்த ஆண்டவர் உங்கள் பிரசங்கத்தையும் நீங்கள் ஆராதனை நடத்தின விதத்தையும் கவனித்துக்கொண்டிருந்தாரே என்றேன். வெகுநேரம் அவர் பேசவில்லை. நாம் எப்படிப் பட்டவர்களென்றும் நமது ஊழியம் எத்தன்மையானதென்றும் கர்த்தர் அறியமாட்டாரா? நாம் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற நிச்சயமும் மகிழ்ச்சியும் நமக்கில்லையே. அப்படியிருக்க, அப்போஸ்தலனுக்கு அவ்வளவு நிச்சயமும் தைரியமும் எப்படி வந்ததென்பதை இப்பொழுது ஆராய்வோம்.

**(1) பவுல் ரட்சிப்பின் மாறுதலடைந்த ஊழியன்.** பலன் தரும் ஊழியம் செய்வதற்கு இதுவே முக்கியமான முதல் படி. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் குருக்கள் தாங்களே இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். இரட்சிப்பு ஆண்டவர் நமக்குள் நடப்பிக்கும் ஒரு அற்புத மாறுதல். அது சன் மார்க்கமல்ல, சீர்திருத்தமல்ல; ஒரு **புதிய சிருஷ்டிப்பு** என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். பழையவைகள் ஒழிந்து சகலமும் புதிதான ஒரு பெரிய மாறுதலை பவுல் தமது அனுபவத்தில் கண்டார். இரட்சிப்பின் சுவிசேஷத்தை நான் சபைகளில் பிரசங்கித்துக்கொண்டிருந்த காலத்தில் பண்ணை விளையில் வயது சென்ற சிநேகிதர் ஒருவர் என்னைப் பார்த்து: ‘இன்ன மலை திரும்பிவிட்டது என்று யாராகிலும் சொன்னால்



உடனே நம்பிக்கொள்ளுங்கள்; ஆனால் இன்னான் மனந்திரும்பி விட்டான் என்று சொன்னால் நம்பவேண்டாம்’ என்று சொன்னார். என் வேலைக்கு அவர் விரோதமாய்ப் பேசுவதுபோல் அச்சமயம் எனக்குத் தோன்றிற்று. ஆனால் காலம் செல்லச் செல்ல அவர் கருத்தை நான் கண்டறிந்தேன். இரட்சிப்பு லேசான தல்ல, ஆண்டவர் நமக்குள் நடப்பிக்கும் ஓர் அற்புதம் என்பதே அவர் கருத்து. கிறிஸ்து யாரைத் தொட்டாரோ, அல்லது யார் அவரைத் தொட்டார்களோ அவர்களில் ஆச்சரியமான மாறுதலுண்டானதை சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமலும் அவராலே இரட்சிப்பின் மாறுதலடையாமலும் இருக்கிறவர்கள் உண்மையான ஊழியர்கள் அல்ல. அவர்கள் படித்த அறிவினாலே காலமெல்லாம் பிரசங்கிக்கலாம். அவர்கள் பிரசங்கத்தில் வார்த்தைகளும் சத்தமும் இருக்குமேயல்லாமல் ஆவியானவரின் **வல்லமை** காணப்படாது. தங்கள் அனுபவத்தில் இரட்சிப்பின் மாறுதல் இல்லாதவர்கள் ‘ஆவியோடும் வல்லமையோடும் முழு நிச்சயத்தோடும்’ பேச முடியாது (1 தெச. 1:5) அவர்களுடைய ஓட்டமும் பிரயாசமும் வீணாகும். தம்மால் இரட்சிக்கப் படாதவர்களை ஆண்டவர் மற்றவர்களை இரட்சிக்கும்படி அனுப்பமாட்டார். ஆகையால் அவர் அனுப்பாதிருந்தும் இவர்கள் இந்தப் பரிசுத்த ஊழியத்தில் நுழைந்திருக்கிறார்கள். இரட்சிக்கப்படாதவர்களைப் போதகர்களாக அபிஷேகம்பண்ணி சபையாரை இவர்கள் கையில் ஒப்புவிப்பதைப்போல் சாத்தான் பெறக்கூடிய நிகரற்ற வெற்றி வேறெதுவுமில்லை. கர்த்தர் நம்மை உபயோகிக்காவிட்டால் நாம் மற்றவர்களுக்கு எப்படி ஆசீர்வாதமாயிருக்க முடியும்? அவருக்குச் சொந்தமாகாத பாத்திரங்களை அவர் எப்படி உபயோகிப்பார்? வேலைகள் மும்முரமாய் நடப்பதுபோல் தோன்றும், அவ்வளவும் மோசந்தான். நம்மில் இல்லாததை நாம் எப்படி பிறருக்குக்

கொடுக்கமுடியும்? ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை அனுபவித்த பவுல், தமக்கும் மற்றவர்களுக்குமுள்ள **வித்தியாசத்தைக்** கண்டபோது, ஆத்தும வாஞ்சைகொண்டு, ஆவியில் வைராக்கியமுள்ளவராய், இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஊக்கமாகக் கூறி அறிவித்தார். தமது அடியான் செய்த உண்மையான ஊழியத்தைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். ஆகையால் 'நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை யென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்' என்று அப்போஸ்தலன் சொன்னது சரி.

**(2) அவர் தேவசித்தப்படி பிழைத்து உழைத்த ஊழியன்.** ஆண்டவருடைய ஊழியத்தில் அவருடைய நடத்துதல் மிகவும் அவசியம். அவருடைய சித்தத்தின்படி செய்வது சிறந்த வேலையாகுமே தவிர, நாம் செய்வதெல்லாம் அவர் சித்தமாகாது. கிறிஸ்துவின் ஊழியம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றின ஊழியம். அப்போஸ்தலனுடைய ஊழியம் கிறிஸ்துவின் சித்தப்படி நடந்த ஊழியம். இவர் குணப்படுமுன் கிறிஸ்துவையும் அவரது அடியார்களையும் முழுப்பகையாய்ப் பகைத்து, திருச்சபையைப் பூமியிலிராதபடி அழித்துப்போட வேண்டுமென்று தீர்மானித்துக் கொடிய காரியங்களைச் செய்தவர். தமஸ்குவுக்குப் போகிற வழியில் மகிமையின் ஆண்டவர் வழி மறித்து, இவரைக்கீழே விழச்செய்து, விரோதியாயிருந்த பவுலைத் தமக்கு அடிமையாக்கி வெற்றிசிறந்தார். ஆண்டவர் பவுல்மேல் அடைந்த வெற்றியே பவுலுக்கும் வெற்றியாயிற்று. ஏனென்றால் கிறிஸ்துவின் **அடிமைகள்தான்** பூரண சுயாதீனமுள்ளவர்கள். 'ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? என்று கேட்டு, அந்நிமிஷமுதல் ஆட்கொண்டவரின் சித்தத்தின்படி பிழைக்கவும் உழைக்கவும் மனப்பூர்வமாய்த் தன்னை ஒப்புவித்துவிட்டார். தமது சித்தத்திற்குத் தன்னைக் கையளித்த



பவுலைக்கொண்டு ஆண்டவர் மகத்துவமான காரியங்களைச் செய்தார். பேனாவை என் கையில் வைத்துக்கொண்டு என் சிநேகிதனைப் பார்த்து: எழுது என்று சொன்னால் அவன் எப்படி எழுதுவான்? நமது இஷ்டம் போல் பிழைத்தால் ஆண்டவர் நம்மை எப்படி உபயோகிக்க முடியும்? அவர் நம்மை உபயோகிக்காமல் நாம் எவ்வளவு வேலைகளைச் செய்தாலும் அவ்வளவும் வீண் பிரயாசமும் நஷ்டமுமாவது நிச்சயம். அப்போஸ்தலன் தான் செய்த வேலைகளைக் குறித்து: 'நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடப் பிரயாசப்படுகிறேன் என்றெழுதுகிறார் (கொலோ. 1:29). நாமாகச் செய்வது அழியும்; ஆண்டவர் நம்மைக்கொண்டு செய்வதெதுவோ அது நிலைக்கும். ஆகையால் 'நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்' என்று அப்போஸ்தலன் சொன்னது சரி.

**(3) கிறிஸ்துவைத் தனக்கு ஜீவனாகக்கொண்ட ஊழியன்.** 'கிறிஸ்து எனக்கு ஜீவன்' என்கிறார் (பிலி. 1:21). இதன் கருத்தென்ன? கிறிஸ்துவை நம்புவதா? அவரிடம் கற்றுக்கொள்வதா? அவருக்குக் கீழ்ப்படிவதா? அவரது மாதிரியைப் பின்பற்றி நடப்பதா? இவையாவும் அப்போஸ்தலனிடம் இருந்தன. 'கிறிஸ்து எனக்கு ஜீவன்' என்பது இவை யாவற்றிற்கும் மேலான கருத்துள்ளது. கிறிஸ்து பவுலுடைய சொந்த ஜீவனானார். தமது ஜீவனைக் கொண்டல்ல, கிறிஸ்துவை ஜீவனாகக் கொண்டு பிழைத்தார். இந்த அனுபவத்தைக் குறித்து: 'இனி **நானல்ல, கிறிஸ்துவே** எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்கிறார். தென் இந்தியச் சபைகளிலுள்ள மிஷனெரிமார், குருமார், பிரசங்கிகளனைவரும் இப்படிச் சொல்லக்கூடுமானால் சபைகள் எவ்வளவோ ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்பது நிச்சயம். ஒவ்வொரு

ஜீவனும் அதனதன் தன்மையை வெளிப்படுத்துகிறது. வேம்பின் ஜீவன் கசப்பு. கரும்பின் ஜீவன் தித்திப்பு. ஓநாயின் ஜீவன் பட்சித்தல். ஆட்டின் ஜீவன் சாந்தம். கிறிஸ்து எப்படிப்பட்டவர்? அவர் பவுலுக்கு ஜீவனானபோது கிறிஸ்துவின் சிந்தையே பவுலுடைய சிந்தையாயிற்று. கிறிஸ்து இயேசுவில் விளங்கின ஞானம், பலம், ஊக்கம், தாழ்மை, பொறுமை, சாந்தம் ஆத்ம வாஞ்சை முதலான நற்குணங்களை இவரிடத்திலும் காண்கிறோம். தனக்குள் ஜீவனாயிருந்து தன்னைப் பலப்படுத்தின கிறிஸ்துவாலே அப்போஸ்தலன் எல்லாவற்றையும் செய்யக் கூடியவராயிருந்தார். அவராலேயல்லாமல் நம்மால் என்ன செய்ய முடியும்? அவரை ஜீவனாக ஏற்றுக்கொள்ளாமலும், அவர் தங்களுக்குள் பிழைக்கவும், தங்கள் மூலமாய்க் கிரியை நடப்பிக்கவும் இடங்கொடாமலிருக்கிற ஊழியர்கள் என்னத்திற்காவார்கள்? **ஜீவனாகிய** கிறிஸ்து நமக்குள் வசிக்காமல் நாம் சுயமாய் நடப்பிக்கும் சகல முயற்சிகளும் வீணாகும். ஆண்டவர் பவுலின் **ஜீவனாக** இருந்து கிரியை செய்தபடியால் 'நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்' என்று அப்போஸ்தலன் சொன்னது சரி.

**(4) கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ந்த ஊழியன்.** 'என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கு... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்' என்றார் (பிலி. 3:8-10). வேதாகமத்தில் ஆயிரக்கணக்கான வசனங்கள் உண்டு. எந்த வசனத்தையும் எடுத்துச் சாமர்த்தியமாயும்



இன்பமாயும் நாம் பிரசங்கிக்கலாம். அநேகர் அப்படியே செய்து வருகிறார்கள். ஆனால் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் **கிறிஸ்துவே** நமது பிரசங்கப் பொருளாயிருக்க வேண்டும். அவரில்லாத பிரசங்கங்கள் உமிகளுக்குச் சமானம். அப்போஸ்தலன் **கிறிஸ்துவையே** பிரசங்கித்தார். 'எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு **அவரையே** நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்' என்கிறார் (கொலோ. 1:28). '**இயேசுகிறிஸ்துவைப்பற்றிய** பிரசங்கமாகிய என் சுவிசேஷம்' என்கிறார் (ரோம. 16:26).

அப்போஸ்தலன் தேடின அறிவு எப்படிப்பட்டது? இயேசுவானவர் பெத்லகேமில் பிறந்தார், நாசரேத்தில் வளர்ந்தார், யூதேயா கலிலேயாவெங்கும் நடந்து பிரசங்கம் பண்ணினார்; நோயாளிகளைக் குணமாக்கினார்; யூதருடைய அதிகாரிகள் அவரைப் பிடித்து பொந்தியுபிலாத்துவின் காலத்தில் சிலுவையிலறைந்து கொன்று போட்டார்கள் என்கிற அறிவா? மாம்சத்தின்படியான இந்த அறிவு பவுலுக்கு இருந்தது. ஆனால் அவர் தனக்கு லாபமானவைகளையும் மேன்மையாயிருந்தவைகளையும் குப்பையாகத் தள்ளிவிட்டு முழு வாஞ்சையோடு **தேடின அறிவு** வேறே. மரணத்தை ஜெயித்து, உன்னத மகிமையில் பிரவேசித்து, தனக்குக் காட்சியருளின கர்த்தரும் ஆண்டவருமாகிய **இயேசுகிறிஸ்துவை** அறிந்துகொள்ளும்படி நாடினார். அந்த அறிவைத் தனக்கு **ஒப்பற்ற மேன்மையாக** மதித்தார். அவருடைய ஆவலை ஆண்டவர் திருப்தி செய்தார். மற்றெல்லாரைப் பார்க்கிலும் கிறிஸ்துவைப்பற்றிய **இரகசியங்கள்** அவருக்கு வெளிப்படுத்தப் பட்டதை நிருபங்களில் காண்கிறோம். சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்கவும், அவர்களை ஆவிக்குரிய ஜீவியத்தில்

வளரச்செய்யவும் விரும்புகிற தேவ ஊழியர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர வேண்டும். இந்த அறிவு புஸ்தக வாசிப்பினாலோ, மற்றவர்கள் சொல்வதினாலோ வராது. அவரே தம்மை நமக்குள் வெளிப்படுத்தவேண்டும். அப்படி வெளிப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார். 'நான் என்னை அவனுக்கு வெளிப்படுத்துவேன்' என்கிறார் (யோவா. 14:21).

'பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்' (மத். 11:27). பிதா ஒருவரே குமாரனை உள்ளபடி அறிந்தவர். மேலும் குமாரன் எவனுக்குப் பிதாவை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் பிதாவை அறியான், வேறொருவனும் பிதாவை அறியான் என்கிறார். இங்கே **குமாரனை** எப்படி அறிவது என்று சொல்லப்படவில்லை. குமாரன் பிதாவை வெளிப்படுத்து கிறவராகையால் குமாரனை அறியாமல் பிதாவை அறியமுடியாது. ஆகையால் ஆண்டவர் பரிசேயரைப் பார்த்து: 'நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள்' என்று சொன்னார் (யோவா. 8:19). அப்படியானால் குமாரனை அறிவதற்கு வழியென்ன? பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான் என்று சொல்லியிருப்பதால் **பிதாதான்** குமாரனை வெளிப்படுத்த வேண்டியவர். அவர் தமது **ஆவியின் மூலமாய்** குமாரனை வெளிப்படுத்துகிறார். 'பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை **கர்த்தர்** என்று ஒருவனும் அறியவோ, சொல்லவோ முடியாது.' ஆவியானவர் வரும்போது அவர் சுயமாய்ப் பேசாமல் கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்தி, அவரை நமக்குள் மகிமைப்படுத்துவாரென்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார். ஆகவே பிதாவை குமாரன் வெளிப்படுத்துகிறார். குமாரனை பிதா தமது ஆவியின் மூலமாய் வெளிப்படுத்துகிறார். குமாரனை



அறிவது பிதாவை அறிவதாகும். குமாரனைத் தள்ளிவிட்டு நாம் நேரே பிதாவை அறியும்படி நாடினால் அவர் **கிறிஸ்துவை** நமக்குக் காண்பித்து: இவர் என் நேச குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள், என்னை அவரில் காண்பீர்கள் என்கிறார். தேவாவியானவரிடம் நாம் போனால் அவரும் **கிறிஸ்துவை** நமக்குக் காண்பித்து: நான் என்னையல்ல, அவரை உங்களுக்கு வெளிப்படுத்தவும், அவரை மகிமைப்படுத்தவும், உங்களை அவரண்டை நடத்தவும் வந்தேன் என்கிறார். இவ்வாறு **கிறிஸ்துவே** நடுநாயகமாக விளங்குகிறார். ஆவியினால் நிறைந்தவன் கிறிஸ்துவினால் நிறைந்தவன்; கிறிஸ்துவினால் நிறைந்தவன் பிதாவினால் நிறைந்தவன். ஆகையால் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் யாவரும் நடுநாயகமாகிய கிறிஸ்துவின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கவேண்டியது நியாயமே.

**கடவுளைக் கடவுள்தான் அறிவார். கடவுளைக் கடவுள்தான்** வெளிப்படுத்தக்கூடுமேயன்றி வேறு எவ்வளவு மேலான சிருஷ்டியாலும் முடியாது. சட்டி தன்னை உண்டுபண்ணின குயவனுடைய திறமையை வெளிப் படுத்தலாம்; அவனுடைய குணத்தை, தன்மையை வெளிப்படுத்தாது. சிருஷ்டி சிருஷ்டிகரை எப்படி வெளிப்படுத்தமுடியும்? கிறிஸ்து தேவனை வெளிப்படுத்துகிறது உண்மையானால் அவர் சிருஷ்டியல்லவென்றும், 'மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள்' என்றும் அறிகிறோம். இப்படிப்பட்ட தெய்வீக புருஷரை மற்ற மனுஷரோடு ஒப்பிட்டுப் பேசும் பைத்தியம் கிறிஸ்தவர்களுக்குள் காணப்படுவது எவ்வளவு பரிதாபம். தோமா அவரைப் பார்த்து: 'என் ஆண்டவரே, என் தேவனே' என்று போற்றினபோது: மனுஷனான என்னைக் **கடவுள்** என்றழைப்பது தேவதூஷணமாகுமே என்று கடிந்துகொள்ளாமல், என்னைக் கண்டபின்தானா இந்த

விசுவாசம் உனக்கு வந்தது என்று கேட்டார். இயேசுவானவர் ஜனங்கள் மத்தியில் சஞ்சரித்து ஊழியம் செய்துவந்தபோது அவர்கள் தம்மை **இன்னாரென்று** அறிந்துகொள்ள வேண்டுமென்பதே அவருடைய முழு நோக்கமாயிருந்தது. ஜனங்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள் என்று மனுஷருக்குள் கேட்கிற வழக்கமில்லை. மோசே ஜனங்களைப் பார்த்து: நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டால், ஏன், நீர் மோசே என்று எங்களுக்குத் தெரியாதா என்பார்கள். எலியாவோ பவுலோ யார் கேட்டாலும் உடனே இன்னாரென்று சொல்லிவிடுவார்கள். இயேசுவானவரைப் பற்றியோ அப்படிச் சொல்ல ஏதுவில்லை. அவர் ஜனங்கள் நடுவில் மெய் மனுஷனாகச் சஞ்சரித்தார். அப்படியிருந்தும், அவரோடுகூடவேயிருந்த சீஷர்களும், அவரைக் கவனித்த மற்றவர்களும், **இவர் யாரோ, இவர் எப்படிப்பட்டவரோ!** என்று பிரமித்தார்கள். அவரைச் சாதாரண மனுஷனாக எண்ண இடமில்லை. ஜனங்கள் பேசிக்கொண்டபடி அவரை எலியா, எரேமியா, தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று தீர்மானிக்கவும் வழியில்லை. இக்காலத்தில் சிலர் அவரை **'மனுஷனுக்கு மேற்பட்டவரென்று'** சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். **எவ்வளவு** மேற்பட்டவரென்று இவர்கள் சொல்லுகிறதுமில்லை. கிறிஸ்துவுக்குக் கொடுக்க வேண்டிய தெய்வீக ஸ்தானத்தை அவருக்குக் கொடுக்காமற் போனால் நமது ஊழியம் மாயமும் உண்மையற்றதுமாகும். கண்காணிமாராகட்டும், மிஷனெரிகளாகட்டும், குருக்களாகட்டும் கிறிஸ்துவின் தெய்வீகத்தை, அவர் தெய்வத்தில் தெய்வமானவரென்பதை, அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட **இம்மானுவேல்** என்பதை நம்பாமல், அவர் பேரைச் சொல்லிக்கொண்டு எத்தனை வேலைகளைச் செய்தாலும் அவ்வளவும் அபத்தமாகும். கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி



வந்த சத்திய ஆவியானவர் உண்மையற்றவர்களை உபயோகிக்க மாட்டார்.

கிறிஸ்துவுக்குரிய இந்தத் **தெய்வீக** அறிவின் மேன்மைக்காகவே பவுல் தனக்கு மேன்மையும் லாபமுமாயிருந்த யாவையும் குப்பையாகத் தள்ளினார். இந்த அறிவின் பலத்தினாலே மகத்துவமான வேலைகளைச் செய்தார். 'கர்த்தரும் ரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் **அவரை அறிகிற அறிவிலும்** வளருங்கள்' என்று பேதுரு சொல்கிறார். நமது வளர்ச்சிக்குத் தக்கபடிதான் சபையாரும் வளருவார்கள். இது வேத சாஸ்திரக் கல்விச்சாலையில் கற்றுக்கொள்ளும் அறிவல்ல. அவைகளில் மிகுதியானவற்றைச் சீக்கிரம் மறந்துவிட்டால் நல்லது. சில வருஷங்களுக்குமுன் நான் பெங்களூரில் கூட்டங்களை நடத்திக்கொண்டிருந்தபோது ஐக்கிய வேதசாஸ்திரக் கல்லூரியில் மாணாக்கரோடு தங்கியிருந்தேன். அவர்களும் கூட்டங்களுக்கு வந்தார்கள். ஒரு நாள் நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில் மெதடிஸ்து மிஷனைச் சேர்ந்த ஒருவர் அச்சமயம் என்னைப் பார்த்து: இந்த வேதசாஸ்திரக் கல்வியைக்கொண்டு நாங்கள் கிராமச் சபையாருக்குமுன் நிற்போமானால் ஒருவரும் எங்களைத் தீண்டமாட்டார்கள். எப்படிப் பிரசங்கிக்கவேண்டும் என்கிற முறையை எங்களுக்குக் கற்றுக்கொடுங்கள் என்றார், கற்றுக் கொடுக்கக்கூடிய முறை ஒன்றுமில்லை. கிறிஸ்துவை அறிகிற மெய்யான அறிவும், அவர்மீதுள்ள அன்பும் உத்தம ஊழியத்தின் லட்சணங்களாகும் என்றேன். இருதயத்தின் நிறைவின்படி வாய்பேசும். ஆண்டவர் தமது வசனத்தைக் கொண்டு ஆவியின் மூலமாய்த் தம்மை நமக்குள் வெளிப்படுத்துகிறார். இதுதான் **அனுபவ அறிவு.** நமக்குள் பரவசத்தை உண்டாக்கும் அறிவு. நமக்கு மேன்மையைக் கொடுக்கும் அறிவு. உலகத்தின் அசுத்தங்களிலிருந்தும் சகல பாவங்களிலிருந்தும் நம்மை

விடுவிக்கும் அறிவு. ஆவிக்குரிய பரம லட்சணங்களால் நம்மை அலங்கரிக்கும் அறிவு. கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக நம்மை மறுரூபமாக்கும் அறிவு. இவ்வாழ்வுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய நன்மைகளை நமக்குக் கொடுக்கும் அறிவு. மற்றவர்களை ரட்சித்துக் கொள்ளும்படியான ஆத்ம வாஞ்சையை நமக்குள் உண்டாக்கும் அறிவு. ஜீவதண்ணீருள்ள நதிகள்போல் அநேகருக்கு நம்மை ஆசீர்வாதமாக்கும் அறிவு. நித்திய மகிமைக்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும் அறிவு. ஆம், பேதுரு சொல்லுகிறபடி இந்த அறிவு நம்மை 'வீணரும் கனியற்றவர்களுமா யிருக்கவொட்டாது.' இவை வீண் அலங்கார வார்த்தைகள் அல்ல. அவரை அறிந்தவர்களுக்கு இதன் உண்மை தெரியும். இந்த அறிவின் வளர்ச்சி இலேசாய்க் கிடைப்பதில்லை. பவுல் தமக்குள்ள தெல்லாவற்றையும் விற்று விலையேறப் பெற்ற பொக்கிஷமாகிய **கிறிஸ்துவின் அறிவைச்** சம்பாதித்தார்.

தேவ ஊழியர்களே! நமது காரியமென்ன? நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதையும், அருமையான காலத்தை எப்படிச் செலவிடுகிறோம் என்பதையும் **எஜமான்** அறிந்தேயிருக்கிறார். பலரும் நம்மைத் தேடி வருவதும், பல காரியங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருப்பதும் நமக்குக் கண்ணியமாக எண்ணிக்கொள்ளுகிறோம். வழக்குகளை விசாரிப்பதும் தீர்ப்புக் கூறுவதுமான நியாயாதிபதிகளாகயிருக்க விரும்புகிறோம். ஒரு போதகர் வீட்டில் நான் தங்கியிருந்தபோது ஒவ்வொரு நாளும் காலையிலிருந்து மாலை வரை அவர் இதுவே தொழிலாயிருப்பதைக் கண்டு: ஆவிக்குரிய காரியங்களைத் தேட உங்களுக்கு நேரமில்லையே, இன்று எப்படி ஆராதனை நடத்தப்போகிறீர்கள் என்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டு : இதையும் நடத்துகிறதுதான் என்றார். வருஷமெல்லாம் ஒழுங்காய் ஆராதனைகளை நடத்தியும்



சபையாருக்குள் ரட்சிப்பின் மாறுதல் காணப்படாதிருப்பதற்குக் காரணம் இந்த நிர்விசாரந்தான். வாரமெல்லாம் உலகக் காரியங்களில் சிக்கிக்கொண்டிருக்கும் குருக்கள் ஞாயிறு காலையில் அங்கியைத் தரித்து, புஸ்தகத்தைக் கையிலெடுத்தவுடனே பரிசுத்தவான்களாக மாறிவிடுவார்களா? நாம் கிறிஸ்துவின் பாதத்தில் தங்காமலும், அமர்ந்திருந்து திருவசனத்தை ஆவலோடு தியானிக்காமலும், வீணான காரியங்களைவிட்டு விலகி ஆவிக்குரிய காரியங்களில் முழுக் கவனம் செலுத்தாமலும், அவருக்கு ஊழியம் செய்வதை நமது ஜீவியத்தின் **ஒரே நோக்கமாக்காமலும் போனால்,** மேன்மையும் மகிமையுமான அவரை அறிகிற அறிவில் வளரமுடியாது. நாம் செய்கிற காரியங்களெல்லாம் வீண் ஓட்டமும் வீண் பிரயாசமுமாகும்.

**(5) கிறிஸ்துவின் சிலுவையை மகிமைப்படுத்தின ஊழியன்.** சிலுவை யூதருக்கு இடறலும் கிரேக்கருக்குப் பைத்தியமுமாயிருந்த அக்காலத்தில் சிலுவையை மகிமைப்படுத்திப் பேசுவதென்றால் இலேசான காரியமல்ல. இழிவாய்த் தோன்றுகிற காரியத்தை ஒருவர் மேன்மைப்படுத்திப் பேசுவாரானால் அதைப்போல் வெட்கம் வேறொன்றில்லை. கல்வியில் சிறந்த பவுல் சிலுவையை மகிமைப்படுத்துவதில், தான் வெட்கப்படுவதில்லை என்கிறார். **சிலுவையைத்** தவிர வேறே சுவிசேஷத்தை அவர் அறிவார். 'நாங்களோ **சிலுவையில்** அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்.' 'இயேசுகிறிஸ்துவை **சிலுவையில்** அறையப்பட்ட அவரையே அன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்', 'புத்தியில்லாத கலாத்தியரே, இயேசுகிறிஸ்து **சிலுவையில்** அறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே'. 'நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் **சிலுவையைக்**

குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக'. 'நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை யல்லாமல் நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் **சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்'** என்கிறார். சிலுவையில்லாத கிறிஸ்துவை அவர் அறியார். சிலுவையையும் அதிலே மரித்த இயேசுவையும் முற்றிலும் பகைத்து அருவருத்துத் தள்ளின பவுலுக்கு, கிறிஸ்துவின் சிலுவையே மகிமையும் வெற்றியுமாயிற்று. கிறிஸ்துவின் சிலுவை அப்போஸ்தலனுடைய ஜீவியத்தை முற்றிலும் மாற்றி, அவரைப் புது சிருஷ்டியாக்கினது. கிறிஸ்துவின் சிலுவை அவருடைய ஊழியத்தில் தேவ பலமாக விளங்கி மிகுந்த பலனைக் கொடுத்தது. ஒரு மனுஷனைக் குற்றவாளியெனத் தீர்த்து சிலுவையிலறைந்து கொன்றால் அதிலிருந்து இத்தனை உபதேசமாவென்று உலகம் கேட்கும். கிறிஸ்துவின் சிலுவையில் ஏதோ விசேஷமில்லையென்றால் அது இவ்வளவு மகிமையடைந்திருக்கமாட்டாது. வீணான காரியத்திற்காக இத்தனை பாடுகளைப்படவும் தன் உயிரைக் கொடுக்கவும் பவுல் பைத்தியக்காரனல்ல. சிலுவையைப்பற்றி அவருக்குக் கிடைத்த வெளிப்படுத்தல் மகா உன்னதமானது. பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலத்தையும்' ஒற்றுமைப்படுத்தி இணைக்கப் போகிறது கிறிஸ்துவின் சிலுவை என்கிறார். சிலுவையை அகற்றிவிட்டால் கிறிஸ்துமார்க்கம் சன்மார்க்கமாகுமேயன்றி ரடசண்ய மார்க்கமாகாது. ஒருத்துவமார்க்கத்தார் சிறந்த கல்விமான்களும் சன்மார்க்கருமானவர்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையை மகிமைப்படுத்தாததால், பாவிகள் ரட்சிக்கப்பட வழியில்லாமல், அவர்கள் சபை வரவர க்ஷீணித்துப்போகிறது. கர்த்தர் நமது ஊழியத்தை ஆசீர்வதிக்க வேண்டுமானால் கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றிய அறிவும் அனுபவமும் அவசியம்.



கிறிஸ்துவைப் போலவே அவரது **மரணமும்** அறிவுக்கெட்டாத இரகசியமாயிருக்கிறது. அப்போஸ்தலர் காலந்தொடங்கி ஆவியானவர் சிலுவையின் மகத்துவத்தைப் புதிது புதிதாக வெளிப்படுத்திக் கொண்டே போகிறார். அவ்வாறு வெளிப்படும் போதனைகள் அப்போஸ்தலருடைய போதனைகளை அனுசரித்திருக்க வேண்டுமே தவிர, அவைகளுக்கு விரோதமாயிருக்கக் கூடாது. விபரீதமான உபதேசங்களை அகற்றவேண்டும்; சிலுவையைப்பற்றிய மூடப் பக்திக்கும் இடங்கொடுக்கக் கூடாது.

ஒரு பட்சத்தார்; கிறிஸ்து தமது மரணத்தின் மூலமாய்த் தமது ஊழியத்தைப் பூரணப்படுத்தினார் என்கிறார்கள். அதாவது, அவர் சத்தியத்தைப் பிரசங்கித்தார், சத்துருக்கள் அவரை விரோதித்து அவர் ஊழியத்தைக் கெடுக்க முயற்சித்தார்கள்; கிறிஸ்துவோ தமது உயிர் போனாலும் சத்தியத்தை விட்டு விலகுவதில்லை என்று சொல்லி **ரத்த சாட்சியாக** மரித்தாரென்றும், நாம் அவர் போதனையைக் கேட்டு, அவர் மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் சிலுவையை முக்கியப்படுத்துகிறதில்லை. ஆண்டவரோ தமது ஊழியத்தில் **சிலுவை மரணமே** பிரதானம் என்று போதித்திருக்கிறார். அவர் ஜீவியத்தில் எத்தனையோ முக்கியமான காரியங்கள் இருந்தும், தமது மரணத்தை நாம் நினைவுகூரும்படி கட்டளையிட்டார். தம்மை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு **உயர்த்தப்படவேண்டும்** என்றும், தாம் **உயர்த்தப்பட்டிருக்கும்** போது எல்லாரையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்வதாகவும் சொல்லியிருக்கிறார் (யோவா. 3:15, 12:32). மேலும் அநாதித் தீர்மானத்தில் உலகத்தின் ரட்சிப்புக்காக அவருடைய **மரணமே** பிரதானமாக எண்ணப்பட்டது. உலகத் தோற்றத்திற்கு முன்னே அவர் தெரிந்துகொள்ளப்பட்ட **சற்குரு** என்று சொல்லாமல் **அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மறுபட்சத்தார்: **கிறிஸ்து நமக்குப் பதிலாக** எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார்; நமது பாவக் கடனை அவர் தீர்த்துவிட்டார்; நமக்குப் பதிலாக அவர் தண்டிக்கப்பட்டார்; நமக்கு வரவேண்டிய கோபாக்கினையை அவர் ஏற்றுக் கொண்டார்; பாவிகளாகிய நாம் **தப்பினோம்** என்பதுபோல பிரசங்கிக்கிறார்கள். இவைகள் கேட்பதற்கு இன்பமாயிருக்கிறது. அங்குமிங்கும் சில வேதவாக்கியங்கள் இதற்கு அனுசரணையாகவுமிருக்கலாம். இப்படிப்பட்ட போதனை அநேகருக்குப் பிரியம். கிறிஸ்து நமது ஸ்தானத்தில் வந்து **நமக்காக மரித்தார்** என்பதை நாம் மறுக்கமுடியாது. ஆனால் **நமக்குப் பதிலாக** என்பது நமது **ரட்சிப்புக்கு** ஏதுவாயிருக்க வேண்டும். என் கடனை **எனக்குப் பதிலாக இன்னொருவர்** கொடுத்துவிட்டால் நான் கொடுக்க வேண்டியதில்லையே. எனக்குப் பதிலாக இன்னொருவர் தண்டிக்கப்பட்டால் நான் தண்டிக்கப்பட வேண்டியதில்லை. இதை இப்படியே ஏற்றுக் கொள்வோமானால் உலகத்திலுள்ள பாவிகளெல்லாரையும் தடையின்றி மகிமையில் சேர்த்துக் கொள்ளவேண்டியதே நியாயம். ஒருவர் என்மேல் இரக்கப்பட்டு என் கடனைத் தீர்த்துவிட்டால், நான் அவருக்கு **நன்றி சொன்னாலும் சொல்லாவிட்டாலும்** என் கடன் தீர்ந்தது தீர்ந்ததே. நான் அவருக்கு நன்றி சொல்லவில்லையென்று நியாயாதிபதி என் கடனை நான் திரும்பவும் கட்ட வேண்டுமென்று சொன்னால் அது அநியாயமல்லவா? நான் இரண்டுதரமா கடனைச் செலுத்தவேண்டும்? அதுபோல எனக்குப் **பதிலாக** இன்னொருவர் தண்டிக்கப்பட்டபின், நான் அவரை விசுவாசிக்க வில்லையென்று என்னை மறுபடியும் தண்டிக்கிறதா? ஒருவர் செய்த குற்றத்திற்கு இரண்டுபேரைத் தண்டிக்கிறதா? இப்படிப்பட்ட போதனை அநேகரை நிர்விசாரத்துக்கும் பாவ ஜீவியத்துக்கும் வழிநடத்துகிறது.



கிறிஸ்துவின் மரணம் **நமது ஜீவியத்தை முற்றிலும் மாற்றும்** தேவ பலமாயிருக்கிறது. அவருடைய சிலுவையில் வெளிப்பட்ட தேவ கிருபையும் தேவ அன்பும் பாவிகளின் இருதயங்களை நொறுக்கி அவர்களைப் பரிசுத்தவான்களாக்கும் வல்லமையுள்ளதாயிருக்கிறது. 'என்னிடத்தில் அன்புகூர்ந்து **எனக்காகத்** தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்' என்று சொன்ன பவுல் தமது ஜீவியத்தில் ஆச்சரியமான **மாறுதலை** அடைந்தார். ஆண்டவர் எனக்குப் பதிலாக எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார் என்று சொல்லி அக்கிரமங்களிலும் பாவங்களிலும் பவுல் நிலைத்திருக்கவில்லை. கிறிஸ்து தம்மைத் தாமே **நமக்காக** ஒப்புக்கொடுத்தார் என்று அப்போஸ்தலன் எழுதியிருக்கிற இடங்களிலெல்லாம், நாம் பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, பரிசுத்தமும் நீதியும் தேவ பக்தியுமுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படி, ஆண்டவர் தம்மைச் சிலுவையின் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தாரென்று திட்டமாய்ச் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதலடையாமல் இன்னும் பாவத்தில் நிலைத்திருக்கிறவர்கள் சிலுவையின் கருத்தை அறிந்தவர்கள் அல்ல. நாம் பாவங்களை விட்டு மனந்திரும்பி ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்துகொள்ளாமற்போனால், நம்மை ரட்சிப்பதற்கல்ல, நாம் கெட்டுப்போவதற்கே கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்று சொல்லவேண்டியதாகும். பரிசுத்த நற்கருணை கிறிஸ்துவின் மரணத்தையும் அன்பையும் நமக்குத் தெரிவிக்கிறது. ஒரு ஆலயத்தில் அதிகாலையிலே தினசரி நற்கருணை பரிமாறும் வழக்கம் உண்டு. சிலர் ஒழுங்காய்ச் சேருவார்கள். கனம் பொருந்திய ஒரு அம்மாள் பந்திக்குத் தவறுவதில்லை. நற்கருணை முடிந்தவுடன் அந்த அம்மாள் சபையைச் சேர்ந்த ஒரு ஸ்திரீயைக் கண்டு மகா வெடுவெடுப்பாய்ப் பேசினார்கள். அந்த ஸ்திரீ அந்த

அம்மாளைப் பார்த்து: நீங்கள் நாள்தோறும் நற்கருணையில் சேருவதின் பலன் இதுதானா அம்மா என்றாள். தங்கள் குணம் நடக்கை மாறவேண்டியதின் அவசியத்தை உணராமல் தங்கள் பாவங்களுக்கு நற்கருணையை மூடலாக அனுசரிக்கிறவர்கள் அநேகர். தேவ ஊழியராகிய நாம் கிறிஸ்துவின் மரணத்தில் விளங்கும் தேவ அன்பையும் கிருபையின் ஐசுவரியத்தையும் ஊக்கமாய்ப் பிரசங்கித்து அநேகரை ரட்சிக்கும்படி போராட வேண்டும். கிறிஸ்துவின் சிலுவையை மறைக்கிறவர்களுடைய ஓட்டமும் பிரயாசமும் வீணாகும். அவருடைய மரணத்தின் நோக்கத்தைத் தகாத விதமாய்ப் பிரசங்கிக்கிறவர்களுடைய பிரயாசமும் வீணாகும்.

**(6) அன்பினால் நிறைந்து வேலை செய்த ஊழியன்.** ‘கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது’. ‘என்னிடத்தில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவகுமாரன்’. ‘நமக்கருளப்பட்ட பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது’ என்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எங்கும் பிரஸ்தாபிப்பதற்காக எவ்வளவோ பாடுகளையும் அவமானங்களையும் சகித்தார். கிறிஸ்துவினிமித்தம் எப்பொழுதும் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவராய், அவருடைய மரணத்தைத் தன் சரீரத்தில் சுமந்து திரிவதாக எழுதுகிறார். இவ்வளவு பிரயாசங்களுக்கும் ஏராளமான வேலைக்கும் காரணம் ஆண்டவர்மீதுள்ள **அன்புதான்.** அந்த அன்பிலிருந்து ஒன்றுமே அவரைப் பிரிக்கமுடியவில்லை (ரோம. 8:36-39). கிறிஸ்துவின் பேரிலுள்ள அன்பினாலேயேயன்றி வேறே எந்த நோக்கத்தோடும் அவர் வேலை செய்தவரல்ல. கிறிஸ்துவின் அன்பு அவரை நெருக்கினதால் மற்றவர்களை ரட்சிக்கும்படியான பேராவல் அவருக்குள்ளிருந்தது. அன்பின் ஊழியம் ஒருக்காலும் அழியாது. ஆகையால் ‘நான் வீணாக



ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்’ என்கிறார்.

தேவ ஊழியராகிய நாம் கிறிஸ்துவில் வெளிப்பட்ட தேவனுடைய அளவற்ற அன்பை ருசித்திருக்கிறோமா? அந்த அன்பால் நிறைந்திருக்கிறோமா? அவருடைய அன்பின் பலத்தாலே வேலை செய்கிறோமா? ‘யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? அப்படியானால் என் ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்ப்பாயாக’ என்றார். ஒருவர் வேதசாஸ்திரம் கற்றுத் தேறிவிட்டால் குருப் பட்டத்துக்கு சிபாரிசு செய்கிறோம். கிறிஸ்துவின் ஊழியனுக்கு இருக்கவேண்டிய பிரதான லட்சணமோ அன்பு. தம்மீது அன்பற்றவர்களை அவர் தமது ஊழியரென்று ஒப்புக்கொள்ளுகிறதில்லை. நாம் அவருக்காக ஆயிரங் காரியங்களைச் செய்தாலும் **அன்பில்லையானால்** அவைகள் ஒன்றுக்கும் உதவாது. எபேசு சபையைக் குறித்து: ‘உன் கிரியைகளை, உன் பொறுமையை, நீ இளைப் படையாமல் பிரயாசப்பட்டதை நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த **அன்பை விட்டாய்** என்று உன்பேரில் எனக்குக் குறையுண்டு, நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை நீக்கிவிடுவேன்’ என்றார். அன்பற்றவர்களின் வேலையில் ஆண்டவருக்குப் பிரியமில்லை. அன்பில்லாதவன் செய்யும் பதினாயிரங் காரியங்களிலும் அன்புள்ளவன் செய்யும் அற்ப வேலையில் கர்த்தருக்குப் பிரியமுண்டு.

எதற்காக நாம் போதகர்களானோம்? குருக்கள் ஊழியத்தை நாம் ஏன் விரும்பினோம்? அதற்கு **நோக்கம்** இருக்க வேண்டுமே. நமது **பிழைப்புக்கு** அனுகூலமாயிருக்கிறதென்று இவ்வேலையைத் தெரிந்துகொண்டோமோ? அல்லது, **சங்கை பொருந்திய ஐயரவர்கள்** என்னும் கண்ணியமான பட்டத்தை

நாடி இதில் பிரவேசித்தோமோ? உபதேசிமார், பிரசங்கிமார், உபாத்திமார், சபையின் ஜனங்கள் ஆகிய இவர்களை மேல் விசாரணை செய்யும் **அதிகாரத்தை** விரும்பி குருக்களானோமோ? பல காரணங்களிருக்கலாம். சில வருஷங்களுக்குமுன் ஒருவரைத் தங்களுக்குப் போதகராகும்படி ஒரு கிராம சபை அழைத்தது. சம்பளம் இருபது ரூபாய்தான் கொடுக்கமுடியும் என்றார்கள். கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து இவ்வளவு குறைவான சம்பளம் அவர் குடும்பத்துக்குப் போதாது என்று தடுத்தார். அழைக்கப்பட்டவரோ தனக்கு என்ன கொடுத்தாலும் வாங்கிக்கொள்வதாகவும், பட்டம் கொடுக்கும்படியாகவும் கேட்டுக்கொண்டார். 'சம்பளத்தைப்பற்றி என்ன? எனக்கு ரெவரண்டுப் பட்டம் கிடைத்தாலே போதும்' என்று அவர் சொன்னதாகப் பிந்தித் தெரியவந்தது. மகா அற்பராகிய நாம் **தேவ கிருபையினாலே** இருக்கிறோம் உழைக்கிறோம். ஆண்டவர் ஒருவருக்கே வணக்கமும், துதியும், போற்றுதலும் ஏற்றவை. பிரதான அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு 'பாவிகளில் பிரதான பாவி' என்று பட்டம் தரித்தார். பட்டங்களை விரும்புகிறவன் தன்னை அறிந்தவனல்ல. ஐயோ, ஆண்டவருடைய பரிசுத்த ஊழியம் தற்காலத்தில் படுகிறபாடு கொஞ்சமல்ல. குருக்களாகிய நாம் கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு, ரட்சிப்பின் மாறுதலடைந்து, தேவ அன்பினால் நிறைந்து, ஆத்ம வாஞ்சைகொண்டு, சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்கும் ஊழியம் செய்ய மனமில்லாவிட்டால், உடனே வேலையைவிட்டு நீங்குவது நமக்கு நன்மையாயிருக்கும். நமது அறிவுக்கும் திறமைக்கும் ஏற்றபடி வேறு எந்த வேலையையாவது செய்யலாம். ஆண்டவர் கூடயிருந்து நம்மைக் காப்பாற்றுவார். ஆனால் ரட்சிப்பின் மாறுதலற்றவர்களும், கிறிஸ்துவில் அன்பில்லாதவர்களும் போதகர் வேலையைச் செய்வது பெரிய பாதகமாகும். சபை



கெட்டுப்போவதற்குக் காரணமாகும். தேவ கோபாக்கினைக்கு ஏதுவாகும். 'என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகர்களாகாதிருப்பீர் களாக' (யாக்.3:1).

**(7) ஆவியின் பலத்தோடு வேலை செய்த ஊழியன்.** ஆண்டவரோடு கூடவேயிருந்த சீஷர்களுக்குக் கிடைத்த சிலாக்கியம் பெரிது. அவர்கள் அவரால் அழைக்கப்பட்டவர்கள். இடைவிடாமல் அவரோடே தங்கினவர்கள். அவருடைய போதனைகளைக் கேட்டவர்கள். தாராளமாக அவரோடு சம்பாஷித்தவர்கள். அவர் செய்த வல்ல செயல்களைக் கண்ணாரக் கண்டவர்கள். அவருடைய ஜீவியத்தில் விளங்கிய தெய்வீக லட்சணங்களைக் கவனித்தவர்கள். ஊழியத்துக்கு அனுப்பப்பட்டு வேலைசெய்து பழகினவர்கள். சிலுவைக் காட்சியை நோக்கினவர்கள். உயிர்த்தெழுந்து வந்த ஆண்டவரைத் தரிசித்து மகிழ்ச்சியடைந்தவர்கள். எங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளை பெற்றவர்கள். இவ்வளவு அனுகூலங்களும் இருக்க, இனி இவர்கள் புறப்பட்டுப் போகத் தடையென்ன? ஆண்டவர் அவர்களைப் பார்த்து: **நீங்கள் போகக்கூடாது, எருசலேமிலே காத்திருங்கள்** என்கிறார். அது அவர்களுக்கு ஆச்சரிய மாயிருக்கிறது. அவர்கள் ஆண்டவரிடம் வேத சாஸ்திரம் கற்றுக்கொள்ளவில்லையா? வேலை செய்யவேண்டிய இடங்கள் குறிக்கப்படவில்லையா? தமக்குச் சாட்சிகளாயிருக்க வேண்டுமென்று அவர் சொல்லவில்லையா? அறிய வேண்டிய காரியங்களை அறிந்துகொள்ளவில்லையா? இனி ஏன் தாமதிக்கவேண்டும் என்று அவர்கள் திகைக்கிறார்கள். ஆண்டவர் அவர்களைப் பார்த்து: நீங்கள் எத்தனை சிலாக்கியங்களைப் பெற்றிருந்தாலும் எனக்கு ஊழியம் செய்யத் தகுதியற்றவர்களாயிருக்கிறீர்கள். **உன்னத பலம்** உங்களுக்கு

இல்லை. ரட்சிப்பின் மாறுதல் உங்கள் ஜீவியத்தில் இன்னும் பலிதப்படவில்லை. நான் போய் ஆவியானவரை அனுப்புவேன். அவர் வந்து உங்களை நிரப்பும்போது உங்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும தேவ பலம் காணப்படும். அதற்காக நீங்கள் காத்திருக்கவேண்டும் என்றார். அந்தப்படியே அவர்கள் காத்திருந்து உன்னத பலத்தைப் பெற்றுக்கொண்டதையும், அதனால் அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் வெளிப்பட்ட ஆச்சரியமான மாறுதல்களையும் அப்போஸ்தலர் நடபடியில் காண்கிறோம்.

அதேபோல பவுலைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்ட ஆண்டவர் அவரை ஆவியினால் நிரப்பி ஊழியத்திற்கு அனுப்பினார். 'என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல் ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது' என்றும், 'நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தை களால் பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்' என்றும், 'எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடு மாத்திரமல்ல, **வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும் வந்தது'** என்றும் தமது ஊழியத்தைப்பற்றி அறிக்கையிடுகிறார் (1 கொரி. 2:5, 12, 13; 1 தெச. 1:5). அவருடைய ஜெபங்கள் சம்பாஷணைகள், பிரசங்கங்கள், பாட்டுகள், ஆராதனைகள், நிருபங்கள் சகலமும் ஆவியானவரின் **பலத்தால்** செய்யப்பட்டன வென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையினால் தான் 'நான் வீணாக ஓடினதும்,



வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்' என்கிறார்.

ஆவியானவரின் உன்னத பலத்தைப் பெறாமல் அப்போஸ்தலர் இரட்சிப்பின் ஊழியத்தில் பிரவேசிக்கவில்லை. அப்போஸ்தலனாகிய பவுலும் பிரவேசிக்கவில்லை. நமதாண்டவரும் ஆவியின் நிறைவைப் பெறாமல் தமது ஊழியத்தில் பிரவேசிக்கவில்லை. தென்னிந்தியாவெங்குமுள்ள தமிழ்ச் சபைகளில் ஊழியம் செய்துவரும் போதகர்களும் பிரசங்கிகளுமாகிய நமது காரியமென்ன? ஆண்டவர் வாக்குப் பண்ணின உன்னத பலத்தை நாம் பெற்றிருக்கிறோமா? அநேகர் இதன் அவசியத்தை உணருகிறதேயில்லை. ஆவியின் அனுக்கிரகமில்லாமல் இந்தப் பரிசுத்த ஊழியத்தைச் செய்து வருவது கீழ்ப்படியாமையும் துணிகரமுமாகும். உன்னத பலத்தைப் பெற்றால்தான் தமக்கு வேலை செய்யமுடியும் என்று ஆண்டவர் சொன்னால், அப்படியல்ல, உன்னத பலம் இல்லாமலே இந்த வேலையைச் செய்யமுடியும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். சத்தம் பலமாயிருக்கலாம், வாசிப்பு திருத்தமாயிருக்கலாம், பிரசங்கம் சிறப்பாயிருக்கலாம், ஜெபம் இன்பமாயிருக்கலாம், சபையாரும் மெச்சிக் கொள்ளலாம். ஆனால் ஒன்று நிச்சயம். மாம்சத்தின் முயற்சிகள் ஆவியின் கனிகளைக் கொடுப்பதில்லை. ஆகையால் இப்படிப்பட்டவர்கள் செய்யும் வேலைகள் வீண் ஓட்டமும் வீண் பிரயாசமுமாகும்.

**(8) ஜெப சிந்தையுள்ள ஊழியன்.** இதற்கு ஆதாரமாக வாக்கியங்களை எடுத்துக் காண்பிக்க வேண்டியதில்லை. நிருபங்களைப் படிப்போமானால் சபைகளுக்காக அவர் எவ்வளவோ ஊக்கமாக ஜெபித்திருக்கிறார் என்பது பிரத்தியட்சமாகும். வேளாவேளையல்ல, **'இடைவிடாமல் எப்பொழுதும்,'** சிலவேளை கண்ணீரோடும் அவர் ஜெபித்திருக்கிறார். அவர் தாமே சொல்லுகிறபடி

மற்றெல்லாரைப் பார்க்கிலும் அவர் அதிகமான வேலை செய்தவர். அதிகமான வேலை அவர் ஜெபத்துக்கு இடையூறாக இருக்கவில்லை. ஜெபமும் ஊழியமும் அவருக்கு இரு சிறகுகள் போலிருந்தன. ஒன்றுக்கு ஒன்று உதவியாயிருந்தது. வேலை எவ்வளவோ இருக்கிறது, ஜெபம்பண்ண நேரம் எங்கே என்று கேட்கிறோம். பவுல் வேலையை முக்கியப்படுத்தி ஜெபத்தை விட்டவரல்ல; ஜெபத்தை முக்கியப்படுத்தி வேலையை விட்டவரல்ல. தன் ரட்சகரைப்போலவே **வேலையிலும் வேண்டுதலிலும்** உறுதியாய்த் தரித்திருந்தார். நாம் பிரசங்கங்களை ஆயத்தம் செய்வதுபோலவே நம்மையும் ஆயத்தம் செய்யவேண்டும். வாசிப்பு, ஆராய்ச்சி, தியானத்தால் பிரசங்கம் ஆயத்தமாகிறது; ஊக்கமான ஜெபத்தால் நாம் ஆயத்தமாகிறோம். பிரசங்கத்தை நன்றாய் ஆயத்தம் செய்து ஜெபம் செய்யத் தவறுவோமானால் பிரசங்கம் **வீணாகும்.** ஜெபம் செய்யும் பிரசங்க ஆயத்தத்தை அசட்டை செய்வோமானால் தடுமாறுவோம். ஜெப ஊழியத்துக்கும் ஜெபமில்லா ஊழியத்திற்கும் வித்தியாசம் மிகுதி. ஜெப ஊழியம் வல்லமையுள்ளது; ஜெபமில்லா ஊழியம் ஆகாயத்தை அடிக்கிற சிலம்பம். ஜெபத்தில் நமது பலவீனங்களையும் குறைவு களையும் உணர்ந்து, ஆண்டவர் பாதத்தில் நம்மைத் தாழ்த்தி, அவராலேயன்றி நம்மால் ஒன்றுமே முடியாதென்று அறிக்கையிட்டு, அவரே நமக்குள்ளிருந்து தமது சித்தப்பிரகாரம் நம்மை நடத்தும்படி நம்மை அவர் கையில் விட்டுவிட்டால், அவர் நிச்சயமாகவே நமக்குள்ளிருந்து பேசுவார். நமது இருதயத்தில் அமைதலுண்டாகிறது. நம்மைத் தாராளமாக உபயோகிக்க ஆண்டவருக்கு இடமுண்டாகிறது. ஜெபம் நம்மைப் பரிசுத்தமாக்கும். நமது பேச்சும் பிரசங்கமும் ஆவியின் பலத்தோடு புறப்படும். இருதயங்கள் அசைக்கப்படும். ஜெப பலத்தோடு கூடிய ஊழியம் நிலைக்கும்.



ஜெபமில்லாத ஜீவியத்தில் பாவம் தங்கும், பாவமுள்ள ஊழியம் பலனற்றதாகும். பாவத்திலிருந்த ஒருவரைப் பார்த்து: நீங்கள் பிரசங்கிக்கக் கூடாதென்று சிலர் சொன்னபோது அவர்: நான் எப்படியிருந்தால் என்ன, வசனம் விதைக்குச் சமானம், நான் அதை விதைத்தால் முளைக்காதா என்றார். ஒருவன் குருடனோ செவிடனோ, நல்லவனோ கெட்டவனோ அவன் தானியத்தை விதைத்தால் அது முளைக்கலாம். ஆனால் திருவசன விதைப்பில் **ஜீவியமும் விதைப்பும்** சம்பந்தப்பட்டிருக்கிறது. 'மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற நானே ஆகாதவனாகப் போகாதபடிக்கு என்று அப்போஸ்தலன் தன்னையே எச்சரிக்கிறார். வசனத்தை மாத்திரம் கூறுவது இலேசு. ஆனால் நமது பிரசங்கம் 'வசனத்தோடு மாத்திரமல்ல, அது பரிசுத்த ஆவியோடும் வல்லமையோடும் முழு நிச்சயத்தோடும் புறப்படவேண்டும்' (1 தெச. 1:5). ஊக்கமான ஜெபம் அவசியம், மேலும் நமது ஜீவியம் கர்த்தருக்குப் பிரியமானதாயிருந்தால்தான் அவர் நம்மைப் பாத்திரங்களாக எடுத்து உபயோகிப்பார். அப்போஸ்தலன் தெசலோனிக் கேயரைப் பார்த்து: 'விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி' என்கிறார் (1 தெச. 2:10). சபையாருக்கு நமது ஜீவியத்தில் மதிப்புண்டானால் தான் நமது ஊழியத்திலும் மதிப்புண்டாகும். தங்களுடைய கேவலமான ஜீவியத்தால் சபையாருடைய மதிப்பை இழந்த குருக்கள் செய்யும் வேலைகள் வீணும் வியர்த்தமுமாகும். நாம் பிரசங்கிக்கும்போது நம்மைக் குறித்துப் பேசக்கூடாதென்றும், அப்படிப் பேசவேண்டுமானாலும் வேறொருவரைக் குறித்துப் பேசுவதுபோல் பேச வேண்டும் என்றும் வேதசாஸ்திரம் கற்பிக்கிறதாக ஒரு போதகர் சொன்னார். ஏன் அவ்வளவு பயம்? 'நான் குருடனாயிருந்தேன், இப்போது

காண்கிறேன்' என்று சொல்லாமல் 'எவனோ ஒருவன் குருடனாயிருந்தான், இப்பொழுது அவன் காண்கிறான்' என்று சொல்வதுதான் வேதசாஸ்திர முறையோ? நாம் கிறிஸ்துவை மறைத்து, நம்மையே பிரசங்கிப்பது இறுமாப்பாகும். ஆனால் ஆண்டவர் நமக்குச் செய்த கிருபைகளை, அவருடைய நடத்துதலை, ஆவிக்குரிய அனுபவத்தை சபையாருக்கு ஆசீர்வாதமும் எழுப்புதலும் உண்டாகும்படி தாழ்மையோடு சொல்லுவது பிரசங்க விதிகளுக்கு விரோதமாகுமா? தேவ ஊழியக்காரன் ஒருவன் தன் ஊழியத்தில் தன்னைப்பற்றி ஒன்றுமே பேசாமல் மூன்றாம் பேர்வழி மாதிரி பேசிக்கொண்டே காலங்கழிப்பானானால் அவனைப்போல் மாயக்காரனும் உண்மையற்றவனும் இல்லை. தன்னைப்பற்றி ஏதாகிலும் சொல்லப்போனால் ஆகா, இவர் யோக்கியதை நமக்குத் தெரியாதாவென்று சபையார் பேசுவார்களே என்கிற பயந்தான் தன்னை மறைத்துக் கொள்ளுகிற காரணம். மிகுந்த மனத்தாழ்மையுள்ள அப்போஸ்தலனோ: **'நான்** கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் **என்னைப் பின்பற்றுங்கள்'** என்றும், 'நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோம் என்பதற்கு நீங்களும் சாட்சி தேவனும் சாட்சி' என்றும் சொல்லுகிறார் (1 கொரி. 11:1; 1 தெச. 2:10). இது அவருடைய பெருமையா? அவர் எவ்வளவோ மனத் தாழ்மையுள்ளவர். சபையாரை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்த விரும்பி ஆண்டவர் தமக்கருளிய கிருபைகளை எடுத்துக் காண்பிக்கிறார். 'தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள், அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன்' என்று சங்கீதக்காரன் சொல்லவில்லையா? ஆண்டவர் லேகியோன் என்பவனைப் பார்த்து: 'நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டுக்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளை யெல்லாம் அவர்களுக்கு



அறிவி' என்று சொல்லவில்லையா? நம்மை ரட்சிக்காத ஆண்டவரா சபையாரை ரட்சிக்கப்போகிறார்? நம்மை ஆசீர்வதிக்காத கர்த்தரா சபையாரை ஆசீர்வதிக்கப் போகிறார்? நம்மைப்பற்றியே பேசக்கூடாது, பிரசங்கத்தைச் சுருக்கமாய் வியாக்கியானம் செய்துவிட்டால் போதும் என்றால் நமக்கு அலுப்பே இல்லை. அதுபோலதானே அநேக குருக்கள் 'பாம்பும் சாகவில்லை, கோலும் முறியவில்லை' என்பதுபோல, ஒருவருக்கும் நோகாமலும் தங்களுக்கும் சங்கடமில்லாமலும் பக்குவமாய்ப் பேசிக் காலங்கழிக்கிறார்கள். என்ன அநியாயம்! சுத்தமான ஜீவியத்துக்கும் உத்தமமான ஊழியத்துக்கும் நாம் நம்மிலே தகுதியுடையவர்களல்ல. **நமது தகுதி ஆண்டவராலே உண்டாகிறது.** நமது ஜெப ஜீவியத்தின் மூலமாய் அவர் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறார். ஜெப ஜீவியம் நம்மைத் தேவனோடு ஐக்கியப்படுத்துவதால் அவர் நமது குறைகளை நீக்கி, நம்மைப்பலப்படுத்தி, ஊழியத்தில் உபயோகிக்கிறார். நாம் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லை என்கிற மகிழ்ச்சி அந்நாளில் நமக்கும் கிடைக்கும்.

**(9) தம்மை முழுவதுமாய்க் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்துவிட்ட ஊழியன்.** ஆண்டவர் என்னிடத்தில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தாரே, அதுபோல நானும் அவரிடத்தில் அன்புகூர்ந்து அவருக்காக என்னை நானே ஒப்புக்கொடுக்கிறேன் என்கிறார். பலனுள்ள ஊழியத்திற்கு இரகசியம் இங்கேதானிருக்கிறது. ஒரு காரியத்தில் சித்திபெற விரும்புகிறவன் தன் **முழுக்கவனத்தையும்** அதிலே செலுத்தவேண்டும். அப்போஸ்தலனுக்கு **கிறிஸ்துவும் அவருடைய ஊழியமுமே** பிரதானம். வேறே எண்ணமும் வேறே நோக்கமும் அவருக்குக் கிடையாது. தன் ஆவி, ஆத்துமா, சரீரம், கல்வி, வரம், பலம்,

நேரம் சகலத்தையும் ஆண்டவருடைய ஊழியத்திற்கென்று சமூலமாய் ஒப்புவித்துவிட்டார். கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது அவர் ஜீவியத்தின் **ஒரே நோக்கமும்** வாஞ்சையுமாயிருந்தது. அதற்காகவே பிழைத்தார், இடைவிடாமல் உழைத்தார், முடிவில் பானபலியைப்போல தமது ஜீவனை ஊற்றிவிட்டார். தமது ஊழியத்தைப் பின்னாகப் பார்த்தபோது அவர் சஞ்சலப்பட வில்லை. 'நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைத் காத்துக்கொண்டேன்' என்கிறார். தாம் பெற்றுக்கொள்ளும் நித்திய மகிமையைக் குறித்துப் பூரண நிச்சயமுள்ளவராயிருந்தார். ஆகையால் 'நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப் பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாகும்' என்றார்.

மேற்கூறிய காரியங்களைக்கொண்டு நம்மை ஆராய்ந்து பார்ப்போம். வேத சாஸ்திரம் கற்றுத் தேறுவதாலே மாத்திரம் போதகர் ஊழியத்துக்குத் தகுதியானோம் என்று சொல்லமுடியாது. ஒரு இந்து, வேத சாஸ்திரம் படிப்பாரானால் பரீட்சையில் முதல்தரமாய்த் தேறமுடியும். அதினாலே அவருக்குக் குருப்பட்டம் கொடுக்கலாமா? கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொள்ளாமலும், அவரில் அன்பில்லாமலும், அவருக்கென்று பிழைக்காமலும் இருக்கிறவர்கள் அந்த இந்துவைப்போலதானே இருக்கிறார்கள். போதகருக்குரிய வேலைகளை ஒழுங்காய் நடத்துவதாலே அது தேவ ஊழியமாகுமா? நமது ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதல் உண்டா? தேவ சித்தப்படி பிழைத்து ஊழியம் செய்கிறோமா? கிறிஸ்து நமது ஜீவனாக நமக்குள் பிழைக்கிறாரா? அவரை அறிகிற அறிவில் வளருகிறோமா? கிறிஸ்துவின் சிலுவையில் வெளிப்பட்ட கிருபையையும், அன்பையும் வெற்றியையும் விவரித்துக் கூறுகிறோமா? அவருடைய அன்பினால் நிறைந்திருக்கிறோமா? ஆவியானவரின் பலத்தைப்



பெற்றிருக்கிறோமா? ஜெபத்தில் நிலைத்திருக்கிறோமா? நம்மைச் சமூலமாய்க் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறோமா? கிறிஸ்துவையும் அவரது ஊழியத்திலேயும் நமது ஜீவியத்தின் ஒரே நோக்கமாயிருக்கிறோமா? இவை யாவும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது. இது உண்மையானால் நாம் வீணாக ஓடினவர்களும் வீணாகப் பிரயாசப் பட்டவர்களுமாகக் காணப்படமாட்டோம். கர்த்தர் மெய்யாகவே நம்மோடிருந்து நமது ஊழியத்தை ஆசீர்வதிப்பார். சபையில் அநேக சகோதரர் சகோதரிகள் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற்று, ஆண்டவருக்கு மகிமையாகவும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாகவும் பிழைப்பார்கள். ஆ, தென் இந்திய சபைகளிலுள்ள தேவ ஊழியர்கள் அனைவரும் இவ்வாறு ஜீவித்து ஊழியஞ் செய்வார்களானால் கிறிஸ்தவர்களுக்குள் ஆவிக்குரிய பெரிய எழுப்புதல் உண்டாவது நிச்சயம். கிறிஸ்துவையன்றி உலகத்துக்கு வேறு விமோசனம் இல்லை. அவரைப் புறக்கணித்ததின் பலனாகவே இந்தப் பயங்கரமான உலக யுத்தங்கள் வந்தன. இன்னும் ஆபத்துக்கள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. இருளிலிருந்து வெளிச்சம் பிரகாசிக்கவும், சாவிலிருந்து ஜீவன் உண்டாகவும் செய்கிற சர்வ வல்லமையுள்ள தேவன் இந்த அழிவுகளின் மூலமாய்த் தமது குமாரனை மகிமைப்படுத்தப்போகிறார். அவருடைய ஆளுகையை அழிக்க எந்த வல்லமையாலும் முடியாது. செங்கோல் அவர் கையிலேதான் இருக்கிறது. அவருடைய நாமத்துக்கே ஜெயம். 'ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப் பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக' (1 கொரி. 15:58).

# கிறிஸ்தவ ஜீவியம்

# முகவுரை

இன்று உலகம் எந்த நிலைமையிலிருக்கிறது? கிறிஸ்து சபைகள் எந்த நிலைமையில் இருக்கின்றன? செத்த மீன்கள் வெள்ளத்தோடு வெள்ளமாய் இழுப்புண்டுபோவதுபோல அநேகர் அவபக்தியின் வெள்ளத்தால் இழுப்புண்டு போகிறார்களே தவிர அமர்ந்திருந்து காரியங்களை யோசிக்கிறதில்லை. 'ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது, அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று' என்ற வேத வாக்குப்படி உலகமும் சபைகளும் தத்தளிப்பான நிலைமையிலிருக்கின்றன வென்பதை மறுக்க முடியாது (சங். 46:6). ஞானிகளின் சங்கங்கள் அடிக்கடி கூடி எத்தனை முறை ஆலோசித்தாலும் உலகத்துக்குச் சமாதானமோ நல்ல காலமோ வரப்போகிறதில்லை. தன்னைப் படைத்துக் காப்பாற்றிவரும் காருண்யம் நிறைந்த பரமபிதாவை மனுஷன் மறந்து தன் மனங்கொண்டபடி நடக்கத் துணிந்தபின் இந்த உலகத்துக்கு அழிவே தவிர நற்காலமேது? நாகரிகமும் சாஸ்திர அறிவும் வளர்ந்தன; நாசமும் அழிவும் கூடவே வளர்ந்தன. கோடிக்கணக்கான திரவியத்தைச் செலவு செய்து ஒருவரையொருவர் அழிப்பதற்குக் காத்திருக்கும் உலகத்துக்கு தேவாசீர்வாதமோ சமாதானமோ எங்கிருந்து வரும்?

கிறிஸ்து சபைகளின் நிலைமை எப்படி? உலகத்தை ரட்சிக்கும்படி ஆண்டவர் சபையை ஸ்தாபித்தார். ஆதிச்சபை அநேகரை ரட்சிக்கும் வல்லமையுள்ள சபையாகயிருந்தது. இன்று சபைகளின் நிலைமை என்ன? எத்தனை சிறப்பான ஆலயங்கள் இருந்தாலும் என்ன? எவ்வளவு ஆராதனைகள் நடந்தாலும் என்ன?



சபையாரின் ஜீவியம் எப்படியிருக்கிறது? ஆலய பயபக்தி இல்லை. ஆராதனைகளில் ஆவியும் உண்மையுமில்லை. போதகர்களை மதிப்பதில்லை. தேவ வசனத்தில் பிரியமில்லை. தனி ஜெபத்தில் வாஞ்சையில்லை; சகோதர அன்பில்லை. சாந்தம் தாழ்மை பொறுமை இல்லை. கிறிஸ்துவின் சாயலோ சிந்தையோ இல்லை. தேவனுக்குப் பிரியமான பிள்ளைகள் எங்கும் இருக்கிறார்கள். ஆனால் தற்காலச் சபைகளில் நாம் பொதுவாகக் காண்கிற காரியங்கள் இதுவே. ஆராதனைகளில் கலகமும், அடிதடியும், போலீஸ் பந்தோபஸ்தும், கதவடைப்புகளும் உண்டானால் நாம் எவ்வளவோ கெட்டுப்போனோம் என்பது பிரத்தியக்ஷம்.

இவை யாவற்றிற்கும் காரணம் என்ன? அவிசுவாசமே காரணம். **"விசுவாசம்** எல்லாரிடத்திலும் இல்லையே" (2 தெச. 3:2). சகல ஆசீர்வாதங்களும் விசுவாசத்தாலே; சகல கேடுகளும் அவிசு வாசத்தாலே. உலகத்துக்கு தேவ சமாதானத்தைக் கொண்டுவந்த சமாதானக் கர்த்தரை, சமாதானக் காரணரை, சமாதானமாகிய அவரை விசுவாசித்துச் சொந்தமாக்காதபோது நமக்குள் சமாதானமேது? நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறதில்லையா? ஆராதனைகளில் அவரை விசுவாசிக்கிறோம் என்று அறிக்கை செய்கிறதில்லையா? என்று நாம் கேட்கலாம். "விசுவாசிக்கிறேன் விசுவாசிக்கிறேன்" என்று சொல்லுகிற அவிசுவாசிகள் அநேகர் சபைகளில் இருக்கிறார்கள். எப்படி அறியலாம்? அவர்கள் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதல் இல்லை. கிறிஸ்துவைப் பற்றிய பொதுவான அறிவு அவர்களுக்குண்டு. அறிவு நல்லது. ஆனால் அறிவு வேறே, விசுவாசம் வேறே. அறிவு விசுவாசமல்ல. அறிவு உண்டு; ஜீவியத்தில் மாறுதல் இல்லை. விசுவாசமுண்டானால் கட்டாயம் ஜீவியம் மாறிவிடும். முன் இருந்தபடி இருக்கமுடியாது. அறிக்கை வாய்க்குரியது. விசுவாசம் வாய்க்குரியதல்ல, அது

இருதயத்திற்குரியது, மறைவானது. மறைவான விசுவாசம் ஜீவியத்தில் காணப்படும். சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடி இயேசுகிறிஸ்துவை ஒருவன் உண்மையாய் நம்புவானானால் யாதொரு பிரசங்கமில்லாமல் முற்றிலும் மாறிவிடுவான். அவன் புது சிருஷ்டியாவான். ஜீவியத்தில் நற்கனிகளைக் கொடுப்பான். அநேகருக்கு ஆசீர்வாதமாயிருப்பான். இது இன்றும் உண்மையேதவிர வெறும் பேச்சல்ல. அந்தக் கிறிஸ்துவே இன்றும் இருக்கிறார். இச்சிறு புஸ்தகத்தைப் படிக்கும் சகோதரர் சகோதரிகளைக் கர்த்தர் ஆசீர்வதித்து உத்தம விசுவாசிகளாக்குவாராக.

"பரிசுத்தவான்களுக்கு ஒரே தரம் ஒப்புக்கொடுக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதுமான **விசுவாசத்தைக்** காத்துக் கொள்வோமாக" (யூதா வச. 2; 1 பேது. 1:7).

**எஸ். பரமானந்தம்**



# பொருளடக்கம்

## I. விசுவாச ஜீவியம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | விசுவாச ஜீவியம் | - | 150 |
| 2. | நமக்கு விசுவாசம் அவசியம் | - | 153 |
| 3. | விசுவாசமில்லாமல் அவர் நம்மை ஆசீர்வதிக்க முடியாது | - | 155 |
| 4. | தமது வல்லமையைவிட நமது விசுவாசத்தை ஆண்டவர் முக்கியப்படுத்துவானேன்? | - | 160 |
| 5. | விசுவாசமின்றி ஒன்றுமே வாய்க்காது | - | 162 |
| 6. | ஆண்டவர் ஏன் விசுவாசத்தை இவ்வளவு முக்கியப்படுத்தினார்? | - | 167 |
| 7. | விசுவாசம் தம்மில் இருக்கும்படி விரும்புகிறார் | - | 171 |
| 8. | கிறிஸ்துவை விசுவாசிப்பதென்றால் என்ன? | - | 175 |
| 9. | விசுவாசத்தால் உண்டாகும் பலன்கள் எவை | - | 176 |
| 10. | விசுவாசப் பரீட்சை அவசியம் | - | 183 |
| 11. | விசுவாச ஜீவியம் எப்படிக் கிடைக்கும்? | - | 187 |


## II. அன்பின் ஜீவியம்


| | | | |
|---|---|---|---|
| 1. | அன்புதான் நமது இரட்சிப்பு | - | 192 |
| 2. | இதன் உண்மையைக் கிறிஸ்துவில் காண்கிறோம் | - | 194 |
| 3. | கிறிஸ்துவின் அளவற்ற அன்பு | - | 196 |
| 4. | பாவிகள் மத்தியில் அன்பர் | - | 198 |

5. அவர் பாவிகளை ஆதாயப்படுத்திக் கொண்டதெப்படி? - 201
6. கிறிஸ்துவின் அன்பு எப்படிப்பட்டது? - 205
7. சகோதர அன்பைப்பற்றி கிறிஸ்துவின் போதனை - 214
8. சகோதர அன்பைப்பற்றி பவுலின் போதனை - 219
9. சகோதர அன்பைப்பற்றி யோவான் போதனை - 224
10. நமது அனுபவம் என்ன? - 226
11. அன்பின் பலன்கள் எவை? - 232
12. அன்பின் ஜீவியம் எப்படி வரும்? - 237


### III. தேவசித்த ஜீவியம்


1. ஆண்டவருடைய ஊழியத்தின் நோக்கம் - 245
2. ஜீவிய மாறுதலைப்பற்றி ஆண்டவர் போதனை - 252
3. வழக்கம் வல்லமையுள்ளது - 258
4. நமது ஜீவியம் மாற்றப்பட்டதுண்டானால் அதை நாம் எப்படி அறியலாம்? - 269
5. கர்த்தருக்குப் பிரியமாய் நடக்கும் ஜீவியம் எப்படிக் கிடைக்கும்? - 282




# 1. விசுவாசம்

## 1. விசுவாச ஜீவியம்

**“நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்” (2 கொரி. 5:6)**

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிப்பின் மாறுதலடைந்தவர்கள் **விசுவாசிகள்** என்ற பேர்பெற்றார்கள். **“விசுவாசிகளான** திரளான கூட்டத்தார்,” என்றும், **“விசுவாச மார்க்கத்தார்”** என்றும், **“விசுவாச குடும்பத்தார்”** என்றும், **“திரளான புருஷரும்** ஸ்திரீகளும் விசுவாசிகளானார்கள்” என்றும், “ஆசாரியரில் அநேகர் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்” என்றும் வாசிக்கிறோம். விசுவாசிகளான இவர்களை மற்றவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைத்தார்கள். விசுவாசமில்லாதவர்கள் விசுவாசப் பிரமாணத்தை ஆயிரமுறை வாயினால் சொன்னாலும் அவர்கள் அவிசுவாசிகளே. மெய்விசுவாசம் கட்டாயம் நமது ஜீவியத்தை மாற்றும். தங்கள் குணத்தில், நடக்கையில் மாறுதல் இல்லாதவர்கள் விசுவாசிகள் அல்ல. விசவாசத்தைப் பார்க்கிலும் அன்பு பிரதானமானாலும் விசுவாசமில்லாமல் அன்பு வராது. விசுவாசமில்லாமல் ஒன்றுமே ஆகாது. ஆகையால் ஆண்டவரும் அப்போஸ்தலரும் **விசுவாசத்தை** அவ்வளவு சிரேஷ்டமாகப் பேசியிருக்கிறார்கள். நமது இரட்சிப்பு விசுவாசத்திலே பிறந்து, விசுவாசத்திலே வளர்ந்து, விசுவாசத்திலே பூரணப்படுகிறது. கிறிஸ்துமார்க்கம் விசுவாச மார்க்கம். வேத புஸ்தகம் விசுவாச புஸ்தகம். அப்போஸ்தலர் நடபடி முழுவதும் விசுவாச மயமாயிருக்கிறது.

விசுவாசித்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இரட்சிக்கப் பட்டவர்கள் சபையின் அங்கங்களானார்கள். இதுவே ஒழுங்கு. அவிசுவாசிகளுக்கு அங்கே இடமில்லை. இவர்கள் விசுவாசிகளோடு சேரத் துணியவுமில்லை. ஆதிச்சபையில் அவ்வளவு பலத்த வித்தியாசமிருந்தது. தற்காலச் சபைகளிலோ அவிசுவாசிகளும் விசுவாசிகளும் கலந்திருக்கிறார்கள். இதுவே சபைகளில் நாம் காண்கிற சகல அக்கிரமங்களுக்கும் சங்கடங்களுக்கும் காரணம்.

கிறிஸ்துவோடு கூடயிருந்து, அவர் போதனைகளைக் கேட்டு, அவர் செய்த அற்புதங்களைக் கண்ட அப்போஸ்தலரும் மற்றவர்களும் அவரை விசுவாசிப்பது இலேசு என்றும், நமக்கோ அது கஷ்டமென்றும் நினைக்கிறோம். ஒரு விதத்தில் இது சரியே. ஆனால் அவரைக் கண்டவர்களானாலும் சரி, காணாதவர்களானாலும் சரி; எல்லாருக்கும் ஏற்பட்டவழி **விசுவாச வழிதான்.** அவரைக் கண்டவர்கள் விசுவாசிப்பதற்கு அவர் காரணமாயிருந்ததுபோலவே, அவரைக் கண்டவர்கள் விசுவாசிக்கக் கூடாதபடி அவரது எளிய பிறப்பும், தரித்திரவாழ்க்கையும், சஞ்சரித்த கலிலேயா நாடும் காரணமும் இடலறுமாயிருந்தன. விசுவாசம் இலேசான காரியமல்ல. கிறிஸ்து அருமையானவர், அவர் மீது வைக்கும் விசுவாசமும் அருமையானது. அது "அதிக விலையேறப்பெற்றது."

தம்மோடிருந்த சீஷர்கள் தம்மை விசுவாசிக்கும்படிக்கு ஆண்டவர் எவ்வளவோ பிரயாசப்பட்டார். இயேசுகிறிஸ்து வாக்கிலும் செய்கையிலும் வல்லமையுள்ள **தீர்க்கதரிசி** என்று விசுவாசிப்பதல்ல. அவர் ஒப்பற்ற போதகரென்று ஒப்புக் கொள்வதல்ல. இவை அவர்கள் நிச்சயமாக அறிந்த விஷயங்கள். ஆண்டவர் அவர்களிடம் எதிர்பார்த்த விசுவாசம் வேறே. தமக்கும்



பிதாவுக்குமுள்ள **தெய்வீக சம்பந்தத்தை** அவர்கள் நம்பும்படி விரும்புகிறார். **"நான் என் பிதாவிலும் பிதா என்னிலும்** இருக்கிறதை நீங்கள் விசுவாசிக்கிறதில்லையா? நான் என் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை **நம்புங்கள்,** அது கஷ்டமாயிருந்தால், என் கிரியைகளினிமித்தமாவது என்னை **நம்புங்கள்"** என்கிறார். கிறிஸ்துவைப்பற்றி எத்தனை காரியங்களை நாம் நம்பினாலும், அவரைப்பற்றி எவ்வளவு அறிவு நமக்கிருந்தாலும், "அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள்" என்பதை நாம் நம்பாமற்போனால் நாம் அவருக்குச் சீஷர்களாயிருக்க முடியாது. அவ்வாறு நம்புவது இலேசல்ல. அதிகாரிகளில் அநேகர் அவருக்கு எதிர்த்து நின்ற காரணம் அதுதான். "நீ மனுஷனாயிருக்க உன்னை **தேவன்** என்று சொல்லுகிறாயே" என்றார்கள். ஆண்டவர் அதை மறுக்கவில்லை. கிறிஸ்துவின் தெய்வீகத்தை நம்புவதற்கு ஆவியின் வெளிப்படுத்தல் அவசியம். "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை **கர்த்தரென்று** ஒருவனும் சொல்லமுடியாது." இந்த விசுவாசத்திலே திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. பேதுரு அவரது **தெய்வீகத்தை** அறிக்கை செய்தபோது: "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்றார். அப்போஸ்தலரும் ஆதிச்சபையாரும் இந்த விசுவாசத்திலே பிழைத்து உழைத்தார்கள். இந்த விசுவாசத்திற்காகத் தங்கள் உயிரையும் கொடுத்தார்கள். பவுல் கிறிஸ்துவைத் தரிசித்தபோதிலும் கடந்துபோன அந்தக் காட்சியை நினைத்துக்கொண்டே பிழைத்தவரல்ல. தன்னை ஆட்கொண்ட தெய்வீக இரட்சகரை அனுதினமும் நம்பிப்பிழைத்தார், உழைத்தார், அவரிடம் சென்றார். கிறிஸ்துவின் மீதுள்ள அந்த விசுவாசத்தைக் கடைசிவரை காத்துக்கொண்டார் (2தீமோ. 4:7).

## 2. நமக்கு விசுவாசம் அவசியம்

நாம் சுவிசேஷத்தைக் கருத்தாய்ப் படிப்போமானால் விசுவாசம் அவசியம் என்பதைப்பற்றி ஆண்டவர். பிரதானமாய்ச் சொல்லியிருப்பதைக் காணலாம். **“தேவனால்** எல்லாம் கூடும்” என்றும் சொன்னவரே, **“விசுவாசிக்கிறவனால்** எல்லாம் கூடும்” என்றும் சொன்னார். விசுவாசியால் எல்லாம் கூடுமென்றால் விசுவாசியும் தேவனா என்கிற கேள்வி ஏற்படும். விசுவாசி தன் ஒன்றுமில்லாமையை உணர்ந்து, ஆண்டவருக்குத் தன்னைப் பூரணமாய் ஒப்புவித்து, அவரையே சார்ந்து பிழைக்கிறான். அவர் அவன் மூலமாய்த் தமது வல்ல செயல்களை வெளிப்படுத்துகிறார். இது “நான் என் பிதாவிலும், பிதா என்னிலும்” என்று ஆண்டவர் சொன்னதற்கு ஒத்திருக்கிறது, “நான் என் பிதாவிலும்” என்பது கிறிஸ்து பிதாவுக்குத் தம்மைக்கையளித்து அவரையே பூரணமாய்ச் சார்ந்து பிழைப்பதைக் குறிக்கும். “பிதா என்னிலும்” என்பது இவ்வாறு தம்மை ஒப்புவித்த குமாரன் மூலமாய் பிதா தாராளமாக கிரியை நடப்பிப்பதைக் குறிக்கும். கிறிஸ்துவுக்கும் விசுவாசிக்குமுள்ள சம்பந்தமும் இது போலவே. அவர் தமது மகத்துவ செயல்களை வெளிப்படுத்த வேண்டுமானால் அவர்மீது நமக்குப் பூரண நம்பிக்கை இருக்கவேண்டும்.

ஒரு சமயம் இரண்டு குருடர் ஆண்டவரிடம் வந்து: “தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்” என்று கூப்பிட்டார்கள். அவர் அவர்களைப் பார்த்து: “இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று **நம்புகிறீர்களா?”** என்று கேட்டார். நம்புகிறோம் ஆண்டவரே என்று அவர்கள் சொன்னபோது, உடனே அவர்கள் கண்களைத்திறந்து பார்க்கும்படி செய்தார்.



சந்திரரோகியின் தகப்பன் தன் மகனை இரட்சகரிடம் கொண்டுவந்தான். கட்டாயம் குணமாகும் என்கிற நம்பிக்கையோடுதான் வந்தான். ஆண்டவர் மலை மீது இருந்தபடியால் கீழே நின்ற சீஷர்களைக் கேட்டுக் கொண்டான். அவர்களால் குணமாக்க முடியவில்லை. ஆகையால் பக்கத்தில் நின்ற வேதபாரகர் சீஷர்களைப் பரியாசம் பண்ணினார்கள். இதைக்கண்ட தகப்பனுக்கு இருந்த விசுவாசம் குறைந்தது. ஆண்டவர் மலையிலிருந்து இறங்கினவுடனே அவரிடம் சென்று, ஐயா, என் மகனைக் குணமாக்கும்படி உமது சீஷர்களைக் கேட்டேன், அவர்களால் முடியவில்லை. “நீர் ஏதாகிலும் **செய்யக் கூடுமானால்** எங்கள் மேல் மனதிரங்கி எங்களுக்கு உதவி செய்யவேண்டும்” என்றான். ஆண்டவர் அவனைப் பார்த்து: என் வல்லமையைப்பற்றி நீ கவலைப்படாதே, உன் விசுவாசத்தைப்பற்றிக் கவலைப்படு. **“நீ விசுவாசிக்கக் கூடுமானால்** ஆகும்” என்றார். அவன் அகப்பட்டுக் கொண்டான். “நீர் ஏதாகிலும் செய்யக் கூடுமானால்” என்றால், “நீ விசுவாசிக்கக் கூடுமானால்” என்கிறாரே. நான் என்ன செய்வேன்? ஆண்டவரே, நான் விசுவாசத்தோடுதான் வந்தேன், உமது சீஷரால் குணமாக்க முடியாமற்போனபோது என் விசுவாசம் தளர்ந்து அவிசுவாசமும் சேர்ந்துகொண்டது. “விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி எனக்கு உதவி செய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுக்கெஞ்சினான்.” உள்ளத்தில் உண்மையிருக்க விரும்பும் ஆண்டவர் மனதுருகி அவன் மகனைக் குணமாக்கினார்.

அத்திமரம் சீக்கிரமாய்ப் பட்டுப்போனதைக் கண்டு சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆண்டவர் அவர்களைப் பார்த்து: நீங்கள் **விசுவாசமுள்ளவர்களாயிருந்தால்** இந்த அத்திமரத்துக்குச் செய்வதுமாத்திரமல்ல, இந்த மலையைப்

பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியுமாகும் என்றார். வேறொரு சமயம் அவர்கள் அவரைப் பார்த்து: எங்கள் விசுவாசத்தைப் பெருகப் பண்ணவேண்டுமெனக் கேட்டார்கள். பெருகச் செய்கிறது இருக்கட்டும், **கடுகளவு விசுவாசம்** உங்களுக்கு இருந்தால் **மலைபோன்ற** காரியங்கள் நடக்கும் என்றார். விசுவாசத்தின் **அவசியத்தைப்** பற்றி ஆண்டவர் விசேஷித்துப் போதித்திருப்பதை சுவிசேஷமெங்கும் காணலாம்.

## 3. விசுவாசமில்லாமல் அவர் நம்மை ஆசீர்வதிக்க முடியாது

நம்மை ஆசீர்வதிக்கும்படியான **மனமும் வல்லமையும்** ஆண்டவருக்கு இருந்தபோதிலும் நம்மில் விசுவாசமில்லை யென்றால் அவர் ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால் அவரிடத்தில் ஆரோக்கியமோ ஆசீர்வாதமோ தேடிவந்தவர் களிடத்தில் **விசுவாசம்** இருக்க வேண்டுமென்று விரும்பினதை சுவிசேஷ சரித்திரத்தில் திட்டமாய்க் காண்கிறோம்.

(1) யார் யார் **விசுவாசத்துடன்** அவரிடம் வந்தார்களோ அவர்களை உடனே குணமாக்கி அனுப்புகிறார். பெரும்பாடுள்ள ஸ்திரீ நம்பிக்கையோடே வந்து அவரது வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். உடனே ஆரோக்கியமானாள். இவளைப்போல் விசுவாசத்துடன் அவரிடம் வந்து சுகம்பெற்றவர்கள் அநேகர்.

(2) யாராவது **அரைகுறையான விசுவாசத்துடன்** அவரிடம் வந்தால், முதலாவது அவர்களுடைய விசுவாசத்தைச் சரிப்படுத்திப் பின்பு குணமாக்கி அனுப்புகிறார். ஒரு குருடனை அவரிடம் கொண்டுவந்தார்கள். அவர் அவனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே நடத்திக்கொண்டு



போய், அவன் கண்களில் கைகளை வைத்து எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்க அவன்: நடக்கும் மனுஷரை மரங்களைப் போல் காண்கிறேன் என்றான். ஆண்டவர் நோயாளிகளுக்குப் பூரணமான சுகம் கொடுப்பவர். இவனுக்கோ அரைகுறையான பார்வை கிடைத்தது. அவனுடைய அரைகுறையான விசுவாசமே அதற்குக் காரணம். ஏரியில் ஜலம் ஏராளமாயிருந்தாலும் மொண்டு கொள்ளும் பாத்திர அளவுக்குத் தக்கபடியே நமக்குத் தண்ணீர் கிடைக்கும். இது ஏரியின் குற்றமல்ல. ஆண்டவர் மறுபடியும் அவன் கண்களில் தமது கைகளை வைத்து ஏறிட்டுப்பார் என்றார். விசுவாசம் பூரணப்பட்டது. அவன் ஏறிட்டுப் பார்த்து எல்லாவற்றையும் தெளிவாய்க் கண்டான். குணமாக்கும் வல்லமை ஆண்டவரிடம் இருந்தபோதிலும் குணமாகும் விசுவாசம் அவனிடமில்லை. அரைகுறையான விசுவாசத்துக்கு அரைகுறையான பலன். நமது விசுவாச அளவுக்குத் தக்கதாகவே பலனுமிருக்கும். விசுவாசம் உயரப் பலனும் உயரும்.

கப்பர்நகூம் இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையிலிருந்தான். ஆண்டவர் கானாவூருக்கு வந்தாரென்பதை அவன் அறிந்து அவரிடம் சென்று தன் மகனைக் குணமாக்கும்படி அவரை கப்பர்நகூமுக்கு வரும்படி கூப்பிட்டான். அவன் ஆண்டவரையும் அவரது வல்லமையையும் அறிந்தவனல்ல. ஒரு வைத்தியனை நாம் அழைப்பதுபோல தன் ஆத்திரத்தினிமித்தம் அவன் அவரை அழைத்தான். மேலும் தான் இராஜாவின் மனுஷன்; இயேசுவோ நாசரேத்தூர் தச்சன். தான் கூப்பிட்டவுடனே பிறகாலே அவர் ஓடிவருவாரென்பது அவன் துணிவு. "நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால்

விசுவாசிக்க மாட்டீர்கள்" என்று ஆண்டவர் சொன்னார். அவனோ அவர் சொன்னதைக் கவனிக்காமல்: என் பிள்ளை சாகிறதற்குமுன் நீர் வரவேண்டுமென்று அவசரப்படுத்தினான். அவன் கவலையெல்லாம் தன் குமாரன் பேரிலேயே இருந்தது. தன் மகன் சாகிறதற்கு முன் ஆண்டவர் இருபத்தைந்து மைல் நடந்து கப்பர்நகூமுக்குப்போய் ஏதாகிலும் செய்தால் குமாரன் பிழைப்பான் என்பது அவனுடைய நம்பிக்கை. ஆண்டவரோ அவன் விரும்புகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் மேலான காரியத்தைச் செய்ய தாம் வல்லவரென்பதை அவனுக்கு உணர்த்தச் சித்தமாகி, "நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்றார். அவன் வந்தபடியே அவனை அனுப்புகிறார். அவனுக்கு நம்பிக்கை உண்டாகும்படி அவன் கையில் மருந்தோ மாத்திரையோ கொடுத்தனுப்பவில்லை. "அந்த மனுஷன் இயேசு சொன்ன **வார்த்தையை** நம்பிப் போனான்." அவருடைய திருமுகத்தோற்றமும், அவர் பேசின சத்தமும் வார்த்தைகளும் அவனுக்குள் நம்பிக்கையை உண்டாக்கிற்று. மற்றபடி இலேசிலே அவன் போயிருக்க மாட்டான். அரைகுறையான விசுவாசத்தோடு வந்தான், பூரண நம்பிக்கையோடே வீட்டுக்குத்திரும்பினான். ஆண்டவர் சொன்ன நேரத்திலேயே மகன் குணமானான் என்று கண்டபோது அவனும் வீட்டாரனைவரும் கிறிஸ்துவின் தொண்டரானார்கள். நமக்குச் சரியான விசுவாசமில்லா விட்டாலும், நமது வேதனை துயரம் தீரவேண்டியாகிலும் இரட்சகரண்டைபோவது நல்லது. அவர் நமது பலவீன விசுவாசத்தைச் சரிப்படுத்தி நமக்கு இரக்கம் செய்வாரென்பது நிச்சயம்.



(3) **விசுவாச மில்லாதவர்களிடத்தில் விசுவாசத்தை உண்டாக்கிக் குணமருளுகிறார்.** பிறவிக் குருடன் கிறிஸ்துவை அறியான். அவன் பக்கத்தில் அவரும் அவரது சீஷர்களும் நிற்கிறார்கள். இவன் குருடனாகப் பிறந்தது இவன் செய்த பாவமா, இவனைப்பெற்றவர்கள் செய்த பாவமா என்று சீஷர்கள் கேட்க அவர் அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியை இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப்பிறந்தான் என்றார். இப்படிப் பேசினவரின் சத்தத்தைக் குருடன் கவனித்தான். இவர் யாராயிருக்குமோ வென்று தனக்குள்ளே யோசித்தான். பின்பு ஆண்டவர் தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேறுண்டாக்கி, அதை அவன் கண்களில் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அவர் செய்த செய்கையாலும், பேசின வார்த்தைகளாலும் அவனுக்குள் **நம்பிக்கையை உண்டாக்கினார்.** மற்றபடி அவன் கீழ்ப்படிந்து குளத்துக்குப் போயிருக்கமாட்டான். அவன் போய்க் கழுவிப் பார்வையடைந்து திரும்பிவந்தான்.

முப்பத்தெட்டு வருஷம் படுக்கையிலிருந்த நோயாளியை அவர் தாமே குணமாக்க விரும்புகிறார். அவனோ அவரைக் கண்டவனுமல்ல, அவரை விசுவாசித்தவனுமல்ல. அவன் எழுந்து நடக்கவேண்டுமானால் அவனுக்குள் **விசுவாசம் உண்டாகவேண்டும்.** ஆண்டவர் அவனைக் கண்டவுடனே நீ எழுந்து நடவென்று சொல்லவில்லை. "நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா" என்று உருக்கமாய் அவனைக் கேட்டார். இம்மாதிரி அனுதாபத்துடன் அவனைக் கேட்டவர்கள் இதுவரை ஒருவருமில்லை. நம்பிக்கையற்றவனும் திக்கற்றவனுமாயிருந்த அந்த மனுஷனுக்கு ஆண்டவருடைய

கிருபை நிறைந்த பார்வையும், அவர் கேட்ட இந்த அன்பான கேள்வியும் **நம்பிக்கையை உண்டாக்கினது.** "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" என்று அவர் சொன்னவுடனே அவன் சொஸ்தமாகி எழுந்து நடந்துபோகப் பலம் பெற்றான். ஒன்றைச் செய்யும்படி ஆண்டவர் நமக்குக் கற்பிக்கிறபோது அதை நிறைவேற்றும் **பலத்தையும்** கூடவே கொடுக்கிறார்.

(4) **அவிசுவாசிகளிடத்தில் அவர் வல்லமை பலிக்கவில்லை.** மற்ற இடங்களில் வல்லமையான செயல்கள் புரிந்த ஆண்டவர் தாம் வளர்ந்த நாசரேத்தூருக்கு நன்மை செய்யும்படி போனார். அவர்களோ அவருடைய ஏழைக் குடும்பத்தையும் எளிய பிறப்பையும் குறித்து இடறலடைந்தார்கள். அவர்களுடைய **அவிசுவாசத்தினிமித்தம்** அங்கே அற்புதங்கள் **செய்யமுடியாமல்** அவர்களைவிட்டு மற்ற இடங்களுக்குப் பிரயாணமானார். இதுவரை கவனித்ததை சுருக்கிப் பார்ப்போம்: **நம்பிக்கையோடே** தம்மிடம் **வந்தவர்களுக்கு** அந்நிமிஷமே சுகம் கொடுக்கிறார். அரைகுறையான விசுவாசத்தோடு வந்தவர்களுக்கு, அவர்கள் விசுவாசத்தைப் பூரணப்படுத்திக் குணமாக்குகிறார். விசுவாசம் இல்லாதிருந்தும் தங்கள் வேதனை பாடுகள் நீங்கும்படி வந்து கெஞ்சுகிறவர்களுக்கும், தாமே இஷ்டப்பட்டு ஆரோக்கியமளிக்க விரும்பும் நோயாளிகளுக்கும் முதலில் அவர்களுக்குள் நம்பிக்கையை உண்டாக்கிப் பின்பு நன்மை செய்கிறார். ஆனால் அவிசுவாசிகளுக்கோ அவரால் யாதொரு பிரயோஜனமுமில்லை. மனுஷனுடைய அவநம்பிக்கை தேவனுடைய வல்ல கரத்தைக் கட்டிவிடுகிறது. அவர் விரும்புகிறவைகளைச் செய்ய முடியாதிருக்கிறார்.



## 4. நம்மை இரட்சிக்கும் தமது வல்லமையைவிட நமது விசுவாசத்தை முக்கியப்படுத்தி அவர் பேசுவானேன்?

நமது விசுவாசமோ, அவரது வல்லமையோ எது முக்கியம்? "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இறங்குகிற தேவனாலே ஆகும்" என்று வாசிக்கிறோமே. நாம் எவ்வளவாய்க் கெஞ்சிக்கேட்டாலும், எவ்வளவாய் விசுவாசித்தாலும், அவரிடத்திலிருந்து வல்லமை புறப்படா விட்டால் நமக்கு இரட்சிப்பேது? ஆரோக்கியமேது? நமது விசுவாசமே நம்மை இரட்சிக்குமா? நம்மைக் குணமாக்குமா? நாம் ஆசீர்வதிக்கப்பட நமது விசுவாசமே போதுமென்றால் நாம் கிறிஸ்துவிடம் போக வேண்டியதில்லையே. அவர் மனு மக்களுடைய பாவங்களை மன்னித்து சமாதானத்தை அருளினபோதும், பற்பல நோயாளிகளை அவர் குணமாக்கினபோதும், தம்மிலிருந்து **வல்லமை** புறப்பட்டதை அவர் அறிந்திருந்தும், தமது **வல்லமையைப்** பற்றிப் பேசாமல் அவரவருடைய **விசுவாசத்தைப்** புகழ்ந்து பேசின காரணமென்ன? இதிலே ஏதோ விசேஷம் இருக்கிறது. அதைத்தான் அறியவேண்டும்.

பெரும்பாடுள்ள ஸ்திரீ சொஸ்தமானபோது: மகளே திடன்கொள், **உன் விசுவாசம்** உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார். எரிகோவின் குருடன் பார்வையடைந்தபோது: **உன் விசுவாசம்** உன்னை இரட்சித்தது என்றார். கானானிய ஸ்திரீ தன் மகளுக்காக வேண்டிக் கொண்டபொழுது: ஸ்திரீயே, **உன் விசுவாசம்** பெரிது, நீ விரும்பினபடியே உனக்கு ஆகக்கடவது என்றார்.

பாவியான ஸ்திரீயின் பாவங்களை மன்னித்து: **உன் விசுவாசம்** உன்னை இரட்சித்தது சமாதானத்தோடே போ என்றார். சுத்தமான பத்துக் குஷ்டரோகிகளில் சமாரியன் ஒருவன் மாத்திரம் திரும்பிவந்து ஆண்டவர் பாதத்தருகே முகங்கப்புற விழுந்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினபோது: நீ எழுந்துபோ, **உன் விசுவாசம்** உன்னை இரட்சித்தது என்றார். ஆண்டவரிடமிருந்து வல்லமை புறப்பட்டு இவர்களைக் குணமாக்காவிட்டால் இவர்களில் யாராகிலும் ஆசீர்வாதம் பெற்றிருப்பார்களா? **இவர்கள் தங்கள் விசுவாசத்தைப்பற்றி நினைத்தவர்களேயல்ல. குணமாக்கும் அவருடைய கிருபையை, அவருடைய வல்லமையை நினைத்தே அவரிடம் வந்தார்கள்.** அப்படியிருந்தும் அவர் தமது வல்லமையைப் பற்றிப் பேசாமல்: **"உன் விசுவாசம், உன் விசுவாசம்"** என்று அவர்கள் ஒவ்வொருவருக்கும் சொன்னது அவர்களுக்கே ஆச்சரியமாயிருந்திருக்கும். கப்பர்கூம் நூற்றுக்கு அதிபதி: நீர் என் வீட்டுக்குள் வர நான் பாத்திரன் அல்ல, நான் உம்மிடத்திற்கு வர என்னைப் பாத்திரவானாக எண்ணவுமில்லை, ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும், அப்பொழுது என் வேலைக்காரன் பிழைப்பான் என்றான். ஆண்டவர் அவன் **விசுவாசத்தைக் குறித்து** ஆச்சரியப்பட்டார். தாம் தூரத்திலிருந்து அந்த வேலைக்காரனைக் குணமாக்கின தமது **வல்லமையின் வெற்றியைக்** குறித்தல்லவோ அவர் ஆச்சரியப்பட வேண்டியது. நாசரேத்தூராரின் **அவிசுவாசத்தைக் குறித்தும் ஆச்சரியப்பட்டார்.** என் வல்லமை எங்கே? நான் ஏன் இங்கே அற்புதம் செய்ய முடியவில்லை என்று தமது **தோல்வியைக் குறித்தல்லவா** அவர் ஆச்சரியப்பட வேண்டியது. அப்படிச் செய்யாமல் அவர்களுடைய **அவிசுவாசத்தைக்** குறித்து அவர்



ஆச்சரியப்பட்டதேன்? நமது விசுவாசத்தை, அல்லது அவிசுவாசத்தை அவர் முக்கியப்படுத்திப் பேசின காரணமென்ன? நம்மை இரட்சிக்கும் **வல்லமையும்** நம்மைக் குணமாக்கும் சித்தமும் எப்போதும் அவரிடத்தில் இருக்கிறது. ஆனால் அவரிலுள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் **விசுவாசமோ** நம்மிடத்தில் இருப்பதில்லை. அவர் நமக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கும் நன்மைகளை **விசுவாசம்** ஏற்றுக் கொள்ளுகிறது; **அவிசுவாசம்** அடைத்துப் போடுகிறது. அவர் எவ்வளவு அன்பும் கிருபையுமுள்ளவராயிருந்தும், எவ்வளவு வல்லமையுள்ளவராயிருந்தும், நம்மை ஆசீர்வதிக்க அவர் பூரண சித்தமுள்ளவராயிருந்தும், **மனமில்லாதவர்களை** அவர் கட்டாயமாக இரட்சிக்க முடியாது. ஜன்னலைத் திறந்த நிமிஷத்தில் ஆகாயமும் வெளிச்சமும் உட்பிரவேசிப்பதுபோல, ஆண்டவர்மீதுள்ள **நம்பிக்கை** நமது இருதயவாசலைத் திறக்க, அவருடைய **கிருபை** தடையின்றி உட்பிரவேசித்து நம்மை ஆசீர்வதிக்கிறது. ஆகையால்தான் மகா முக்கியமான தமது வல்லமையைப் பார்க்கிலும் நமது அற்ப விசுவாசத்தைப் புகழ்ந்து பேசி நம்மை உற்சாகப்படுத்துகிறார். **"உன் விசுவாசத்தின்படி** உனக்கு ஆகக்கடவது" என்கிறார்.

## 5. விசுவாசமின்றி கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒன்றுமே வாய்க்காது

(1) விசுவாசமில்லாத ஜெபம் வீண். ஜெபம் நமது ஜீவன். ஜெபத்தின் மூலமாய்க் கர்த்தரிடமிருந்து சகல நன்மைகளையும் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆனால் விசுவாசமில்லாத ஜெபங்கள் வீண் பிரயாசங்களாகும். "நீங்கள் **விசுவாச முள்ளவர்களாய்** ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள்" என்றும், "நீங்கள்

கேட்டுக்கொள்வதைப் பெற்றுக்கொள்வோம் என்று **நம்புங்கள்** அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்” என்றும் போதிக்கிறார். நாம் எவ்வளவும் சந்தேகப்படாமல் **நம்பிக்கையோடே** ஜெபிக்க வேண்டுமென்று யாக்கோபும் சொல்லுகிறார்.

(2) **விசுவாசமில்லாத பிரசங்கக் கேள்வி வீண்.** “சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் **விசுவாசம்** இல்லாமல் கேட்டபடியினால் அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை” (எபி.4:2). ஆண்டவருடைய திருவசனம் ஆலயங்கள்தோறும் பிரசங்கிக்கப்படுகிறது. சபையார் கேட்கிறார்கள் என்றாலும் அநேகருடைய ஜீவியத்தில் மாறுதல் இல்லை. தாங்கள் கேட்கும் போதனைகளை அவர்கள் நம்புகிறதில்லை. விசுவாசமில்லாத கேள்வி பிரயோஜனமற்றது. அவ்விதமான கேள்வி திருவசனத்தை அற்பமாய் நினைக்கவும் இருதயங்கள் கடினப்படவும் ஏதுவாகிறது. பிரசங்கங்கள் கேட்பவர்களின் அவிசுவாசத்தால் பிரயோஜனப்படாததுபோல, பிரசங்கிக்கிறவர்களின் அவிசுவாசத்தினாலும் பலனற்றுப் போகும். ஒரு சமயம் பெரிய பிரசங்கி ஒருவர், நாடகத்தலைவன் ஒருவனைப் பார்த்து: ஐயா, நாங்கள் சில நிமிஷங்கள் பிரசங்கிக்கு முன்னே சபையார் தூங்கவும் நெளிக்கவும் ஆரம்பிக்கிறார்களே, நீங்கள் இராமுழுவதும் நாடகம் ஆடினாலும் ஜனங்கள் தூங்காமல் ஆவலோடு கவனிக்கிறார்களே இதற்குக் காரணமென்னவென்று கேட்டார். அதற்கு நாடகத் தலைவன் பிரசங்கியாரைப் பார்த்து: ஐயா, நாங்கள் பொய்யை மெய்போல் நடித்துக் காட்டுகிறோம், நீங்களோ மெய்யைப் பொய்போல் பிரசங்கிக்கிறீர்களே என்றான். அநேகருடைய விஷயத்தில் இது உண்மைதான். ஒரு போதகர் என்னைப் பார்த்து: கிறிஸ்து



இருக்கிறார் என்று எனக்கு நிச்சயமில்லை, என்றாலும் என் வேலையை என்னமோ ஒழுங்காய் நடத்திக்கொண்டு தான் போகிறேன் என்றார். இப்படிப்பட்ட அவிசுவாசிகளின் பிரசங்கங்களால் என்ன பிரயோஜனம்? வெளிப்பார்வைக்கு வேலை மும்முரமாய் நடப்பது போல் தோன்றும். ஆனால் அவிசுவாசம் ஜீவ ஊற்றாகிய கிறிஸ்துவைவிட்டு அவர்களைப் பிரித்துவிடுவதால், அவர்கள் செய்யும் ஊழியத்தால் சபையார் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப்பெற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது திண்ணம். இன்று நாம் காண்பது அதுதான்.

(3) **விசுவாசமில்லாத ஆராதனைகள் வீண்.** “தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் **விசுவாசிக்கவேண்டும்”** (எபி. 11:6). ஆலயங்கள் தோறும் ஆராதனைகள் ஒழுங்காய் நடக்கின்றன. தேவனை மகிமைப்படுத்தவும், அவர் திருவசனத்தைக் கேட்கவும், அவர் அருளும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் ஆலயத்தில் கூடிவருகிறோம். தேவாராதனை நமக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டுமென்றால் ஆண்டவர் நிச்சயமாகவே நமது **நடுவிலிருக்கிறார்** என்கிற **விசுவாசமும் உணர்ச்சியும்** அவசியம். இந்த விசுவாசம் சபையாருக்குள் பயபக்தியை உண்டாக்கி அவர்கள் “தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும்படி” செய்யும். **தேவசமுக உணர்ச்சிதான்** தேவாராதனையில் முக்கியமான அம்சம். அவர் தமது வாக்கின்படியே நமது மத்தியிலிருப்பதை நமது மனக்கண்கள் காணவேண்டும். தேவாலயம் போதகரும் சபையாரும் மாத்திரம் கூடுகிற இடமல்ல; போதகரும் சபையாரும் சேர்ந்து **ஆண்டவரைத்** தரிசிக்கிற ஸ்தலம்.

போதகர் தேவசமுகத்தை உணர்ந்து பயபக்தியோடு ஆராதனையை நடத்துவாரானால் சபையாரும் அவ்வழிக்கு வருவார்கள். இவ்வித விசுவாசம் இல்லாததினாலேதான் சபையார் இறுமாப்புடன் ஆசனங்களில் உட்காருவதும், அங்குமிங்கும் பார்க்கிறதும், எழுந்துபோகிறதும், ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளுகிறதும், போலீஸ் ஓடிவருகிறதுமான சீர்கேடுகளைக் காண்கிறோம். ஜீவனுள்ள கடவுளையல்ல, பிள்ளையாரைக் கும்பிடுவதுபோலிருக்கிறது.

(4) **விசுவாசமில்லாத ஊழியம் வீண்.** "உழுகிறவன் **நம்பிக்கையோடே** உழவும் போராடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற **நம்பிக்கையோடே** போராடிக்கவும் வேண்டியது" (1 கொரி. 9:10). அப்போஸ்தலன் தேவ ஊழியத்தின் சம்பந்தமாய் இந்தத் திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார். சமுசாரிகள் பலன் காண்போம் என்கிற நம்பிக்கையினாலேதான் பொறுமையோடு பாடுபட்டு வேலை செய்கிறார்கள். நிலத்தில் விதைகளைத் தூவிவிட்டு, அதைப்பற்றி நினையாமலும், பலனை எதிர்பாராமலும் இருக்கிற சமுசாரி உலகில் இல்லை. ஜீவவசனமாகிய விதையைத் தூவிவிட்டு, அப்புறம் அதைப்பற்றி நினையாமலும் பலனை எதிர்பாராமலும் இருக்கிற பிரசங்கிகள் அநேகர். நமது ஊழியத்தின் நோக்கம் பாவிகளின் இரட்சிப்பு. ஜென்ம சுபாவத்தார் ஜீவியத்தில் மாறுதலடைவது இலேசான காரியமல்ல. அது ஆண்டவர் மனுஷருள்ளத்தில் நடப்பிக்கும் **அற்புதம்.** இவ்வற்புதம் நிறைவேற பிரசங்கிகள் ஆண்டவர் கையின் கருவிகளாயிருக்கிறார்கள். விசுவாசத்தின் மூலமாய்த் தம்மோடு இணைக்கப்பட்ட ஊழியர்களைக் கர்த்தர் உபயோகிக்கிறார். "என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப



வேதனைப்படுகிறேன்" என்று பவுல் சொன்னதுபோல, விசுவாச ஊழியர்கள் ஜெப சிந்தையோடும், ஆத்ம வாஞ்சையோடும், பலனை எதிர்பார்க்கும் நம்பிக்கையோடும் வசனத்தைப் பிரசங்கிக்கிறார்கள். நம்பிக்கையின் ஊழியம் நற்பலனைக் கொடுக்கும்.

(5) **விசுவாசமில்லாத ஜீவியம் வீண். "விசுவாசத்தினாலே** வராத யாவும் பாவம்" (ரோம. 14:23). ஜெபத்தில் விசுவாசம், **பிரசங்கக் கேள்வியில்** விசுவாசம், **ஆராதனையில்** விசுவாசம், **ஊழியத்தில்** விசுவாசம் என்பது மாத்திரமல்ல, நமது **ஜீவிய முழுவதும்** விசுவாச ஜீவியமாயிருக்கவேண்டும். "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்." நடக்கிறோம் என்பது நமது ஜீவியத்தைக் குறிக்கும். நமது வாழ்க்கையில் நாம் பலவித காரியங்களில் ஈடுபடுகிறோம். மனுஷ சஞ்சாரமில்லாத தீவில் நாம் வசிப்பவர்கள் அல்ல. பற்பல சுபாவங்களுள்ள மனுஷர் நடுவில் வசிக்கிறோம். நமக்கு இக்காலத்தில் பலத்த போராட்டமிருக்கிறது. நம்மைச் சூழ்ந்துள்ள காரியங்கள், நாம் பார்க்கும் விஷயங்கள், நாம் கேள்விப்படும் செய்திகள், நமது பக்திவிருத்திக்கு அனுகூலமாயிராமல் நமக்குள்ளே குழப்பத்தை உண்டாக்கி, அவநம்பிக்கையாகிய காரிருளில் நம்மை அமிழ்த்தப் பார்க்கின்றன. நாம் பிரயாணம் செய்யும் **விசுவாசமாகிய கப்பலைச்** சேதப்படுத்தி, ஆழத்தில் நம்மை அமிழ்த்திப் போடவேண்டுமென்பது சாத்தானுடைய ஒரே நோக்கம். நமது தவறுதல்கள் பாவங்களைக்குறித்து அவன் கவலைப்படமாட்டான். ஆண்டவர்மீது நமக்கு நம்பிக்கையிருக்கும்வரை நமக்கு ஆபத்தில்லையென்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் நமது **விசுவாசத்தைக்** கெடுக்கவேண்டுமென்று வகை தேடுகிறான். பேதுரு தம்மை மறுதலிக்கப் போகிறதை முன்னறிந்த

ஆண்டவர் பிதாவை நோக்கி, பேதுரு **மறுதலிக்காமலிருக்கும்படி** வேண்டிக்கொள்ளாமல், பேதுரு தம்மை மறுதலித்தாலும் அவருடைய **விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு** வேண்டிக் கொண்டார். ஆண்டவர் மீதுள்ள நமது நம்பிக்கை உலகத்தையும் அதன் சகல கேடுபாடுகளையும் ஜெயிக்கும் ஜெயம். உயிர்போன்ற நம்பிக்கையை இழந்துவிட்டால் நாம் ஒன்றுக்கும் உதவமாட்டோம். கொடிய பாடுகளை அனுபவிக்க யோபு, ஜீவன் போகிறதானாலும் இன்னும் கர்த்தரையே நம்புவேன் என்று சொல்லி வெற்றியடைந்தார். ஆழத்தில் அமிழ்ந்து போன யோனா நான் இன்னும் கர்த்தரையே நம்புவேன் என்று சொல்லிக் கரை சேர்ந்தார். விசுவாசத்தில் தமது ஜீவியத்தை ஆரம்பித்த பவுல் கடைசிவரை "விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்றார்.

## 6. ஆண்டவர் ஏன் விசுவாசத்தை இவ்வளவு முக்கியப்படுத்தினார்?

(1) **விசுவாச வழிதான் நமக்குக் கிடைத்தவழி.** இந்த வாழ்வில் தேவபக்திக்கு அநுகூலமான வழி விசுவாச வழிதான். அதை விட்டுவிட்டால் வேறு வழியில்லை. நாம் தேவனையும் பரலோக மகிமைகளையும் கண்ணால் காண்கிறவர்கள் அல்ல. அவ்வாறு நாம் கண்டு ஜீவிப்பதாயிருந்தால் **விசுவாசம்** என்பது அவசியமில்லை. "காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல, ஒருவன் தான் **காண்கிறதை நம்பவேண்டியதென்ன?"** (ரோம. 8:24). அதரிசனமான கடவுளுடைய ஆவிக்குரிய தன்மையையும், தரிசனமான மனுமக்களுடைய மாம்சத்துக்குரிய தன்மையையும் கவனிக்கும்போது, மனுஷன் கடவுளை அறிந்து அவரோடு சஞ்சரிக்க வேண்டுமானால் **விசுவாசமே** ஏற்ற வழியாயிருக்கிறது; அது நியாயமாகவுமிருக்கிறது. ஏனோக்கு



தேவனைக் கண்டவரல்ல. அக்கிரமக்காரர் நிறைந்துள்ள ஆதி உலகத்தில் ஏனோக்கு என்பவர் கடவுளோடு சஞ்சரித்ததும் கடவுளுக்குப் பிரியமான தாசன் என்று சாட்சி பெற்றதும் **விசுவாசத்தின்** மூலமாகத்தான். விசுவாசம் கடவுளிருப்பதை நிச்சயப்படுத்துகிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் நடப்பது முடியாத காரியம்" (எபி. 11:56).

(2) **விசுவாசமே சிறந்த கிரியையாகும்.** கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள மனதில்லாத யூதர்கள் ஒரு சமயம் அவரிடம் வந்து: "தேவனுக்கேற்ற **கிரியைகளை** நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டார்கள் (யோவா.6:28). இக்காலத்தில் யாராகிலும் இதைப்போல் நம்மிடம் கேட்டால்: நீங்கள் இதைச் செய்யவேண்டும், அதைச் செய்யவேண்டும் என்று சொல்லுவோம். ஆண்டவர் கொடுத்த பதிலோ ஆச்சரியம். அவர்கள் கேட்டது ஒன்று; அவர் கொடுத்த பதில் வேறொன்று. நாங்கள் தேவனைப் பிரியப்படுத்த **என்ன கிரியைகளைச் செய்ய வேண்டும்** என்பது அவர்கள் கேள்வி. "அவர் அனுப்பினவரை நீங்கள் **விசுவாசிப்பதே** தேவனுக்குப் பிரியமான கிரியை' என்பது ஆண்டவர் கொடுத்த பதில். இதுபோலவே, "இரட்சிக்கப்பட நாங்கள் **என்ன செய்யவேண்டும்** என்று ஜனங்கள் அப்போஸ்தலரைக் கேட்ட சமயங்களில், இவைகளை அவைகளைச் செய்ய வேண்டும்" என்று அவர்கள் சொல்லாமல், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை **விசுவாசியுங்கள்,** அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" என்று பதில் சொன்னார்கள். ஆண்டவரிடம் விசுவாசமில்லாத மனுஷர் செய்யும் கிரியைகள் அவருக்குப் பிரியமானவைகளல்ல. **உத்தம விசவாசமே** சிறந்த கிரியையாகும். தேவன் உண்மையுள்ளவர், நாம் அவரை நம்பவேண்டுமென்று விரும்புகிறார். நாம் அவரை விசுவாசிக்காவிட்டால் அவரைப் பொய்யராக்குகிறோம். அது அவர் அன்புள்ள மனதுக்கு வேதனையை உண்டாக்குகிறது.

(3) **விசுவாசம் நம்மை ஆண்டவரோடிணைக்கிறது.** “அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை **ஏற்றுக்கொண்டவர்கள்”** என்றும், “விசுவாசத்தினாலே கிறிஸ்து நமது இருதயங்களில் **வாசமாயிருக்கிறார்”** என்றும் சொல்லியிருக்கிறது. விசுவாசம் நம்மை கிறிஸ்துவோடிணைத்து, அவரையும் அவருக்குள்ளான ஆசீர்வாதங்களையும் நமக்குச் சொந்தமாக்குகிறது. புழல் ஏரி, பட்டணத்துக்குத் தூரமாயிருக்கிறது. அந்த ஏரியையும் அதன் தண்ணீரையும் நாம் பார்க்கிறதில்லை. என்றாலும் நமது வீட்டுக்குள் இருந்து கொண்டே அந்த ஜலத்தைத் தாராளமாக உபயோகிக்கிறோம். இது எப்படியாகிறது? ஏரி ஜலத்தையும் நமது வீட்டையும் இணைக்கிற **குழாயினால்** இது ஆகிறது. குழாயை எடுத்துவிட்டால் ஒரு துளித் தண்ணீரையும் காணமாட்டோம். ஆண்டவர்மீது நாம் வைக்கும் நம்பிக்கை அவரையும் நம்மையும் இணைக்கிற குழாய்போலிருக்கிறது. அவரில் நிறைந்துள்ள ஆசீர்வாதங்கள் விசுவாசமாகிய குழாயின் மூலமாய் நம்முள்ளத்தை நிரப்புகின்றன.

(4) **விசுவாசத்தாலேதான் இரட்சிப்பு.** “நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை” என்றும், “மனுஷன் நியாயப் பிரமாணத்தின் **கிரியைகளில்லாமல்** விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்” என்றும் வாசிக்கிறோம் (கலா. 2:16; ரோம. 3:28). நியாயப்பிரமாணத்தை ஒன்று தவறாமல் ஒருவன் கைக்கொண்டால் அவன் இரட்சிக்கப்படலாம். அவ்வாறு கைக்கொண்டவன் உலகில் ஒருவனுமில்லை. நமதாண்டவர் யூதரைப் பார்த்து: “மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் நியாயப்பிரமாணத்தின்படி **நடக்கிறதில்லை”** என்றார்.



விசுவாசத்தை அகற்றித் தங்கள் கிரியைகளில் நம்பிக்கை வைத்த யூதர்கள் சாபத்துக்குள்ளானார்கள். கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களோ இரட்சிக்கப்பட்டார்கள்.

(5) **விசுவாச வழியில் பெருமைக்கு இடமில்லை.** “கிருபையினால் **விசுவாசத்தைக்கொண்டு** இரட்சிக்கப் பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவனும் **பெருமை பாராட்டாதபடிக்கு** இது கிரியைகளினால் உண்டானதல்ல” (எபே. 2:8,9). என்ன பாடு பட்டாகிலும் புண்ணியத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்பது மனுஷ சுபாவம். இதற்காக மனுஷர் எத்தனையோவிதமான கஷ்டங்களையும் வேதனைகளையும் நியமித்துக்கொண்டு அனுபவிக்கிறார்கள் என்பது நாம் கண்கண்ட விஷயம். பாவி தன் சுயகிரியைகளினால் தன்னை இரட்சிக்கமாட்டான் என்பது நிச்சயம். ஒருவேளை அவன் தன்னை இரட்சிக்கக்கூடுமானால் கடவுளுக்கல்ல, அவனுக்கே சகல மகிமையும், புகழ்ச்சியும், கனமும், பெருமையும் உரியதாகும். ஆனால் தேவன் நம்மை இரட்சிக்கும் **வழியைக்** கவனித்தால் ஒருவனாகிலும் பெருமை பாராட்ட முடியாது.

நமது இரட்சிப்பு தேவனுடைய **கிருபையினால்** உண்டாயிருக்கிறது. அது நமது கிரியைகளினால் உண்டானதல்ல. அது தேவனுடைய **இலவசமான ஈவு.** தேவகிருபையினாலே உண்டான, அவருடைய இலவச ஈவாகிய இரட்சிப்பை நாம் **விசுவாசத்தின்** மூலமாய்ப் பெற்றுக் கொள்ளுகிறோம். ஆகையால் நம்மை இவ்விதமாய் இரட்சிக்கும் தேவனுக்கே **மகிமையைச்** செலுத்தவேண்டுமேயன்றி, ஒருவனாகிலும் தன்னைக் குறித்துப் பெருமை பாராட்ட இடமில்லை. மீட்கப்பட்ட திரளான கூட்டத்தார் : இரட்சிப்பின்

மகிமையும், ஸ்தோத்திரமும், கனமும், வல்லமையும் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கே உண்டாவதாக என்று ஆர்ப்பரிக்கிறார்கள். ஒரு பிச்சைக்காரன் ஒரு வீட்டண்டை போய்: அம்மா, பசி தாங்க முடியவில்லையே, சாப்பாடு போடுங்கள் என்று கெஞ்சுகிறான். அவனுக்குச் சாதம் போட்டார்கள். சாப்பிட்டு முடிந்தபின் அவன் : என்னைப்போல் கெட்டிக்காரனுண்டோ? சட்டியை நீட்டினேன் சாதம் வந்து விட்டது என்று பெருமை பாராட்டுவானா? அவன் சட்டியை நீட்டியும் சாதம் போடாவிட்டால் என்னத்தைச் சாப்பிடுவான்? **விசுவாசத்தைக்கொண்டு** இரட்சிக்கப்பட்டீர்கள் என்பது சட்டியை நீட்டி சாதம் பெற்றுக்கொண்டது போலிருக்கிறது. நமக்கல்ல, நம்மைக் கிருபையால் இரட்சிக்கும் ஆண்டவருக்கே மகிமை.

## 7. இந்த விசுவாசம் தம்மில் இருக்கும்படி இரட்சகர் விரும்புகிறார்

தற்காலம் எழுதப்படும் புஸ்தகங்களைக் கவனித்தால் கிறிஸ்துவை யாரென்று கண்டுபிடிப்பதே கஷ்டமாயிருக்கிறது. வேதசாஸ்திரிகளான இவர்கள் கிறிஸ்துவின் போதனைகளை எடுத்து விஸ்தரிப்பதில் சாமர்த்தியமுள்ளவர்கள். இயேசுவானவர் முதல் கிறிஸ்தவன் என்றும், அவர் தேவனை வெளிப்படுத்த வந்ததால் நமது கவனம் தேவன்மீது போகவேண்டுமென்றும், கிறிஸ்து தம்மை விசவாசிக்கும்படிச் சொல்லாமல் தாம் தேவனை விசுவாசித்ததுபோல் நாமும் தேவனை விசுவாசிக்கும்படி போதித்தார், மாதிரியும் காண்பித்தார் என்றும் எழுதுகிறார்கள். அவர்களுக்குள்ளேயே ஒற்றுமை கிடையாது. சுவிசேஷ போதனையை நாம் ஏற்றுக்கொள்வது மெய்யானால் இவர்கள்



சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, நாம் **தம்மை விசுவாசிக்கவேண்டுமென்று** திட்டமாய்ப் போதித்திருக்கிறார். அவர் சொன்னவைகளில் சில வசனங்களை எடுத்துப் பார்ப்போம்.

ரபீ, "நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா" என்று நாத்தான்வேல் அறிக்கை செய்த போது; அத்திமரத்தின்கீழ் உன்னைக் கண்டேன் என்று நான் சொன்னதினாலேயா **விசுவாசிக்கிறாய்;** இதிலும் பெரிதான காரியங்களைக் காண்பாய் என்றார். நிக்கோதேமுவைப் பார்த்து: "மனுஷகுமாரன் **தன்னை விசுவாசிக்கிறவன்** எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும்" என்றார். அவர் யூதர்களைப் பார்த்து: "நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால் **என்னையும் விசுவாசிப்பீர்கள்"** என்றும், "தேவன் **அனுப்பினவரை** விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்றும் சொன்னார். **"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன்** ஒருக்காலும் தாகமடையான்" என்றும், **"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு** நித்திய ஜீவன் உண்டென்றும்" சொன்னார். பண்டிகையின் கடைசி நாளில் அவர் ஜனங்களைப் பார்த்து: **"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன்** எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார். யூதர்களிடத்தில் பேசினபோது: நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை என்று கேட்டார். **"நானே அவரென்று நீங்கள் விசுவாசியாவிட்டால்** உங்கள் பாவங்களில் சாவீர்கள்" என்றும், ஆவியானவர் வரும்போது "அவர்கள் **என்னை விசுவாசியாதபடியால்** அந்தப் பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்துவார்" என்றும் சொன்னார். பிறவிக் குருடனைப் பார்த்து : "நீ தேவனுடைய குமாரனிடத்தில்

**விசுவாச மாயிருக்கிறாயா?** உன்னிடத்தில் பேசுகிறவர் அவர்தான்" என்றார். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், **என்னை விசுவாசிக்கிறவன்** மரித்தாலும் பிழைப்பான்" என்றார். "நான் என் பிதாவிடம் போகிறபடியால் **என்னை விசுவாசிக்கிறவன்** நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்" என்றார். தோமாவைப் பார்த்து: "நீ என்னைக் கண்டதினாலேயா விசுவாசிக்கிறாய், காணாதிருந்தும் **என்னை விசுவாசிக்கிறவர்கள்** பாக்கியவான்கள்" என்றார். சுவிசேஷம் எழுதப்பட்ட நோக்கத்தைப்பற்றி யோவான் "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் **விசுவாசிக்கும்படியாகவும்,** விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்றார்.

அப்போஸ்தலரும் சீஷர்களும் எங்கும் சென்று ஜனங்கள் **இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்து** ரட்சிக்கப்படும்படி பிரசங்கித்தார்கள். மேற்கூறிய வசனங்களைக் கவனிக்கும்போது இயேசுவானவர் வேறொருவரையல்ல, **தம்மையே நாம் விசுவாசிக்க வேண்டுமென்பதைத்** தெளிவாய்ப் போதித் திருப்பதை அறிகிறோம். இன்னும் பல வசனங்கள் உண்டு.

இவ்வாறு **கிறிஸ்துவை விசுவாசித்து** அவர்பேரில் பற்றுதலாயிருந்தால் **பிதாவாகிய தேவனை** அசட்டை பண்ணுகிறதாகாதா? ஒருக்காலும் ஆகாது. பிதா வேறே குமாரன் வேறே என்றிருந்தால் இரண்டு எஜமான்களையும் சேவிப்பது நமக்குக் கஷ்டமாயிருக்கும். ஒருவரை விசுவாசித்துப் பற்றிக்கொள்ளும்போது மற்றவர் கோபித்துக்கொள்வார். ஆனால் "என்னில் வாசமாயிருக்கிற பிதா" என்றும், "நான் என் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்" என்றும்,



"நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல" என்றும், இரட்சகர் சொன்னபடி பிதாவும் குமாரனும் ஒன்றாகவே இருக்கிறார்கள். நாம் கிறிஸ்துவில் வைக்கிற விசுவாசமும், அன்பும் மதிப்பும் பிதாவையே சேரும். ஆண்டவர் இதைத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். "என்னிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் **என்னிடத்தில்** அல்ல, **என்னை அனுப்பின வரிடத்தில்** விசுவாசமாயிருக்கிறான்," "என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் **என்னை அல்ல என்னை அனுப்பினவரை** ஏற்றுக்கொள்ளுகிறான்" (யோவா. 12:44; மாற். 9:37). "என்னைக் கனம்பண்ணுகிறவன் **பிதாவைக் கனம் பண்ணுகிறான்."** "என்னைக் கண்டவன் **பிதாவைக் கண்டான்".** ஏனென்றால் "நானும் பிதாவும் ஒன்று" என்கிறார். இது பிதா குமாரனிலும், குமாரன் பிதாவிலும் இருக்கிற தெய்வீக **ஒற்றுமையைக்** காண்பிக்கிறது. இவ்வாறு **கிறிஸ்து** நாம் தேவனை அறியவும், விசுவாசிக்கவும், அன்பு கூரவும் பிதா கிருபையாய் ஏற்படுத்தின வழியாயிருக்கிறார். எக்காலமும் **அவரே நமது வழி.** அப்படியிருக்க, கிறிஸ்துவைவிட்டு விலகி நாம் நேரே தேவனிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டுமென்று சொல்வது அனுபவமில்லாத வீண் பேச்சு. ஓரிடத்தில் ஆண்டவர் "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்" என்றார், அத்துடன் **"என்னிடத்திலும்** விசுவாசமாயிருங்கள்" என்றார் (யோவா. 14:1). இங்கே இரண்டு விசுவாசமல்ல. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்று மாத்திரம் சொன்னால் நாம் எங்கே தடுமாறப் போகிறோமோ என்று நினைத்து, தேவனை விசுவாசிப்பதற்கு **வழியாகிய** தம்மை விசுவாசிக்கவேண்டும் என்பதையும் உடனே சேர்த்துச் சொன்னார். இப்படியிருக்க கிறிஸ்துவை விட்டு விலகி, நேரே தேவனை விசுவாசிக்கும்படி பிரயாசப்படுவது எல்லையில்லா ஆகாயத்தில் அலைந்து தடுமாறுவதாகும்.

## 8. கிறிஸ்துவை விசுவாசிப்பது என்றால் என்ன?

மனுஷருக்குள்ளே விசுவாசம், அல்லது நம்பிக்கை என்பது சாதாரணம். சகல காரியங்களும் ஒருவருக்கொருவர் உள்ள விசுவாசத்தின் பேரிலேயே நடந்தேறுகின்றன. வியாபாரமும், கொடுக்கல் வாங்கலும் நம்பிக்கையின் பேரிலேயே நடக்கின்றன. ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாமற் போனால் உலகில் ஒன்றுமே நடக்காது. ஒரு மனுஷனை விசுவாசிக்கிறதென்றால் அவன் தன்னைப்பற்றிச் சொல்லுகிறவைகளை நாம் நம்பி அவன்மேல் பற்றுதல் வைப்பதாகும். ஒரு வைத்தியனை விசுவாசிக்கிறதென்றால் அவர் **குணமாக்குவாரென்று நம்பி** வியாதியஸ்தனை அவர் கையில் விடுவதாகும். ஒரு உபாத்தியாயரை விசுவாசிக்கிற தென்றால் அவர் **திறமையை நம்பி** அவர் கற்பிப்பதை ஏற்றுக்கொள்வதாகும். ஒரு வண்ணானை விசுவாசிப்ப தென்றால் **அவனை நம்பி** உடுப்புகளை அவனிடம் போடுவதாகும். ஒரு நாணயச்சாலையை விசுவாசிக்கிற தென்றால் அதன் **நேர்மையை நம்பிப்** பணத்தை பாங்கியிலே போடுவதாகும். இப்படிப்பட்ட அநேகக் காரியங்கள் நம்பிக்கையின் பேரிலேயே நடக்கின்றன. ஆனால் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி பேசும்போது அது என்னமோ விளங்காத உன்னத ரகசியம்போல் திகைக்கிறோம். இதுதான் ஆண்டவருக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மனுஷருக்கு மனுஷர் காண்பிக்கிற அவ்வளவு நம்பிக்கைகூட தம்மீது இல்லையே என்று இரட்சகர் வருந்துகிறார். கிறிஸ்துவை விசுவாசிப்ப தென்றால் அவர் தம்மைப்பற்றிச் சொல்லியிருக்கிறவைகளை நம்பி அதற்கேற்றபடி அவரைக் கொண்டாடுவதாகும். **அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளாத விசுவாசம் விசுவாசமல்ல.** அவரை **இன்னாரென்று** அறிந்தவன், அவருடைய மகத்துவத்தை நம்பினவன், அவரை ஜீவனாக ஏற்றுக்



கொள்ளாதிருக்க முடியாது. "அவருடைய நாமத்தின்மேல் **விசுவாசமுள்ளவர்களாய்** அவரை **ஏற்றுக்கொண்டவர்கள்"** என்று சொல்லியிருக்கிறது. "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ வென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள், உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள், இயேசுகிறிஸ்து **உங்களுக்குள் இருக்கிறாரென்று** உங்களை நீங்களே அறியீர்களா?" என்று பவுல் கொரிந்தியரைக் கேட்டார். "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் **இருதயங்களில் வாசமாயிருக்கவேண்டும்"** என்று எபேசியருக்கு எழுதினார். **கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலே பிழைப்பவனே விசுவாசி.** ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிப்பது மெய்யானால் அவரை ஜீவனாக ஏற்றுக்கொள்ளுகிறான் என்பதும் மெய். அவர் நமக்குள் பிரவேசிக்கும்போது, தமது இரட்சிப்பின் ஆசீர்வாதங்களால் நம்மை நிரப்புகிறார். நமது ஜீவியம் நிச்சயமாகவே மாறுதலடைகிறது.

## 9. விசுவாசத்தாலுண்டாகும் பலன்கள் எவை?

விசுவாசப் பிரமாணத்தை வாயினால் சொல்லுவதே விசுவாசம் என்று நினைக்கக்கூடாது. அப்படிச் சொல்லுகிற அநேகரிடத்தில் விசுவாசம் இல்லை. "விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லையே" (2 தெச. 3:2). விசுவாசம் மறைந்திராது, அது தூங்காது. விசுவாசம் **கிரியைகளில்** வெளிப்படும். "விசுவாசத்தின் **கிரியை**" என்றும், "உங்கள் விசுவாசம் எங்கும் **பிரசித்தமாயிற்று**" என்றும், "கிரியைகளில்லாத விசுவாசம் **செத்ததென்றும்**" வாசிக்கிறோம். கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொள்ளும் விசுவாசி அவரது இரட்சிப்பின் ஆசீர்வாதங்களுக்குப் பங்குள்ளவனாகிறான். இது அவன் ஜீவியத்தை முற்றிலும் மாற்றிவிடுகிறது. நாம் விசுவாசிக்

கிறவைகள் எத்தன்மையானவைகளோ அத்தன்மையான உணர்ச்சியும் மாறுதலும் நம்மில் காணப்படும். அந்த மாறுதல்களில் சிலவற்றைக் கவனிப்போம்.

(1) **விசுவாசி தாகம் தீர்க்கப்படுகிறவன்** "என்னிடத்தில் **விசுவாசமாயிருக்கிறவன்** ஒருக்காலும் தாகமடையான்" (யோவா. 6:38). உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் மனுஷன் எவ்வளவாய் அனுபவித்தாலும் அவைகள் அவன் ஆத்ம தாகத்தைத் தீர்ப்பதில்லை. பாவ இன்பங்களாகிய இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் மறுபடியும் தாகம் பெருகிக் கொண்டே போகும். அவன் இரட்சகரை ஏற்றுக் கொள்ளும்போது அவர் பாவ மன்னிப்பு, பாவத்தின் மேல் வெற்றி, சமாதானம், நித்திய ஜீவன், பரிசுத்தம், பிதாவோடு ஐக்கியம் முதலான ஆசீர்வாதங்களால் அவனைத் திருப்தியாக்கி அவன் தாகத்தைத் தீர்க்கிறார்.

(2) **விசுவாசமற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறவன்.** "என்னிடத்தில் **விசுவாசமாயிருக்கிறவன்** எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும்' (யோவா. 7:38). ஆண்டவர் தம்மை விசுவாசிக்கிறவனை ஆசீர்வதிப்பது மன்றி அவனை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படிச் செய்கிறார். முன்னே தங்கள் பாவ ஜீவியத்தால் அநேகரைக் கெடுத்தவர்கள் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொண்டபின் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கிறார்கள். ஆவியானவர் அவர்களை நிரப்புவதால் அவர்களுடைய ஜெபம், வாசிப்பு, பேச்சு, எழுத்து, செய்கை, சிநேகம், பார்வை யாவும் நதிகளைப் போல மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கின்றன.

(3) **விசுவாசி தேவ சந்தோஷத்தை அனுபவிக்கிறவன்.** "அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு



கூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் **விசுவாசம் வைத்து,** சொல்லி முடியாததும் மகிமையினால் நிறைந்ததுமாயிருக்கிற **சந்தோஷமுள்ளவர் களாய்க் களிகூர்ந்து,** உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்" (1 பேது. 1:8). இவர்கள் கிறிஸ்துவை சரீரத்தில் கண்டவர்களுமல்ல, உயிர்த்தெழுந்த ஆண்டவரைத் தரிசித்தவர்களுமல்ல. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதின் பலனாக பலவிதப் பாடுகளையும் துன்பங்களையும் அனுபவித்தார்கள். அப்படியிருந்தும் ஆண்டவர் மீதுள்ள விசுவாசத்தால் அளவற்ற சந்தோஷத்தை அவர்களிடம் காண்கிறோம். துன்பம் உலக சந்தோஷத்தை அழித்துவிடும்; விசுவாசத்தால் வரும் தேவ சந்தோஷத்தை அழிக்கமுடியாது. "காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்றார்.

(4) **விசுவாசி பேசுகிறவன்.** "விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்" (2 கொரி. 4:13). விசுவாசம் இருதயத்திலே; பேச்சு வாயிலே. வாய் பேசாது மௌனம் சாதிப்பவர்களைச் சுவாமிகளென்று மனுஷர் கொண்டாடு கிறார்கள். ஊமையாயிருக்கும்படி மனுஷன் உண்டாக்கப் பட்டவனல்ல. ஆண்டவர் ஊமையர்களைப் பேசும்படி செய்தார். ஆண்டவர் வாய்திறந்து பேசாதிருந்தால் தேவகாரியங்களை நாம் அறிவதெப்படி? மனுஷர் அறியாதிருந்த பரமகாரியங்களைத் தமது **பேச்சினால்** அல்லவோ வெளிப்படுத்தினார். அவரது அடியாரான விசுவாசிகள் இரட்சிப்பின் செய்தியை எங்கும் பேசிப் பிரஸ்தாபித்தார்கள். பேசக்கூடாதென அதிகாரிகள் கட்டளையிட்டபோது "நாங்கள் **பேசாதிருக்க** முடியாதே" என்றார்கள். இரட்சிப்பின் காரியங்களை இடைவிடாமல் பிரசங்கித்த பவுலை விரோதிகள். "இந்த **வாயாடி** என்ன பேசப்போகிறான்" என்றார்கள். விசுவாசிகள் ஆண்டவரைப்

பற்றிப் பேசுவதில் தவிப்பதில்லை. பேசும்போது அவர்கள் முகங்கள் பிரகாசிக்கும். அதைக் கேட்பவர்களுடைய இருதயம் மகிழும். "கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் **பேசிக்கொள்வார்கள்,** கர்த்தர் கவனித்துக் கேட்பார்". "இருதயத்தின் நிறைவின்படி வாய் பேசும்."

(5) **விசுவாசி பதறாதவன்.** "விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா. 28:16). இது பயமும் திகிலும் நிறைந்த உலகம். பொல்லாதவர்களால் வரும் கேடுகள் எத்தனை! சாத்தானுடைய சதி கற்பனைகள் எத்தனை! கேள்விப்படும் துர்ச்செய்திகள் எத்தனை! குடும்பத்தில் கஷ்டநஷ்டங்கள் எத்தனை! இது போதாதென்று இன்று உலகமே பயங்கரமான அழிவுக்குள்ளிருக் கிறது; லட்சக்கணக்கான படுகொலைகளும், லட்சக்கணக் கானவர்கள் வீடுகள் இழந்து அகதிகளாய்த் தவித்து நிற்பதும் சகிக்க முடியவில்லையே! கொடிய இக்கட்டுகளில் அகப்பட்டுத் தவிக்கிறோமே. யார்தான் கலங்காமலும் பயப்படாமலு மிருக்கமுடியும்? **"விசுவாசி பதறான்"** என்கிறார். பாடுகள் ஆபத்துகள் மத்தியில் பதறாத அமைதலுள்ள ஜீவியம் எப்படிக் கிடைக்கும்? வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையு முடைய ஆண்டவர்பேரில் வைக்கும் **விசுவாசத்தால்** மாத்திரம் கிடைக்கும். "துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் இருதயம் **கர்த்தரை** நம்பித் திடனாயிருக்கும்." "கர்த்தரை **நம்புகிறவர்கள்** என்றென்றைக்கும் **அசையாமல்** நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போலிருப்பார்கள்." நாம் விசுவாசித்திருக்கிறவர் **இன்னாரென்று** அறியும் அறிவிலே சமாதானமும் அமைதலுமுண்டு.

(6) **விசுவாசி உலகத்தை ஜெயிக்கிறவன்.** "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம், இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?"



(1 யோவா. 5:4,5). உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. பொல்லாங்கனுக்குள் கிடக்கிற இந்த உலகத்தில் தேவன் தமது பிள்ளைகளை வைத்திருக்கிறார். உலகம் தன்னுடையவர்களை சிநேகிக்கும், அவர்களுக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்யும். இது இன்று நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கிற விஷயம். உலகத்தாரல்லாத ஆண்டவரின் அடியார்களையோ உலகம் வெறுக்கிறது, பகைக்கிறது. உலக அதிபதியின் தூண்டுதலால் பலவிதத்திலும் நம்மை ஒடுக்கிக் கெடுக்கப் பார்க்கிறது. கிறிஸ்தவன் என்றால் உத்தியோக மில்லை. என்றாலும் நாம் சோர்ந்து போவதில்லை. நாம் உலகத்தை ஜெயிப்பது பட்டயத்தாலும் போராயுதங்களாலுமல்ல. **விசுவாசமாகிய** கேடகத்தால் நமக்கு வெற்றியுண்டு. நமது இரட்சகரைக் கெடுக்க உலகம் எவ்வளவோ பிரயாசப்பட்டது. உலகத்தின் அதிபதி தன் ஆட்களைக் கொண்டு அவரை எவ்வளவோ பாடுபடுத்தினான். அவரோ தமக்கு என்ன நேரிட்டாலும் தேவசித்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாய் நின்றபடியால், அவர்களல்ல, அவரே வெற்றி சிறந்தார். அடியும் மிதியும் அனுபவிப்பது அபஜெயமல்ல. பரியாசங்களையும் தூஷணங்களையும் சகிப்பது தோல்வியல்ல. ஜீவன் போகிறதானாலும் சத்தியத்தைவிட்டு விலகாதிருப்பதே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இந்த ஜெயம் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலே மாத்திரம் கிடைக்கும்.

(7) **விசுவாசி பெரியகாரியங்களைச் செய்கிறவன்.** "விசுவாசிக்கிறவனால் எல்லாம் கூடும்." நாம் விசுவாசத்தினாலே அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுகிறது மாத்திரமல்ல, அந்த விசுவாசத்தினாலே ஆண்டவருடைய இராஜ்யத்துக்காகப் பெரிய காரியங்களைச் செய்யும்படியாகவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். மனுஷன் தன்னால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறது அவன் தன்னிலே

தகுதியுள்ளவன் அல்ல (2 கொரி. 3:5). ஆனால் அவன் ஆண்டவர்மீது விசுவாசப் பற்றுக்கொண்டு, அவருக்குத் தன்னைக் கையளிக்கும்போது, அவர் அவன் **மூலமாய்ப்** பெரிய காரியங்களை நடப்பிக்கிறார். இந்த விசுவாச அனுபவத்தைக் குறித்துப் பரிசுத்த பவுல் : "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு" என்றும், "நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" என்றும் சொன்னார். தேவ பக்தர்களான முற்பிதாக்கள் விசுவாசத்தினாலே அரிய பெரிய காரியங்களை நடப்பித்தார்கள் என்று எபிரேயர் 11-ல் வாசிக்கிறோம். ஞானிகள் அல்ல, கல்விமான்கள் அல்ல, சாதாரண மனுஷரான விசுவாசிகள் இந்த விசுவாச பலத்தினால் தங்களுக்கு மிஞ்சின பெரிய காரியங்களை நடப்பிக்கிறார்கள் என்பது இன்றைக்கும் நாம் காண்கிற விஷயம்.

(8) **விசுவாசி வருங்காலத்தைப்பற்றி நிச்சயமுடையவன்.** "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன், நான். அவரிடத்தில் ஒப்புவித்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயத்து மிருக்கிறேன்" (2 தீமோ. 1:12). கர்த்தராகிய இயேகிறிஸ்துவை அறிய வேண்டுமென்கிற ஆவல் பவுலுக்கு இருந்தது. இந்த அறிவின் மேன்மைக்காகத் தமக்கு மேன்மையும் லாபமுமாயிருந் தவைகளைக் குப்பையெனத் தள்ளிவிட்டார். ஆண்டவர்மீதுள்ள **விசுவாசத்தினாலே** அவரை **இன்னாரென்று** அறியும் அறிவு அவருக்குக் கிடைத்தது. அந்த அறிவினால் தம்மையும் தமக்குள்ள யாவையும் கிறிஸ்துவின் கையில் ஒப்புவித்து, தாம் ஒப்புவித்ததை ஆண்டவர் கடைசிவரை காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் என்னும் நிச்சயமுடையவரானார். மறுமையில் முகமுகமாய்த் தன் ஆண்டவரைத் தரிசிக்கும்



நிச்சயமும் அவருக்கிருந்தது. "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்." தம்மை நம்புகிறவர்களை முற்றுமுடிய இரட்சிக்கவல்லவர் என்கிற நிச்சயம் நமக்குண்டு.

ஆண்டவர்மீதுள்ள விசுவாசத்தால் மேற்கூறிய **பலன்கள்** நம்மில் காணப்படுமானால் நமது ஜீவியம் எவ்வளவோ மாறுதலடைந்துவிட்டதென்பது நிச்சயம் : நாம் முன்னிருந்தபடி இருக்க முடியாது. அநேகரிடத்தில் இவ்விதமான மாறுதல்களைக் காணோம். ஏனென்றால் அவர்களிடத்தில் **விசுவாசமில்லை.** விசுவாசமற்ற விசுவாசிகள் இருக்கமுடியாது. **விசுவாசிகளே கிறிஸ்தவர்கள்.** விசுவாசிகளானால் ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதலடைந்திருப்பார்கள். "வீணான மனுஷனே! கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டாமா?" ஆண்டவரை விசுவாசித்து, அவரைச் சொந்தமாக ஏற்றுக்கொண்டு, ஜீவியத்தில் மாறுதலடை யாதவர்கள், ஆராதனை வேளையில் மாத்திரம் "விசுவாசிக்கிறேன், விசுவாசிக்கிறேன்" என்று சொல்வது கொடிய வஞ்சகமல்லவா? காலமெல்லாம் இப்படிப் **பொய் அறிக்கை** செய்து கொண்டிராமல், சில நாட்களாவது விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லாமல் வாயை மூடி : என் இரட்சகரை நான் விசுவாசிக்கிறது உண்மைதானா? விசுவாசித்து அவரை என் ஜீவனாக ஏற்றுக்கொண்டிருக்கிறேனா? அவ்வாறு ஏற்றுக்கொண்டதால் என் ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதல் காணப்படுகிறதாவென்று தற்பரிசோதனை செய்வோமானால் நன்மையாயிருக்கும். பூமிக்குரிய காரியங்களில் எவ்வளவோ யோசிக்கிற மனுஷர் ஆவிக்குரிய காரியங்களை யோசிக்கிறதில்லை. அப்படி ஆராய்ந்து பார்ப்போருக்கு ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தாமலிரார்.

## 10. விசுவாச பரீட்சை அவசியம்

நமது விசுவாசம் பரீட்சிக்கப்படவேண்டியது அவசியம். "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே பரீட்சிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டு இயேசுகிறிஸ்து வெளிப் படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையு முண்டாகக் காணப்படும்." "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது உங்கள் **விசுவாசத்தின் பரீட்சையானது** பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (1 பேது. 1:7; யாக் 1:2,3). நாம் விசுவாசத்தில் பலப்படுவதற்கும் வளருவதற்கும் **விசுவாசப்** பரீட்சை அவசியம். இந்தப் பரீட்சைகள் பலவிதம். ஆண்டவரை நாம் கண்ணால் காண்பதில்லை, நாம் விசுவாசித்து நடக்கிறோம். இந்த விசுவாச உறுதியிலிருந்து நம்மை விழச் செய்யும்படி நேரிடும் காரியங்கள் பரீட்சை என்னப்படும். கிறிஸ்தவ ராஜ்யங்களின் பகிரங்கமான சீர்கெட்ட நிலைமையையும், உலக யுத்தங்களில் கிறிஸ்தவ ராஜ்யங்கள் ஈடுபட்டிருப்பதையும் நினைக்கும்போது மனம் சோர்ந்துபோகிறது. நமக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்து, வேதத்தைக்கொடுத்து, தொழுது கொள்ள ஆலயங்களையும் கட்டி, தேவனை ஆராதிக்கும்படி நமக்குப் போதித்த கிறிஸ்தவ தேசத்தார் கிறிஸ்துவின் சிந்தைக்கும் போதனைக்கும் நேர்விரோதமாய் நடப்பது நமக்குத் திகைப்பைக் கொடுக்கிறது. அவபக்தரான மனுஷர் உலகில் க்ஷேமமாய் வாழ்வதையும்; கிறிஸ்துவோ, வேதமோ, ஜெபமோ இல்லாதவர்கள் மேலான பதவிகளிலிருந்து பெரிய சம்பளம் பெறுவதையும்; ஆண்டவரை உத்தமமாகப் பின்பற்றுகிறவர்கள் கஷ்ட நிலைமை



யிலிருப்பதையும் காணும்போது சந்தேகம் உண்டாகிறது. கிறிஸ்து வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடையவராயிருந்தும் உலகத்தில் ஒன்றுமே செய்யமுடியாதவர் போலிருப்பது மனதுக்கு இன்னும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. பலவிதமான உபதேசங்களும் கொள்கைகளும் பரவி, சபைகளில் குழப்பங்களும் பிரிவினைகளும் பெருகுவதைப் பார்க்கும்போது, இதுவோ அதுவோ எதுதான் சத்தியம் என்கிற போராட்டம் உண்டாகிறது. பொருளாசையின் மயக்கத்தாலும், ஞானம் என்னும் தத்துவங்களாலும் விசுவாசத்துக்கு ஆபத்து உண்டாகிறது. இவைகள் தவிர, நமக்கு நேரிடும் பாடுகள் வேதனைகளைச் சகிக்கமுடியாமல்: நான் படும்பாடுகளை ஆண்டவர் அறிந்திருந்தும் எனக்கு உதவிசெய்ய மனதில்லாதிருக்கிறாரே, அப்படியானால் அவர் **அன்புள்ளவரா?** எனக்கு உதவி செய்யமுடியாதென்றால் அவர் **வல்லமையுள்ளவரா** என்கிற கேள்விகள் பிறக்கின்றன. இப்படிப்பட்ட அநேகக் காரியங்கள் நமது **விசுவாசத்தின் பரீட்சைகளா** யிருக்கின்றன. படவிலிருந்த சீஷர்கள் ஆண்டவர் தங்களோடிருந்தும் பலத்த காற்றையும் மோதின அலைகளையும் கண்டு பயந்து நடுங்கினார்கள். ஆண்டவர் எழுந்து அவர்களைப் பார்த்து: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? உங்கள் **விசுவாசம்** எங்கே? ஏன் உங்களுக்கு **விசுவாசம்** இல்லாமற் போயிற்று என்று சொல்லி காற்றையும் கடலையும் அமர்த்தினார். பேதுரு ஆண்டவர் தன் முன்னிருப்பதை உணராமல் அலைகளைப் பார்த்துப் பயந்து அமிழ்ந்துபோகையில் ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கூப்பிட, அவர் தமது கையை நீட்டி பேதுருவைப் பிடித்து: **அற்பவிசுவாசியே,** ஏன் சந்தேகப்பட்டாய் என்று கேட்டார்.

இவ்வாறு நேரிடும் பல காரியங்கள் ஆண்டவர்மீது நமக்குள்ள விசுவாசத்தைக் கெடுக்கும்படி சாத்தான் கையாடுகிற சோதனைகளாகும். ஆனால் ஆண்டவரோ அந்தச் சோதனைகளை **நாம் விசுவாசத்தில் பலப்பட்டு வளருவதற்கு** ஏதுவான பரீட்சைகளாக்குகிறார். புசல்காற்று அடித்து மரத்தின்மேல் மோதும் போது அந்த மரம் இங்குமங்கும் அசைந்து கீழே விழுந்துவிடும் போலிருக்கிறது. ஆனால் மரத்தின் அசைவினால் அதன் வேர்கள் அசைந்து மரம் பலப்பட்டு வளருவதற்கு அனுகூலமாயிருக்கிறது. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் சகலமும் நமக்குச் சந்தோஷமும் உற்சாகமாயு மிருந்தன. கிறிஸ்தவ ஜீவியத்தில் யாதொரு கஷ்டமும் இருப்பதாக அப்போது தோன்றவில்லை. அது நமது குழந்தைப் பருவம். ஆனால் நமது அனுபவம் எப்போதும் அப்படியே இருக்குமானால் நாம் பலவீனமான குழந்தையைப்போலவே இருப்போமேயன்றி பலமுள்ள புருஷராகமாட்டோம். மற்றவர் களுக்குப் பிரயோஜனமா யிருக்கவுமாட்டோம். ஞானமுள்ள ஆண்டவர் நம்மைப் பரீட்சைகளின் வழியாக நடத்தி, நமது விசுவாசத்தைப் பலப்படுத்தி, பொறுமை சாந்தம் முதலான நற்குணங்களை நமக்குத் தந்து, அநேகருக்கு நாம் ஆசீர்வாதமாயிருக்கும்படிச் செய்கிறார். நமது ரட்சிப்பின் அதிபதியாகிய ஆண்டவர் தாமும் இந்தப் பரீட்சைக்குத் தப்பினவரல்ல. "அவர் பரீட்சிக்கப்பட்டவரும், பட்டபாடு களினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டவரும், உபத்திரவங்கள் மூலமாய்ப் பூரணராக்கப்பட்டவருமானார்." நான் பரிசுத்தராயிருக்க எனக்கேன் இந்தப் பாடுகள் என்று அவர்



கேட்கவுமில்லை, பிதாவின் அன்பைச் சந்தேகிக்கவுமில்லை. இவ்வாறான சோதனை பாடுகள் தமக்கு அவசியம் என்பதை நன்குணர்ந்து ஏற்றுக்கொண்டார். அதன் மூலமாய் "அநேக பிள்ளைகளை மகிமையில் சேர்க்கும் அதிபதியுமானார்." ஆகையால் நமக்கு நேரிடும் பாடுகளைக் குறித்து "ஏதோ புதுமையென்று நாம் திகைக்கக்கூடாது." ஆண்டவரிடத்தில் நான் எவ்வளவோ பக்தியாயிருக்கிறேனே, எனக்கேன் இந்தப் பாடுகள் என்று கேளாமல், பாடுகளின் மேலான நோக்கத்தை அறிந்து பொறுமையோடு சகிக்கவேண்டும். "நாம் கிறிஸ்துவினிடத்தில் **விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல,** அவர் நிமித்தமாகப் **பாடுபடுகிறதற்கும்** நமக்கு அருளப்பட்டிருக்கிறது" (பிலி. 1:29). ஆகையால் நாம் ஆசீர்வாதமாயிருக்கும்படியாக, நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படியாக, **ஆண்டவருடைய சித்தத்தின்படி** போராட்டங்களும் அந்தகாரமும் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்போது, "நீர் என்னைக் கொன்றாலும் இன்னும் உம்மைத்தான் நம்பிக் கொண்டிருப்பேன்" என்று யோபு சொன்னதுபோல சொல்ல வேண்டும். காரியங்கள் கசப்பாயிருந்தாலும், ஒன்றும் விளங்காமற் போனாலும், எல்லாம் குழப்பமாயிருந்தாலும், கண்ணீரோடு அருமை ரட்சகரின் பாதத்தைப்பற்றிப் பிடிக்கவேண்டும். நேரிட்ட பரீட்சை நமக்கு வெற்றியாகும்; சாத்தானுக்கு வெட்கமாகும். ஆண்டவர் வரும் நாளிலே இவ்விதமான விசுவாசப் பரீட்சையின் வெற்றி நமக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமாக விளங்கும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## 11. இந்த அருமையான விசுவாச ஜீவியம் எப்படிக் கிடைக்கும்?

பல காரியங்களைச் சொல்வதைவிட விசுவாசம் வரக்கூடிய **அனுபவ வழியைக்** கவனிப்பது நல்லது. “விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவ வசனத்தினால் வரும்” (ரோம. 10:17). விசுவாசம் தனித்த ஒரு குணமல்ல. ஒருவன் தன்னை **விசுவாசி** என்று நினைத்தால் அவன் எதை விசுவாசிக்கிறான் **யாரை** விசுவாசிக்கிறான் என்று கேட்போம். நாம் விசுவாசிப்பதற்கு **ஆள்** வேண்டும். **இயேசு கிறிஸ்துவே** நமது விசுவாசத்திற்கு உரிய **ஆள்.** அவரைக் குறித்த **கேள்வி,** அவரைப்பற்றிய **அறிவை** நமக்குக் கொடுக்கிறது. அந்த அறிவு அவர்மீது **விசுவாசத்தை** உண்டாக்குகிறது. அந்த விசுவாசம் நமது **ரட்சிப்புக்கு** ஏதுவாகிறது. அப்போஸ்தலர் எங்கும் சென்று கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். வசனத்தைக் கேட்டவர்கள் விசுவாசிகளானார்கள். “அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து **விசுவாசிக்கிறோம்”** என்று சமாரியர் சொன்னார்கள். “நான் **விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்”** என்று பவுல் சொன்னார். **“அறிந்து விசுவாசிப்பது,” “விசுவாசித்து அறிவது”** என இரண்டு காரியங்களை இவ்வசனங்களில் காண்கிறோம். ஆண்டவரைப் பற்றிய காரியங்களை **அறிவது** அவரை விசுவாசிப்பதற்கு ஏதுவாயிருக்கிறது. அவரை **விசுவாசிப்பது** இன்னும் அவரை அறிவதற்கு வழியாயிருக்கிறது. இவ்வாறு அறிவின் வளர்ச்சி விசுவாச வளர்ச்சிக்கும், விசுவாச வளர்ச்சி அறிவின் வளர்ச்சிக்கும், ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கிறது. இவைகளை அசட்டைபண்ணுகிறவர்கள் விசுவாச ஜீவியத்தைக் காணமாட்டார்கள்.



ஒரு நல்ல மனுஷனை நாம் நெருங்கிப் பழகப்பழக அவன்மீது நமக்கு விசுவாசமும் நம்பிக்கையும் பெருகும். கிறிஸ்துவை நெருங்கினவர்கள் அவரைவிட்டு விலக முடியாதபடி அவரது அன்பும் கிருபையும் அனுதாபமும் அவர்கள் இருதயங்களைக் கவர்ந்து கொள்கின்றன. அவரே நம்மில் விசுவாசத்தைத் தொடங்குகிறவரும், வளரச் செய்கிறவரும், பூரணப்படுத்து கிறவருமாயிருக்கிறார். நம்மைப் பார்க்கும் பார்வையல்ல. அவரைப் பார்க்கும் பார்வையும், அவரை இன்னாரென்று அறியும் அறிவுமே நமது விசுவாசத்துக்கு ஆதாரம். தேவன் ஆபிரகாமைப் பார்த்து: நீ அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவாய் என்று சொன்னார். ஆபிரகாம் இதை நம்பமுடியாதபடி அவ்வளவு விருத்தாப்பியனாக இருந்தபோதிலும், தன் பலவீன நிலைமையை எண்ணாமல், “தேவன் வாக்குப் பண்ணினதை நிறைவேற்ற வல்லவரா யிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி **விசுவாசத்தில்** வல்லவனானான்” (ரோம. 4:21).

விசுவாசத்தைக் **காத்துக்கொள்ளவேண்டியதும்** அவசியம். விசுவாசம் இரண்டொருநாள் காரியமல்ல. கடைசிவரை விசுவாசத்தினாலேயே நாம் பிழைக்கவேண்டும். நமது விசுவாசத்தைக் கெடுக்க சத்துரு தன்னால் இயன்றதெல்லா வற்றையும் செய்வான். ஆகையால் பெற்றுக்கொண்ட விசுவாசத்தைக் காத்துக் கொள்வதைப்பற்றி அப்போஸ்தலன் கரிசனையோடு பேசுகிறார். தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, “உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசம்” என்றும், “அந்த விசுவாசம் உன்பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் **நிலைத்திருந்த தென்றும்,”** அந்த விசுவாசம் உனக்குள்ளும் **நிலைத்திருக்கிறதென்றும்** சொல்லி, அந்த விசுவாசத்தை, அதாவது உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த

**நற்பொருளை** நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே **காத்துக்கொள்** என்கிறார். மறுபடியும் "விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்தமனச் சாட்சியிலே **காத்துக்கொள்ளவேண்டும்".** ஏனென்றால், "இந்த நல்மனச் சாட்சியை சிலர் தள்ளிவிட்டு விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்" என்று எச்சரிக்கிறார். நமது இருதயம் சரியாயிருந்தால் சத்துரு நம்மை மேற்கொள்ளமாட்டான். நாம் பிடித்து நிற்கும் விசுவாசமாகிய கேடகத்துக்குமுன் அவன் எய்யும் அக்கினியாஸ்திரங்கள் அவிந்துபோகும். அக்கினியாஸ்திரங்கள் என்பது பரிசுத்தவான்களானாலும் அவர்களுக்கும் தெரியாதபடி திடீர்திடீரென அவர்கள் மனதில் நுழைகிற அவிசுவாசமான அல்லது பாவமான எண்ணங்களைக் குறிக்கும். சண்டை நடக்கும்போது பூர்வகாலத்தில் அக்கினி அம்புகளை எய்வார்கள். அவைகள் தேகத்தில் பாய்ந்து கொடிய வேதனையை உண்டாக்கும். சாத்தானும் அதுபோல நமது ஜீவியத்தைக் கெடுக்கும்படி அக்கினியாஸ்திரங்களை எய்கிறான். இப்படிப்பட்ட தகாத எண்ணங்கள் வருவதற்கு நாம் உத்திரவாதிகள் அல்ல. ஆனால் அத்தீய நினைவுகளை நாம் பிரியமாய் ஏற்றுக்கொண்டதுண்டானால் நாம் உத்திர வாதிகளாவதோடுகூட, நம்மில் தங்கும்படி இடங்கொடுத்த அந்தப் பாவ நினைவுகள் பாவச் செய்கையிலே முடிந்தாலும் முடியும். ஆண்டவர்மீதுள்ள உத்தம விசுவாசம் இப்படிப்பட்ட அக்கினியாஸ்திரங்களை அவிக்க வல்லமையுள்ளது. விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த இருதயத்திலே நாம் **காத்துக்கொள்ள வேண்டும்.** ஏதோ பாவம் நுழைந்து மனது கெட்டுப் போகும்போது விசுவாசிப்பது கஷ்டமாகிவிடும். அறிவுமாத்திரம் இருக்கும், விசுவாசமிராது. விசுவாசம் போய்விட்டால் ஆண்டவரோடுள்ள ஐக்கியம் போய்விடும். ஐக்கியம் போய்விட்டால் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்



கொள்ளும் வழியும், ஊழியம்செய்யும் வல்லமையும் போய்விடும். கிறிஸ்து மதத்தை ஒழித்து விடும்படியான முயற்சிகள் நடக்கும். தத்தளிப்பான இக்காலத்தில் அன்புள்ள ஆண்டவர்மீதும் அவரது தவறாத வசனத்தின்மீதும் நமக்குப் பூரணபற்றுதலிருக்க வேண்டும்.

விசுவாச ஜீவியத்தை நாம் இவ்வளவு முக்கியப்படுத்திப் பேசினபோதிலும் அது விசுவாசத்திலேயே நிற்காமல், ரட்சகர்மீதுள்ள **அன்பின் ஜீவியத்தில்** கொண்டுபோய்விடும். கிறிஸ்துவில் விசுவாசப்பற்றுக் கொண்ட ஒருவன் அவரிடத்தில் அன்பற்றவனாயிருப்பான் என்பது நினைக்கமுடியாத காரியம். ஆவியானவர் விசுவாசத்தையும் அன்பையும் இணைத் திருப்பதை நிருபங்களில் காண்கிறோம். கிறிஸ்துவின் இன்ப சமூகத்தில் நெருங்கிச் சஞ்சாரம் செய்த ஒரு சகோதரன் இருந்தார். போதகர் ஒருநாள் அவரோடு பேசிக் கொண்டிருக்கையில், எல்லாம் விசுவாசத்திலே தான் இருக்கிறது தம்பி என்றார். உடனே அந்தச் சகோதரன் : விசுவாசமா? என்ன விசுவாசம்? என்னைப் பெற்ற தகப்பனுக்கும் எனக்கும் விசுவாசம் என்கிற வார்த்தையே கிடையாது. அவர் என்னைப் பார்த்து : நீ என்னிடத்தில் விசுவாசமாயிருக்க வேண்டும் என்று சொன்னவருமல்ல; நான் அவரைப் பார்த்து: அப்பா, உங்களிடத்தில் விசுவாசமாயிருக்கிறேன் என்று நான் சொன்னவனுமல்ல. என் தகப்பன் என்னிடத்தில் பிரியமாயிருக்கிறார், நானும் அவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன். இதைப்போலவே என் ஆண்டவருடைய இன்ப சமூகத்தில் நடந்து கொள்ளுகிறேன். அவரை விசுவாசிக்கவேண்டும் என்று தாங்கள் சொல்வது எனக்குப் புதுமையாயிருக்கிறது என்றார். அந்தச் சகோதரன் சொன்னதை நாம் குற்றப்படுத்தக்கூடாது.

அவர் விசுவாசமற்ற மனுஷன் என்று நினைக்கவுங்கூடாது. ஏனென்றால் கிறிஸ்துவின் சமூகமும் அவரது அன்பும் அந்தச் சகோதரன் ஜீவியத்தில் அவ்வளவு நிச்சயமாயிருந்ததே அவர் அவ்வாறு பேசினதற்குக் காரணம். விசுவாசமில்லையென்றால் அன்பில்லை. விசுவாசத்தின் பலனாக அந்தச் சகோதரன் உள்ளத்தை நிரப்பிக் கொண்டிருந்த ஆண்டவருடைய **அன்பின் பெருக்கத்தில்** விசுவாசம் மறைந்து கொண்டதென்னலாம்.

விசுவாசத்துக்காக ஜெபிக்கலாமா என்கிறார்கள்; ஜெபிக்கிறது தப்பிதமல்ல. அருமை ஆண்டவரே; என் இருதயம் வறண்ட நிலம்போலிருக்கிறதே. விசுவாசமில்லாதவனைப்போல் தடுமாறுகிறேன். உம்மில் பூரணமான விசுவாசப்பற்றை எனக்குள் உண்டாக்கும் என்று வருந்திக் கேட்டால், அவர் தமது வசனத்தின் மூலமாகவும் தமது ஆவியின் மூலமாகவும் விசுவாசத்தை நம்மில் உண்டாக்குவார். அவர் மீதுள்ள விசுவாச ஜீவியத்தில் நாம் நிலைத்திருக்கும் போது **அன்பின் ஜீவியத்திற்குள்** நம்மை நடத்துவார். வசனம் வேறே, ஆண்டவர் வேறே அல்ல. அவர் வாக்கை நம்புவது **அவரையே** நம்புவதாகும். திருவசனத்தை வாசித்து, அதை நம்பி ஏற்றுக்கொண்டு, அதற்கேற்றபடி நடப்போமானால் நமது விசுவாசம் பலப்படுவதோடு நமது ஜீவியம் ஆவிக்குரிய கனிகள் நிறைந்ததாயிருக்கும். பிதாவுக்கு மகிமையுண்டாகும். “நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்”. விசுவாசமற்றுப்போவது கடைசிக் காலத்தின் அடையாளங்களில் ஒன்று. “மனுஷகுமாரன் வரும்போது பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ?” என்பது நமக்கு எச்சரிக்கை.



# 2. அன்பின் ஜீவியம்

**“அன்பிலே நடந்துகொள்ளுங்கள்”**
**(எபே. 5:2)**

கிறிஸ்து மார்க்கம் அன்பின்மார்க்கம். நம்மை அன்பர்களாக்கும் மார்க்கம். தேவன் அன்பாயிருக்கிறார். தேவகுமாரன் அன்பாயிருக்கிறார். ஆவியானவர் அன்பாயிருக்கிறார். நம்மை ரட்சிக்கும்படி தேவன் தமது குமாரனைக் கொடுத்து அன்பை **விளங்கப்பண்ணுகிறார்.** குமாரன் தமது ஜீவனைக் கொடுத்து அன்பை **நிரூபிக்கிறார்.** ஆவியானவர் தேவ அன்பை நமது உள்ளத்தில் ஊற்றி அன்பை **அனுபவிக்கும்படிச்** செய்கிறார். கடவுள் நீதி, ஞானம், பரிசுத்தம், வல்லமை முதலிய லட்சணங்களுள்ளவராயினும் அன்பு அவரது லட்சணங்களில் ஒன்றல்ல. **அன்பே கடவுள்.** மற்ற லட்சணங்கள் அன்புக்குள் அடங்கினவை. நீதியற்ற அன்பு இளக்காரமாகும். **பரிசுத்தமற்ற** அன்பு பாவமாகும். **ஞானமற்ற** அன்பு கேடாகும். **வல்லமையற்ற** அன்பு கோழைத்தனமாகும். தேவ ராஜ்யம் அன்பின் ராஜ்யம். மறுமையின் வாழ்வு அன்பின் வாழ்வு. அன்பற்றவர்கள் கடவுளற்றவர்கள். அன்பன் கடவுளுக்குள் இருக்கிறான்; கடவுள் அன்பனுக்குள் இருக்கிறார் (1 பேது. 4:16).

## 1. அன்புதான் நமது ரட்சிப்பு

“பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்துக்கு வந்தார்” என்பது உண்மையே. ஆனால் அந்த ரட்சிப்பு எப்படிப்பட்டது? நரகம் தப்பிக்கொள்வதா? மோட்சத்தில் நுழைந்துகொள்வதா? அநேகருடைய ரட்சிப்பு அவ்வளவுதான்.

பாவத்தால் விளைந்த கேடு இன்னதென்பதை அறிந்தால், ஆண்டவர் அருளும் ரட்சிப்பு எப்படிப்பட்டதென்பது தெரியவரும். பாவத்தால் மனுஷன் கடவுளைவிட்டுப் பிரிந்தான், மனுஷரை விட்டும் பிரிந்தான். உள்ளூர் கலகம்போல பாவம் மனுஷனுக்குள்ளேயே குழப்பத்தையும் பிரிவினையையும் உண்டாக்கினபடியால் அவன் தேவ ஐக்கியத்தையும் மனுஷர் ஐக்கியத்தையும் இழந்தான். அவனிடம் தேவ அன்புமில்லை, மனுஷர் அன்புமில்லை. இப்பிரிவினையாலே சகல கேடுகளும் உண்டாயின. மனுஷன் கடவுளிடமும் மனுஷரிடமும் அன்புள்ளவனாயிருந்தால் மனுமக்களை நாசம்பண்ணுகிற இந்த உலக யுத்தங்கள் ஏற்பட்டிருக்குமா? பயங்கர போராயுதங்களால் சிறந்த நகரங்களுக்கும் கணக்கற்ற மக்களுக்கும் உண்டான அழிவுகளையும் அங்கலாய்ப்புகளையும் யாரால் விவரிக்கமுடியும்? இந்த நாசவேலைக்காக செலவழிக்கப்படுகிற கோடாகோடித் திரவியத்தை மனுமக்களின் ஈடேற்றத்துக்காகச் செலவிட்டிருந்தால் எவ்வளவோ பாக்கியமாக இருந்திருக்கும். மகா கொடிய காலத்தில் அல்லவோ நாமிருக்கிறோம். நமது கல்விப் பெருக்கம்; சாஸ்திர வளர்ச்சி, நாகரிகத்தால் யாது பயன்? கடவுள் மனுஷனை எவ்வளவோ மேலானவனாக உண்டாக்கியிருந்தும் அவன் சாத்தானுக்கு இடங்கொடுத்ததால் மிருகத்திலும் கேடானான். அன்பின் ஆண்டவரைப் புறக்கணித்த உலகம் தான் விதைத்ததை அறுக்கும்படி இடங் கொடுத்திருக்கிறார். உலகத்துக்கு அழிவு நெருங்கிவிட்டது. கிறிஸ்து நம்மை ரட்சிக்கிறது மெய்யானால் நம்மை அன்பர்களாக்கவேண்டும். தேவனோடும் மனுஷரோடும் நமக்கு அன்புண்டாக வேண்டும். தேவனுடைய ராஜ்யம் என்பது அன்பர்கள் சங்கமாகும்.



## 2. இதன் உண்மையைக் கிறிஸ்துவில் காண்கிறோம்

கிறிஸ்து தேவ அன்பிலும் மனுஷர் அன்பிலும் பிழைத்தாரென்பதை அவர் ஜீவிய முழுவதிலும் காண்கிறோம். **முதலாவது :** அவர் **பிறப்பிலேயே** இதன் உண்மை விளங்குகிறது. அவர் தேவனாகமாத்திரம் வந்தவரல்ல; அல்லது மனுஷனாகமாத்திரம் வந்தவரல்ல. அவர் **தேவமனிதனாக** வந்தார். தெய்வீகமும் மனுஷீகமும் எவ்விதக் குழப்பமுமின்றி அவரில் பூரண ஒற்றுமைப்பட்டிருந்தது. தெய்வீகத்தின்படி அவர் தேவனோடு பூரண சம்பந்தமுள்ளவர். மனுஷீகத்தின்படி மனுஷரோடு பூரண சம்பந்தமுள்ளவர். நம்மைத் தேவனோடும் மனுஷரோடும் ஐக்கியப்படுத்தும்படி அவ்வாறு பிறந்தார். நாம் தேவனோடும் மனுஷரோடும் அன்பாயிருக்கக் கூடுமென்பதற்கு அவரிலுள்ள தெய்வீக மனுஷீக **ஒற்றுமை** நமக்கு ஆதாரம். இரண்டாவது: அவருடைய **ஜீவியம்.** அவருடைய வாழ்க்கையில் அவர் தேவனோடும் மனுஷரோடும் அன்பும் அனுதாப முள்ளவராயிருந்தார். எல்லாவற்றிலும் பிதாவின் சித்தப்படியே பிழைத்து பிதாவின் அன்பில் நிலைத்திருந்தார். “நானும் பிதாவும் ஒன்று” என்றார். அது போலவே மனுஷரிடத்திலும் அன்புவைத்து அவர்கள் பாவங்கள் பலவீனங்கள் பாடுகள் கவலைகளைத் தாமே ஏற்றுக்கொண்டு தம்மை அவர்களோடு ஒன்றாக்கினார். நானும் பிதாவும் ஒன்று என்று அவர் சொன்னதுபோலவே நானும் மனுமக்களும் ஒன்று என்று சொல்லக்கூடியவராயிருந்தார். **மூன்றாவது:** அவரது **உபதேசம்.** தேவ அன்பும் மனுஷர் அன்புமே அவர் போதனைகளின் திரண்ட கருத்து. ஒரு சமயம் நியாயசாஸ்திரி ஒருவன் அவரிடம் வந்து: போதகரே, நியாயப்பிரமாண

விதிகளுக்குக் கணக்கு வழக்கில்லை, எதைக் கைக்கொள்வது, எதை விட்டு விடுவதென்று தெரியவில்லை. நீரும் ஏராளமாய்ப் போதிக்கிறீர். ஒரு காரியம். கற்பனைகளிலெல்லாம் எது பிரதானமென்று சொல்லிவிட்டால், அதுவே எனக்குப் போதும் என்றான். ஆண்டவர் அவன் விரும்பினபடியே விடை பகர்ந்தார். கற்பனைகளிலெல்லாம் பிரதானம் தேவனிடத்திலும் பிறரிடத்திலும் அன்பாயிருப்பதுதான்; சகல கற்பனைகளும் இதற்குள் அடங்கிவிட்டன என்றார். தேவனிடத்தில் அன்பாயிருக்கிறவன் அவருக்கு விரோதமாக நடக்கமாட்டான். மனுஷரிடத்தில் அன்பாயிருக்கிறவன் அவர்களுக்குத் தீங்கு நினைக்கமாட்டான். **நான்காவது: அவரது காருண்ய செயல்கள்.** இங்கேயும் தேவ அன்பும் மனுஷர் அன்பும் வெளிப்படுகின்றன. அவர் செய்த அற்புத கிரியைகள் பிதாவோடுள்ள ஐக்கியத்தின் பலனாயிருந்தன. மறுபக்கம் மனுமக்கள் மீதுள்ள அன்பும் அனுதாபமும் அவருடைய காருண்ய செயல்களுக்குக் காரணமாயிருந்தன. **ஐந்தாவது:** அவருடைய **பாடுகள் மரணம்**. இங்கேயும் இருபக்கத்து அன்பைக் காண்கிறோம். தேவன் பாவிகளை ரட்சிக்க விரும்பினார். அதே சிந்தை ரட்சகருக்கும் இருந்தது. தமது உயிரைக் கொடுத்தாகிலும் மனுமக்களை ரட்சிக்க வேண்டும் என்கிற வாஞ்சையும் அவருக்கு இருந்தது. இந்த இருபக்கத்து அன்பும் அனுதாபமுமே அவருடைய பாடுகள் மரணத்துக்குக் காரணம். இவ்வாறு தமது மரணம் உயிர்த்தெழுதல் மூலமாய்ப் பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, நாம் தேவனோடும் பிறரோடும் **அன்பாயிருக்கும்படியான ரட்சிப்பை** நமக்கருளினார். அன்பற்றவர்கள் ரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல. "அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை" (1 கொரி. 13:2).



## 3. கிறிஸ்துவின் அளவற்ற அன்பு

கிறிஸ்து நம்மில் வைத்திருக்கிற அன்பு எப்படிப்பட்டது? "பிதா என்னில் அன்பாயிருக்கிறது **போல** நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்றார். மற்ற வேத வாக்கியங்களை வாசித்து வாசித்து அவைகள் சாதாரணமாகிவிட்டதுபோல இந்த வாக்கியமும் சாதாரணமாகத் தோன்றுகிறது. ஆனால் ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும் வசனம் இது. ஆண்டவர் நம்மீது வைத்திருக்கும் அன்பின் தன்மை என்ன? அதன் அளவு என்னவென்று அறிவோமானால் ஆனந்த பரவசமடைவோம். பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்கிறார். இங்கே **போல** என்கிற வார்த்தையின் கருத்து என்ன? அந்த எஜமான் தன்னிடம் பதினாயிரம் தாலந்து கடன் பட்டவனைப் பார்த்து: "நான் உனக்கு இரங்கினது **போல** நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ?" என்றான். இங்கே **போல** என்பது எஜமான் இரங்கி மன்னித்த **குணத்தை** மாத்திரம் காட்டுகிறதேயன்றி மன்னித்த **தொகையைக்** காட்டாது. ஒருவன் பட்ட கடன் பதினாயிரம் தாலந்து, இவன் மற்றவனுக்கு மன்னிக்க வேண்டிய கடனோ நூறு வெள்ளிப்பணம். தொகையில் பெரிய வித்தியாசம். கோடிக்கு மேலான ரூபாய் எங்கேயிருக்கிறது? முப்பத்திரண்டு ரூபாய் சொச்சம் எங்கேயிருக்கிறது? "பிதா என்னில் அன்பாயிருக்கிறது **போல** நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்பதில் இதைப்போல வித்தியாசம் இருக்காதா? பிதா தமது நேசகுமாரனிடத்தில் வைக்கும் அன்புக்கு அளவுண்டா? எல்லையுண்டா? அதே **அளவாக** குமாரனும் நம்மில் அன்பாயிருக்கக்கூடுமா? அன்பு கூருகிற **தன்மையில்** வித்தியாசமில்லை என்றாலும் அன்பின் **அளவிலே**

வித்தியாசமிராதா? நான் சாப்பிடுகிறது போல அவனும் சாப்பிடுகிறான் என்று சொல்லும்போது இரண்டு காரியங்களில் ஒற்றுமையிருக்கலாம். அவன் சாப்பிடுகிற **போஜனமும்** என்னைப் போல, அவன் சாப்பிடுகிற **அளவும்** என்னைப் போல என்று சொல்லலாம். பிதா குமாரனில் வைத்திருக்கிற அன்புக்கும், குமாரன் நம்மில் வைத்திருக்கும் அன்புக்கும் **தன்மையிலும் அளவிலும்** யாதொரு வித்தியாசமில்லை என்று ஆண்டவர் போதிக்கிறார். பிதாவின் அன்பு தெய்வீகமானது, அது அளவற்றது. அதே **தேவ அன்பை, அதே தன்மையாக, அதே அளவாக** குமாரன் நமக்குக் கொடுக்கிறார். வேறொரு வசனத்தாலும் இது உறுதிப்படுகிறது. "பிதாவே, நீர் என்னிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிடத்திலும் அன்பாயிருக்கிறதை உலகம் அறியும்படிக்கு" என்கிறார் (யோ.17:23). இதை கிறிஸ்தவர்களாகிய நாமே அறியாதிருக்கும்போது உலகம் எங்கே அறியப்போகிறது?

கிறிஸ்துவின் அன்பை பிதாவின் அன்பென்றும், குமாரனுடைய அன்பென்றும் பிரிக்கமுடியாது. பிதாவின் அன்பு குமாரனை நிரப்புகிறது. குமாரன் தம்மை நிரப்புகிற பிதாவின் அன்பால் நம்மை நிரப்புகிறார். இதிலே சகோதர அன்பையும் சேர்த்துக் கொள்ளுகிறார். "என் பிதா என்னிடத்தில் அன்பாயிருக்கிறது **போல** நானும் உங்களிடத்தில் அன்பாயிருக்கிறேன். நான் உங்களிடத்தில் அன்பாயிருக்கிறது **போல** நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும்" என்கிறார் (யோ. 15:9-12). இங்கும் **போல** என்கிற வார்த்தை முக்கியம். ஆண்டவர் நம்மிடத்தில் அன்பாயிருக்கிறது போல நாம் பிறரிடத்தில் அன்பாயிருக்க முடியுமா? கூடியவரை அன்பாயிருக்க வேண்டியதுதான் என்று நினைப்போம். ஆண்டவர் அதற்கு இடங்கொடுக்கவில்லை. அவர் என்ன



சொல்லுகிறார்? பிதாவின் அளவில்லாத அன்பு என்னை நிரப்புகிறது, என்னை நிரப்புகிற அதே பிதாவின் அன்பால் நான் உங்களை நிரப்புகிறேன், உங்களை நிரப்புகிற அதே அன்பு உங்களிலிருந்து உங்கள் சகோதரருக்குப் போகவேண்டும் என்கிறார். கிறிஸ்துவின் அன்பு, நமது அன்பு என்கிற பிரிவில்லை. **பிதாவிடமிருந்து குமாரனுக்குள் வருகிறதும், குமாரனிலிருந்து நமக்குள் வருகிறதும், நமக்குள்ளிருந்து சகோதரருக்குப் போகிறதுமான அன்பு ஒரே தெய்வீக அன்பேயன்றி வேறல்ல.**

## 4. பாவிகள் மத்தியில் அன்பர்

அன்பின் அவதாரமாக வந்த ஆண்டவரை **மனுமக்கள் நடுவில்** காண்கிறோம். "என் பிதா என்னிடம் அன்பாயிருக்கிறது **போல** நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்று அவர் சொன்ன வாக்கின் உண்மையை அவரது **ஜீவியத்தில்** பார்க்கிறோம். நல்ல சுகதேகி ஒருவன் குஷ்டரோகியோடு அன்னியோனியமாயிருக்கமாட்டான். பரிசுத்தரான ஆண்டவர் திளரான பாவங்கள் மத்தியில் சஞ்சரித்தார், திரளான மனுஷர் அவரிடம் கூடினார்கள். அவரை நெருக்கினார்கள், அவரோடே தங்கினார்கள், அவரோடே புசித்தார்கள். **திரளான மனுஷரென்பது திரளான பாவங்கள்.** தம்மைச் சூழ்ந்திருந்த மனுஷருடைய சகல பாவங்களையும் அவர் அறிந்திருந்தார். தமக்கு எல்லாம் தெரியும் என்பதைக் கிஞ்சித்தேனும் காட்டாமல் **ஒன்றுமே அறியாதவரைப் போலவே** அவர்களிடம் நடந்துகொண்டார். **இதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.** நமது தவறுதலை ஒருவன் அறிவானானால் நம்மை ஏறத்தாழப் பார்ப்பான். உமது வள்ளல் எனக்குத் தெரியாதோ என்பான். நமது ஆண்டவரிடம் அவ்விதமான குறிப்பு எதுவும் கிடையாது. நாம் ஒருவனைக் கண்டவுடனே அவனுடைய குறைகளை

முதலில் நினைக்கிறோம். அப்படியிருந்தும் அதை ஒரு பக்கத்தில் வைத்துக் கொண்டு, ஆண்டவர் கட்டளைப்படி அவனிடம் அன்பாய்ப் பேச முயற்சிக்கிறோம். அவன்மீது வெறுப்பு விருப்பு ஆகிய இருவித உணர்ச்சிகளாகிறோம். **அன்பருடைய** காரியமோ இதற்கு முற்றிலும் வித்தியாசம். அவர் மனுஷருடைய பாவங்களை ஒரு பக்கம் வைத்துக்கொண்டு அவர்களிடம் அன்பாயிருக்கும்படி பிரயாசப்பட்டவரல்ல. அவர் மனுஷருடைய பாவங்களை **"எண்ணவில்லை"** (2 கொரி. 5:19). அவரது அன்பு நமது திரளான பாவங்களை மூடிவிட்டது (1 பேது. 4:8). அவர் எல்லாரிடமும் களங்கமற்ற அன்புள்ளவராயிருந்தார். பாவமாவது என்ன? பாவம் எப்படி வந்தது? உலகத்தில் தீமை வர கடவுள் ஏன் இடங்கொடுத்தார் என்பதைப்பற்றி வேத சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்த வண்ணமாயிருக்கிறார்கள். பிரபந்தங்களை எழுதுகிறார்கள். பாவமாவது என்ன? பாவம் எப்படி வந்தது என்று உபந்நியாசம் செய்ய ஆண்டவர் வரவில்லை. தண்ணீரில் விழுந்த குழந்தையை, அல்லது நெருப்பில் அகப்பட்ட பிள்ளையைக் காப்பாற்ற விரும்புகிறவன்: இது யார் குழந்தை? இங்கே எப்படி வந்தது? எப்படி விழுந்தது என்று விசாரித்துக் கொண்டிராமல் உடனே பாய்ந்து விழுந்து குழந்தையை ரட்சிக்கும் வண்ணமாய், நமது ஆண்டவரும் பாவங்களில் அமிழ்ந்துபோன நம்மைக் கை தூக்கி ரட்சிக்கும்படி வந்தார். வேறு வேலை அவருக்கில்லை.

நம்மைப் **பாவிகளே** என்று அழைக்க அவருக்கு மனம் வரவில்லை. ஞானப்பாட்டு, கீர்த்தனைகளில் : **"பாவியே பாவியில் பாவியே,"** **"வா பாவி** மலைத்து நில்லாதே வா," **"ஓ பாவி** என்னிடம்வர மனமில்லையா?" **"வா நீசப்பாவி வா"** என்று பாடுகிறோம். நம்மை நாமே பாவிகள் என்றும், அக்கிரமக்காரர் என்றும் மிருகங்கள் என்றும், நாயிலும் கேடென்றும் அறிக்கை இடலாம். பக்தர்கள் எக்காலத்திலும் தங்களை எவ்வளவோ அருவருத்துத் தாழ்த்தியிருக்கிறார்கள். அது காரியம் வேறே. ஆனால் ஆண்டவர் நம்மைப் **பாவிகளே** என்று அழைத்ததாகச் சொல்வது சரியோ? கீழே விழுந்து கண் சேதப்பட்டுப்போன மகனைப் பார்த்து அவனைப் பெற்றத்தாய்: குருட்டுக்கண்ணா இங்கேவா என்று கூப்பிடுவாளா? ஆ, நான் பெற்ற மகனே, கண்ணிழந்துபோனாயோ அப்பா என்று புலம்பமாட்டாளா? **அன்புமயமான** ஆண்டவர் பாவத்தாலுண்டான நமது பரிதாப நிலைமையைக் கண்டு மனதுருகினார்; கண்ணீர்விட்டழுதார். தமது **உயிரைக் கொடுத்தாகிலும்** நம்மை இரட்சிக்கும்படி வாஞ்சை கொண்டு வந்த **அன்பர்** நம்மைப் பாவிகளே, அக்கிரமக்காரரே நீசரே என்று அழைப்பதெப்படி? காணாமற் போனவர்களே, வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, சிதறுண்டவர்களே, தாகமாயிருக்கிறவர்களே, ஆத்மா தொய்ந்தவர்களே, துரவில் விழுந்து தவிக்கும் **ஆடுகளே** என்று நமது **நிலைமைக்கேற்ற** பெயர் சொல்லி அல்லவோ அழைக்கிறார். "இவள் **பாவியாயிருக்கிறாளே"** என்றான் அந்தப் பரிசேயன், அவனை மகனே என்றார். சகேயுவை: "இவன் பாவியாயிருக்கிறானே" என்றார்கள். அன்பரோ, இவன் **ஆபிரகாமின் குமாரனாயிருக்கிறானே** என்றார். இவள் விபசாரி, இவளைக் கல்லெறிந்து கொல்லவேண்டும் என்றார்கள். அன்பரோ, அம்மா நான் உன்னை ஆக்கினைப் படுத்தவில்லை, நீ போய் இனி ஜாக்கிரதையாய் நடந்து கொள் என்றார். இவர் பாவிகளைச் சேர்த்துக்கொள்ளுகிறார் என்று விரோதிகள் அவரைக் குற்றப்படுத்தினபோது நீதிமான்களையல்ல **பாவிகளைத்தான்** ரட்சிக்க வந்தேன் என்று **அவர்கள் சொன்ன வார்த்தையைத்** திருப்பிச் சொன்னார். பரிதாபமுள்ள இடத்தில் பரியாசமில்லை. அனுதாபமுள்ள இடத்தில் ஆக்கினையில்லை. "உலகத்தை ஆக்கினைக்குட் படுத்தும்படி தேவன் தமது குமாரனை

உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் ரட்சிக்கப்படுகிறதற்காகவே அவரை அனுப்பினார்." இதனாலே அவர் பாவத்தை அற்பமாய் நினைத்தாரென்று நாம் எண்ணக்கூடாது. பாவம் எவ்வளவு கொடியதென்பதை அவரைப்போல் அறிந்தவர்கள் யார்? மோசமான தன் வியாதியை மறைக்கும் ஒருவனைப் பலமாய்க் கண்டிக்கும் உத்தம வைத்தியனைப்போல, பொது ஜனங்களிடத்தில் எவ்வளவோ கிருபையாய் நடந்துகொண்ட நமது ஆண்டவர், **மாயக்காரரான** வேதபாரகர் பரிசேயரின் பாவங்களைத் தப்ப விடாமல் அவர்களைக் கடிந்து கொண்டு ஆக்கினை கூறினாரே.

## 5. அவர் பாவிகளை ஆதாயப்படுத்திக் கொண்டதெப்படி?

ஆண்டவர் கையாடின முறை பிரசங்கிகள் கையாடும் முறைக்கு முற்றிலும் வித்தியாசம். பாவங்களை வெளியரங்கமாய் எடுத்துப் பேசுவோருண்டு. அவர்கள் வாய்திறந்தால் சீனாய் மலையின் இடிமுழக்கம் போலிருக்கும். கேட்போருடைய மனதில் கலக்கமும் திகிலும் உண்டாகும். ஆனால் தேவ அன்பும் கிருபையுமின்றி பாவிகள் ரட்சிக்கப்படமாட்டார்கள். ஸ்நானகனுடைய பிரசங்கம் ஜனங்களைத் திடுக்கிடச் செய்தது. அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டார்கள். அன்பர் இயேசுவினால்தான் அவர்களுக்கு ரட்சிப்புக் கிடைத்தது. சீனாய்மலையின் இடிமுழக்கத்தால் இரட்சிப்பில்லை. கல்வாரிமலை **அன்பின்** காட்சியால் பாவிகள் ரட்சிக்கப்படுகிறார்கள். பாவங்களை எடுத்துப் பேசக்கூடாதென்பதல்ல; அவசியம் பேசவேண்டும். ஆகிலும் அன்பின் ஆண்டவர் கையாடின முறையே சிறந்தது.



பொருள் மயக்கத்தால் கெட்டுப்போன சகேயுவிடம் பொருளாசையைப்பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அவனை ரட்சித்தார். அவன் உள்ளம் உடைப்பட்டது. அவன் பொருள் போனவிடம் தெரியாது. கிறிஸ்துவே அவனுக்கு அழியாச் செல்வமானார். பாவிஸ்திரீயிடம் அவள் பாவத்தைப்பற்றிப் பேசாமல், அவள் பாவங்களை மன்னித்து தமது அன்பின் பெருக்கத்தால் அவளை முற்றிலும் உத்தமியாக மாற்றினார். சமாரியாஸ்திரீ பாவஜீவியத்தால் முற்றிலும் கெட்டுப்போனவள். அவளிடம் எவ்வளவோ அருமையாய்ப் பேசி ஜீவ தண்ணீரைக் கண்டடையும்படிச் செய்தார். பலத்த சத்துருவாகிய பவுலைத் தமது அன்பின் கேள்வியால் நொறுக்கி நிமிஷத்தில் உத்தம அடியானாக்கினார். கிறிஸ்துவின் அடியார்களைப் பாடுபடுத்திச் சபையைப் பாழாக்கினதால் "பாவிகளில் பிரதானமான பாவி" என்று பவுல் தன்னைத் தாழ்த்தினாரேயன்றி, ஆண்டவர் அப்படிச் சொல்லவில்லை. கெட்டமகன் திரும்பி வந்தபோது தகப்பன் அவன் அக்கிரமங்களைக் குறித்து ஒரு வார்த்தையும் பேசாமல் மகனைக் கண்டதால் அளவற்ற சந்தோஷமடைந்தான். ஆட்டைக் கண்டுபிடித்தவன்: என்னை அலையவைத்தாயா என்று அதன் காலை ஒடிக்காமல் அதைத் தோளில் போட்டுச் சுமந்து சந்தோஷத்துடன் வீட்டுக்கு வந்தான். நிக்கொதேமுவின் பாவத்தையல்ல, மறுபிறப்பின் அவசியத்தைப் பற்றிப்பேசி தமக்குச் சொந்தமாக்கினார். விபச்சாரத்தில் அகப்பட்ட ஸ்திரீயிடம் பாவசங்கீர்த்தனம் கேட்காமல் அவளைத் தைரியப்படுத்தி புத்திசொல்லி அனுப்பினார். முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்தவனைச் சுகமாக்கி, அதிகக் கேடுவராமல் இனிப் பாவஞ் செய்யாதே என்றார். அது என்ன பாவமென்பது அவனுக்கும் தெரியும், ஆண்டவருக்கும் தெரியும்.

ஆனால் கூட நின்றவர்கள் அதை அறியாதபடிக்கு பொதுவாகப் பேசி அவனை அனுப்பினார். யூதாஸ்காரியோத்து தம்மைக் காட்டிக் கொடுப்பதை அவர் ஆதிமுதல் அறிந்திருந்தும், கடைசிவரை அவனை மற்றவர்களுக்கு அவர் காட்டிக்கொடுக்கவில்லை. மேல் வீட்டறையில் ஆண்டவர் அதை வெளியிட்டிருந்தால் பேதுருவின் பட்டயத்துக்கு யூதாஸ் தப்பியிருக்கமாட்டான். துரோகியைக் காப்பாற்றின தயாளன் அவர். பேதுரு தம்மை மறுதலித்திருந்தபோதிலும் அவர் உயிர்த்தெழுந்தபின் அதைப்பற்றி ஒரு வார்த்தையாவது பேசாமல் ஊழியத்தில் பேதுருவை ஸ்திரப்படுத்தினார். மனுஷருடைய சகல பாவங்களும் அவருக்குப் பூரணமாய்த் தெரிந்திருந்தும் ஒன்றுமே அறியாதவர் போல அவர்களோடு நடந்துகொண்ட அதிசயந்தான் என்ன! நம்மைப் பாவிகளென்றோ, வேலைக்காரரென்றோ சொல்லாமல் **சகோதரரென்றும் சிநேகிதரென்றும்** அழைக்கிறார். அவரது தெய்வீக **அன்பின் பெருக்கம்தான்** அவர் இவ்வளவு அருமையாய் நடந்துகொண்டதற்குக் காரணம். அவருடைய தோற்றத்தில், பார்வையில், பேச்சில் எவ்விதமான வெறுப்போ, சந்தேகமோ, குற்றம்பிடிக்கும் குணமோ தோன்றியிருக்குமானால் ஜனங்கள் அவரண்டை போயிருக்கவே மாட்டார்கள். "நான் சேனைகளாலும் பட்டயத்தாலும் தேசங்களை ஆண்டு கொள்ளப் போராடினேன், முடியவில்லை. இயேசுவோ சேனையின்றி ஆயுதமின்றி தமது அன்பினால் உலகத்தை ஜெயித்தார். அவருக்காகத் தங்கள் உயிரைக்கொடுக்க அனந்தம்பேர் காத்திருக்கிறார்கள்" என்று நெப்போலியன் சொன்னான். அவருடைய அன்பின் பெருக்கத்தை உணர்ந்தவன் தன் பாவங்களை நினைத்து நொறுங்கிப்போகிறான். தம்மைக் கட்டி அடித்து, முகத்தில் துப்பி, கொடிய பாடுகள் படுத்தி,



சிலுவையிலறைந்த பாதகர்மேல் கொஞ்சமும் கோபப்படாமல், ஆக்கினை கூறாமல், "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று அவர் வேண்டிக்கொண்ட மன்றாட்டு ஆயிரமான பாவிகளின் உள்ளங்களை உருக்கி விடவில்லையா? அந்த அன்பின் விண்ணப்பம் இன்னும் உலகத்தை அசைக்கும் சர்வசக்தியாயிருக்கிறது. அன்புக்கு நிகரான வல்லமை வேறெதுவுமில்லை: தன் மகனைச் சீர்படுத்த விரும்பும் தகப்பன் எடுத்ததற்கெல்லாம் சிறுவனைக் கன்னத்தில் அடிப்பதும், முழங்காலில் வைப்பதும், உப்பில்லாச் சாதம் கொடுப்பது மாயிருந்தால், தகப்பன்மேல் அவனுக்கு வெறுப்புண்டாகி மனங்கடினப்பட்டுக் கெட்டேபோவான். இவ்வாறு கெட்டுப்போன மக்கள் அநேகர். தகப்பனுடைய பொறுமையும், அன்பும், அனுதாபமுமே அநேக மக்களை நல்வழிக்குக் கொண்டுவந்திருக்கிறது. ஒரு பட்டாளத்தில் ஒரு வாலிபன் போர் வீரனாகயிருந்தான். அவன் ராணுவச் சட்டங்களை அடிக்கடி மீறித் தண்டனைக் குள்ளாவான். எவ்வளவு தண்டனை கொடுத்தாலும் அவன் சீர்ப்படுவதில்லை. அந்தச் சேனையைப் பார்வையிடும்படி மேலதிகாரியான தளகர்த்தன் அங்கே வந்தார். இந்த வாலிபனுக்கு விரோதமான பிராதுகள் அவருக்குமுன் சமர்ப்பிக்கப்பட்டன. தளகர்த்தன் இந்த வாலிபன் தம்மை வந்து காணும்படி கட்டளை அனுப்பினார். இவன் மிகுந்த நடுக்கத்தோடு என்ன முடிவாகுமோவென்று பயந்து அவருக்கு முன் வந்து மரியாதை செய்து நின்றான். தளகர்த்தன் புன்னகையோடு அவனைப் பார்த்து: வாலிபனே சுகமாயிருக்கிறாயா? உன் குற்றங்களனைத்தையும் நான் மன்னித்து விட்டேன், இதுமுதல் நல்ல போர் வீரனாயிரு என்றார் அவ்வளவுதான். அந்த அன்பைச் சகிக்க முடியாமல்

தேம்பித்தேம்பி அழுது அவர் பாதத்தில் விழுந்தான். அதுமுதல் அவன் சிறந்த போர்வீரனானான். அன்பைப்போல் பாவிகளை இழுக்கக்கூடிய சக்தி வேறில்லை. "நான் உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் இழுத்துக்கொள்வேன்" என்பது அன்புதான்.

## 6. கிறிஸ்துவின் அன்பு எப்படிப்பட்டது?

(1) **அது அபாத்திரப் பாவிகளைத் தேடிவந்த அன்பு.** அன்பற்றோர்க்குக் கிடைத்த அன்பு. நாம் அவரது அன்பை விரும்பவில்லை, தேடவில்லை, நாடவில்லை, நினைக்கவு மில்லை. அவர் நம்மீது அன்புகூரும்படியான எவ்விதத் தகுதியும் நம்மில் இல்லை. இனம் இனத்தை விரும்புவது இயற்கை. கல்விமான் கல்விமானை விரும்புவான். சாஸ்திரி சாஸ்திரியைத் தேடுவான். தனவான் தனவானை நாடுவான். சங்கீத ஞானி சங்கீத ஞானியை மதிப்பான். சிநேகிதன் சிநேகிதனை நேசிப்பான். ஆண்டவர் நம்மை விரும்புவதற்கு நம்மில் என்ன உண்டு? எவ்விதக் கவர்ச்சியும் இல்லை. அவர் விரும்புகிற வைகளை நாம் வெறுத்தோம், அவர் வெறுக்கிறவைகளை நாம் விரும்பினோம். சொல்லப்போனால் அவர் நம்மை வெறுப்பதற்குரிய காரணங்கள் அநேகமுண்டு. அவருடைய லட்சணங்களுக்கும் நமது செய்கைகளுக்கும் கொஞ்சமும் பொருத்தமில்லை. **அப்படியிருந்தும் அவர் நம்மில் அன்பாயிருக்கிறார்.** இதைக் குறித்து யோவான்: "நாம் அவரில் அன்புகூரவில்லை, அவர்தான் முந்தி நம்மில் அன்பு கூர்ந்தார்" என்று சொல்லுகிறார்.

(2) **அது வலியவந்த அன்பு.** நீங்கள் இன்னின்னபடி நடந்தால், இன்னின்னதைச் செய்தால் நான் உங்களில் அன்பாயிருப்பேன் என்கிற **நிபந்தனையின் பேரில்** வந்த



அன்பல்ல. நாம் கடவுளுக்குப் பிரியமாய் **நடந்தால்** அவர் நம்மீது **அன்பாயிருப்பார்** என்று பொதுவாய்ப் பேசுகிறோம். அது **உண்மையல்ல.** அது அவர் அன்பைப் பெறுவதற்கு ஓர் நிபந்தனையை ஏற்படுத்துவதாகும். உலகில் நல்லார் பொல்லார் என்னும் வித்தியாசமின்றி எல்லாருக்கும் தமது சூரியனைப் பிரகாசிக்கவும், மழையைப் பெய்யவும் பண்ணுகிற பரமபிதா தமது அன்பை பாரபட்சமின்றி எல்லார் மேலும் பொழிகிறார். நாம் அவரது அன்பை அறிந்தாலும் அறியாவிட்டாலும், அதை மதித்தாலும் மதிக்காமற் போனாலும், ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிடினும் தேவ அன்பு உலகத்தில் பிரவாகித்துக் கொண்டேயிருக்கும். இது **அபாத்திரருக்கு வலியவந்த அன்பு** என்பதைப் பவுல் தெளிவாய் எடுத்துப் பேசுகிறார். நாம் **"பலமற்றவர்களா யிருக்கையில்"** "அக்கிரமக்காரராயிருக்கையில்" "பாவிகளா யிருக்கையில்" "அவருக்குச் சத்துருக்களாயிருக்கையில்" தேவன் தமது குமாரனை நமக்காக மரிக்கும்படி ஒப்புக்கொடுத்து நம்மீதுள்ள தமது அன்பை **விளங்கப் பண்ணுகிறார்** என்கிறார். (ரோம. 5:6-10). இந்த நிமிஷத்திலும் விளங்கப்பண்ணுகிறார்; இறந்த காலமல்ல.

(3) **அது நிரூபிக்கப்பட்டிருக்கிற அன்பு.** "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை **விளங்கப் பண்ணுகிறார்".** விளங்கப்பண்ணுகிறார் என்பதற்கு வெளிப் படுத்துகிறார், பிரத்தியக்ஷமாக்குகிறார், திருஷ்டாந்தப் படுத்துகிறார், ரூபித்துக்காண்பிக்கிறார் என்று அருத்தம். கடவுள் **வல்லமை** ரூபிக்கப்படவேண்டியதில்லை. மகா பிரமாண்டமான உலகங்கள் எல்லையற்ற ஆகாயத்தில் நின்று சுழல்கின்ற சர்வசக்தியின் மாட்சிமையை உணராதவர்கள் யார்? கடவுள்

**ஞானம்** ரூபிக்கப்படவேண்டியதில்லை. சர்வ சிருஷ்டிப்புகளின் ஒற்றுமையையும், அவைகள் மாறாத பிரமாணத்தால் ஆண்டு நடத்தப்படும் பேரறிவையும் புகழாதவர் யார்? கடவுள் **மகிமையை** ரூபிக்கவேண்டியதில்லை. பிரமாண்டமான சிருஷ்டிப்புமுதல் ஒரு சிறிய புல்வரை தேவ மகிமை வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. பிரபஞ்ச ஆராய்ச்சிக்காரரான சாஸ்திரிகள் காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தும் சிருஷ்டிப்பின் அதிசயங்கள், கடவுளின் வல்லமை, ஞானம், மகிமையை நாம் அதிகமதிகமாய் அறிந்து பரவசமடையச் செய்கின்றன. சாஸ்திரிகள் ஒன்றையும் சிருஷ்டிக்கிறவர்கள் அல்ல; ஆனால் சிருஷ்டிக்கப்பட்டவை களின் அமைப்பு ஒழுங்கு, நோக்கம் முதலானவைகளை ஆராய்ச்சி செய்து வெளியிடுகிறார்கள். ஆனால் கடவுளின் **அன்பைக்** கண்டுபிடிக்கவோ இவர்களிடத்தில் கருவியில்லை. பிதாவின் அன்பான இருதயத்தை சிருஷ்டிப்பு வெளிப் படுத்தாது.

அன்பு **இருதயத்திற்குரியது.** அது செய்கையில் ரூபிக்கப் படவேண்டும். பூமி முழுவதும் நமக்கு வேண்டிய நன்மைகளால் நிரம்பியிருந்தபோதிலும் அது தேவ தயாளமாய் எண்ணப்படலா மேயன்றி அவருக்கும் நமக்குமுள்ள **அன்புக்கு** ரூபகரமாகாது. ஓர் அரசன் தன் குடிகளுக்கு மகத்தான பொதுவிருந்து செய்யலாம். ஆனால் ஒருவனிடத்தில் அரசன் **அன்பாயிருக்கும் சம்பந்தமோ** வேறு. சிருஷ்டிப்புகளில் **தேவ அன்பை** நாம் காண்பதில்லை. உலகத்தின் காரியங்களைக் கவனித்தாலோ, தேவன் அன்புள்ளவரோ என்று சந்தேகிக்க வேண்டிய தாயிருக்கிறது. **இவ்வுலகம்** ஒரு பெரிய போர்க்களம். மனுஷனுக்கு மனுஷன் மிருகத்துக்கு மிருகம், பட்சிக்குப் பட்சி, பூச்சிக்குப் பூச்சி எங்கே பார்த்தாலும் போர். நான் இருக்க இடம்



வேண்டும்; நான் பிழைக்க ஆகாயம் வேண்டும்; நான் வளரப் பூமிவேண்டும் என்னும் தன்னயமே இப்போருக்குக் காரணம். இது தவிர, பூகம்பங்களால், எரிமலைகளால், வெள்ளப் பிரவாகங்களால், கொள்ளைநோய்களால், வறுமை பஞ்சங்களால் மடியும் ஜீவன்களுக்குக் கணக்கில்லை. உலகயுத்தத்தால் தேசங்களுக்கும் மனுமக்களுக்கும் உண்டான அழிவு நஷ்டங்களைக் கணக்கிடவோ வாயினால் சொல்லவோ முடியாது. தேசம் விட்டு நாலாதிசைகளுக்கும் ஓடிவந்த அகதிகள் படும் அவதிகள் கொஞ்சமல்ல. தேசத்தில் ஆகாரமில்லாமல் லட்சக்கணக்காய் ஜனங்கள் மாண்டு போனார்கள். மக்கள் பலவிதத்திலும் இக்கட்டுக்கும் சஞ்சலத்துக்கும் ஆளாகித் தவிக்கிறார்கள். இப்படியிருக்க கடவுள் **அன்புள்ளவர்** என்று சொன்னால் எவன் நம்புவான்? உலகத்தை இவ்வளவு சஞ்சலத்திற்குள் விட்ட கடவுளா அன்புள்ளவர்? அவர் அன்புள்ளவரானால் இத்தனை பாடுகளுக்கும் அழிவுகளுக்கும் ஏன் இடங்கொடுக்கிறார் என்னும் கேள்வி குறுக்கே வந்து நிற்கிறது.

கடவுளின் அன்பு மேலான வகையில் பலமாய் ரூபித்துக் காட்டப்பட்டாலொழிய சஞ்சலத்திற்குள்ளாகித் தவிக்கிற மனுஷன் அவரன்பை நம்பமாட்டான். ஆண்டவர் உன்னதத்திலிருந்து எவ்வளவு அருமையான இனிய வாக்குகளைக் கொடுத்தபோதிலும் மக்கள் படும்பாடுகள் அதிகமாய் வதைக்கின்றதே. “ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை.” மனுக்குலத்தின் ஆண்டவர் மனுமக்களின் ஈடேற்றத்திற்காகத் தமது உயிரைக் கொடுத்தார். தாவீது அரசன் அப்சலோமை நினைத்து: “என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான்

உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும். அப்சலோமே, என் மகனே, என் மகனே என்று சொல்லி அழுதான்." ஆனால் மகனுக்காக அரசன் மரிக்கவில்லை. ராஜாதிராஜாவாகிய நமது ஆண்டவரோ நமக்காகத் தாவீதைப் போல் அழுது புலம்பிக்கொண்டிராமல் தமது உயிரையே கொடுத்துவிட்டார். நம்மீதுள்ள தமது அளவற்ற அன்பைத் தமது **மரணத்தால் ரூபித்துக்** காண்பிக்கிறார். நமது பாடுகள் தேவ அன்புக்கு விரோதமென்றும், அவர் அன்பாயிருப்பதால் நமது வாழ்க்கையில் பாடுகள் கூடாதென்றும் நினைக்கிறோம். நமது ரட்சகர் பிதாவின் பூரண அன்புக்குரியவர். அவர் பட்டபாடுகள் கொஞ்சமல்ல. பிதாவின் அன்பை அவர் சந்தேகிக்கவில்லை. நான் இவ்வாறு பாடுபட்டு ஜீவனைக் கொடுப்பதால் பிதா என்னிடத்தில் **அன்பாயிருக்கிறார்** என்றார் (யோ.10:17). அப்போஸ்தலனைப்போல் பாடுபட்டவர்கள் யார்? தேவன் அன்புள்ளவரானால் எனக்கேன் இந்தப் பாடுகள் என்று அவர் கேட்கவில்லை. தமக்கு என்ன நேரிட்டாலும் தேவனுடைய அன்பிலிருந்து ஒன்றுமே தம்மைப் பிரிக்கமாட்டாதென்று முழங்கினார். இரண்டு காரியங்கள்: ஒன்று, தேவ அன்பு சிலுவையில் **ரூபிக்கப்பட்டிருக்கிற நிச்சயம்.** மற்றது, நாம் **பாடுபடவேண்டிய அவசியம்.** "நாம் கிறிஸ்துவை விசுவாசிக்கிறது மாத்திரமல்ல, அவர் நாமத்தினிமித்தம் பாடுபடுவதும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது" (பிலி. 1:29). அவர் அன்பும் அருளப்பட்டிருக்கிறது; பாடுகளும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. பாடுகள் இல்லாவிட்டால் நமது ஜீவியம் பலவீன குழந்தையைப் போலிருக்கும். தேவ அன்பின் பலத்தாலே பாடுகளைப் பொறுமையாய்ச் சகிக்கும்போது அது நமக்கும் நமது மூலமாய் மற்றவர்களுக்கும் ஆசீர்வாத மாயிருக்கும். நமது பாடுகள் என்னவாயினும், உலகமறிய



**ரூபிக்கப்பட்டிருக்கும்** தேவ அன்பை நாம் எப்படி மறுக்கமுடியும்?

(4) **அது மாறாத அன்பு.** ஆண்டவருடைய அன்பில் "யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலும் இல்லை", அவரது அன்பு கூடுவதும், குறைவதும், மாறுவதும், மறைவதும் இல்லை. சிநேகிதருக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டால் பிரிந்து போகிறார்கள், சிநேகத்தை இழந்துவிடுகிறார்கள். நாமும் ஆண்டவரிடம் வைக்கிற அன்பிலே நிலைத்திராமல் அடிக்கடி மாறிப்போகிறோம். அவர் நம்மில் வைத்திருக்கிற அன்பில் அவர் **மாறுவதில்லை.** இது நமக்கு எவ்வளவோ ஆறுதல்! அவரும் நம்மைப்போல் மாறுகிறதாயிருந்தால் நாம் எப்படி அவரை நெருங்கமுடியும்? சீஷர்களிடம் கடைசிவரை எத்தனையோ குற்றங்களும் குறைவுகளும் இருந்தபோதிலும் "தாம் தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" (யோ.13:1). அது முடிவில்லாத முடிவு.

உலகத்தில் என்னென்ன சம்பவித்தாலும் சூரியன் பிரகாசித்தவண்ணமா யிருக்கிறது. மனுமக்கள் சிரித்தாலும் அழுதாலும்; சாப்பிட்டாலும் பட்டினி கிடந்தாலும்; சுகமாயிருந்தாலும் நோயால் வருந்தினாலும்; பிழைத்தாலும் ஏகமாய்ச் செத்தாலும் சூரியன் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். உலகத்தில் எல்லாரும் சேர்ந்து சூரியனைத் திட்டினாலும் அது பிரகாசித்த வண்ணமாகவேயிருக்கும். பிரகாசிப்பது சூரியனுடைய தன்மை. அன்பு கடவுளுடைய தன்மை. நமது பக்தியால் தேவன் அன்பராவது மில்லை; நமது பாவத்தால் அவர் அன்பற்றுப் போவதுமில்லை. மனுஷன் இல்லாத காலத்திலும் அவர் அன்பர்தான். அன்பினாலே நம்மைப்

படைத்தார். பாவம் மனுமக்களைக் கொடுத்தது. உலகத்தின் பாவமெல்லாம் சேர்ந்து அவரன்பை அழிக்கமுடியவில்லை. நமது பாவத்தால் அவர் அன்பு குறைந்தோ மாறியோ போகவில்லை. தன் வீட்டு ஜன்னல்களையும் கதவுகளையும் அடைத்துக் கொள்ளுகிறவன் இருளில் இருப்பான். பிரகாசிக்கும் சூரியனோ அவன் வீட்டைச் சூழ்ந்து கொண்டு, உட்பிரவேசிக்க இடமுண்டோவென்று மோதிக்கொண்டிருக்கும். திறந்த நிமிஷத்தில் உள்ளே வெளிச்சம்! வெளிச்சம் உள்ளே எப்போது வந்தது, எப்படி நுழைந்ததென்று சொல்ல முடியாது. வெளிச்சம் உள்ளே வந்ததுபோலிராமல் உள்ளேயே இருந்ததுபோல் தோன்றும். அதன் உட்பிரவேசம் அவ்வளவு தீவிரமானது. தேவ அன்புக்கும் நமக்குமுள்ள சம்பந்தம் இதுபோலவே. அவருடைய அன்பு நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. தேவன் எங்கும் நிறைந்தவராகையால் அவர் தன்மையாகிய அன்பும் எங்கும் நிறைந்திருக்கிறது. அவரன்புக்கு மறைந்து போக நம்மால் முடியாது. அன்புக்குள் இருக்கிறோம், அசைகிறோம், பிழைக்கிறோம். என்றாலும் **அவரன்பு நமக்குள் பிரவேசிக்கும் வரை** நாம் அதை **அறிகிறதில்லை, அனுபவிக்கிறதுமில்லை.** மல்லிகைப் புஷ்பம் எங்கும் பரிமளித்தாலும் மூக்கடைத்தவன் வாசனை அறியாததுபோல, பாவ அடைப்பால் நாம் தேவ அன்பை அனுபவிக்க முடியவில்லை. அது நமது குற்றம்.

நல்லவர்களுக்கு தேவன் அன்புள்ளவரென்பதும், கெட்டவர்களுக்கு தேவன் பொல்லாதவரென்பதும் மனுஷருடைய எண்ணம். அப்படியானால் பொல்லாதவர்களுக்கு வேறொரு பொல்லாத கடவுளை உண்டாக்க வேண்டியதுதான். நமது அன்புள்ள பரம பிதாவை, பொல்லாத தெய்வமாக்க முடியாது. அவர் அன்பின் தன்மை வேறு தன்மையாக மாறாது. சதாகாலமும் அவர் அன்பின்



ஆண்டவராகவே இருப்பார். தங்கள் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் அவருக்குண் டென்பதை நாம் மறுக்கிறதில்லை. அப்படிச் செய்வதும் அன்புக்கு விரோதமானதல்ல. ஒரு ரண வைத்தியருடைய மகனுக்குக் கையில் சேதம் ஏற்பட்டது. சேதமான பாகத்தை எடுக்க வேண்டியது அவசியமாயிற்று. அவரே அந்த வேலையைச் செய்யவேண்டும். வேறே வைத்தியர் அங்கே இல்லை. மகன்மீதுள்ள அன்பினால் கண்ணீர் விட்டுக் கொண்டே கத்தியை எடுத்து வேலையை முடித்தார். அன்புள்ள ஆண்டவர் நமது சாவையல்ல, நமது ரட்சிப்பையே விரும்புகிறார். ஓய்வுநாட் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளில் ஒருவன் உபாத்தியாயரைப் பார்த்து: ஐயா, கடவுள் கெட்ட பையன்களை நேசிப்பாராவென்று கேட்டான். நேசிக்கமாட்டா ரென்று உபாத்தியாயர் சொன்னார். இதைப்போலவே மக்களையும் பயமுறுத்துகிற பெற்றார் இருக்கிறார்கள். இது சரியன்று. "தேவன் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று சொல்லும்போது உலகத்தில் இருந்தவர்கள் யார்? "நல்லவன் ஒருவனுமில்லை, எல்லாரும் வழி விலகி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்" என்று வேதம் கூறுகிறது. கெட்டுப் போனவர்களைத்தான் **அன்பு** தேடிவந்தது. அவருக்கு **இணங்கி நடக்கிறவர்கள்** அன்பை அனுபவிக்கிறார்கள்; அவரை விட்டு **விலகிப் போகிறவர்கள்** அன்பை அனுபவிப்பதில்லை. இதுதான் வித்தியாசம். தகப்பனைவிட்டுத் தூரதேசம் போன மகன் தகப்பன் அன்பை இழந்தான். தகப்பனுடைய அன்போ மாறவில்லை. தன் பாவத்தை உணர்ந்து பயத்தோடும் சந்தேகத்தோடும் தகப்பனிடம் வந்தான். தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி ஓடி கட்டியணைத்து முத்தஞ் செய்தான். நான் என் தகப்பன் அன்புக்குத் துரோகம் செய்தும், என் தகப்பன்

அன்பு கொஞ்சமும் மாறவில்லையே என்று கண்டு மகன் ஆச்சரியப்பட்டான். நீ எவ்வளவு கெட்ட பாவியானாலும் அன்பரிடம் போனால் இரக்கத்தைக் காண்பாய்; அவரை அசட்டை செய்து உன் அக்கிரமத்தில் துணிந்து நடந்தால் **உனக்கு நீயே** அழிவைத் தேடிக்கொள்ளும் சத்துருவாயிருப்பாய். ஆண்டவரைக் குற்றப்படுத்த முடியாது.

(5) **அது நம்மை ஆசீர்வதிக்கும் அன்பு.** "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று ஆண்டவர் சொன்னபடி, **தம்மையே** நமக்குக் கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தார். தமது அன்பை **ரூபிக்கிறதற்காகமாத்திரம்** அவர் ஜீவனை விட்டவரல்ல. ஒருவன் தன் சிநேகிதன் மீதுள்ள அன்பை ரூபிக்கும்படி தன் உயிரை விடுவானானால் அது பெரிய நஷ்டமாகும். ஆனால் தன் சிநேகிதனை ஆபத்திலிருந்து **ரட்சிப்பதில்** தன் உயிரைக் கொடுக்க நேரிட்டால் அதுவே சிறந்த தியாகமாகும். ஆண்டவருடைய அன்பின் மரணம் நமக்கு அளவில்லாத ஆசீர்வாதங்களைச் சம்பாதித்திருக்கிறது. "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது ரத்தத்தினாலே நமது பாவங்களற நம்மைக் கழுவி, தமது பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார்." இதற்கு மிஞ்சின மேன்மை எங்கேயிருக்கிறது? தமது மரணத்தின் மூலமாய்ப் பரம வாசலைத் திறந்து, நாம் நித்திய மகிமைக்குள் பிரவேசிக்கும் வழியை உண்டாக்கினார். நாம் அனுபவிக்கும் சகல ஆசீர்வாதங்களும் அவரது மரண பலன்களே. அவருடைய அன்பின் கரத்திலிருந்து நம்மைப் பிரிக்க வானத்திலோ பூமியிலோ வல்லமை கிடையாது. "நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே." தேவனுடைய அன்பு **சர்வ வல்லமையுள்ளது.**



## 7. சகோதர அன்பைப்பற்றி கிறிஸ்துவின் போதனை என்ன?

நாம் தேவனிடத்தில் அன்புகூரவேண்டியது பிரதானமாயிருந்தும் **சகோதர அன்பைப்பற்றிய** போதனைகள் புதிய ஏற்பாட்டில் நிறைந்திருக்கக் காண்கிறோம். உலகத்தில் மக்கள் அனுபவிக்கும் பாடுகள் கவலைகளைக் கவனிக்கும் போது சகோதர அன்பு நமக்குள் மிகவும் அவசியமாயிருக்கிறது. ஒரு அன்பான பார்வை, ஒரு அன்பான வார்த்தை, ஒரு அன்பான செய்கை மனஞ் சோர்ந்திருப்பவர்களுக்கு எவ்வளவோ ஆறுதலைக் கொடுக்கிறது. அன்பான சொல்லுக்குப் பணச் செலவு இல்லை; ஆனால் அதன் பலனோ பெரிது. தேவ அன்பைமாத்திரம் நினைத்து சகோதர அன்பை அசட்டை செய்கிறோம், தேவனுக்கும் நமக்கும் அன்பிருந்தால் போதாதா என்கிறோம். அது முடியாத காரியம். தேவ அன்பு தனித்து நிற்காது. தேவ அன்பிருந்தால் சகோதர அன்பு **தானாகவே** வரும். இது விஷயத்தில் ஆண்டவர் போதனையைக் கவனிப்போம்.

(1) **சகோதர அன்பைப் புதிய கட்டளை என்கிறார்.** "உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்தால் பரலோகப் பிதாவுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்" என்று மலைப் பிரசங்கத்தில் சொன்னார். இதைக் கேட்டவர்களுக்கு

இப்போதனை நூதனமாகயிருந்தது, ஏனென்றால் தங்களுக்குப் பிரியமானவர்களைச் சிநேகிப்பதும் சத்துருக்களைப் பகைப்பதும் ஆதிமுதல் மனுஷ சுபாவமாகையால் இது எப்படி முடியுமென்று திகைத்தார்கள். சகோதரரிடத்திலும், மற்ற மனுஷரிடத்திலும், சத்துருக்களிடத்திலும் அன்பாயிருக்க வேண்டுமென்பது ஆண்டவர் போதனை. தெய்வீக அன்பின் தன்மை அதுதான். அவர் பாடுபடுவதற்கு முந்தின நாள் இரவில் தமது சீஷர்களைப் பார்த்து: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற **புதிதான கட்டளையை** உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்றார். மறுபடியும் அவர்களைப் பார்த்து: "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என் கற்பனையாயிருக்கிறது" என்றார். ஆண்டவர் ஒரு கட்டளையைப் **பிரதானமென்று** சொல்லும் போது நாம் அதை மதித்து நடக்கவேண்டும். ஆனால் அதைத்தான் நாம் பிரதானமாக மீறி நடக்கிறோம்.

(2) **சகோதர அன்பைத் தமது அடியாருக்கு அடையாளமாகக் கொடுக்கிறார்.** நாம் கிறிஸ்தவர்கள் என்பதற்கு அடையாளங்கள் எவை? நமது உடை, நடை, பாவனையா? ஞானஸ்நானமும் இராப்போஜனமுமா? ஆலயங்களும் ஆராதனைகளுமா? ஜெபக்கூட்டங்களும் பாட்டுக் கோஷ்டங்களுமா? ஆம், இவை யாவும் நல்ல காரியங்களே. இவைகளில் ஒன்றையாகிலும் கிறிஸ்தவர்களுக்கு அடையாளமென்று ஆண்டவர் சொல்லவில்லை. "நீங்கள் ஒருவரிலொருவர் **அன்புள்ளவர்களாயிருந்தால் அதினாலே** நீங்கள் என்னுடைய **சீஷர்களென்று** எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்றார். மற்றவர்கள் சகோதர அன்பை



நம்மில் காண்கிறார்களா? இந்த **அன்பின் அடையாளம்** ஒன்று தவிர மற்றதெல்லாம் நம்மிலுண்டல்லவா? சபைகளின் நிலைமை இன்று எப்படி இருக்கிறது?

(3) **சகோதர அன்புக்காகவே இவைகளைப் போதிக்கிறேன்** என்கிறார். ஆண்டவருடைய போதனைகளின் மொத்தக் கருத்து தேவ அன்பும் சகோதர அன்பும் தான். இவை இரண்டும் பலிக்காமற்போனால் அவர் பட்டபாடுகளும் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் வீணாகும். "நீங்கள் ஒருவரிலொருவர் **அன்பாயிருக்க வேண்டுமென்றே** இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்" என்கிறார். மேல் வீட்டில் இத்துடன் மூன்று தரம் சகோதர அன்பின் அவசியத்தைப்பற்றிப் பேசி விட்டார். அதுவே அவருடைய இருதயத்தை நிரப்பிக் கொண்டிருந்தது. நான் இதுவரை உங்களுக்குப் போதித்ததும், திராட்சச்செடி கொடிகளைப்பற்றிய போதனைகளும் நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கே. நான் மறைவேன், நீங்கள் இருப்பீர்கள். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் மனுஷர் என்னை உங்களில் காண்பார்கள் என்கிறார்.

கிறிஸ்து உயிரோடிருக்கிறார் என்பதற்குக் கிறிஸ்து மார்க்கம் ரூபகாரம் என்கிறார்கள். புத்தன் மரித்தும் புத்தமார்க்கம் உலகில் இல்லையா? மகமது மரித்தும் மகமது மார்க்கம் உலகை ஆண்டுகொள்ளவில்லையா? இந்துமார்க்கமும் மற்ற மார்க்கங்களும் இல்லாது அழிந்துபோயிற்றா? மார்க்க ஆசாரங்கள் அல்ல; ரட்சிப்பின் மாறுதலும் சகோதர அன்பும் சத்திய மார்க்கத்தின் அடையாளங்களாகும்.

(4) **சகோதர அன்பை வாக்குப்பண்ணுகிறார்.** இப்போது நான் சொல்லுகிறது உங்களுக்கு எட்டாத

உயரமாயிருக்கிறது. இவ்வுலகில் பற்பல சுபாவமுள்ள மனுஷரோடு அன்பாய் நடக்கமுடியுமா வென்று திகைக்கிறீர்கள். இதோ நாள் வருகிறது. "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருப்பதை அந்நாளில் நீங்கள் அறிவீர்கள்" அதாவது, இப்போது உங்களுக்கு முடியாததாய்த் தோன்றுகிற **தெய்வீக மனுஷிக ஐக்கியம்** உங்கள் அனுபவத்திற்கு வரும்போது நீங்களே அதை அறிந்து கொள்வீர்கள் என்கிறார். கிறிஸ்து அவர்களில் வசிக்கும் மேலான ஐக்கியம் அவர்களுக்குக் கிடைக்கும் போது சகோதர அன்பிலே நடந்துகொள்வது அவர்கள் அனுபவமும் சிலாக்கியமுமாகும்.

(5) **சகோதர அன்புக்காகப் பிதாவை நோக்கி ஜெபிக்கிறார்.** சகோதர அன்பு ஆண்டவர் மனதைவிட்டு விலகவில்லை. அதுவே பிரதானமாக ஆண்டுகொண்டிருக்கிறது. ஆகையால் அவர் பிதாவை நோக்கி: "பிதாவே, அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவேண்டும். நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்க வேண்டும். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டும். ஒற்றுமையில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படி நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று ஜெபித்தார். சகோதர அன்பின் ஒற்றுமையினாலே கிறிஸ்து பிதாவினால் அனுப்பப்பட்டவர் என்பதையும், குமாரனில் பிதா அன்பாயிருக்கிறது போலவே அவர் கிறிஸ்துவின் அடியாரிடத்திலும் அன்பாயிருக்கிறார் என்பதையும் உலகம் அறிந்து விசுவாசிப்பதற்கு சகோதர அன்பு அவசியம் என்கிறார். இதை நாம் கவனிக்கவேண்டும்.

(6) **சகோதர அன்பை நிறைவேற்றுகிறார்.** அன்பாயிருக்கும்படி, **கட்டளையிட்டார்.** அன்பை சீஷர்களுக்கு



**வாக்குப்பண்ணினார்.** அவர்கள் அன்பர்களாகும்படி **ஜெபித்தார்.** பிதாவிடம் சென்று ஆவியை அனுப்பி சகோதர அன்பை அவர்களுக்குள் **பலிதப்படுத்தினார்.** சகோதர அன்பு தேவ அன்புக்குப் பிரத்தியேகமானதல்ல. சகோதர அன்பு வேறே, தேவ அன்பு வேறேயல்ல. சகோதர அன்பும் தேவ அன்பும் ஒன்றுதான். ஒரே தன்மையுள்ளதுதான். "என் பிதா என்னில் அன்பாயிருக்கிறது **போல** நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; நான் உங்களில் அன்பாயிருக்கிறது **போல** நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்பதைக் கவனிக்கும்போது தேவ அன்பையே முதலிலிருந்து கடைசிவரை காண்கிறோம். பிதாவிலிருந்து புறப்பட்டு குமாரனை நிரப்புகிற அன்பும், குமாரனிலிருந்து நமக்குள் வருகிற அன்பும், நம்மிலிருந்து சகோதரருக்கும் மற்ற மனுஷருக்கும் போகவேண்டிய அன்பும் ஒரே தேவ அன்புதான். இது நமது பிரயாசத்தால் வரக்கூடிய அன்பல்ல. பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் ஒன்றாகக்கூடிக் காத்திருந்தபோது ஆண்டவர் தமது ஆவியால் அவர்களை நிரப்பினார். அவருடைய ஆவி ஏற்கெனவே நாம் கவனித்தபடி தேவ அன்பும் மனுஷர் அன்புமுள்ளதாகையால், அவருடைய ஆவியினால் அவர்கள் நிறைந்தபோது தேவ அன்பும் சகோதர அன்பும் தங்களுக்குள் பலிதப்பட்டதை அனுபவத்தில் கண்டார்கள். "விசுவாசிகளான திரளான கூட்டத்தார் **ஒரே இருதயமும் ஒரே மனமும்** உள்ளவர்களாயிருந்தார்கள்". சகோதர அன்பிலே திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. நமது சபைகளின் நிலைமை என்ன? நாம் ஒருவருக்கொருவர் எப்படி நடந்து கொள்ளுகிறோம்? அன்பற்ற சபைகள் அழிவைத் தேடுகின்றன.

## 8. சகோதர அன்பைப்பற்றி பவுலின் போதனை

சகோதர அன்பைப்பற்றிப் பவுல் தமது நிருபங்களில் எழுதியிருந்தபோதிலும் 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரம் ஒன்றே நமக்குப் போதும். இதிலடங்கியுள்ள போதனைகள் பரிசுத்தவான்களையும் மகாத்து மாக்களையும் பிரமிக்கச் செய்கின்றன. அன்பின் யோவான் இதை எழுதியிருக்க வேண்டியது. பவுலுடைய இயற்கைச் சுபாவம் கண்டிப்பும் வைராக்கியமுமானது. பர்னபாவுக்கும் அவருக்கும் கடும்கோபமூண்டு, ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்ததையும், பிரதான ஆசாரியனைப் பார்த்து: "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே கர்த்தர் உம்மை அடிப்பார்" என்று அவர் சொன்னதையும், தமது போதகத்துக்கு எதிர்த்து நிற்பவர்களைச் சகிக்கமுடியாமல் ஆக்கினை கூறுவதையும் கவனித்தால் **அன்புப்பற்றி** இவ்வளவு உன்னதமான காரியங்களை இவர் எழுதியதெப்படி, என்று ஆச்சரியப்படுவோம். அன்பின் ரட்சகரைத் தமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு பிழைத்ததினாலே, அந்த அன்பு அவரை நெருக்கி ஏவ, ஆவியானவரின் போதனையாய் இவ்வளவு அருமையான விஷயங்களை வெளியிடலானார். யோவானுக்கும் இவருக்கும் வேறு வித்தியாசங்களிருந்த போதிலும் கிறிஸ்தவ ஜீவியத்தில் **சகோதர அன்பு** பிரதானமென்பதில் இருவரும் ஒன்று. இந்த அதிகாரத்தில் அன்பின் **சிரேஷ்டம்,** அன்பின் **விளக்கம்,** அன்பின் **காலம்** என மூன்று காரியங்களைச் சொல்லுகிறார்.

(1) **அன்பின் சிரேஷ்டம்** (வச. 1-3). கொரிந்து கிறிஸ்தவர்கள் **வரங்கள்** பெற்றவர்கள். அவ்வரங்களைக் குறித்துப் பெருமை பாராட்டினார்கள். வரங்கள் பெற்றும் கிருபையற்றவர்கள். சகல பாவங்களுக்கும் அடிமைகள்.



கிருபையற்ற வரங்களைப் பார்க்கிலும் வரங்களற்ற கிருபை நல்லது. கிருபை ஜீவியத்தை ஆசீர்வதிக்கும். வரங்கள் ஊழியத்திற்கு அனுகூலமாகும். நான் பூலோக பரலோக பாஷைகளைப் பேசினாலும் **அன்பற்றவனாயிருந்தால்** என்பேச்சு காதடைக்கும் வெண்கல இரைச்சலேயன்றி வேறில்லை. தீர்க்கதரிசன வரம், சகல ரகசியங்கள், சகல அறிவு, சகல விசுவாசம் எனக்கிருந்தாலும் நான் **அன்பற்றவனா யிருந்தால்** ஒன்றுமேயில்லை. எனக்குள்ள தெல்லாவற்றையும், நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும் **அன்பில்லையென்றால்** எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை என்கிறார். எல்லாவற்றிலும் **அன்புதான்** பிரதானம். எவ்வளவு அறிவு, திறமை, சாமர்த்தியம் ஒருவனுக்கிருந்தாலும் அவன் அன்பற்றவனாயிருந்தால் ஒருவரும் அவனை விரும்பமாட்டார்கள். தேவ ஊழியனுக்கு இருக்க வேண்டிய சிரேஷ்ட லட்சணம் **அன்புதான்.** தேவ ஊழியத்தின் வெற்றி அன்பிலிருக்கிறது. வட இந்தியாவில் ஒரு மிஷனெரி இருந்தார். கிறிஸ்துவின் அன்பால் நிறைந்தவர். அவர் எவ்வளவோ பிரயாசப்பட்டும் தேசத்துப் பாஷையைக் கற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் மனஞ்சோர்ந்து, ஒருநாள் தன்சபையாரைப் பார்த்து, உங்கள் பாஷையைக் கற்று, உங்களுக்குப் போதிக்க என்னால் முடியவில்லை. நான் என் சுயதேசத்திற்குத் திரும்பிப் போய்விடுகிறேன் என்றார். இதைக் கேட்டவுடன் அவர்கள் அழுகையும் கண்ணீருமாக அவரைச் சூழ்ந்துகொண்டு, ஐயா உங்கள் **அன்பு** ஒன்றே எங்களுக்குப் போதும், உங்கள் அன்பின் ஜீவியத்தால் நாங்கள் மாறுதலடைந்திருக்கிறோம். நீங்கள் எங்களை விட்டுப் போகக்கூடாது. கிறிஸ்துவின் அன்பை உங்களில் காண்கிறோம்.

அது உங்கள் பேச்சைவிட வல்லமையுள்ளதா யிருக்கிறது என்றார்கள். அன்பு ஒன்றுதான் குழந்தைகளும் எல்லோரும் அறியக்கூடிய பொதுப் பாஷை. அன்புக்கு நிகரானது ஒன்றுமில்லை; அன்புக்கு மேலானதும் ஒன்றுமில்லை.

(2) **அன்பின் விளக்கம்** (வச. 4-7). சகலத்திலும் **அன்பே சிரேஷ்டம்** என்று அப்போஸ்தலன் சொன்னபின், அன்பின் **லட்சணங்களை** விவரிக்கிறார். **அன்பு, அன்பு** என்று பேசுகிறார். அன்பு என்பது **குணம்;** அது ஆள் அல்ல. குணத்தை நாம் பார்க்கமுடியாது. நற்குணமானாலும் துர்க்குணமானாலும் மனுஷனுடைய **நடக்கையிலேதான்** அதைக் காணமுடியும். அன்பு என்பதற்குப் பதிலாக **அன்பன்** என்று வாசித்தோமானால் மிகத் தெளிவாயிருக்கும். **அன்பன்** ஆத்திரப்படாமல் நீடிய சாந்தமாயிருப்பான். **அன்பன்** கடினமாயிராமல் தயவுள்ளவனா யிருப்பான். **அன்பன்** பொறாமைப்படாமல் மனரம்மியமா யிருப்பான். **அன்பன்** தன்னைப் புகழாமல் அடக்கமாயிருப்பான். **அன்பன்** இறுமாப்பாயிராமல் தாழ்மையாயிருப்பான். அயோக்கியமானதைச் செய்யாமல் மரியாதையாய் நடப்பான். தற்பொழிவை நாடாமல் பிறர் நலம் கருதுவான். சினமடையாமல் பொறுமையாயிருப்பான். தீங்கு நினையாமல் நன்மை செய்ய நாடுவான். அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படுவான். சகலத்தையும் தாங்குவான், சகலத்தையும் விசுவாசிப்பான், சகலத்தையும் நம்புவான், சகலத்தையும் சகிப்பான். இப்படிப்பட்ட **அன்பனை** எங்கே கண்டோம்? எங்கே காணப்போகிறோம்? அப்போஸ்தலன் அன்பின் லட்சணங்களை விளக்கிக் காட்டின படியால் இவைகளைத் தமது ஜீவியத்தில் பூரணமாய் அடைந்துவிட்டதாக அவர் எண்ணவில்லை. "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறிவிட்டேன் என்று எண்ணுகிறதில்லை, இப்பொழுது நான் குறைந்த



அறிவுள்ளவன்" என்று அவரே அறிக்கையிடுகிறார். "கிறிஸ்துவின் அறிவுக்கெட்டாத **அன்பை** அறிந்துகொள்ள வேண்டுமென்கிற" ஆவல் அவருக்கிருந்தது. அன்பின் பிரவாகமாகிய **இயேசுகிறிஸ்துவைத்** தன் கண்முன் நிறுத்தி அவரில் பிரகாசித்த அன்பின் லட்சணங்களை இங்கே எடுத்துரைக்கிறார். அன்பின் பரிபூரண லட்சணங்களை உடையவர் கிறிஸ்து ஒருவர்தான். அவர் நமக்குள் வசிக்கும் அளவுக்குத் தக்கதாக அன்பின் லட்சணங்கள் நம்மில் உண்டாகும் என்பது நிச்சயம்.

(3) **அன்பின் காலம்** (வச. 8-13). **"அன்பு ஒருக்காலும் ஒழியாது"** என்கிறார். பாஷைகள், தீர்க்கதரிசன வரம், சகல அறிவு இவையாவற்றிலும் அன்புதான் சிரேஷ்டம். இங்கே பாஷைகள் ஓய்ந்துபோகும், **தீர்க்கதரிசனங்களும்** அறிவும் ஒழிந்துபோகும், அன்போ ஒருக்காலும் ஒழியாது. **பாஷைகள் இல்லாமலே அழிந்து போகும்.** அறிவும் அதுபோல இல்லாமலே **ஓய்ந்துபோகும்** என்பது அப்போஸ்தலனுடைய கருத்தல்ல. நிறைந்த அறிவு வரும்போது குறைந்த அறிவு மறையும் என்கிறார். குழந்தை பையனாகிறான், பையன் புருஷனாகிறான். குழந்தையின் வளர்ச்சிதான் புருஷன். குழந்தை மாண்டுபோனால் புருஷனைக் காணபதில்லை. புருஷனில் குழந்தை மறைந்துபோகிறதுபோல நமது அறிவு இல்லாமற்போகாமல் நிறைவான அறிவுக்குள் அடங்கிப்போகும். குறைந்த அறிவை நாம் அசட்டை செய்தால் பூரண அறிவுக்கு வழியிராது.

மூன்று காரியங்களைச் சொல்லி முடிக்கிறார். "இப்போது விசுவாசம் நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் **அன்பே** பெரியது" என்கிறார். இவைகளை

ஆட்களாகப் பாவித்துப் பேசுவோமானால், இங்கே விசுவாசி, நம்பியான், அன்பன் என்ற மூவர் இருக்கிறார்கள். இவர்களில் அன்பனே சிறந்தவன் என்று சொல்லலாம். விசுவாசம் பார்வையாகவும், நம்பிக்கை அனுபவமாகவும் மாறிவிடுவதால் மறுமையில் விசுவாசம் நம்பிக்கை அவசியமில்லை என்று நினைப்போம். பாஷைகள் வரங்களைப்போல் விசுவாசமும் நம்பிக்கையும் ஒழிந்துபோகும் என்று அப்போஸ்தலன் சொல்லவில்லை. விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றும் **நிலைத்திருக்கிறது;** இவற்றில் அன்பே பெரியது என்கிறார். காரணமில்லாமல் காரியம் ஆகாது. விசுவாசம் நம்பிக்கைக்கும், நம்பிக்கை அன்புக்கும் காரணமாயிருக்கிறது. சிநேகிதருக்குள் விசுவாசம் போய்விட்டால் அந்நிமிஷமே அவர்கள் சிநேகம் கெடும். நாம் மறுமையில் ஆண்டவரை முகமுகமாய்ப் பார்ப்பதினாலே விசுவாசம் நம்பிக்கை அவசியமில்லை என்று நினைக்கக் கூடாது. சீஷர்கள் ஆண்டவரை முகமுகமாய்ப் பார்த்து, அவரோடு நெருங்கிப் பழகியிருந்தபோதிலும், அவர்கள் தம்மை விசுவாசிக்கும்படி, தம்மை நம்பும்படி திரும்பத் திரும்பப் போதித்தார். மறுமையில் அவரிடம் போனவுடனே அவர்மீதுள்ள விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அவர்கள் விட்டு விடுவார்களா? **இம்மையின் தொடர்ச்சிதானே மறுமை.** சிருஷ்டி கர்த்தாமீதுள்ள விசுவாசப்பற்றையும் நம்பிக்கையையும் விட்டதினாலேதானே தேவதூதர்கள் பரம வாசஸ்தலத்திலிருந்து பிசாசுகளாகக் கீழே தள்ளப்பட்டார்கள். மேலும், நாம் பரத்தில் பிரவேசித்தவுடனே கடவுளைப்போல் சர்வவல்லமை, சர்வஞானமுள்ளவர்களாகி விட்டால் நமக்கு **வளர்ச்சி** அவசியமிராது. ஆனால் நாம் அவருடைய பிள்ளைகளாக, அறிவுக்கெட்டாத அவரது பேரன்பை அறிகிற அறிவில் **எக்காலமும் வளர வேண்டியதிருப்பதால்** விசுவாசமும்



நம்பிக்கையும் தொடர்ந்தே வரும். விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் முப்புரி நூல்போல் இணைக்கப்பட்டு **நிலைத்திருக்கிறது.** இவற்றில் **அன்புதான்** நமது பகிரங்க ஜீவியமாயிருக்கும். விசுவாசமும் நம்பிக்கையும் அன்புக்குள் அடங்கியிருக்கும் என்பது கருத்து.

## 9. சகோதர அன்பைப்பற்றி யோவான் போதனை

இங்கே யாதொரு விஸ்தரிப்பில்லாமல் ஆவியானவர் யோவானைக்கொண்டு போதிக்கிறதைக் கவனிப்போம். **“தன் சகோதரனிடத்தில்** அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான். நீதியைச் செய்யாமலும் **தன் சகோதரனில்** அன்புகூராமலுமிருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல. நாம் **ஒருவரிலொருவர்** அன்பகூரவேண்டு மென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமா யிருக்கிறது. நாம் **சகோதரரிடத்தில்** அன்புகூருகிறபடியால் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான். தன் **சகோதரனைப்** பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராதென்று அறிவீர்கள். அவர் நமக்குக் கட்டளையிட்டபடி **ஒருவரிலொருவர்** அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது. பிரியமானவர்களே, **ஒருவரிலொருவர்** அன்பாயிருக்கக் கடவோம், ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க நாமும் **ஒருவரிலொருவர்** அன்புகூரக் கடனாளிகளா

யிருக்கிறோம். நாம் **ஒருவரிலொருவர்** அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று ஒருவன் சொல்லியும் **தன் சகோதரனைப்** பகைத்தால் அவன் பொய்யன்; தான் கண்ட **சகோதரனிடத்தில்** அன்பு கூராதவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? **தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டு மென்கிற** இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்" இவ்வளவு திட்டமும் தெளிவுமான போதனைக்கு விளக்கமும் விஸ்தரிப்பும் அவசியமே இல்லை.

சகோதர அன்பைக் குறித்துப் பேதுரு : **"எல்லாவற்றிற்கும் மேலாக** ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர் களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும்" என்றும் "நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனவுருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாய் இருங்கள்" என்றும் போதிக்கிறார். **யாக்கோபு** : "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிகப் பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்" என்கிறார். "தேவ அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்" என்று **யூதா** எழுதுகிறார். இவ்வாறு கிறிஸ்தவ ஜீவியத்தில் **சகோதர அன்பு** பிரதானமென்பதைப் பவுலும், பேதுருவும், யோவானும், யாக்கோபும், யூதாவும், தேவகுமாரனாகிய நமதாண்டவரும் ஏகவாக்காய்ப் போதிக்கிறார்கள். இந்தப் பிரதான போதனையை நாம் கவனிக்கிறோமா?



## 10. நமது அனுபவமென்ன?

அப்போஸ்தலன் விளக்கின அன்பின் லட்சணங்களை நமக்குள் காண்பது அரிதாயிருக்கிறது. அநேகமாய் அதற்கு விரோதமான தீயகுணங்களல்லவோ நமது ஜீவியத்தைப் பாழாக்குகின்றன. கோபம், மூர்க்கம், பெருமை, பிடிவாதம், பகை, பிரிவினை, பொறாமை, இறுமாப்பு, தன்னயம், தீங்கு விளைத்தல், அவமானப்படுத்தல் முதலான துர்ச்சுபாவங்களால் நிறைந்திருக்கிறோம். ஆண்டவர் அன்பின் ஜீவியத்தை **மகா பிரதானமாகப்** போதித்திருந்தும் நாம் அதைக் கவனிக்கிறதில்லை. தேவன் நமக்குப் பாராட்டுகிற அன்பைவிட, நாம் தேவனிடத்தில் வைக்கும் அன்பைவிட, **சகோதர அன்பையே** அவர் முக்கியமாய்ப் போதித்திருக்கிறார். அதாவது, தேவன் நமக்குப் பாராட்டுகிற அன்பானாலும், நாம் தேவனில் வைக்கும் அன்பானாலும் அது சகோதர அன்பிலே போய் முடியவேண்டியது. அன்பர்களுக்குத்தான் தமது ராஜ்யத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். அன்பற்றவர்களுக்கு அங்கே இடமில்லை.

இரட்சகருடைய ஜீவியத்தில் அன்பின் லட்சணங்களைப் பிரதானமாகக் காண்கிறோம். மனுமக்கள்மீது அவருக்கிருந்த மனதுருக்கம், இரக்கம், அனுதாபம், பரிதாபம் இவ்வளவென்று சொல்லமுடியாது. **அனுதாபம்** என்பதற்கு **உடன் உணர்ச்சி** என்று அருத்தம். உடன் சந்தோஷம் உடன் துக்கம்; சமசந்தோஷம் சமதுக்கம் என்றும் சொல்லலாம். தாம் வேறே, நாம் வேறே என்று அவர் நினைக்கவில்லை. சந்தோஷப்படுகிறவர் களுடனே சந்தோஷப்பட்டார், அழுகிறவர்களுடனே அழுதார். ஒருவருடைய சந்தோஷத்தை நமது சந்தோஷமாகவும், ஒருவருடைய துக்கத்தை நமது துக்கமாகவும் உணருதல் அன்பின் லட்சணமாகும். நமது காரியமோ இதற்கு

எதிரிடையாகயிருக்கிறது. மற்றவர்களுடைய சந்தோஷம் நமக்கு சஞ்சலம்; அவர்களுடைய அழுகை நமக்கு ஆனந்தம். மற்றவர்களுடைய மேன்மை நமக்குப் பொறாமை, அவர்களுடைய அவமானம் நமக்கு மகிழ்ச்சி. இவ்வளவு மோசமான சுபாவம் நமக்கிருப்பதைக் குறித்து தேவமக்கள் சஞ்சலப்படாதிருக்க முடியாது. இந்த இழிவான குணம் நமக்குள்ளிருப் பதினாலேதான் மற்றவர்கள் தங்கள் சந்தோஷத்தையோ துக்கத்தையோ வெளிவிடாமல் மறைக்கிறார்கள். குடும்பத்தில் ஒரு விவாகம் நடக்கிறதாயிருந்தால் அந்தரங்கமாய் அதைப் பேசி முடித்து, அவசரமாக ஓலை கூறி, வழக்கமான புதன்கிழமைக்குக் காத்திராமல் திங்கள் கிழமையிலேயே கலியாணத்தை முடித்துவிடுகிறார்கள். இவ்வளவு ரகசியமாகக் காரியங்களைச் செய்தாலும், எப்படியோ அதை அறிந்து அதைக் கலைத்துவிடும்படி மொட்டைக் காகிதங்களை எழுதும் கிறிஸ்தவ நிபுணர்களும் உண்டு. ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவுமாயிருக்கவேண்டிய கிறிஸ்தவர்கள் இப்படி ஒருவருக்கொருவர் பயந்து சாகிறதாயிருந்தால் இல்லாமற் போவதே நல்லது. அன்பற்றவர்கள் ஆசரிக்கும் ஓய்வுநாட்கள், ஆராதனைகள், சபைக் கூட்டங்களைக் குறித்து: “நான் அவைகளைச் சகிக்கமாட்டேன், என் ஆத்துமா அவைகளை வெறுக்கிறது, அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது, அவைகளைச் சுமந்து இளைத்துப்போனேன், உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள், நன்மைசெய்யப்படியுங்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா. 1:12-17). ஒருவருடைய சந்தோஷத்தில் நாம் சேர்ந்து, சந்தோஷப்படாவிட்டால் அவர்கள் சந்தோஷம் குறைவுபடும். ஒருவருடைய துக்கத்தில் நாமும் சேர்ந்து துக்கப்படாவிட்டால் அவர்கள் தங்கள் துக்கத்தில் அமிழ்ந்துபோவார்கள். ஆட்டைக்



கண்டுபிடித்தவன் தன் சினேகிதரை அழைத்து, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடித்தேன், எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது நீங்களும் என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள் என்கிறான். அப்படியே வெள்ளிக் காசைக் கண்டுபிடித்தவளும் தன் சிநேகிதிகளையும் மற்றவர்களையும் அழைத்துத் தன்னோடு சந்தோஷப்படும்படி விரும்புகிறாள். மகனைக் கண்டடைந்த தகப்பன் எல்லாரோடும் சேர்ந்து சந்தோஷப்பட்டான் என்று ஆண்டவர் சொன்னார்.

கிறிஸ்தவர்கள் தொகை பெருகலாம், ஆலயங்கள் எழும்பலாம், ஆராதனைகள் மும்முரமாய் நடக்கலாம், பீடத்திலிருந்து பிரசங்கங்கள் தொனிக்கலாம். இவையாவுமிருந்தும் **சகோதர அன்பில்லையென்றால் சகலமும்** பாழாகும். வேதபாரகர் பரிசேயருடைய ஆராதனைகளும், பலிகளும், பண்டிகைகளும் அழிந்துபோயின. அவர்களிடத்தில் அன்போ, இரக்கமோ, தயவோ, தயாளமோ இல்லை. அவர்களை நம்பின யூத ஜனங்களின் ஆத்ம நிலைமை மிகவும் மோசமாயிருப்பதைக் கண்டு ஆண்டவர் மனதுருகினார்; அவர்களுக்காகக் கண்ணீர்விட்டழுதார். தசமபாகத்திலும் சகோதர அன்பே பிரதானம். கொர்பான் காணிக்கையிலும் பெற்றார்மீது அன்பே பிரதானம். பலிபீடத்தில் வைக்கும் காணிக்கையைவிட சகோதரனோடு ஒப்புரவாகுதலே பிரதானம். ஜெபத்தைவிட சகோதரன் குற்றத்தை மன்னிப்பது பிரதானம் என்று ஆண்டவர் போதிக்கிறார்.

ஆண்டவர் போதிக்கிற அன்பின் ஜீவியம் நமது சுபாவத்துக்கு எட்டாத உயரமாயிருக்கிறது. பிறப்பு முதல் தன்னயத்திலே வேரூன்றி வளர்ந்து அன்புக்கு அந்நியராய்ப் போய்விட்டோம். அன்பிலே நடந்து கொள்வது மலையாயிருக்கிறது. சிலர், நாங்கள் தேவனிடத்தில் அன்பாயிருக்கிறோம், மற்றவர்களிடத்தில் அன்பாயிருக்க

முடியவில்லை என்கிறார்கள். வேறு சிலர் : நாங்கள் மனுஷரிடத்தில் அன்பாயிருக்கிறோம், சமுதாய ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறோம், ஜனங்களைச் சீர்திருத்தப் பிரயாசப்படுகிறோம். ஆனால் தேவனிடத்தில் அன்பாயிருக்க முடியவில்லை என்கிறார்கள். இந்த இருதிறத்தார் சொல்வதும் பொய். ஆண்டவர், தேவ அன்பு வேறே, சகோதரர் அன்பு வேறே என்று பிரிக்காமல் இரண்டையும் ஒன்றாய் இணைத்திருக்கிறார். தேவனிடம் அன்பாயிருக்கிறது மெய்யானால் சகோதரரிடம் அன்பில்லாதிருக்கமுடியாது; சகோதரரிடம் அன்பாயிருக்கிறது மெய்யானால் தேவ அன்பில்லாமல் அது முடியாது. தேவ அன்பும் சகோதர அன்பும் பட்சியின் இரு சிறகுகள் போலிருக்கிறது. ஒரு சிறகாலே பட்சி பறக்காது. கற்பனைகளில் **எந்தக் கற்பனை** பிரதானமென்று வேதபாரகன் பன்மையில் அல்ல **ஒருமையில்** கேட்டான். ஆண்டவர் உத்தரவாக தேவ அன்பும் சகோதர அன்புமே பிரதான **கற்பனை** என்று **ஒருமையில்** பதிலளித்தார். **தேவ அன்பும் சகோதர அன்பும் ஒரே அன்புதான்.** தேவ அன்பைப்பெற்று அந்த அன்பையே பிறருக்குக் கொடுக்கிறோம். "தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன்; தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டு மென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்" (1 யோ. 4:20, 21). சகோதர அன்பில்லாததினாலேதான் சபைகளில் சகல குழப்பங்களையும், பிரிவினைகளையும் போராட்டங்களையும் அக்கிரமங்களையும் காண்கிறோம். தேவ அன்பு இல்லாததினாலே சகோதர அன்பு இல்லை. கிறிஸ்தவர்களுக்குள் எவ்வளவோ பலத்த மாறுதல் உண்டாக வேண்டியதிருக்கிறது.



சகோதர அன்பை அப்போஸ்தலன் சரீரத்தின் அவயவங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்துகிறார். சரீரத்தில் அவயவங்கள் அநேகம். அமைப்பில் அவைகள் ஒன்றுபோல் இல்லை. கை, கால், காது, கண் என அவயவங்கள் ஒவ்வொன்றையும் தேவன் சரீரத்தில் அமைத்து வைத்திருக்கிறார். அவைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருப்பதுபோல அவைகளுக்குரிய வேலைகளிலும் வித்தியாசமுண்டு. என்றாலும் ஆச்சரியமான **ஒற்றுமையை** அவைகளில் காண்கிறோம். காலுக்கும் கைக்கும் வித்தியாசமிருக்கிறதென்று அவைகள் மனஸ்தாபப்பட்டுக் கொள்வதில்லை. கண்ணுக்கும் காதுக்கும் வித்தியாசமென்று சொல்லி அவைகள் பிரிந்துபோவதில்லை. ஒரு அவயவம் சேதப்பட்டால் மற்ற அவயவங்கள் நமக்கென்னவென்று இருப்பதில்லை. கால் நோய்ப்பட்டால் சரீர முழுவதும் துடிக்கிறது. தலை அதைப்பற்றி யோசிக்கிறது. கைகள் உதவிசெய்யத் தீவிரிக்கின்றன. கண்கள் கண்ணீர் வடிக்கின்றன. நாவு காலின் வேதனையை வைத்தியருக்கு அறிவிக்கிறது. நோயில்லாத வாய் கசப்பு மருந்தை உட்கொள்ளுகிறது. இவ்வாறு ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் சேர்ந்து பாடுபடுகின்றன. ஒரு அவயவம் சந்தோஷப்பட்டால் எல்லா அவயவங்களும் சந்தோஷப்படுகின்றன. இந்த ஒற்றுமையான **உடன் உணர்ச்சிக்குக்** காரணம் நமது சரீரத்தின் அவயவங்கள் ஒரே ஜீவனாலே பிழைப்பதுதான். நமது சபைகளிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள் ஒருவருக்கொருவர் இவ்விதமான அனுதாபமும் ஒற்றுமையும் இருக்கவேண்டுமானால் **கிறிஸ்துவை** நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவருக்குள் பிழைக்க வேண்டும். நாம் அநேகராயிருந்தும், பற்பல வித்தியாசங்கள் இருந்தும், கிறிஸ்துவாகிய ஜீவனாலே நாம் பிழைப்பதால், அந்த ஒரே அன்பின் ஜீவன் நம்மை

ஒருவரோடொருவர் இணைக்கிறது. அநேகர் கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களாயிருப்பதால் சபைகளில் ஓயாப் போராட்டங்களும் ஒழியாச் சச்சரவுகளும் காணப்படுகின்றன. சபையாருக்குள் கட்சிப் பிரிவினையிருப்பதால் சிறந்த ஆலயங்கள் பூட்டப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவை மற்றவர்களுக்குக் காண்பிக்கவேண்டிய சபைகள் அன்பின் ஐக்கியமில்லாததினாலே அவரை மறைத்துப் போடுகின்றன. நாம் தனித்தனியே அன்பர்களாயிருந்தால் **ஒருவருக்கொருவர்** அன்புள்ளவர்களாயிருப்போம்.

**ஒருவருக்கொருவர்** என்னும் வார்த்தை நிருபங்களில் திரும்பத்திரும்ப வருகிறது. "நான் உங்களிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் **ஒருவருக்கொருவர்** அன்பாயிருங்கள்". "நீங்கள் **ஒருவரிலொருவர்** அன்பாயிருந்தால் என் சீஷர்களாயிருப்பீர்கள்" "**ஒருவரிடத்திலொருவர்** அன்பு கூருங்கள்." "நீங்கள் **ஒருவரிடத்தி லொருவர்** வைக்கும் அன்பில் தேவன் உங்களைப் பெருகச் செய்வாராக." "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படி தேவனால் போதிக்கப்பட்டிருக்கிறீர்களே." "நீங்கள் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" "நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" "அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்." "கனம் பண்ணுகிறதிலே **ஒருவருக்கொருவர்** முந்திக் கொள்ளுங்கள்." "**ஒருவரையொருவர்** தங்களிலும் மேலானவர்களாக எண்ணுங்கள்." "**ஒருவருக்கொருவர்** பொய்யைக் களைந்து மெய்யைப் பேசுங்கள்." "**ஒருவரோடொருவர்** ஏகசிந்தையாயிருங்கள்." "**ஒருவரிலொருவர்** ஊக்கமாய் அன்பு கூருங்கள்." "**ஒருவருக்கொருவர்** உதவி செய்யுங்கள்." "நாம் **ஒருவரிடத்திலொருவர்** அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்." ஆவியானவர் **ஒருவருக்கொருவர்** என்பதை இவ்வளவு முக்கியப்படுத்திப் பேசியிருப்பதைக்



கவனித்தால் **சகோதர அன்பின் சிரேஷ்டம்** வெளிப்படுகிறது. சகோதரருக்கு நாம் செய்யும் உபகாரத்தை ஆண்டவர் தமக்கே செய்ததாகச் சொல்லுகிறார். ஓட்டைத் தொட்டியில் எவ்வளவு ஜலம் வார்த்தாலும் ஒழுகிப்போவதுபோல பகையும் பிரிவினைகளுமுள்ள சபைகளில் தேவாசீர்வாதம் தங்காது. கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கத்தில் அன்பேது? ஆசீர்வாதமேது?

## 11. அன்பின் பலன்கள் எவை?

### 1. அன்பின் மன்னிப்பு

நாம் கிறிஸ்துவைச் சொந்தமாக்கும்போது மன்னிப்பு சொந்தமாகிறது. கிறிஸ்துவே நமது மன்னிப்பு. அதுமுதல் அவரது அன்பிலே நாம் வளரவேண்டியது. நாம் இன்னும் மாசற்ற பரிசுத்தராகி விடவில்லை. தப்பிதங்களும் தவறுதல்களும் கடைசிவரை நம்மில் காணப்படலாம். ரட்சிக்கப்படுமுன் **பாவமே** நமது வாழ்க்கை, இப்போது **அன்பே** நமது வாழ்க்கை. எவ்வளவுக்கு அவரன்பில் நிலைத்திருக்கிறோமோ அவ்வளவுக்குத் தவறுதல் இல்லை. ஆனால் அவரில் நாம் உறுதியாக எப்போதும் நிலைத்திருக்காதலால் சோதனைகள் நம்மை மேற்கொள்ளுகின்றன; தெரிந்தவைகளை அறிக்கையிடுகிறோம். தெரியாதவைகளை என்ன செய்கிறது? "அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரித்துக் கொண்டிருக்கிறது." அன்பர்களுக்குக் கிடைத்த பெரிய கிருபை இது. நிலைத்திருக்கும் கொடியில் நோயுண்டானால் செடியின் ஜீவனும் சாரமும் நோயை அகற்றுகிறது. நமக்குத் தெரிந்ததை மாத்திரம் சுத்திகரிப்பாரானால் தெரியாத கறைகள் நீங்குவதெப்படி? நம்மைப் "பரிசுத்தராகவும், குற்றமற்றவர் களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்குமுன்

நிறுத்துவது” எப்படி? குழந்தை காண்பிக்கும் அழுக்கை மாத்திரமல்ல, அது அறியாத மற்ற அழுக்குகளையும் தாய் கழுவிவிடுகிறாள். அன்பரின் மன்னிப்பும் அவ்வாறே. யார் யாருடைய பாவங்களை அன்பு மூடுகிறதோ அவர்கள் பாக்கியவான்கள். “அன்பு திரளான பாவங்களை மூடும்” “இவள் செய்த அநேகபாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் **அன்புகூர்ந்தாளே**” என்றார்.

## 2. அன்பின் வெளிப்படுத்தல்

“என்னிடத்தில் **அன்பாயிருக்கிறவனுக்கு** நான் என்னை வெளிப்படுத்துவேன்” என்றார். அன்பனுக்கேயன்றி அந்நியனுக்கு நமது இரகசியங்களைச் சொல்லமாட்டோம். சங்கீதம் தன்னில் பிரியமுள்ளவனுக்கே தன் இன்பத்தை வெளிப்படுத்தும். சாஸ்திரம் தன்னில் பிரியமுள்ளவனுக்கே தன் ரகசியத்தை வெளிப்படுத்தும். சிருஷ்டிப்பு தன்னில் பிரியமுள்ளவனுக்கே தன் அழகை வெளிப்படுத்தும். ஆண்டவருடைய இரகசியம் அன்பர்களிடத்தில் இருக்கிறது. யோவான் சுவிசேஷத்தின் தெய்வீக மகிமை அன்பன் யோவானுக்குக் கிடைத்தது. “நான் செய்யப்போகிறதை என் சினேகிதனாகிய ஆபிரகாமுக்கு மறைப்போனா?” என்கிறார். அன்பின் வளர்ச்சிக்குத்தக்கதாக ஆண்டவரை அறிகிற அறிவிலும் வளருவோம்.

## 3. அன்பின் பலம்

“ஒருவன் என்னிடத்தில் **அன்பாயிருந்தால்** அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்” என்கிறார். அன்பர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவோ காரியங்களைச் சந்தோஷமாய்ச் செய்கிறார்கள். கஷ்டம் என்று அவர்கள் சொல்லுகிறதில்லை. அன்பின் **பலம்** இதற்குக் காரணம். ஆண்டவர் போதனைகளைக் கைக்கொள்வதும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும் நமக்குக்



கஷ்டமாயிருக்கிறது. அன்புக் குறைவுதான் காரணம். அவருடைய கற்பனைகள் **பாரமானவைகள் அல்ல** வென்றும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதுதான் அவரிடத்தில் அன்பாயிருப்பதென்றும் யோவான் சொல்லுகிறார். அன்பைக் காண முடியாது; நடக்கையைக் காண்கிறோம். அன்பு மறைவான ஊற்று; கீழ்ப்படிதல் அவ்வூற்றிலிருந்து ஓடிவரும் நதி.

## 4. அன்பின் சஞ்சாரம்

“ஒருவன் என்னில் **அன்பாயிருந்தால்** நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்” என்கிறார். பாவத்தால் மனுஷன் கடவுளை இழந்தான், கடவுளும் மனுஷனை இழந்தார். இழந்துபோனதைக் தேடி ரட்சிக்க இயேசுகிறிஸ்து வந்தார். பிதா மகனைக் கண்டடைவதும், மகன் பிதாவைக் கண்டடைவதும் நமது ரட்சிப்பு. நமது நோய் தீர வைத்தியனிடம் மருந்து வாங்கிச் சாப்பிடுகிறோம். வைத்தியன் வேறே, மருந்து வேறே. அநேகர் ஆண்டவரை ஒரு வைத்தியனைப்போல தான் நடத்துகிறார்கள். அவரைத் தூரத்தில் வைத்துவிட்டு, அவரிடமிருந்து மருந்தாகிய ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளப் பார்க்கிறார்கள். இதிலே ஒருபோதும் இவர்கள் சித்தியடைவதில்லை. அவரே வைத்தியனும் மருந்துமாயிருக்கிறார். அவரை நமது ஜீவனாக ஏற்றுக்கொள்வதே நமது ரட்சிப்பு. அவர் நமக்குள் வாசம் பண்ணுவது சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்று. அன்பர்கள் உள்ளத்தில் அவர் வாசம் பண்ணுகிறார். வாசம் பண்ணுகிறார் என்பது எப்போதும் நமக்குள் குடியிருக்கிறார் என்று அருத்தம்.

## 5. அன்பின் கிரீடம்

“கர்த்தர் தம்மில் **அன்புகூருகிறவர்களுக்கு** வாக்குத் தத்தம் பண்ணின **ஜீவகிரீடம்”** (யாக். 1:12), வெளிப்படுத்தல்

புஸ்தகத்தில் மரணபரியந்தம் உண்மையாயிருப்பவர்களுக்கு ஆண்டவர் ஜீவ கிரீடத்தைத் தருவதாகச் சொல்லுகிறார். இது வெற்றிக் கிரீடம். அன்பர்கள் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள். பவுல் "நீதியின் கிரீடம்" என்கிறார். பேதுரு "மகிமையின் கிரீடம்" என்கிறார். யாக்கோபு "ஜீவகிரீடம்" என்கிறார். ஜீவகிரீடம் பரிபூரண ஜீவனைக் குறிக்கும். அன்பர்களுக்கு அதுவே நீதியின் கிரீடமும் மகிமையின் கிரீடமுமாகும்.

### 6. அன்பின் ஆயத்தம்

"தேவன் தம்மில் **அன்புகூருகிறவர்களுக்கு** ஆயத்தம் பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை". இவைகளை மற்றவர்கள் அறியார்கள். ஆனால் "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். மறுமையின் காரியங்களை மங்கலாக அறிகிறோம். அவைகளை இருக்கிறபடி அறிவதற்கு தற்கால வாழ்க்கை ஏற்றதல்ல. ஆண்டவர் பரமகாரியங்களை உள்ளபடிச் சொல்ல முடியாமல் உவமைகளாகப் போதித்தார். பவுல் மூன்றாம் வானத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கே தாம் கண்ட கேட்ட காரியங்களை மற்றவர்களுக்குச் சொல்ல முடியாமற்போனார். இரட்சகர் பரத்தில் நமக்கு வாசஸ்தலங்களையும் நமக்குத் தேவையான நன்மைகளையும் ஆயத்தம் பண்ணுகிறார். அவைகளின் முன்ருசியைத் தமது அன்பர்களுக்கு அருளுகிறார்.

### 7. அன்பின் நடத்துதல்

"தேவனிடத்தில் **அன்புகூருகிறவர்களுக்கு** சகலமும் சேர்ந்து நன்மைக்கேதுவாக நடக்கின்றன." இவ்வுலக வாழ்க்கை மிகவும் சிக்கலானது. ஒன்றுக்கொன்று எதிரிடையானது.



சந்தோஷம் துக்கம்; லாபம் நஷ்டம்; மேன்மை அவமானம்; க்ஷேமம் தரித்திரம்; சிநேகம் பகை; சுகம் சுகவீனம்; மகிழ்ச்சி கண்ணீர் முதலிய காரியங்கள் நமது ஜீவியத்தைப் பின்னிக்கொண்டிருக்கின்றன. எல்லாம் எனக்கு விரோதமாயிருக்கிறதே என்று புலம்புகிறவர்கள் அநேகர். என்னென்ன நேரிட்டபோதிலும் ஆண்டவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு இவைகள் தீமையாக முடியாமல் **எல்லாம் சேர்ந்து நன்மையாக முடியும்** என்பது நிச்சயம். ஆண்டவர் வாக்கு அதற்கு ஆதாரம். தேவமக்கள் தங்கள் அனுபவத்திலும் இதன் உண்மையை அறிந்திருக்கிறார்கள். நன்மை தான் என்பதைக் காத்திருந்து அறிய வேண்டியது வரும். "இப்போது அறியாய், இனிமேல் அறிவாய்."

### 8. அன்பின் சிட்சை

எல்லாம் சொல்லி இதைச் சொல்லாமற்போனால் அன்பின் பலன்கள் குறைவுபடும். "கர்த்தர் எவனிடத்தில் **அன்புகூருகிறாரோ** அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்." அவரை அறியாதவர்கள் அக்கிரமங்களில் மிஞ்சிப்போகும்போது **ஆக்கினையடைவார்கள்.** அன்பர்கள் வழி விலகும் போது **சிட்சையடைவார்கள்.** இதற்கு **அன்பின் மிலாறு** என்று பேர். சிட்சை அழிவுக்குரிய ஆக்கினையல்ல. சரியான வழிக்கு நம்மைக் கொண்டு வரும்படி ஆண்டவர் கையாடும் எச்சரிப்பு. "தேவன் உலகத்தை நியாயந்தீர்க்கும்போது நாமும் உலகத்தோடே ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே இப்பொழுது சிட்சிக்கப்படுகிறோம்" (1 கொரி. 11:32). சிட்சையின் நோக்கம் "தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாக வேண்டும்" என்பதுதான். தேவமக்களில் அநேகர் சிட்சையின்மூலம் மேலான ஜீவியத்தில் நடத்தப்பட்டிருக்கிறார்கள். பலவிதமாய் அவர் பேசியும் நாம்

செவிகொடா திருக்கும்போது சிட்சையைக் கையாளுகிறார். “நான் உபத்திரவப்பட்டது நல்லது” என்று அன்பர்கள் அறிக்கையிட்டிருக்கிறார்கள். சிட்சை அன்பின் கரத்திலிருந்து வருகிறது.

## 12. அப்படியானால் இந்த மேலான அன்பின் ஜீவியம் எப்படி வரும்?

அன்பு அதிகாரத்தாலும் கட்டளையாலும் வராது. என்னிடத்தில் அன்பாயிருக்கும்படி நான் ஒருவனுக்குக் **கட்டளையிடலாமா?** அன்பாயிரு என்று நான் ஒருவனைப் **பலவந்தப்படுத்தலாமா?** அதிகாரத்தால் வேலை கொள்ளலாம். வேலைக்காரர் மனதில் முறுமுறுத்துக் கொண்டாவது வேலையைச் செய்வார்கள். அதுபோல அன்பாயிருக்கும்படி கட்டளையிடமுடியாது. அன்பு இருதயத்திற்குரியது. ஆண்டவர் தமது சொல்லால் கோடி உலகங்களை உண்டாக்க வல்லவர். மரித்து அழிந்துபோனவர்களை மறுபடியும் உயிரோடே கொண்டுவரக்கூடியவர். ஆனால் அவர் தமது அதிகாரத்தாலோ, வல்லமையாலோ நம்மை அன்பர்களாக்க முடியாது. தேவ அன்பு சீனாய் மலையிலே பலிக்காததினால்தானே கல்வாரிமலைச் சிலுவைக்கு வந்தார். ஆண்டவரிடத்தில் அன்பாயிருக்கும்படி பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அதட்டலாம். சபையாரிடம் அன்பில்லையென்று போதகர்கள் கோபித்துக்கொள்ளலாம். மனைவி தன் புருஷனைப் பார்த்து: நீர் ஏன் என்னை நேசிக்கிறதில்லை என்று சண்டை போடலாம். இதெல்லாம் காரியம் அறியாதவர்களின் செய்கை. எவ்வளவோ பிரயாசப்படுகிறேன், தீர்மானிக்கிறேன் அன்பின் ஜீவியம் வரவில்லையே என்று புலம்புகிறவர்களுமுண்டு. **அன்பு**



**கட்டளையால், அதட்டுதலால், பிரயாசத்தால், தீர்மானத்தால் வராது.**

அன்பின் ஜீவியம் கிடைக்கவேண்டுமானால் **அப்பியாசிக்க வேண்டும்** என்று பெரியோர் சொல்லுகிறார்கள். நாம் பேசும் பேச்சில், எழுதும் கடிதங்களில், செய்யும் வேலைகளில் அன்பை அப்பியாசிக்கவேண்டும் என்கிறார்கள். இப்படி யோசித்து, யோசித்து எத்தனை நாளைக்கு அன்பாயிருப்பது? அது அன்பின் ஜீவியமாகாமல் சங்கடமான ஜீவியமாகும். மேலும் யோசித்து யோசித்து மனுஷரிடம் அன்பாயிருக்கப் பார்ப்பது சுயம்பான அன்பாயிராது. அன்பை அப்பியாசிப்பதற்கு ஏற்கெனவே நமக்குள் அன்பு இருக்க வேண்டும். ஒருவன் தன் சிநேகிதனைப் பார்த்து: காசை அழித்துப்போடாதே, சிக்கனமாய்ச் செலவு செய் என்றான். அதற்கு அவன் கையில் காசே இல்லை, சிக்கனத்தைப்பற்றிப் பேசுவானேன் என்றான். அன்பற்றவர்கள் அன்பை அப்பியாசிப்பதெப்படி?

**அன்பு** என்னும் சொல் உலகில் தாராளமாய் வழங்கப்படுகிறது. நாவல் சிற்றின்பக் கதைகளில் அதைக் காணலாம். சிநேகிதர் கடிதங்களில் காணலாம். பெற்றார் மக்களுக்குள் கேட்கலாம். கடவுள் **ஒருவரே அன்பு** என்பது உண்மையானால் வேறெங்கும் அன்பைக் காணமுடியாது. நமக்குள் அன்பு என்று சொல்லப்படுவதை நேசம், பாசம், பட்சம், நட்பு, காதல், இஷ்டம், சிநேகம், பிரியம், ஆசை, உறவு என்னும் பல பேர்களால் அழைக்கலாமே தவிர **அன்பு** என்று சொல்லமுடியாது. அன்பு தெய்வீகமானது. தேவ அன்புக்கும் நாம் **அன்பென்று** பேசுவதற்கும் எவ்வளவோ வித்தியாசம்! நமது அன்பு தன்னயமுள்ளது. மனுஷர் பொதுவாய் மற்றவர்களிடம் வைக்கும் சிநேகத்தால் தங்களுக்கே சந்தோஷத்தையும்,

லாபத்தையும், இன்பத்தையும் தேடுகிறார்கள். தேவ அன்போ தன்னைத் தியாகஞ்செய்து நம்மை ஆசீர்வதிக்கும்படி நாடுகிறது. ஒரு தாய்க்குத் தன் பிள்ளை மேல் இருக்கும் பாசம் வழியிலே போகிற பிள்ளைமேலிராது. இது தன் பிள்ளை, அது ஊரார் பிள்ளை. நாம் விரும்புகிறவர்களைச் சிநேகிப்போம், ஆகாதவர்களை வெறுப்போம். தேவனோ முற்றிலும் கெட்டுப் போன அபாத்திரப் பாவிகளிடம் அன்பாயிருக்கிறார். ஏனென்றால் அன்பே அவர் தன்மை.

நம்மில் அன்பு இல்லையென்பதும், அது தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய **ஈவு** என்பதும் ரட்சகருக்குத் தெரியும். ஆகையால் பிதாவின் அன்பைப்பற்றியும், சகோதர அன்பின் அவசியத்தைப்பற்றியும் தாராளமாய்ப் போதித்த ஆண்டவர், **நாம் அவரிடத்தில் அன்பாயிருப்பதைப்பற்றி சுவிசேஷத்தில் போதிக்கவில்லை.** அதற்குப் பதிலாக **விசுவாசத்தைப்** பற்றியே பிரதானமாகப் போதித்தார். காரணமென்ன?**அன்பு இன்னும் வெளிப்பட வில்லை.** அன்பு வெளிப்படாமலும், அன்பை நாம் அறியாமலும், அன்பைப் பெற்றுக்கொள்ளாமலும், அன்பர்களாவது முடியாத காரியம். ஆகையால் சீஷர்கள் தம்மில் அன்புகூருவதை **எதிர்காலத்தில்** பேசினார். "ஒருவன் என்னில் **அன்பாயிருந்தால்** அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்." "நீங்கள் என்னில் **அன்புள்ளவர் களாயிருந்தால்** பிதாவிடம் போகிறேன் என்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள்." "நீங்கள் என்னில் **அன்பாயிருந்தால்** என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." **அன்பாயிருந்தால், அன்பாயிருந்தால்** என்று ஆண்டவர் சொல்லுவது; அன்பின் ஜீவியம் அச்சமயத்தில் அவர்களுக்கு இல்லை என்பதைக் காட்டுகிறது. அவர்கள் ஆண்டவரிடம் எவ்வளவு பிரியமுள்ளவர்களாயிருந்த போதிலும்,



அவர் மகிமைப்படுவதற்குமுன் **தேவ அன்பை** அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. அவர் பேதுருவைப் பார்த்து: "சீமோனே, நீ என்னிடத்தில் **அன்பாயிருக்கிறாயா?**" என்று கேட்டார். நான் உம்மை **நேசிக்கிறேன்** என்பதை நீர் அறிவீர் என்று பேதுரு மும்முறை சொன்னார். ஆண்டவர் கேட்டது **அன்பு; பேதுரு** கொடுத்தது நேசம் அல்லது பட்சம். தேவ அன்பை அவர் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை; மற்றவர்களும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆண்டவர் பரலோகம் போய் பரிசுத்த ஆவியை அனுப்பி சீஷர்களை நிரப்பினார். அவர்கள் **ஆவியால் நிறைந்தபோது அன்பினால் நிறைந்தார்கள்.** இதைக் குறித்துப் பவுல்; "நமக்கருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே **தேவ அன்பு** நம்முடைய இருதயங்களில் **ஊற்றப்பட்டிருக்கிறது**" என்கிறார். சீஷர்கள் **அன்பர்களானார்கள்.** தேவனிடத்திலும் சகோதாரிடத்திலும் அன்பாயிருப்பது அவர்களுக்குப் பிரயாசமாயிராமல் இயல்பாயிருந்தது. அன்பு பிதாவிடமிருந்து கிறிஸ்து வழியாக ஆவியின் மூலமாய் நமது இருதயங்களில் ஊற்றப்படுகிறது. அந்த அன்பு நமக்குள்ளேயே நின்றுவிடாமல், தண்ணீர் தன் ஸ்தானத்திற்கு ஏறுவதுபோல, தான் புறப்பட்டு வந்த இடத்துக்குத் திரும்பிப்போய் பிதாவின் இருதயத்திற்குள் பிரவேசிக்கிறது. இதுதான் நாம் **தேவனிடத்தில் அன்பு கூருகிற** ரகசியம். தாவீது ராஜா காணிக்கை செலுத்துவதைக் குறித்து: "கர்த்தாவே, இவைகளை நாங்கள் உம்மிடத்திலிருந்து பெற்று உமக்கே கொடுக்கிறோம்" என்று சொன்னதுபோல, **தேவ அன்பை நாம் பெற்று அந்த அன்பையே தேவனுக்குக் கொடுக்கிறோம்.** இது நமது சுய அன்பல்ல; நமது பிரயாசம் தீர்மானத்தால் உண்டாகிற அன்புமல்ல. ஈவாகக் கிடைக்கும் தேவ அன்பு.

எத்தனையோ மனுஷரைக் காண்கிறோம், கண்டும் காணாதவர்கள்போல் போகிறோம். இன்னும் பலரோடு பழகுகிறோம். என்றாலும் அவர்கள் நமக்கு உற்ற சிநேகிதர்களாவதில்லை. சிலரையோ நமது மனம் நாடுகிறது. அவர்கள் சிநேகத்தை விரும்புகிறோம். இதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய வசீகரத்தோற்றமோ, நயமானபேச்சோ, கல்வித்திறமையோ, ஆழ்ந்த புத்தியோ, அன்பின் சிந்தையோ, ஏதோ ஒன்று நமது உள்ளத்தைக் கவர்ந்துகொள்ளுகிறது. அவர்களை நேசிக்காமலிருக்க முடியவில்லை. ஒரு வழியே போகிறோம். மரங்களில் பலவித புஷ்பங்களைப் பார்க்கிறோம். அவைகளை நமது மனம் நாடவில்லை. சற்று கடந்துபோகிறோம். ரோஜாப்புஷ்பங்கள் நிறைந்த ஒரு தோட்டத்தைக் காண்கிறோம். அதை விட்டு முன் நடக்கக் கால் வரவில்லை. வழியில் கண்ட புஷ்பங்களை விரும்பாமல் ரோஜாவின்மேல் நமக்கு இவ்வளவு பிரியமுண்டான காரணமென்ன? மற்றப் புஷ்பங்களுக்கு நமது மனதை இழுத்துக் கொள்ளும் கவர்ச்சியில்லை. ரோஜாவின் அழகும் இன்பமான மணமும் நமது இருதயத்தைக் கவர்ந்து கொண்டது. **நாம் ரோஜாவை விரும்புவதற்குக் காரணம் ரோஜாதான். நாம் தேவனிடத்தில் அன்புகூருவதற்குக் காரணம் தேவன்தான்.** அவர் கிறிஸ்து மூலமாய்த் தமது **அதிசய அன்பைச்** சிலுவையில் வெளிப்படுத்தி நம்மை இழுத்துக்கொள்ளுகிறார். “நான் உயர்த்தப்பட்டிருக்கையில் இழுத்துக்கொள்ளுவேன்” என்றார்.

தேவன் ஒருவரே அன்பு. அந்த அன்பை நாம் பெற்றுக்கொள்ளும்போது தேவனிடத்திலும், சகோதரரிடத்திலும், மற்ற மனுஷரிடத்திலும், சத்துருக்களிடத்திலும் அன்பாய் நடந்துகொள்ள பலமுண்டாகிறது. **அன்பின் ஜீவியத்திற்கு வேறு வழியில்லை.** முதலிலிருந்து கடைசிவரை நாம் **தேவ அன்பிலேதான்** பிழைக்கவேண்டும். **நம்முடைய அன்பு** என்று



பேச இடமேயில்லை. தேவ அன்புதான் நம்முடைய அன்பு. அன்பைப்பற்றி ஒருவன் சுய இஷ்டமாய் எழுதுவானானால், நமக்குள் அன்பு இருப்பதுபோலவும், அதை நாம் அப்பியாசித்து விருத்தி செய்யவேண்டும் என்பதுபோலவும் எழுதுவான். ஆவியானவரின் போதனையோ இதற்கு முற்றிலும் வேறு. **நம்முடைய அன்பு** என்று அவர் பேசாமல் தேவ அன்பைப்பற்றியே பேசியிருக்கிறார். சில வாக்கியங்களைப் பார்ப்போம். “**தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை** நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம்.” “**தேவ அன்பு** நமது இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது”. “**என்னுடைய அன்பிலே** நிலைத்திருங்கள்.” “**தேவனுடைய அன்பிலே** உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.” “**அன்பிலே** நடந்து கொள்ளுங்கள்.” “**அன்பில்** வேரூன்றி நிலைபெற்றவர் களாகுங்கள்.” “தேவன் உங்கள் இருதயங்களை **தேவனைப்பற்றும் அன்புக்கு** நேராக நடத்துவாராக.” “**கிறிஸ்துவினுடைய அன்பு** எங்களை நெருக்கி ஏவுகிறது.” “**கிறிஸ்துவினுடைய அன்பைவிட்டு** நம்மைப் பிரிப்பவன் யார்?” எதுவானாலும் “கிறிஸ்து இயேசுவிலுள்ள **தேவனுடைய அன்பைவிட்டு** நம்மைப் பிரிக்கமாட்டாதென்பது நிச்சயம்.” இவ்வசனங்கள் **தேவ அன்பைப் பற்றியே** பேசுகிறதேயல்லாமல் நமது அன்பைப்பற்றியல்லவே அல்ல.

தேவனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் அன்பாய் நடந்துகொள்வது லேசான காரியமல்ல. அன்பின் ஜீவியத்தில் பிரவேசித்துப் பார்த்தால்தான் அதன் கஷ்டம் தெரியும். நமது அன்பில்லாமையை உணர்ந்து ஆண்டவர் பாதத்தில் நம்மைத் தாழ்த்தவேண்டும். கிறிஸ்துவின் மரணத்தில் வெளிப்பட்ட தேவ அன்பைத் தியானிக்கவேண்டும். ஆண்டவர் தமது அன்பை நமது இருதயங்களில் ஊற்றும்படி ஊக்கமாய் ஜெபிக்கவேண்டும். அன்பரோடு நெருங்கிப் பழகவேண்டும். மனுஷருக்குள் சிநேகம்

ஒரேநாளில் ஆகிறதில்லை. அவர்கள் அடிக்கடி சந்திக்கிறார்கள். அருமையாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். தங்கள் கஷ்டங்களைச் சொல்லிக்கொள்கிறார்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்கிறார்கள். இவ்வாறு நாளடைவாக சகலத்திலும் ஒற்றுமையாகி விடுகிறார்கள். சிநேகம் ஆரம்பித்து வளர்ந்துகொண்டுபோகிறது, ஆண்டவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தமும் அதுபோலவே. அன்பின் ரட்சகர் நமக்குள் வசிக்கும்படி அவரை ஏற்றுக்கொண்டு, எப்போதும் அவரிலேயே நிலைத்திருந்து பிழைக்க வேண்டும். அவர் நம்மை அன்பர்களாக்குவார். அன்பின் ஜீவியமே அழியாத ஆசீர்வாதம்.

# 3. தேவசித்த ஜீவியம்

**“தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக” (எபி.13:21).**

கர்த்தருக்குப் பிரியமாய் நடந்துகொள்வதும், அவருடைய சித்தத்தின்படி பிழைப்பதும் கிறிஸ்தவ ஜீவியத்தின் சிறந்த லட்சணங்களாகும். கிறிஸ்து மார்க்கத்தின் பேராலே நாம் பதினாயிரங் காரியங்களைச் செய்துவந்தாலும் நமது ஜீவியம் மாற்றப்படாவிட்டால் நமக்குப் பிரயோஜனமில்லை, நம்மால் பிறருக்கு ஆசீர்வாதமில்லை, தேவராஜ்யத்திற்கு அனுகூலமில்லை, ஆண்டவருக்கு மகிமையில்லை, இனி வெளிப்படும் மகிமையில் நமக்குப் பங்கில்லை. ஆகையால் **நமது ஜீவியம் மாற்றப்படவேண்டியது** மிகவும் அவசியம். இதை மறுபிறப்பென்றும், மறுஜெனனமென்றும் ஆண்டவரும்



அப்போஸ்தலரும் கூறுகிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் புறம்பான காரியங்களில் பற்றுதல் வைத்து உள்ளான மாறுதலை மறந்து விடுகிறோம். ஆராதனைக்குப் போகுதல், ஞானஸ்நானம், நற்கருணை, வேதவாசிப்பு, பிரசங்கக் கேள்வி, பண்டிகை கொண்டாடல் முதலான காரியங்களில் நமக்குச் சிரத்தை உண்டு. இவைகள் கிருபையின் எத்தனங்களாதலால் நாம் இவைகளைப் புறக்கணிக்கக் கூடாது. ஆனால் இவைகளின் **நோக்கம்** நம்மில் நிறைவேறியிருக்கிறதா? இவைகள் மூலமாய் நமது உள்ளான ஜீவியம் மாற்றப்பட்டிருக்கிறதா? நாம் ஆண்டவருக்குப் பிரியமாய் நடக்கிறோமா? அவர் சித்தம்போல் பிழைக்கிறோமா? புறம்பான ஆசாரங்களில் முழுப்பற்றுதல் வைத்து உள்ளான மாறுதலைக் கவனிக்காமற்போன யூத ஜனங்களைப் பார்த்து, “மதிகேடரே, குருடரே எது பிரதானம்” என்று எஜமான் கேட்டார். யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன், ஓர் இரவு அவரிடம் வந்து : “ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர், ஒருவன் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்” என்றான். எவ்வளவு புகழ்ச்சியான வார்த்தைகள்! ஆண்டவரோ அப்புகழ்ச்சிகளை அப்பாலே தள்ளிவிட்டு, கொஞ்சமும் தாமதிக்காமல் நிக்கொதேமுவைப் பார்த்து: “நீ மறுபடி பிறக்கவேண்டும்” என்றார். அவன் அதைக் குறித்து ஆச்சரியப்பட்ட போது, நீ மறுபடி பிறவாவிட்டால் தேவராஜ்யத்தைக் காணமாட்டாய், அதிலே பிரவேசிக்கவு மாட்டாய், என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். காணமாட்டாய் என்பது ராஜ்யத்தின் தன்மையை அறியமாட்டாய் என்றும், பிரவேசிக்கமாட்டாய்

என்பது ராஜ்யத்திற்குரிய ஆசீர்வாதங்களை அனுபவிக்கமாட்டாய் என்றும் பொருள்படும். இஸ்ரவேலில் போதகனாயிருந்த இந்த நிக்கொதேமு வேத அறிவும் சன்மார்க்கமுமுள்ள மனுஷன். யூதமார்க்கத்திற்குரிய சகல ஆசாரங்களையும் கைக்கொண்டு நடந்தவர். யாவருடைய மதிப்புக்கும் உரியவர். ஆயினும் ஆவிக்குரிய **உள்ளான மாறுதலை** நிக்கொதேமு அறியவில்லை. இரக்கம் நிறைந்த ஆண்டவர் அவரை ரட்சிக்க விரும்பி மறுபிறப்பின் அவசியத்தைத் தாமதமின்றி எடுத்து உணர்த்தினார். அவர் கிறிஸ்துவின் அடியானானாரென்பதைப் பின் சரித்திரத்திலே காண்கிறோம். நமது ஜீவியத்தில் மகா முக்கியமான இவ்விஷயத்தை சபைகள் கவனிக்கிறதில்லை.

## 1. ஆண்டவருடைய ஊழியத்தின் நோக்கம்

நாம் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்யவும் அவருடைய சித்தத்தின்படி பிழைக்கவும் வேண்டுமென்பதே அவர் நிறைவேற்றின ஊழியத்தின் நோக்கம். இந்த நோக்கம் நம்மில் நிறைவேறாமல் போனால் அவர் பட்டபாடுகள் யாவும் வீணாகும். நாம் எடுத்துக் கொள்ளும் சகல முயற்சிகளும் அபத்தமாகும். அவர் வந்த **நோக்கத்தை** நாம் அறிந்து அதை அடையும்படி நாடாமல், மற்றக் காரியங்களில் சிரத்தை காண்பிப்போமானால் “மதிகேடரே குருடரே எது பிரதானம்” என்று ஆண்டவர் நம்மையும் கேட்பார். நமது **குணம்** மாறவேண்டும். நமது **ஜீவியம்** மறு ஜெனனமடைய வேண்டும். இவ்விஷயத்தைக் குறித்து நமது உத்தேசங்களும் அபிப்பிராயங்களும் வேண்டாம். ஆண்டவருடைய ஜீவவசனமே நம்மோடு பேசட்டும்.



### 1. தேவன் தமது குமாரனை உலகத்திற்கு அனுப்பின நோக்கம்

“தம்முடைய ஒரே பேறான குமாரனாலே **நாம் பிழைக்கும்படிக்கு** தேவன் அவரை இவ்வுலகத்திற்கு அனுப்பினார்” (1 யோ.4:9). நாம் நித்திய **ஜீவனை** அடையும்படிக்கு தேவன் தமது குமாரனைத் தந்து இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோ. 3:16). மனுஷன் சரீரத்தில் எவ்வளவு சுகமும் பலமும் முயற்சியும் உள்ளவனாகக் காணப்பட்டபோதிலும் தேவனுடைய பார்வையில் அவன் மரித்தவனாயிருக்கிறான். பாவத்தால் தேவ ஜீவனை இழந்தான். கிருபையுள்ள பிதா நமக்கு நித்திய ஜீவனை அனுப்பி யிருக்கிறார். அந்த ஜீவன் அவர் குமாரனுக்குள்ளிருக்கிறது. அவரே அந்த நித்திய ஜீவன். குமாரனைச் சொந்த மாக்கிக்கொண்டவன் ஜீவனைச் சொந்தமாக்கிக் கொண்டான். குமாரனை ஏற்றுக்கொள்ளாத பேர்க் கிறிஸ்தவன் மரித்த நிலைமையிலேயே இன்னும் இருக்கிறான். மரணத்துக்கும் ஜீவனுக்கும் வித்தியாசமில்லையா? லாசரு உயிரோடே வந்ததைக் கண்ட ஜனங்கள் பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள். பாவத்தில் மரித்துப்போன ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஜீவனைப் பெற்றுக்கொள்வானானால் அநேகர் அதைக்கண்டு கர்த்தரை மகிமைப்படுத்துவார்கள். அப்போஸ்தலரும் மெய்யடியார்கள் யாவரும் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிக்கை செய்திருக்கிறார்கள். மறுமையில் போயல்ல, இங்கேயே இப்போதே ஜீவன் உண்டாகிறதென்று ஆண்டவர் திட்டமாய்ச் சொல்லியிருக்கிறார். இது பலத்த மாறுதல் அல்லவா? இந்த மாறுதல் நம்மில் காணப்படாவிட்டால் ஜீவனாகிய கிறிஸ்து உலகத்திற்கு வந்தது நமக்கு வீணாகும்.

## 2. தேவ கிருபை உலகத்தில் பிரசன்னமான நோக்கம்

“எல்லா மனுஷருக்கும் ரட்சிப்பை அளிக்கத்தக்க **தேவ கிருபையானது** பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, **தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய்** இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணும்படி போதிக்கிறது” (தீத்து. 2:11, 12). இங்கே தேவகிருபை என்பது **கிறிஸ்துவைக்** குறிக்கும். அவரே தேவகிருபையானவர். தேவ கிருபையாகிய கிறிஸ்து எல்லா மனுஷரையும் ரட்சிக்கும் நோக்கமாக உலகில் வந்தார். அவரருளும் ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களிடம் காணப்படவேண்டிய **மாறுதலைப்பற்றி** அவர் போதிக்கிற தென்ன? அவர்கள் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்துத் தள்ளவேண்டுமென்றும், தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியுமுள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணவேண்டுமென்றும் போதிக்கிறார். இவ்வாறு அவரது கிருபையினால் தீமையானவைகள் நீங்கி, தேவபக்தி நம்மில் காணப்படுமானால் நமது ஜீவியம் மாறாதிருக்குமா? இந்த மாறுதல் நம்மில் காணப்படாவிட்டால் தேவகிருபையாகிய கிறிஸ்து உலகத்தில் பிரசன்னமானது நமக்கு வீணாகும்.

## 3. சகரியா சொன்ன தீர்க்கதரிசனத்தின் நோக்கம்

“நம்முடைய சத்துருக்களின் கைகளினின்று நாம் **விடுதலையாக்கப்பட்டு** உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் அவருக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் அவருக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு, நம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு ரட்சண்யக் கொம்பை ஏற்படுத்தினார்” என்றார். “பாவம் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமை என்றும், குமாரன் விடுதலை பண்ணினால் மெய்யாகவே விடுதலை உண்டென்றும்” ஆண்டவர் தாமே



சொன்னார். நமக்கு ஆத்தும சத்துருக்கள் அநேகம். ரட்சண்ய கொம்பாகிய கிறிஸ்து, நம்மைக் கட்டி அமிழ்த்தும் இந்தச் சத்துருக்களின் கைகளிலிருந்து நம்மை விடுதலையாக்கி, நாம் பரிசுத்தமாய் நடக்கவும் அவருக்குப் பிரியமான ஊழியம் செய்யவும் பண்ணுகிறார் என்பது வசனத்தின் கருத்து. நாம் இவ்விதமான ரட்சிப்பின் மாறுதலை அடையாமறபோனால் கிறிஸ்து ரட்சண்யக் கொம்பாக ஏற்பட்டது **நமக்கு வீணாகும்.**

## 4. அவருக்குக் கொடுக்கப்பட்ட பேரின் நோக்கம்

கர்த்தருடைய தூதன் யோசேப்பைப் பார்த்து: “அவருக்கு **இயேசு** என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் **தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்”** என்றான். ஆயிரமுறை அவர் **நாமத்தைச்** சொல்லியும் அதன் அருத்தத்தைக் கவனியாமற் போனால் என்ன பிரயோஜனம்? வேதவாசிப்பிலும், ஜெபத்திலும், பாட்டிலும், பிரசங்கத்திலும், சம்பாஷணையிலும் **இயேசு** என்ற நாமத்தை எத்தனை முறை உச்சரித்தாலும், **இயேசு** என்னும் நாமம் வரும்போதெல்லாம் தலைகுனிந்தாலும் அந்த நாமத்தின் அருத்தத்தை அறியாதவர்களைப்போல நடந்தால் என்ன லாபம்? காரியம் அப்படித்தானே இருக்கிறது. “இயேசுவின் இன்ப நாமத்தை எல்லோரும் போற்றுங்கள்” என்று ஆலயம் அதிரப் பாடுகிறோமே, ஏன் அந்த நாமத்தைப் போற்றவேணும்? அது எதினாலே இன்ப நாமம்? நாம் பாவத்தில் நிலைத்திருப்பதற்கு அது அநுகூலமான நாமமாயிருப்பதனாலேயா? அல்லது நமது **பாவங்களை நீக்கி** நம்மை ரட்சிக்கும் நாமமாயிருப் பதினாலேயா? ரட்சிப்பின் மாறுதல் நம்மில் காணப்படா விட்டால், இயேசு என்னும் இன்ப நாமம் **நமக்கு வீண் நாமமாகும்** என்பது நிச்சயம்.

## 5. அவருடைய மரணத்தின் நோக்கம்

**“நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு** அவர் தாமே தமது சரீரத்திலே நமது பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்” (1 பேது. 2:24). ஆண்டவர் நமது பாவங்களை மன்னிக்கிறது மாத்திரமல்ல, பாவ வல்லமையிலிருந்து நம்மை விடுவிப்பது மாத்திரமல்ல, நமது பாவங்களுக்காக அவர் சிலுவையில் மரித்தபோது நம்மையும் தமக்குள்ளாகச் சேர்த்துக்கொண்டு தமது மரணத்தின் சாயலில் நம்மை இணைக்கிறார் என்பது கருத்து. கிறிஸ்துவுக்கும் விசுவாசிக்குமுள்ள ஒற்றுமையினால் அவருடைய மரணமே நமது மரணமாயிற்று என்பது பவுலுடைய முக்கியமான போதனை. அவர் நமது மரணத்தை ஏற்றுக் கொண்டதால் அவர் மரித்தபோது நாமும் அவருக்குள் மரித்தோம் என்று அறிகிறோம். நாம் பாவங்களுக்குச் சாகும்படி கிறிஸ்து நமது பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார் என்று பேதுரு சொல்லுகிறார். பாவத்துக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தில் இது ஆழமான அனுபவம். மன்னிப்பு மாத்திரமல்ல, விடுதலைமாத்திரமல்ல, பாவத்துக்கு நம்மைச் செத்தவர்களாக்குகிறார். சிலுவையின் வெற்றி மகா உன்னதமானது. அந்த வெற்றியின் அனுபவம் பூரணமாக நமக்குக் கிடைக்கவில்லை. அந்த அனுபவம் நமது விசுவாச அளவுக்குத் தக்கபடி நமக்கு ஆகிறது. இன்னும் பாவ ஆசை நமக்குள் தோன்றுகிறது. உண்மையின்படி செத்தேபோனால் ஒரு தொல்லையுமில்லை. ஆனால் நாம் நம்மைப் பூரணமாய் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய அன்பில் நிலைத்திருக்கும்போது அவர் தமது ஆவியின் பலத்தாலே நம்மைப் பாவத்துக்கு மரித்தவர்களைப் போலாக்குகிறார். இந்த மேலான ஜீவியம் வேண்டுமென்று நாம் கவலைப்படுகிறோமா? அல்லது நமது மாம்சமும் மனதும்



விரும்பின யாவையும் செய்து நமது ஜீவியத்தைப் பாழாக்கிக்கொண்டிருக்கிறோமா? நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைக்கும்படியான ஆசை நமக்கில்லாவிட்டால் கிறிஸ்து சிலுவையில் மரித்தது நமக்கு **வீணாகும்.**

## 6. அவருடைய உயிர்த்தெழுதலின் நோக்கம்

“பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் **புதிதான ஜீவனுள்ளவர்களாய்** நடந்துகொள்ளவேண்டும்” (ரோ. 6:4). இதன் சம்பந்தமாக பேதுருவும் : “இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே..... தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை **மறுபடியும் ஜெனிப்பித்தார்**” என்றார் (1 பேது. 1:4). இங்கேயும் விசுவாசியிடம் காணப்படவேண்டிய ஒரு பலத்த மாறுதலை அறிகிறோம். இது நாகரிகமல்ல, சன்மார்க்கமல்ல, சீர்திருத்தமல்ல, பழுதுபார்ப்பதல்ல, சில நல்ல குணங்களை அப்பியாசிப்பதல்ல, இது நமக்குள் ஆண்டவர் நடப்பிக்கும் ஓர் புதிய சிருஷ்டிப்பாகும். “பழையவைகள் ஒழிந்தன, எல்லாம் புதிதாயின” என்று அப்போஸ்தலன் சொல்லுகிறதுபோல் நம்மிலே ஒரு பெரிய மாறுதல் உண்டாகிறது. நமது இயல்பான ஜீவன் பாவமும் பலவீனமுமானது. “கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன்” என்று பவுல் சொல்லுகிறபடி, நாம் நமது பழைய ஜீவனுக்கு மரித்து உயிர்த்தெழுந்த ரட்சகருடைய புதிதான ஜீவனுக்குப் பங்குள்ளவர்களாகிறோம். இனி நாமல்ல, அவரே நமது **ஜீவனாக** நமக்குள்ளே பிழைக்கிறார். இது எவ்வளவு பெரிய மாறுதல்! இது நமக்கு ஒரு மறு ஜனனம்போலிருக்கிறது. இவ்வித மாறுதல் நம்மில் உண்டாகாவிட்டால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் நாம் ஈஸ்தர் பண்டிகை கொண்டாடுதலும் **நமக்கு வீணாகும்.**

## 7. அவர் பரலோகம் சென்ற நோக்கம்

பிதா வாக்குப்பண்ணின பரிசுத்த ஆவியைப் பெற்று, தம்மை ஏற்றுக்கொண்ட அடியார்களை நிரப்பினார். அவர்கள் ஆவியினால் நிறைந்தபோது தங்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் **பலத்த மாறுதலைக்** கண்டார்கள். பலவீனம் நீங்கி உன்னத பலத்தைப் பெற்றார்கள். பகை விரோதங்கள் நீங்கி அன்பர்களானார்கள். மாம்சத்தின்படி பிழைத்தவர்கள் ஆவிக்கேற்றபடி நடந்தார்கள். ஆண்டவர் தமது ஆவியின் மூலம் அவர்களுக்குள்ளே வசித்து தமது சாயலுக்கொப்பாக அவர்களை மறுரூபப்படுத்தி வந்தார். இவ்விதமான மாறுதல் நம்மில் காணப்படாவிட்டால் அவர் பரலோகம் சென்று ஆவியானவரை அனுப்பினது நமக்கு **வீணாகும்.**

மேற்கூறிய விஷயங்களைக் கவனிக்கும்போது ஆண்டவர் நமக்காகச் செய்து முடித்த சரட்சண்ய வேலையின் **நோக்கம்** தெளிவாயிருக்கிறது. நமது ஜீவியம் மாற்றப்பட்டு, நாம் கர்த்தருக்குப் பிரியமாய் நடக்கவும், அவர் சித்தத்தின்படி பிழைக்கவும் செய்ய வேண்டுமென்பதே அந்த நோக்கம். நிலத்தில் பலனைக் காணவேண்டுமென்பது சமுசாரியின் நோக்கம்; பலனில்லாமற்போனால் அவன் பட்டபாடுகள் யாவும் நஷ்டமாகும். பரீட்சையில் தேறவேண்டுமென்பது மாணாக்கனின் நோக்கம்; தேறவில்லையானால் அவன் பிரயாசங்கள் யாவும் வீணாகும். நமது ஜீவியம் மாற்றப்பட்டு நாம் ஆண்டவருக்குப் பிரியமாக நடக்கிறதில்லை யென்றால் அவர் நமக்காகப் பட்ட பாடுகளும் செய்து முடித்த ரட்சண்ய கிரியைகளும் நமக்கு **வீணாகும்.**



## 2. ஜீவிய மாறுதலைப்பற்றி ஆண்டவருடைய போதனையை இப்பொழுது கவனிப்போம்

இங்கேயும் நமது உத்தேசங்களும் அபிப்பிராயங்களும் வேண்டாம். அவரே தமது வசனத்தின் மூலமாய் நமக்குப் போதிக்கட்டும். அவைகள் நமக்குத் தெரிந்த வசனங்களாதலால் இலேசாய் நினைத்து விடக்கூடாது. அவர் பிரதானமாகப் போதிக்கிறதென்ன என்பதை நாம் அறியாதிருக்கும்போது நாம் எப்படி அவருக்குச் சீஷராயிருக்கக்கூடும்? சீஷன் என்பதற்குக் **கற்றுக்கொள்ளுகிறவன்** என்று அருத்தம். நமது ஜீவியம் மாற்றப்பட்டு, நாம் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, அவர் சித்தம்போல் பிழைக்க வேண்டியதின் அவசியத்தை ஆண்டவர் தமது வசனங்களில் பலமாய்ப் பேசியிருக்கிறார். பாவிகளை ரட்சிக்கும்படி வந்த இயேசுகிறிஸ்து நல்லெண்ணங்களோடும் நல்ல தீர்மானங்களோடு மாத்திரம் வந்தவரல்ல. அவர் உலகத்தில் பிரவேசித்தபோது: “தேவனே, உமது சித்தத்தின்படிச் செய்ய இதோ வருகிறேன்” என்று சொல்லிவந்தார். அதுபோலவே அவர் எங்கும், எல்லாருக்கும், எப்பொழுதும் நன்மை **செய்கிறவராகச்** சுற்றித்திரிந்தார். அதேமாதிரி நமது ஜீவியமும் பிதாவின் சித்தத்திற்கு இசைந்ததும், அவருக்குப் பிரியமாய் நடப்பதுமாயிருக்க வேண்டுமென்று ஆண்டவர் திட்டமாய்ப் போதித்திருக்கிறார். மரியம்மாள் கலியாண வீட்டு வேலைக்காரரைப் பார்த்து: “அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி **செய்யுங்கள்**” என்றார்கள். அப்படிச் செய்ததிலேதான் மகிமையான அற்புத செயல் வெளிப்பட்டது. அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் சொல்லுகிறபடி செய்கிறவர்கள் இன்றும் அவரது மகிமையைக் காண்கிறார்கள். அவர் சொற்படி செய்ய நமக்கு

மனமில்லையென்றால், அவர் நமக்கு எஜமானுமல்ல, நாம் அவரது அடியார்களுமல்ல. நமது **செய்கையை** அல்லது **கீழ்ப்படிதலை** ஆண்டவர் எவ்வளவு முக்கியப்படுத்திப் பேசியிருக்கிறார் என்பதைக் கவனிக்கும்போது ஆச்சரியமாயிருக்கும். இதன் சம்பந்தமாய்ச் சில வசனங்களைக் கவனிப்போம்.

“என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் **செய்யாமற் போகிறதென்ன**” என்று கேட்கிறார். “என்னிடத்தில் வந்து என் வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படிச் **செய்கிறவன்** ஆழமாய்த் தோண்டி கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு வீடுகட்டுகிற புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி **செய்யாதவனோ** அஸ்திபாரமில்லாமல் மணலின்மேல் வீடுகட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்” என்றார். இருவரும் அவரிடம் வந்ததிலும், அவருடைய வார்த்தைகளைக் கேட்டதிலும் வித்தியாசமில்லை. ஆனால் ஒருவன் கேட்டபடி செய்தான், மற்றவன் **செய்யவில்லை**. பெருவெள்ளம் வந்து மோதினபோது முந்தினவனுடைய வீடு அசையவில்லை, பிந்தினவனுடைய வீடோ விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். நாம் காலமெல்லாம் திருவசனப் போதனைகளைக் கேட்டும் அவைகளின்படி **செய்யாமற்போனால்** நமது நம்பிக்கை என்னும் வீடு விழுந்து அழியும். வசனத்தைக் கேட்டு அதன்படிச் **செய்கிறவர்கள்** பாக்கியவான்கள்.

“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி **செய்கிறவனே** பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல் என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று



**சொல்லுகிறவன்** அதில் பிரவேசிப்பதில்லை” என்றார். நமது ஆராதனைகளில், ஜெபக்கூட்டங்களில், குடும்ப ஜெபங்களில் கர்த்தாவே கர்த்தாவே, ஆண்டவரே ஆண்டவரே, தேவனே தேவனே என்று நாம் சொல்லி வருவதற்குக் கணக்கு வழக்கில்லை. இப்படி நாம் சொல்லிக்கொண்டிருப்பது நம்மைப் பரலோக ராஜ்யத்தில் சேர்க்காதென்றும், பிதாவின் சித்தத்தின்படி **செய்கிறவர்களே** அந்த ராஜ்யத்துக்குரியவர் களென்றும் ஆண்டவர் திட்டமாய்ச் சொல்லிவிட்டார்.

“நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் **செய்வீர்களானால்** என் சிநேகிதராயிருப்பீர்கள்” என்றார். போதனைகளைப் பிரியமாய்க் கேட்பவர்களும், அவைகளை அறிந்துகொண்டவர்களுமல்ல, அவைகளின்படி **செய்கிறவர் களைத்** தமது சிநேகிதர் என்கிறார்.

ஒரு சமயம் அவருடைய தாயாரும் சகோதரரும் அவரைப் பார்க்கும்படி வந்தார்கள். பக்கத்திலிருந்த ஜனங்கள் அவரைப் பார்த்து: இதோ, உமது தாயாரும் உமது சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள். அதற்கு அவர் : “என் தாயார் யார்? என் சகோதரர் யார்? தேவனுடைய **சித்தத்தின்படி செய்கிறவன்** எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாயிருக்கிறான்” என்றார் (மாற். 3:31-35). கிறிஸ்துவின் ஜீவியமுழுவதும் பிதாவின் சித்தமாக இருந்தது. பிதாவின் சித்தப்படி **செய்வதே** தமக்குப் போஜனம் என்றார். யார் யார் அவரைப்போல் பிதாவின் சித்தப்படி பிழைக்க நாடுகிறார்களோ அவர்களைத் தமது சிநேகிதர் என்று மாத்திரமல்ல, அதைப் பார்க்கிலும் அதிக நெருங்கிய சம்பந்தமான சகோதரர், சகோதரிகள், தாயார் என்றும் சொல்லுகிறார். எவ்வளவு கிருபை!

வேறொரு சமயம் அவர் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஓர் ஸ்திரீ பரவசமடைந்து : "உம்மைச் சுமந்த கர்ப்பம் பாக்கியமுள்ளது" என்றாள். "அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு **அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிகப் பாக்கியவான்கள்**" என்றார். உலக ரட்சகருக்குத் தாயாயிருப்பது எவ்வளவோ பாக்கியம்! "இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்று மரியம்மாளே சொன்னார்கள். இயேசுவானவருக்குத் தமது தாயாரென்றும் மற்றவர்களென்றும் பட்சபாதமில்லை. இங்கேதான் அவருடைய **தெய்வீக மகத்துவம்** விளங்குகிறது. உலகத்தில் மனுஷர் உத்தியோக விஷயத்தில் தங்கள் இனத்தாருக்கும் ஜாதியாருக்கும் விசேஷித்த தயவுசெய்ய நாடுவது இயற்கை. ஆண்டவரிடத்தில் அப்படிப்பட்ட தன்னயம் இல்லை. தேவராஜ்யத்தின் பிரமாணம் எல்லாருக்கும் ஒன்றே.

அவர் சீஷர்களின் கால்களைக் கழுவின சமயத்தில் : "நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் **செய்யும்படி** உங்களுக்கு மாதிரி காண்பித்தேன்" என்றும் "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியால் இவைகளைச் **செய்வீர் களானால்** பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்றும் சொன்னார்.

மரியாள் பரிமளதைலம் பூசினபோது அவளைக் குறித்து: "இவள் என்னிடத்தில் நற்கிரியை **செய்திருக்கிறாள்;** இவள் தன்னால் இயன்றதைச் **செய்தாள்.** இந்தச் சுவிசேஷம் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் **செய்ததும்** சொல்லப்படும்" என்றார். இங்கே **செய்கையை** ஆண்டவர் முக்கியப்படுத்திப் பேசியிருப்பதைத் தெளிவாய்க் காண்கிறோம்.



அவர் தமது அப்போஸ்தலரை ஊழியத்துக்கு அனுப்பினபோது : "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் **கைக்கொள்ளும்படி** அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார். ஜனங்களைச் சபையில் சேர்த்தால் போதுமென்றிருக்கிறோம். ஆண்டவரோ தம்மை விசுவாசிக்கிறவர்கள் தமது கட்டளைகளைக் **கைக்கொண்டு நடக்கவேண்டியது** அவசியம் என்கிறார். அவர்கள் ஏற்றுக்கொண்ட உபதேசம் அவர்கள் நடக்கையில் காணப்படவேண்டுமென்று விரும்புகிறார். "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களைப் பார்த்து: நீங்கள் என் உபதேசத்தில் **நிலைத்திருந்தால்** மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோ. 8:31, 32).

இயேசு கிறிஸ்துவாகிய இராஜா நியாயாதிபதியாக வரும்போது ஜனத்தை வலது இடது புறமென்று இரண்டாகப் பிரித்து, வலது பக்கத்தில் நிற்பவர்களுக்கு ஆசீர்வாதம் கூறி ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைத்து, அவர்கள் தமக்குச் **செய்த** நற்கிரியைகளைப் புகழுகிறார். நாங்கள் எப்பொழுது உம்மைக்கண்டு இவைகளை உமக்குச் செய்தோம் என்று அவர்கள் கேட்க அவர்: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான ஒருவனுக்கு நீங்கள் எதைச் **செய்தீர்களோ** அதை எனக்கே **செய்தீர்கள்** என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். இடது பக்கம் நிற்பவர்கள் அவரைப் பார்த்து நாங்கள் எப்பொழுது உம்மைக் கண்டு இவைகளைச் செய்யாதிருந்தோம் என்று கேட்க அவர் மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் **செய்யாதிருந்தீர்களோ** அதை எனக்கே **செய்யாதிருந்தீர்கள்**

என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். **செய்தவர்கள், செய்யாதவர்கள்** என இரண்டாகப் பிரிக்கிறார்.

“மனுஷர் உங்கள் **நற்கிரியைகளைக்** கண்டு பரலோகத்திலிருக்கிற பிதாவை மகிமைப் படுத்தும்படிக்கு உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் **பிரகாசிக்கக் கடவது”** என்றும், “நீங்கள் மிகுந்த **கனிகளைக் கொடுப்பதினால்** என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்” என்றும் சொன்னார்.

மேற்கூறிய வாக்கியங்களைச் சேர்த்துக் கவனிக்கும்போது ஆண்டவர் மனதில் ஆழமாய்ப் பதிந்திருந்த **ஒரு முக்கியமான விஷயம்** வெகு திட்டமாய் வெளிப்படுகிறது. நமது ஜீவியத்தின் உண்மையான மாறுதல் நமது **நடக்கையிலும்** நமது **செய்கையிலும்** வெளிப்படவேண்டும் என்பதே. நமது எண்ணங்களும் தீர்மானங்களும் எவ்வளவு சிறந்ததாயினும் அவைகள் **செய்கையில்** காணப்படவேண்டும் என்கிறார். பசிக்கிறவனுக்காக நாம் பரிதபிப்பதில் அல்ல, அவனுக்கு ஆகாரம் கொடுக்கும் **செய்கையினாலேயே** அவன் பசி தீரும். பசியாயிருந்த ஜனங்களுக்காக ஆண்டவர் பரிதபித்தார். என்றாலும் அவர் அவர்களை அற்புதமாகப் போஷித்த செய்கையாலே அவர்கள் பசி நீங்கித் திருப்தியடைந்தார்கள். நமது ஜீவியம் மாற்றப்பட வேண்டும் என்றும், அந்த மாறுதல் நமது நற்செய்கைகளில் காணப்படவேண்டுமென்றும் ஆண்டவர் முக்கியமாகப் போதித்திருக்க, கிறிஸ்தவர்களில் அநேகர் இதைக் கவனியாமல் மனங்கொண்டபடி நடப்பதும், மறுபிறப்பென்னும் உள்ளான மாறுதலின் அவசியத்தை உணராதிருப்பதும், தாறுமாறான காரியங்களைத் **துணிகரமாய்ச்** செய்வதும் எவ்வளவு படுமோசம்! பவுலும் சீலாவும்



பட்டணங்கள்தோறும் சுற்றிப் பிரசங்கித்து வருகையில் “அப்போஸ்தலரும் மூப்பரும் கொடுத்த போதனைகளைச் சபையார் **கைக்கொள்ளும்படி** அவர்களுக்கு ஒப்புவித்தார்கள். அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின” (அப். 16:4,5). உத்தம விசுவாசிகளுக்கு ஆண்டவருடைய போதனைகளைக் கேட்பதும் அவைகளின் படிச் செய்வதும் வழக்கமாயிருக்கிறது. தற்காலத்திலோ கேள்விப்பிரியரும், அறிவுப் பிரியருமாயிருக்கிறோமேயன்றி, அறிந்த சத்தியத்தின்படி **செய்யவேண்டும்** என்கிற கவலை கிடையாது. “பரலோகத்தில் உமது சித்தம் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக” என்று எப்போதும் ஜெபித்தவண்ண மாயிருக்கிறோம். ஆனால் தேவசித்தம் நம்மில் செய்யப்பட வேண்டுமென்கிற விருப்பமோ நமக்கில்லை. இது விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்தபோது ஒருவர்: கிறிஸ்தவர்கள் என்கிற பேரை வைத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, எல்லாவற்றிலும் கர்த்தருக்குப் பிரியமாக நடந்துகொள்ள வேண்டும் என்கிற கவலை யாருக்கையா இருக்கிறது என்றார்.

## 3. வழக்கம் வல்லமையுள்ளது

### 1. சிலர் சடங்காச்சார ஆராதனைகளில் பழகினவர்கள்

நாம் சிறு வயது முதல் எவ்வித ஆராதனை ஒழுங்கில் பழகி வருகிறோமோ அதுவே நமக்குச் சொந்த மார்க்கமாகிறது. பட்டுகளால் மூடப்பட்ட மேஜை, பிரகாசமான சிலுவை, தூபவர்க்கம், ஜொலிக்கும் விளக்குகள், தொங்கு திரைகள், குருக்களின் அழகான அங்கிகள், பரிசுத்த பதார்த்தங்களை ஏறெடுத்தல், பணிதல் முதலான சடங்காச்சாரங்களோடு ஆராதித்தவர்களுக்கு வேறு ஆலயம் வெறும் ஆலயமாகத்

தோன்றும். சடங்காச்சாரச் சபையைச் சேர்ந்த சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர் சாதாரணமான ஆலயத்திற்குள் பிரவேசித்து: இது ஆலயமா ரீடிங் ரூமா (Reading Room) என்று கேட்டார். அப்படிப்பட்டவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து ஆராதிக்க விரும்பமாட்டார்கள். இராயபுரத்தில் மாதாகோவிலில் ஒரு திருவிழா நடைபெற்றபோது பல கிராமங்களிலிருந்து திரளான ஜனங்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஞாயிறு காலையில் நமதாலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருக்கையில் திருவிழாவுக்கு வந்த ஒரு கத்தோலிக்கக் குடும்பத்தார் தங்கள் கோவில் என்றெண்ணி நமது ஆலயத்திற்குள் பிரவேசித்தார்கள். உள்ளே வந்ததும், ஐயோ! இது வெறுங் கோவில், இங்கே சாமி சொரூபங்களைக் காணோமே என்று சொல்லி உடனே வெளியேறிவிட்டார்கள். சடங்காச் சாரங்களில் பழகினவர்களுக்கு சாதாரண ஆராதனை வெறுமையாய்த் தோன்றும். சாதாரண ஆராதனையில் பழகினவர்களுக்கு சடங்காச்சார ஆராதனை விகற்பமாய்த் தோன்றும். சடங்காச்சார ஆராதனைகளைப்பற்றியோ ஆலய அலங்கரிப்பைப் பற்றியோ ஆண்டவர் ஒன்றுமே சொல்லவில்லை. சடங்காச்சாரமோ, சாதாரணமோ, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வந்திருக்கிறதென்றும், நாம் எப்படி ஆராதிக்க வேண்டுமென்றும் ஆண்டவர். திட்டமாய்ப் போதித்திருக்கிறார். "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" என்றார். இதுவே உண்மையான ஆராதனை என்றும், தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் என்றும் சொன்னார். கர்த்தருக்குப் பிரியமாய் ஜீவிக்க விரும்புகிறவர்கள் இந்தப் போதனைக்குச்



செவிகொடுக்கவேண்டும். அது சடங்காச்சார ஆராதனையோ, சாதாரண ஆராதனையோ, நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளாவிட்டால் சகலமும் பாழாகும் என்பது நிச்சயம்.

## 2. சிலர் தேவாராதனைக்கு ஒழுங்காய்ப் போகும் வழக்கமுள்ளவர்கள்

அப்படிப் போவது அவர்களுக்கு வெகு திருப்தி. காற்றோ மழையோ அவர்களை நிறுத்தாது. ஏதாவது ஓர் சமயம் ஆராதனைக்குப் போகத் தவறினால் வெகு சஞ்சலப்படுவார்கள். இவ்வாறு காலமெல்லாம் போய் என்ன பலனைக் கண்டார்கள்? **குணமோ மாறவில்லை.** அவர்கள் ஆண்டவர்க்குப் பிரியமாய் நடப்பதில்லை. அவர்கள் பேச்சுகளும் செய்கைகளும் கிறிஸ்துவின் சிந்தைக்கு நேர் விரோதம். ஒரு ஞாயிறு காலையிலே கிறிஸ்தவ ஸ்திரீகள் இருவருக்குள் சண்டை மூண்டது. ஆராதனைக்கு மணி அடித்தது. அவர்களில் ஒருத்தி: பொறு, நான் ஆராதனைக்குப் போய்விட்டு வந்து ஒரு கை பார்க்கிறேன் என்றாள். இவளுக்குக் கோவில் என்னத்துக்கு? ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ப்போவது எதற்காகவென்பது அவர்களுக்கே தெரியவில்லை. வழக்கம் வல்லமையுள்ளது. சாத்தானுடைய வஞ்சகங்களில் இதுவும் ஒன்று.

## 3. சிலர் நற்கருணையில் ஒழுங்காய்ச் சேரும் வழக்கமுள்ளவர்கள்

எத்தனை இடையூறுகள் இருந்தாலும் அவைகளைத் தள்ளிவிட்டு ஓட்டம் ஓட்டமாய்ப் போவார்கள். ஏதாவது ஒரு நாளில் நற்கருணையில் சேரத் தவறிவிட்டால் அவர்களடையும் சஞ்சலம் கொஞ்சமல்ல. ஐயோ, நான் தவறிப்போனேனே என்று புலம்புவார்கள். அவர்கள் நடக்கையைக் கவனித்தீர்களா?

அவர்கள் குணத்தில் மாறுதல் உண்டா? நற்கருணையில் சேரப்போகும்போதும், திரும்பிவரும் போதும் அவர்களைக் கவனித்தால் சிறந்த பக்தர்கள் போல் தோன்றுவார்கள். கண்கள் இரண்டும் பரத்தை நோக்கி நிற்கும். ஆராதனை முடிந்து, ரசம் இன்னும் உதட்டில் காயாதிருக்கும்போதே அவர்கள் வாயினின்று பிறக்கும் வார்த்தைகள் அருவருப்பாயிருக்கும். வார முழுவதும் உலக மக்களிலும் கேடாக நடந்துகொண்டு, நற்கருணை வேளையில் மாத்திரம் பரிசுத்தவான்கள்போல் நடிப்பது கொடிய வஞ்சகமல்லவா? அவர்களுடைய அறியாமையே இதற்குக் காரணம். நாட்களெல்லாம் தாங்கள் செய்யும் பாவங்களைப் போக்குவதற்கு நற்கருணை ஓர் **பரிகாரம்** என்று எண்ணிக்கொண்டார்கள் போலிருக்கிறது. ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவைச் சொந்தமாக்கி, நிமிஷந்தோறும் அவராலே பிழைக்கவேண்டியதை அறியாமல், அப்பத்தையும் ரசத்தையும் ஒழுங்காய் வாங்கி உட்கொண்டால் அதுவே போதும் என்றிருப்பது எவ்வளவு தவறு! இராப்போஜனம் கிறிஸ்துவோடுள்ள அன்புக்கும் ஐக்கியத்துக்கும், விசுவாசிகளோடுள்ள அன்புக்கும் ஐக்கியத்துக்கும் அடையாள மாயிருக்கிறதென்று வேதவாக்கியம் நமக்குப் போதிக்கிறது. இவ்விரு பக்கத்து அன்பையும் ஐக்கியத்தையும் அறியாத ஒரு மனுஷன் அந்தப் பந்தியில் சேரும்படி ஓடிவரும் நோக்கமென்ன? கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவரில் அன்பாயிருக்கிற விசுவாசிகள், அவரது அருமையான மரணத்தை நினைவுகூரும்படி, இராப்போஜனத்தை ஏற்படுத்தினாரேயன்றி நமது பாவத்துக்கு மூடலாக ஏற்படுத்தவில்லை. ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதலடையா தவர்கள் அப்பத்தையும் ரசத்தையும் உட்கொண்டால் பரலோக மகிமையில் பிரவேசிப்பார்கள் என்று அவர் சொல்லவில்லை.



அப்படிப் பிரவேசிக்கக் கூடுமானால் ஆண்டவருக்கே தெரியாத ஏதோ ஒரு மந்திர சக்தி அப்பத்திலும் ரசத்திலும் இருக்கத்தான் வேண்டும். நற்கருணை விஷயமாய் ஆண்டவரே யோசிக்காததும் போதிக்காததுமான வீண் காரியங்களைக் குருமார் சபையாருக்குக் கற்பிப்பார்களானால் அது நம்மை சுத்தமான ஆராதனையிலிருந்து பிரித்து மூடப்பக்திக்குக் கொண்டுபோய் விடும். ஜீவியத்தில் மாறுதலுண்டாகாது.

### 4. சிலர் வேதத்தை ஒழுங்காய் வாசிக்கும் வழக்கமுள்ளவர்கள்

இரவோ பகலோ எப்படியாவது வேதத்தை வாசித்துவிட வேண்டும். நாங்கள் முப்பது முறை வேதத்தை வாசித்து முடித்திருக்கிறோம், நாற்பது முறை வாசித்திருக்கிறோம் என்று இவர்கள் பெருமையாய்ப் பேசுவதையும் கேட்டிருக்கிறோம். நல்ல காரியந்தான். ஆனால் பலன் என்ன? இவர்கள் **குணத்தைக்** கவனித்தீர்களா? கர்த்தருக்குப் **பிரியமாய்** இவர்கள் நடக்கிறார்களா? தாங்கள் எதற்காக வேதம் வாசிக்கிறோ மென்பதை அறிந்திருக்கிறார்களா? பெருமை, பொறாமை, பிடிவாதம், விரோதம் முதலான சகல கேடுபாடுகளையும் இவர்களிடம் காணலாம். தங்கள் ஜீவியம் மாற்றப்படவேண்டிய அவசியத்தை இவர்கள் உணருகிறதில்லை. வேதத்தை ஒழுங்காய் வாசிக்கும் **வஞ்சகத்தில்** அகப்பட்டிருக்கிறார்கள். வாசித்துவிட்டால் திருப்தி; வாசிக்கத் தவறிவிட்டால் விசனம். ஒரு அம்மாள் இரவில் வேதம் வாசிக்காமல் படுக்கைக்குப் போக மாட்டார்கள். ஓர் இரவு வேதம் வாசிக்காமல் தூங்கி விட்டார்கள். காலையில் எழுந்ததும்: ஐயோ, நான் என்ன செய்வேன்? வேதம் வாசிக்காமல் தூங்கிவிட்டேனே என்று அங்கலாய்த்தார்கள்.

அக்காலத்தில் அவர்கள் பக்கத்து வீட்டில் நான் குடியிருந்தேன். என்னிடம் முறையிட்டார்கள். அவர்கள் அதிகமூர்க்கமான சுபாவமுள்ளவர்கள். தன் புருஷனோடும் பிள்ளைகளோடும் ஓயாச் சண்டை. வேறுயாராவது அகப்பட்டுக்கொண்டால் அவர்களோடும் சண்டை. பகல் முழுவதும் வீட்டில் சத்தமும் சச்சரவுமிருக்கும். இரவிலோ வேத வாசிப்பு நடக்கும். நான் அவர்களைப்பார்த்து: அம்மா, உங்கள் ஜீவியத்தில் மாறுதல் இல்லை. எப்போப் பார்த்தாலும் ஓயாச் சத்தமும் ஓழியாச் சச்சரவுமாயிருக்கிறதே. அன்புள்ள ரட்சகருக்கு உங்கள் உள்ளத்தில் இடமில்லை. சாத்தான் உங்களை வேத வாசிப்பு என்னும் வழக்கத்தைக்கொண்டு வஞ்சித்துக் கெடுக்கிறான். ஜீவியத்தை மாற்றாத வேத வாசிப்பினால் உங்களுக்கு என்ன லாபம்? ரட்சகரை ஏற்றுக்கொண்டு அவரில் அன்பாயிருங்கள். உங்கள் ஜீவியம் மாறும், வேதவாசிப்பு உங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும் என்றேன். ஆண்டவர் கிருபையால் உணர்வடைந்து ஜீவியத்தில் மாறுதலடைந்தார்கள்.

## 5. சிலர் எழுப்புதல் கூட்டங்களில் பங்கு கொள்ளும் வழக்கமுள்ளவர்கள்

நமது ஆவிக்கு எழுப்புதல் அவசியம். பாட்டுகள் ஜெபம், வேதவாசிப்பு மூலமாய் நமது ஆவிக்கு, எழுப்புதல் கிடைக்கிறது. எழுப்புதல் அல்ல, **கிறிஸ்துவே** நமது ரட்சிப்பு. எழுப்புதல் மாறலாம், குறையலாம், ஆண்டவரோ மாறுவதில்லை. ஆகையால் நமது நம்பிக்கை **கிறிஸ்துவிலேயே** இருக்க வேண்டும். சென்னையில் ரட்சண்ய சேனையில் சேர்ந்திருந்த ஒருவர் திருநெல்வேலியிலுள்ள தன் சொந்த ஊருக்கு வந்திருந்தார். அச்சமயம் நாசரேத்திலிருந்த என்னிடம் அவர் வந்து: ஐயா, நான் என் ஊருக்கு வந்தது முதல் என் பக்தி



எங்கேயோ போய்விட்டது; எனக்குச் சந்தோஷமில்லை, உற்சாகமுமில்லை என்றார். என்ன காரணமென்று கேட்க அவர்: நான் பட்டணத்திலிருந்தபோது சேனையிலுள்ளவர்களோடு சேர்ந்து எவ்வளவோ பாடுவோம், ஜெபிப்போம், சாட்சி கூறுவோம். இங்கே வந்தது முதல் அவைகள் இல்லை என்றார். நீர் கிறிஸ்துவை அறிந்து அவரில் அன்பு கூர்ந்து அவரில் நிலைத்திருக்கக் கற்றுக்கொண்டால் நீர் எங்கே போனாலும், பூமியின் கடையாந்தரம் போனாலும் ரட்சகரே, உமது சந்தோஷமும் உற்சாகமுமாயிருப்பார். நீர் அப்படிச் செய்யாமல் பாட்டுகளையும், கைத்தாளங்களையும், ஜெபங்களையும், சாட்சி கூறுவதையும் உமது மார்க்கமாக நம்பியிருந்தபடியால் அவைகள் நின்றவுடனே உமது பக்திமார்க்கமும் உற்சாகமும் எழுப்புதலும் பறந்து போயின என்றேன்.

ஆவிக்குரிய கூட்டங்களில் சகோதரர் சகோதரிகள் சேர்ந்து பாடுவதும், கைத்தாளம் போடுவதும், ஜெபிப்பதும், வாசிப்பதும், சாட்சி சொல்லுவதும் அல்லேலூயா ஆர்ப்பரிப்பதும் மனதுக்கு எவ்வளவோ எழுப்புதலாயிருக்கின்றன. கூட்டத்தைவிட்டு ஒருவர் தனித்து வேறிடம் போக நேரிட்டால் உற்சாகமும் எழுப்புதலும் நின்றுபோகலாம். புறம்பான காரியங்கள் எவ்வளவு அருமையாயிருந்தாலும் அவைகளைக் **கிருபையின் எத்தனங் களாகப்** பாவிக்கவேண்டும். **எத்தனங்களை** அனுசரித்தும் **கிருபையை** இழந்துபோனால் பிரயோஜனமென்ன? வேதவாசிப்பு **அறிவை** உண்டாக்கும். ஜெபம் **ஊக்கத்தைப்** பிறப்பிக்கும். பாட்டு **உற்சாகத்தைக்** கொடுக்கும். பிரசங்கம் **எழுப்புதலை** உண்டாக்கும். **கிறிஸ்து உள்ளத்தில் பிரவேசிப்பதோ** நமது ஜீவியத்தில் மாறுதலையும் ரட்சிப்பையும் நமக்குக் கொடுக்கும். ஆகையால் கிறிஸ்துமார்க்க ஆசாரங்களை ஒருவன் ஒழுங்காய்க் கைக்கொண்டு வந்தும்

கிறிஸ்தற்றவனா யிருப்பானானால், சபையைச் சேராதிருந்தும் கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டு பிழைக்கிறவனே ஆண்டவருக்குப் பிரியமானவனாயிருப்பான் (மத். 7:21).

கிறிஸ்துவுக்குள் பிரிவினையில்லை. மனுஷர் உண்டாக்கின கொள்கைகளினாலும் சடங்காச்சாரங்களினாலும் சபைகள் பிரிந்திருக்கின்றன. நாம் பிரதானமாய்ப் பற்றிக்கொண்டிருக்கிற காரியங்களை ஆண்டவர் பிரதானமாக எண்ணுகிறவரல்ல. **எது பிரதானம்** என்பதை அவர் எடுத்துக் காண்பித்திருக்கிறார். அவர் வரும் நாளில் : நீ எந்த மிஷனைச் சேர்ந்தவன், எந்த சபையைச் சேர்ந்தவன் என்றோ; சடங்காச்சாரத்தோடு தொழுதுகொள்ளுகிறவனா, சாதாரண மாகத் தொழுதுகொள்ளுகிறவனா என்றோ; நீர் தெளித்து ஞானஸ்நானம் பெற்றவனா, முழுகி ஞானஸ்நானம் பெற்றவனா என்றோ; நீ பாஷை பேசினாயா என்றோ; நீ தவறாமல் ஆராதனைக்குப் போனாயா, ஒழுங்காய் நற்கருணை சேர்ந்தாயா என்றோ; சனிக்கிழமையா, ஞாயிற்றுக்கிழமையா, எந்த நாளை ஓய்வு நாளாக ஆசரித்தாய் என்றோ; நீ வேதத்தை எத்தனை முறை வாசித்து முடித்திருக்கிறாய் என்றோ; இவை முதலான **ஒரு கேள்வியும் அவர் கேட்கப்போகிறவரல்ல. அவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தைப்** பற்றியே விசாரிப்பார். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமலும், ஜீவியத்தில் மாறுதலடையாமலும், புறம்பான ஆசாரங்கள் கொள்கைகளில் நம்பிக்கை வைத்தவர்கள் யாவரும் ஏமாற்றமடைவார்கள். அதனாலேதான் யூதஜாதியின் மார்க்க நம்பிக்கை மோசமாக முடிந்தது. அவர்கள் பாரம்பரியத்திலும், சடங்குகள், பலிகள், ஆராதனைகள், பண்டிகைகள் முதலியவற்றிலும் அதிகப் பற்றுதல் உள்ளவர்களாயிருந்தார்கள். ஜீவியத்தில் காணப்படவேண்டிய நீதி, இரக்கம், விசுவாசம், அன்பு முதலிய



நற்குணங்களை விட்டுவிட்டார்கள். உள்ளான மாறுதலின் அவசியத்தையும், கர்த்தருக்குப் பிரியமாக நடந்துகொள் வதையும் அவர்கள் கவனிக்கவேயில்லை. ரட்சகர் எருசலேமைப் பார்த்துக் கண்ணீர் விட்டழுதார். ஏன் அழுதார்? அவர்கள் சடங்காச்சாரங்களை, ஆராதனைகளை, பலிகளை, பண்டிகைகளை ஒழுங்காய் நடத்தவில்லையென்றா அழுதார்? அவர்கள் மனந்திரும்பவில்லையே ஜீவனாக வந்த தம்மை ஏற்றுக் கொள்ள அவர்களுக்கு மனதில்லையே, தேவனுக்குப் பிரியமாய் அவர்கள் நடக்கவில்லையே என்றுதான் அழுதார். ஆகையால் ஆண்டவர் அவர்களைப் பார்த்து: மதிகேடரே, குருடரே **எது முக்கியம்?** குருட்டு வழிகாட்டிகளே, மாயக்காரர்களே, சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே நரகாக்கினைக்கு எப்படித் தப்புவீர்கள் என்று கேட்டார். உலகம் புகழ்ந்த அவர்களுடைய சிறந்த ஆலயமும், அவர்கள் நம்பியிருந்த புறம்பான மார்க்க ஆசாரங்களும் அடியோடழிந்தன. இந்த 2000 வருஷகாலமாக அவர்கள்படும் துயரங்களை உலகம் அறியாமல் இல்லை.

யூதருக்குள் **விருத்தசேதனச்** சடங்கு மகாமுக்கியம். அப்படியிருந்தும் பரிசேயரில் பரிசேயனான பவுல், கிறிஸ்துவின் மூலமாய் உண்டான ரட்சிப்பின் மாறுதலைத் தன் ஜீவியத்தில் கண்டபின் : "விருத்தசேதனம் ஒன்றுமில்லை, விருத்தசேதன மில்லாமையும் ஒன்றுமில்லை, தேவனுடைய கற்பனைகளைக் **கைக்கொள்ளுகிறதே** காரியம்" என்றும் கலாத்தியர் நிருபத்தில் கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதன மில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, **"அன்பினால் கிரியை செய்கிற** விசுவாசமே உதவும்" என்றும்; மறுபடியும் "கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை

**புதுச் சிருஷ்டியே காரியம்”** என்றும் எழுதியிருக்கிறார். அதுபோல நாமும் ஞானஸ்நானம் ஒன்றுமில்லை, ஞானஸ்நானமில்லாமையும் ஒன்றுமில்லை, புதுச் சிருஷ்டியே காரியம் என்று சொன்னால் எப்படியிருக்கும்? தெளித்த ஸ்நானம் பெற்றாலும் சரி, முழுக்கு ஸ்நானம் பெற்றாலும் சரி, நமது ஜீவியம் மாற்றப்படுவதே பிரதானம் என்று சொன்னால் ஆண்டவர் கோபித்துக் கொள்வாரோ? ஞானஸ்நானம் பெறாத கள்ளன் பரதீஸில் பிரவேசிக்க ஞானஸ்நானம் பெற்ற சீமோன் சாபத்திற்குள்ளானதேன்? தன் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதல் இல்லாதவர்கள், கிறிஸ்துவின் சிந்தையில்லாதவர்கள் எத்தனை ஸ்நானங்கள் பெற்றால்தான் என்ன? எத்தனை நற்கருணை வாங்கினால்தான் என்ன? அவைகள் அவர்களை ரட்சிக்குமா? அவர்களை நித்திய மகிமையில் கொண்டு போய்ச் சேர்க்குமா? ஒருவன் ஞானஸ்நானம் பெற்றவன். அவன் கிறிஸ்துவைத் தன் ஜீவனாக ஏற்றுக் கொள்ளவில்லை. தன்னை அவருக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அவன் ஜீவியத்தில் மாறுதல் இல்லை. வேறொருவன் ஞானஸ்நானத்தை அறியாதவன். கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவரில் அன்பு கூர்ந்து, அவருக்குப் பிரியமாய் நடக்கிறவன். ஆண்டவர் முந்தினவனைப் பார்த்து: நீ என்னை ஏற்றுக் கொள்ளாதவன், என்னில் அன்பில்லாதவன், என் ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாதவன், அப்படியிருந்தாலும் பரவாயில்லை; **நீ ஞானஸ்நானம்** பெற்றதால் என் மகிமைக்குள் பிரவேசி என்றும்; மற்றவனைப் பார்த்து: நீ என்னை உன் ஜீவனாக ஏற்றுக்கொண்டிருக்கிறாய்; என் ரட்சிப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறாய்; எப்பொழுதும் எனக்குப் பிரியமாக நடக்கிறாய்; உன் ஜீவியம் மாற்றப்பட்டிருக்கிறது; என்றாலும் நீ ஞானஸ்நானம் பெறாததால் நீ நரகத்துக்கே போகக்கடவாய் என்றும்



சொல்லுவாரா? அப்படி அவர் சொல்லுகிறதாயிருந்தால் பரிசேயரைப் பார்க்கிலும் அவர் அதிக மோசமான பரிசேயனாயிருப்பார். புறம்பான ஆசாரங்களில் வைராக்கியம் பாராட்டி, ஆவிக்குரிய உள்ளான மாறுதலைக் கவனிக்காமற்போன வேதபாரகர் பரிசேயரைப் பலமாய்க் கடிந்து கொண்டு: மதிகேடரே, குருடரே எது முக்கியம்? வெளிப்புறம் சுத்தமாயிருக்கும்படி பாத்திரத்தின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்குங்கள் என்று அவர் போதித்தாரே. ஆண்டவர் ஆசாரங்களையும் சடங்குகளையும் ஏற்படுத்த வந்தவரல்ல. நமது ஜீவியத்தை மாற்றி நம்மைப் பாவங்களிலிருந்து ரட்சிக்கும்படி வந்தார். அவருடைய சிந்தையை அணிந்து, அவரிடம் கற்றுக்கொள்ளுகிறவர்கள் புறம்பான காரியங்களில் வைராக்கியம் பாராட்டி வீண் வாக்குவாதம் செய்து கொண்டிருக்க மாட்டார்கள்.

ஜீவியம் **மாற்றப்படுவதின்** அவசியத்தைப்பற்றி ஆண்டவர் மாத்திரமல்ல, அவரால்போதிக்கப்பட்ட அப்போஸ்தலரும் தாங்கள் எழுதிய நிருபங்களில் : ஆலயங்கள், ஆராதனைகள், சடங்காச்சாரங்கள், மனுஷருடைய ஏற்பாடுகள் முதலான காரியங்களைப்பற்றிப் போதிக்காமல் நாம் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து அவருடைய சித்தத்தின்படி நடக்க வேண்டுமென்றும், இனி வெளிப்படும் நித்திய மகிமைக்கு கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தினால் நம்மைத் தகுதி யுள்ளவர்களாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் பிரதானமாக எழுதியிருக்கிறார்கள். ஆண்டவர் நம்மை அழைத்திருக்கும் அழைப்பு எவ்வளவோ மேலானது. நாம் அவரை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு பிழைக்கவும், அவர் நமக்குள் வாசம் பண்ணுவதால் அவருடைய சாயலுக்கொப்பாக

மாற்றப்படவும், எப்பொழுதும் அவருக்குப் பிரியமானதைச் செய்து, அவருடைய பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும் நம்மை அழைத்திருக்கிறார். இவ்வாறு நமது ஜீவியம் மாற்றப்படா விட்டால் நாமும் கெடுவோம் நமது ஆசாரங்கள் அனுஷ்டானங்கள் யாவும் வீணாகும். கிறிஸ்துவின் நாமம் மற்றவர்களுக்குள் மகிமைப்படாதபடிக்கு **கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்கள்** காரணமாயிருக்கிறார்கள். நமது தொழிற் சாலைகளில் கிறிஸ்தவ வாலிபர்களும் இந்து வாலிபர்களும் வேலை செய்துவருகிறார்கள். கிறிஸ்தவ வாலிபர்கள் பேசும் தூஷணங்களையும், செய்யும் அக்கிரமமான காரியங்களையும் கவனிக்கிற இந்து வாலிபர்கள்: இது என்ன அநியாயம்! எங்களை அஞ்ஞானிகள் என்கிறீர்களே, ஆனால் உங்களைப் போல் இவ்வளவு கேவலமாய் நாங்கள் நடப்பதில்லையே என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். சபையின் ஜனங்களுக்குள் பலத்த மாறுதல் ஏற்படவேண்டியது மிகவும் அவசிய மாயிருக்கிறது.

## 4. நமது ஜீவியம் மாற்றப்பட்டதுண்டானால் அதை நாம் எப்படி அறியலாம்?

பல குறிப்புகளைச் சொல்லலாம். ஆயினும் சில முக்கியமான லட்சணங்களை மாத்திரம் எடுத்துரைப்போம்.

1. **அது ஜெபசிந்தையுள்ள ஜீவியம்.**

ஜெபசிந்தை இல்லாமல் பிரசங்க வாக்கியத்தில் சொல்லியிருக்கிறபடி நாம் ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்துகொள்ளவும், அவர் சித்தப்படி பிழைக்கவும் முடியாது. ஜெபசிந்தை என்று சொல்லும்போது, ஆராதனை ஜெபங்கள்,



கூட்ட ஜெபங்கள், குடும்ப ஜெபங்கள், குறித்த நேரத்து ஜெபங்களை மாத்திரம் குறிக்காது. இப்படிப்பட்ட ஜெபங்களில் பங்கு பெறுவது நல்லது. ஆகிலும் **ஜெபசிந்தை** என்பது இருதய பீடத்திலிருந்து ஆண்டவரை நோக்கி இடைவிடாமல் எழும்பிக்கொண்டிருக்கும் தூபம்போலிருக்கிறது. இதை **மானத பூசை** என்றும் சொல்லுவார்கள். இதற்கு ஒரு சமயம், வேளை என்பதில்லை. இருக்கும் போதும் நடக்கும்போதும் படுக்கும்போதும் எழும்பும்போதும் பல காரியங்களில் முயற்சியாயிருக்கும்போதும் உள்ளத்திலிருந்து இறைவனை நோக்கித் தொடர்ந்து செல்லும் சிறுசிறு விண்ணப்பங்களாகும். ஒரு நாளில் பலரை நாம் காணலாம், பல காரியங்கள் சம்பவிக்கலாம். இவைகளில் சந்தோஷமுண்டு துக்கமுண்டு; பயமுண்டு தைரியமுண்டு; லாபமுண்டு நஷ்டமுண்டு; கவலையுண்டு கஷ்டமுண்டு; சோதனைகளுண்டு தவறுதலுண்டு; தெளிவுண்டு சிக்கலுண்டு. எல்லாம் நாம் நினைத்தபடி வாய்ப்பதில்லை. மாறுதலுள்ள இவ்வாழ்வில் **ஜெபசிந்தை** கைகண்ட மருந்தாயிருக்கிறது. எந்த இடத்தில் எவ்விதமாகக் காரியத்தை உணருகிறோமோ அவ்விடத்திலேயே அதை ஆண்டவருக்கு அறிவிக்கும் சிந்தையே ஜெபசிந்தை. தவறுதலுண்டானால் அறிக்கையும், நன்மையுண்டானால் நன்றியும், சந்தோஷமுண்டானால் ஸ்தோத்திரமும், தேவை உண்டானால் விண்ணப்பமும், கவலையுண்டானால் தெரிவித்தலும் இவ்வாறு நமக்கடுத்த சகல காரியங்களையும் ஆண்டவரோடு இடைவிடாமல் கலந்து பேசிப் பிழைப்பது ஜெபசிந்தையாகும். ஜெபசிந்தையைப்போல் ஆண்டவரோடு நம்மை இணைப்பது வேறில்லை. ஜெபசிந்தையில்லாமல் கர்த்தருக்குப் பிரியமாய் நடக்க முடியாது. ஜெபசிந்தை ஆண்டவருடைய பிரசன்னத்தை நமக்கு நிச்சயப்படுத்துகிறது.

## 2. அது மனத்தாழ்மையுள்ள ஜீவியம்

மேட்டிமையான பார்வை, ஒய்யாரமான கைவீச்சு, இறுமாப்பான நடை, ஆங்காரமான சத்தம், இடும்பான பேச்சு, கர்வமான எண்ணம், ஆடம்பரமான உடை இப்படிப்பட்ட காரியங்கள் ஆண்டவர் பார்வையில் **முழு அருவருப்பு.** பெருமைக்காரன் கர்த்தருக்குப் பிரியமானவனல்ல. "பெருமையுள்ளவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்." நமக்குள்ள நன்மைகள் யாவும் தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட ஈவுகளாகும். இதை உள்ளபடி உணர்ந்தால் நமக்குப் பெருமை ஏது? மேலும் சிறு பிராயமுதல் இதுவரை நாம் செய்திருக்கிற அக்கிரமங்களையும் பாவங்களையும் மீறுதல்களையும் யோசிப்போமானால் தூசியிலும் சாம்பலிலும் நம்மைத் தாழ்த்துவது நியாயமேயன்றி பெருமைக்கு இடமேது? பெருமைக்காரன் சுயநீதியுள்ளவன்; அவன் தன்னை அறியாதவன். அவன் உணர்வில்லாத மனுஷன். பெருமைக்காரன் ஆக்கினைக்குத் தப்பான். பழைய ஏற்பாட்டில் நேபுகாத்நேச்சாரையும், புதிய ஏற்பாட்டில் ஏரோதுவையும் நினைத்துக் கொள்ளவேண்டியது.பெருமையுள்ளவன் கட்டாயம் சிறுமை அடைவான், அழிவான்.

கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, அவர் சித்தம்போல் பிழைக்கும் பரிசுத்தவான்களிடத்தில் **மனத்தாழ்மை** சிறந்து விளங்கும். பிதாவுக்குப் பிரியமானதையே எப்பொழுதும் செய்து, பிதாவின் சித்தப்படியே பிழைத்த நமது ரட்சகர் சாந்தமும் மனத் தாழ்மையுமுள்ளவராயிருந்தார். நாமும் அவரைப் போல் நடந்துகொள்ள வேண்டுமென்று நமக்குக் கற்பிக்கிறார். யார் யார் கர்த்தருக்குப் பிரியமாய் நடக்கிறார்களோ அவர்கள் தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் மனத்தாழ்மையாய் நடந்து கொள்வார்கள்.



## 3. அது அன்புள்ள ஜீவியம்

தேவனுடைய பல லட்சணங்களை எடுத்துப் பேசுகிறோம். ஆனால் அன்பு அவைகளில் ஒன்றல்ல. அவருடைய சகல லட்சணங்களும் சேர்ந்தது **அன்பு.** "தேவன் **அன்பாகவே** இருக்கிறார்." அன்பற்ற இந்த உலகத்துக்கு **இயேசுகிறிஸ்து** அன்பின் அவதாரமாக வந்தார். அவரைத் தன் ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவராலே பிழைக்கிறவன் அன்பனாக மாறுகிறான். ஜென்ம சுபாவத்துக்குரிய பகை, விரோதம், வர்மம், பிரிவினை, கோபம், பிடிவாதம், ஆங்காரம் முதலிய தீய குணங்கள் நீங்கி, தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் அன்பாய் நடந்துகொள்ளுகிறான். அன்பின் ரட்சகர் அவன் உள்ளத்தில் வசிப்பதினாலே, தேவ அன்பு அவன் இருதயத்தில் ஊற்றப்பட்டிருப்பதினாலே, இப்படி நடந்து கொள்வது அவனுக்கு இயல்பாகிறது. அன்புள்ள ஜீவியம் கர்த்தருக்குப் பிரியமான ஜீவியம். நாம் தேவனிடத்தில் அன்பாயிருப்பது மெய்யானால் மனுஷரிடத்திலும் அன்பாயிருப்போம். மனுஷரிடத்தில் அன்பாயிருப்பது மெய்யானால் தேவனிடத்திலும் அன்பாயிருப்போம். ஒன்றில்லையானால் மற்றதும் இல்லை. ஒருவன்; நான் மனுஷரிடத்தில் அன்பாயிருக்கிறேன், தேவனிடத்தில் அன்பாயிருக்க முடியவில்லை என்று சொன்னால் அது பொய். வேறொருவன்: நான் தேவனிடத்தில் அன்பாயிருக்கிறேன், மனுஷரிடத்தில் அன்பாயிருக்க முடியவில்லை என்று சொன்னால் அதுவும் பொய். உண்மையென்னவென்று கேட்டால், தேவ அன்பில்லாமல் மனுஷரிடத்தில் அன்பாயிருக்க முடியாது. மனுஷரிடத்தில் அன்பில்லையானால் நமக்குள் தேவ அன்பு இல்லையென்பது நிச்சயம். தேவ அன்பும் மனுஷர் அன்பும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கிறது. பறக்கும் பட்சிக்கு இரு சிறகுகள் அவசியமாயிருப்பதுபோல, உன்னத

மகிமைக்குள் பிரவேசிக்கும் உத்தம விசுவாசிகளுக்கு தேவன்மீது அன்பும், மனுஷர்மீது அன்பும் இன்றியமையாத அவசியம். அன்பில் நடந்துகொள்ளாமல் ஆண்டவருக்குப் பிரியமானதைச் செய்யவோ, அவர் சித்தம்போல் பிழைக்கவோ முடியாது.

## 4. அது நன்மை செய்யும் ஜீவியம்

நாம் ஆண்டவருக்குப் பிரியமாக நடந்துகொள்ளுகிறது மெய்யானால் அவரில் விளங்கிய சிறந்த லட்சணங்கள் நம்மிலும் காணப்படவேண்டும். மனுஷருக்குள்ளே குணப் பொருத்தம் சிநேகத்தையும், குணபேதம் சச்சரவையும் உண்டாக்குவதை அறிவோம். ஆண்டவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தமும் அது போலவே. அவருடைய சிந்தைக்கொப்பாய்ப் பிழைக்கிறவர்கள் அவருடைய ஐக்கியத்தில் பிழைக்கிறார்கள். அவருடைய சிந்தைக்கு விரோதமாய் நடக்கிறவர்கள் ஐக்கியத்தை இழந்துபோகிறார்கள். அவருடைய சிந்தை எங்கேயோ அங்கே அவர் இருக்கிறார். இதன் உண்மையை யோவான் விளக்கிக்காட்டுகிறார். “அன்பில் நிலைத்திருக் கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்” என்கிறார்.

நமது ரட்சகரிடத்தில் ஜெபசிந்தை, மனத்தாழ்மை, அன்பு சிறந்து விளங்கினபடியால் அவர் எங்கும், எல்லாருக்கும், எப்பொழுதும் நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தார். அவர் ஒருவருக்கும் தீமை செய்தவரல்ல. அவருடைய பார்வையாலும், வாக்காலும், செய்கையாலும், மனுஷருடைய ஆவிக்கும் சரீரத்திற்கும் வேண்டிய நன்மைகளைப் பொழிந்தருளினார். அவரை ஏற்றுக்கொண்டு அவருக்குள் பிழைக்கிற கிறிஸ்தவன் வேறுவிதமாய் நடப்பதெப்படி? கர்த்தருக்குப் பிரியமாய் நடந்துகொள்ளுகிறவர்கள் தங்களால் இயன்றமட்டும் பிறருக்கு



நன்மை செய்கிறவர்களாயிருக்கிறார்கள்; “என்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் பாயும்” என்று ஆண்டவர் சொன்னபடி உத்தம விசுவாசி தன் பார்வை, பேச்சு, செய்கை, எழுத்து, வாசிப்பு, பாட்டு, ஜெபம், சம்பாஷணை, சிநேகம், உபகாரம் முதலியவற்றால் அநேகருக்கு ஆசீர்வாதமா யிருக்கிறான்.

## 5. அது கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மறுரூபமாகிற ஜீவியம்

இங்கே மறுரூபம் என்பது கிறிஸ்து மகிமையில் வெளிப்படும்போது நாம் அவருக்கு ஒப்பாகிற பூரண மாறுதலைக் குறிக்காது. அதைக் குறித்து யோவான்: “அவர் வெளிப்படும்போது அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்” என்கிறார். அந்த மாறுதல் ஒரு நிமிஷத்தில் ஒரு இமைப் பொழுதில் நமக்குள்ளும் நமது சரீரத்திலேயும் அவரே உண்டாக்குகிற பூரண மறுரூபம். அந்த மறுரூபம் பரமமகிமைக்குள் நாம் பிரவேசிப்பதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறது. இங்கே இப்போதே நம்மில் நடந்தேறுகிற மறுரூபத்தைப்பற்றிப் பவுல்: “தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய **சாயலுக் கொப்பாயிருப்பதற்கு** முன் குறித்திருக்கிறார்” என்றும், “நாமெல்லாரும் திறந்தமுகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து **மறுரூபப்படுகிறோம்”** என்றும், “நீங்கள் இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று

பகுத்தறியத் தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே **மறுரூபமாகுங்கள்”** என்றும் சொல்லுகிறார் (ரோம. 8:29, 2 கொரி. 3:18; ரோம. 12:2).

இது நமது ஜீவியத்தில் இப்பொழுதே காணப்பட வேண்டிய மறுரூபம். “பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும்” என்பதுபோல ரட்சகர் நமக்குள் வசிக்க நாம் இடங்கொடுக்கும்போது அவர் தமது ஆவியின் மூலமாய் நமது **ஜீவியத்தைப்** படிப்படியாகத் தமது சாயலுக்கொப்பாக மறுரூபமாக்கி வருகிறார். “என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்” என்று ஆண்டவர் தம்மைக் குறித்துச் சொன்னதுபோல, உத்தம விசுவாசிகளைக் காண்பவர்கள் ஓரளவாகிலும் கிறிஸ்துவின் சாயலை அவர்களில் காண்கிறார்கள். “நீங்கள் எனக்குச் **சாட்சிகள்**” என்று ஆண்டவர் சொன்னபோது நாம் அவரைப்பற்றிப் பிரசங்கிக்க வேண்டும் என்பதைப் பார்க்கிலும், நாம் அவரைக் காண்பிக்கும் **மாதிரிகளாய்** இருக்கவேண்டுமென்பதே அவர் பிரதான கருத்து. கர்த்தருக்குப் பிரியமாய் நடந்து, அவர் சித்தம்போல் பிழைக்கும் தேவமக்கள் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மாறாதிருக்க முடியாது. “இயற்கை வாசனை, சேர்க்கை வாசனை” என்றிருக்கிறது. இயற்கையில் நம்மில் நற்குண வாசனை இல்லை, சேர்க்கையினாலேதான் ஆகவேண்டியதிருக்கிறது. அந்தப்படி கிறிஸ்துவின் ஐக்கியத்தில் நிலைத்திருந்து பிழைக்கும் தேவமக்கள் அவரை அறிகிற அறிவின் வாசனையை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறார்கள் (2 கொரி. 2:14,15). ஆகவே கர்த்தருக்குப் பிரியமாய் நடக்கிறவர்கள் ஜெபசிந்தையுள்ளவர்களும், மனத்தாழ்மையுள்ளவர்களும், அன்பர்களும், பிறருக்கு நன்மை செய்கிறவர்களும், கிறிஸ்துவின் சாயலணிந்தவர்களுமாயிருக்கிறார்கள்.



காரியம் இப்படியிருக்க, **சபைகளின் நிலைமை** எப்படியிருக்கிறது? நமது குணம் மாறவேண்டும், நமது நடக்கை சீர்படவேண்டும் என்பதைச் சபைகள் பொதுவாய்க் கவனிக்கிறதில்லை. **ஜீவியம் மாற்றப்படுவதின்** அவசியத்தை சபைகள் தோறும் ஆயிரமுறை கூறி அறிவித்தாலும் நியாயமாயிருக்கும். ஏனென்றால் மனம் மாறாத நிலைமை ஆண்டவரைவிட்டு நம்மைப் பிரித்து விடுகிறது. பாவத்தில் சஞ்சரிப்பது நம்மை, பரம மகிமைக்கு அபாத்திரராக்கிவிடுகிறது. கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு பிழைக்காதிருப்பது நித்திய ஜீவனுக்கு நம்மை அந்நியராக்கிவிடுகிறது. எது மகா பிரதானமோ அதை விட்டுவிடுகிறோம்; மற்ற அநேகக் காரியங்களை அனுசரித்துவருகிறோம். ஆலயங்கள் இருந்தபோதிலும், போதகர்கள் இருந்த போதிலும், ஆராதனைகள் நடந்தபோதிலும் நமக்குள் உலக சிந்தை, பொருளாசை, பகை, பிரிவினை, பொறாமை, பெருமை, வைராக்கியம், வாக்குவாதம், கபடு, கலகம், தன்னயம், தந்திரம், இறுமாப்பு, பிடிவாதம், துன்மார்க்கம் முதலான பாவங்கள் சபையிலுள்ளோரை ஆண்டுகொண்டு அலைக்கழிக்கின்றன. இப்படிப்பட்ட பாவங்களிலிருந்து நம்மை ரட்சிக்கும்படி ஆண்டவர் வந்தாரேயல்லாமல், ஆலயம் கட்டுவது எப்படி? ஆராதனை நடத்துவது எப்படி? ஸ்நானம் கொடுப்பது எப்படி? நற்கருணை பரிமாறுவது எப்படி? பண்டிகைகள் கொண்டாடுவது எப்படியென்று கற்றுக்கொடுக்க அவர் வரவில்லை. நாமோ இப்படிப்பட்ட காரியங்களில் பற்றுதல் வைத்து, நமது ஜீவியம் மாற்றப்படவேண்டிய அவசியத்தை உணராதிருக்கிறோம். உலகத்தை அழித்துப் பாழாக்கும் சத்துருவாகிய சாத்தான் சபைகளை மறந்தவனல்ல. இக்காலத்தில் அவன் தன் முழு பலத்தோடு சபைகளில் வேலை செய்கிறான். நமது ஆசரிப்புகளில் அவன் பிரவேசிக்கமாட்டான்.

ஆயிரம் ஆராதனைகளும் கூட்டங்களும் நடந்தாலும் கவலைப்படான். ஆனால் கிறிஸ்து மூலமாய் நமது ஜீவியம் மாற்றப்படுவதையோ அவன் சகிக்கமாட்டான். கிறிஸ்து உலகத்தில் வந்தபோது, அவரைச் சிலுவைக்குப் போகாதபடி வேறு வழியில் திருப்ப எவ்வளவோ பிரயாசப்பட்டான். அவன் தந்திரம் பலிக்கவில்லை. ஆண்டவர் சிலுவைக்குச் சென்று மகத்தான ரட்சிப்பைச் சம்பாதித்தார். ஆகையால் ஆண்டவர் அருளும் ரட்சிப்பை நாம் பெற்றுக்கொள்ளாதபடி எவ்வளவோ வேலைகளை அவன் செய்கிறான். தங்கள் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதலடையாதவர்கள் அவன் வலையில் அகப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, அவருடைய சித்தத்தின்படி பிழைக்க நமக்கு மனமில்லையென்றால், கிறிஸ்தவர்கள் என்னும் பேரால் நமக்குப் பிரயோஜனம் என்ன?

பற்பல மார்க்கத்தார் உலகில் பெருகுவதுபோல கிறிஸ்தவர்களும் ஒரு **வகுப்பாராகத்** தொகையில் பெருகுகிறார்கள். ஞானஸ்நானக்காரர் ஐயாயிரம், இராப்போஜனக்காரர் மூவாயிரம் என்பதுபோல தொகையைக் குறித்து தேவ ஊழியர்களாகிய நாம் சந்தோஷப்படலாம். கிராமம் கிராமமாக மார்க்கத்தில் சேருவது நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கலாம். ஆனால் புறமதஸ்தர் பார்வையில் நாம் எப்படிக் காணப்படுகிறோம்? அவர்கள் கிறிஸ்துவை வெறுக்கிறவர்கள் அல்ல. சர்வ கலாசாலைகளில் படிக்கிற இந்து, மகதிய மாணாக்கர்களுக்கு வேதாகமம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அதைப் பிரியமாய்ப் படித்து கிறிஸ்துவின் ஒப்பற்ற ஜீவியத்தைப் புகழுகிறார்கள். அவர்களில் சிலர் அவரை உள்ளபடி வாழ்த்திப் போற்றுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு நமது சபையில் சேரப் பிரியமில்லை. **கிறிஸ்துவை** விரும்புகிறவர்கள் **கிறிஸ்து மார்க்கத்தை** வெறுப்பானேன்?



**“கிறிஸ்தற்ற கிறிஸ்துமார்க்கமே”** இதற்குக் காரணம். சபைகளிலுள்ள நமது காரியங்களை அவர்கள் கவனித்து இடறலடைகிறார்கள். கிறிஸ்துவை வெளிப்படுத்தவேண்டிய நாமே கிறிஸ்துவை மறைக்கிறோம். என் ஆண்டவரை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்களே, அவரை இங்கே காணோமே என்று மரியாள் கல்லறையண்டை நின்று புலம்பினதுபோல நமது சபைகளில் கிறிஸ்துவைக் காணாமல் தவிப்பவர்கள் அநேகர். அன்பின் அவதாரமாகிய கிறிஸ்துவை வெறுப்பார் இல்லை. கிரேக்கரைப்போல் “ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்” என்று இந்நாளிலும் கேட்பவர்கள் அநேகர். கிறிஸ்துவை வெளிப்படுத்தவேண்டிய நம்மிடத்தில் கிறிஸ்துவின் சாயல் காணப்படாவிட்டால் மற்றவர்கள் கிறிஸ்துவை எப்படிக் காண்பார்கள்? மற்றவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு நாமே தடையாயிருக்கிறோம்.

நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதினாலே ஆண்டவருக்குப் பிரியமான ஜனம் என்று எண்ணிக்கொள்ள வேண்டாம். இஸ்ரவேல் கர்த்தருக்குச் சொந்தமான ஜனமல்லவா? அவர்களுக்கு அவர் எவ்வளவோ கிருபைகளைக் கட்டளையிட்டார். அவர்களோ தேவனுக்குத் துரோகம்பண்ணி பொல்லாத காரியங்களை நடப்பித்தார்கள். மேலும் மேலும் பாவஞ்செய்தார்கள். கர்த்தரோ தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டு எச்சரித்துப் புத்தி சொல்லித் தம்மண்டை அன்பாய் அழைத்தார். அவர்கள் அவருக்குச் செவிகொடாமல் கெட்டுப்போனார்கள். இரட்சகர் வந்த நாட்களிலிருந்த அவர்களுடைய சந்ததியார் இன்னும் அதிக மோசமான நிலைமையிலிருந்தார்கள். மார்க்க விஷயத்தில் பக்தி வைராக்கியமுள்ளவர்களாக ஆராதனைகளை வெகு மும்மரமாக நடத்தினார்கள். ஆத்துமாவிலோ கல்லறைக் குழிக்குச் சமானமாயிருந்தார்கள். பாரம்பரியங்களையும் மனுஷருடைய

கற்பனைகளையும் ஜனங்களுக்குப் போதித்து தேவவசனத்தை அவமாக்கினார்கள். தங்களை மீட்டு ரட்சிக்கும்படி கிருபையாய் வந்த தேவ அன்பை முற்றிலும் பகைத்து சிலுவையிலறைந்து கொன்றார்கள். பேர் கர்த்தருடைய ஜனம்; நடக்கையோ அக்கிரமம். தங்கள் அக்கிரமங்களுக்கேற்ற பலனை அடைந்தார்கள். இன்னும் அடைகிறார்கள். மூடபக்தி எங்கே யுண்டோ அங்கே ஆண்டவருடைய உத்தம அடியார்களைப் பகைக்கும் சுபாவமும் உண்டு.

நமதாண்டவர் திரள் கூட்டத்தில் நம்பிக்கை வைத்தவரல்ல. அவர் மொத்தமாகப் பேசாமல் "ஒருவன், ஒருவன்" என்று தனித்தனி மனுஷனுக்கு அவர் பேசுவதை சுவிசேஷத்தில் காணலாம். ஆயிரமாயிரமானபேர் அவரை இடைவிடாது பின்சென்றார்கள். அவர் பேதுருவைப் பார்த்து: இவர்கள் என்பேரில் இவ்வளவு பிரியமாயிருக்கிறார்களே, என்னை விடாமல் தொடர்ந்து வருகிறார்களே, நீ தீர்த்தம் எடுத்து இவர்கள் எல்லார்மேலும் தெளித்து, இவர்கள் பேரை சபை டாப்பில் எழுதிக்கொள். ஒரு பிரமாண்டமான சபை நமக்குண்டாயிருக்கும் என்று சொன்னாரா? இக்காலத்தில் அவ்வளவு ஆவலோடு ஜனங்கள் நம்மைத் தேடிவருகிற தாயிருந்தால் மறுநாளே சபையிலே சேர்த்துக்கொள்ள மாட்டோமா? என்ன ஆனந்தமான காட்சி! எவ்வளவு சந்தோஷம்! இஸ்ரவேல் சபை பிரமாண்டமல்லவா? யூதச்சபை பிரமாண்டமல்லவா? பிரமாண்டம் தானே பாழாய் முடிந்தது. ஐரோப்பா கிறிஸ்தவ தேசம்! அமெரிக்கா கிறிஸ்தவ தேசம்! இன்று அங்கே என்ன காண்கிறோம்? உலகத்தை நிமிஷத்தில் அழிப்பதற்கு வேண்டிய குண்டுகளை ஆயத்தம்பண்ணி வைத்திருப்பதைக் காண்கிறோம். ஆண்டவரோ தம்மைப் பின்பற்றிவந்த திரளான ஜனங்களைப் பார்த்து: எனக்குச் சீஷராயிருப்பது லேசான காரியமல்ல, ஒருவன் எனக்குச்



சீஷனாயிருக்க விரும்பினால் அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை எடுத்து, அனுதினமும் என்னைப் பின் பற்றவேண்டும் என்றார். வரவர அவருடைய போதனைகளை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் அநேகர் அவரை விட்டு விலகிப்போனார்கள். ஆலயத்திற்குப் போவதும் ஆராதனை செய்வதும் நமக்குச் சந்தோஷமாயிருக்கிறது. அதுதான் கிறிஸ்துமார்க்கம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். நமது ஜீவியம் முற்றிலும் மாற்றப்பட வேண்டுமென்பதும், நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டுமென்பதும் நமக்குச் சங்கடமா யிருக்கிறது. நாம் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பிரயோஜனமென்ன? ஆண்டவர் நம்மைத் தமது அடியாராக ஒப்புக்கொள்வாரா? **கிறிஸ்துவின் சிந்தை யுள்ளவர்களே கிறிஸ்தவர்கள்.** "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." அவரவர் தன் சொந்த ஜீவியத்தைப் பற்றிக் கவலைப்படவேண்டும். நமது ரட்சிப்புக்கு நாமே பொறுப்பு. நமது **சம்மதமின்றி** ஆண்டவர் நம்மை ரட்சிக்கமுடியாது. நமது சீர்கெட்ட நிலைமையை நாம் உணர்ந்து, கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, இரக்கத்துக்காகக் கெஞ்சும் போது, மனதுருக்கம் நிறைந்த ஆண்டவர் அருமையாய் நம்மை ஏற்றுக் கொள்ளுகிறார். நம்மை அவருக்கு ஒப்புவிக்கும்போது அவர் நமக்குள் வாசம் பண்ணி, நமது ஜீவியத்தைத் தமது சாயலுக்கொப்பாக மாற்றி நம்மை ஆசீர்வதிக்கிறார். இது வெறும் உபதேசமல்ல, நிச்சயமாய் நடக்கிற காரியம். இவ்வித அனுபவத்தைப் பெற்ற மக்கள் பாக்கியவான்கள். இவ்விதமான ரட்சிப்பின் மாறுதல் சபைகளில் காணப்படவேண்டுமென்கிற ஊக்கத்தோடே உழைக்கிற போதகர்கள் பாக்கியவான்கள். கிறிஸ்தற்ற மனுஷரை ஜீவியத்தில் ஆவிக்குரிய மாறுதல் இல்லாதவர்களை,

சபையாராக வைத்துக்கொண்டு ஆண்டவர் நாமத்துக்கு அவமானத்தை உண்டாக்குவதைப் பார்க்கிலும் அப்படிப்பட்ட சபைகள் இல்லாமற்போவது நல்லது. கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட யூதச்சபையின் அழிவு நமக்கு எச்சரிப்பு (ரோம. 11:20-22).

நடுநிலைமை என்பதில்லை. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டும் அவரை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்க முடியாது. ஜீவியத்தில் மாறுதலடைந்தும் மாறுதலடையாமலும் இருக்கமுடியாது. கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டியாகியும் புதுச் சிருஷ்டியாகாமலும் இருக்கமுடியாது. ஒருவன் நோயாளியும் சுகதேகியுமாயிருக்க முடியாது. ரட்சிப்பின் விஷயத்தில் ஆண்டவர் நமக்குச் சந்தேகத்தையல்ல, நிச்சயத்தைத் தந்திருக்கிறார். நீங்கள் ரட்சிப்பின் மாறுதலடைந்து ஆண்டவருக்குப் பிரியமாய் நடக்கிறதா யிருந்தால் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். இல்லையானால் நாங்கள் ரட்சிக்கப்பட வில்லையே, கர்த்தருக்குப் பிரியமாய் நடக்கவில்லையே, ஆண்டவர்மீது எங்களுக்கு அன்பில்லையே, நாங்கள் பேருக்கு மாத்திரம் கிறிஸ்தவர்களாயிருக்கிறோமே என்று நடக்கும் போதும், இருக்கும்போதும், வேலைசெய்யும்போதும், சாப்பிடும்போதும், படுக்கும்போதும் சொல்லிக் கொண்டேயிருங்கள். அப்படியாவது உணர்ச்சி உண்டாகட்டும். தங்கள் ஆத்துமநிலைமையை உணராமலே அநேகர் கெட்டுப்போகிறார்கள். நமது ஜீவியத்தில் மாறுதல் இல்லாமலும், நாம் ஆண்டவருக்குப் பிரியமாய் நடக்காமலும் இருக்கும்போது, நமது ஞானஸ்நானம், நற்கருணை, ஆலய ஆராதனைகள், பிரசங்கக் கேள்விகள் ஜெபக் கூட்டங்கள் நம்மைப் பரம மகிமையில் சேர்க்குமென்று எண்ணிக் கொண்டிருப்பது பெரிய வஞ்சகமல்லவா? இந்தக் கொடிய வஞ்சகத்திலிருந்து ஆண்டவர் சபைகளை ரட்சிப்பாராக.



## 5. கர்த்தருக்குப் பிரியமாய் நடக்கும் ஜீவியம் எப்படிக் கிடைக்கும்

ஆண்டவருக்குப் பிரியமாய் நடக்கவும் அவர் சித்தம்போல் பிழைக்கவும் நம்மால் முடியுமா என்பது ஒரு கேள்வி. நம்மால் **முடியாதென்பதே** அதற்கு உத்தரவு. நம்மால் முடியாததை **தேவன் நம்மில் நிறைவேற்றுகிறார்.** பிரசங்க வசனத்தைப் பார்ப்போமானால் **“தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு”** என்று சொல்லியிருக்கிறதைக் காண்போம். இந்த மேலான, ஜீவியத்திற்கு இரகசியம் அதுதான். “மனுஷனால் கூடாதது தேவனால் கூடும்” என்று ரட்சகர் சொன்னார். இரண்டு முக்கியமான சத்தியங்களை நாம் மனதில் வைக்கவேண்டும். ஒன்று, நாம் ஒன்றுமில்லை என்பது. மற்றது, ஒன்றுமில்லாத நம்மில் **“தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு** தமக்கு முன்பாகப் பிரியமானதை நம்மிலே நடப்பித்து, நாம் அவருடைய சித்தத்தின்படிச் செய்ய நம்மைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குகிறார்” என்பது நமது தீர்மானமல்ல, நமது பிரயாசமல்ல, தேவனே தமது குமாரனைக்கொண்டு இந்த மேலான ஜீவியத்தை நம்மில் நடப்பிக்கிறார். இது **தேவன் நமக்குள் நடப்பிக்கும் வேலை.** இதற்கு நமது **பூரண சம்மதம்** வேண்டும்.

“நான் ஒன்றுமில்லை, கிறிஸ்துவே எனக்கு எல்லாமாயிருக்கிறார்” என்னும் சத்தியத்தைக் கற்றுக் கொண்டவர்கள் திருச்சபையில் சிறந்த பரிசுத்தவான்களாக விளங்கினார்கள். ஜெர்மனியிலிருந்த எளிய பக்தனான ஜேக்கப் பீமன் என்பவர் இந்தச் சத்தியத்தின்பேரில் ஒரு சிறிய புஸ்தகம் எழுதியிருந்தார். ஆங்கிலேய பக்தனான உல்லியம் லா என்பவர் மிகவும் பழமையான அந்தப் புஸ்தகத்தை ஓர் கடையில் கண்டு அதை வாங்கி ஆவலோடே படித்தார். இதனால் அவரடைந்த ஆசீர்வாதம் அதிகம். அவர் எழுதியுள்ள புஸ்தகங்கள் மிகச்

சிறந்தவைகள். தென் ஆப்பிரிக்காவிலிருந்த சிறந்த பக்தனான ஆன்ரூமறே போதகர் உல்லியம் லாவின் ஒப்பற்ற புஸ்தகங்களைப் படித்து அநேக அருமையான புஸ்தகங்களை எழுதினார். உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்கு அவைகள் இன்னும் ஆசீர்வாதமாயிருக்கின்றன. இவர்களும் இவர்களைப் போன்றவர்களும் தங்களுடைய ஒன்றுமில்லாமையை நன்குணர்ந்து, ஆண்டவருக்குத் தங்களைப் பூரணமாய் உண்மையாய் ஒப்புக்கொடுத்ததினால், அவர் அவர்களுக்குள் வாசம்பண்ணி, அவர்களை ஆசீர்வதித்து, அநேகருக்கு அவர்களை ஆசீர்வாதமாக்கினார். இதுதான் ரகசியம்.

நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து பாவமற்றவராயிருந்தும், தாம் ஒன்றுமில்லை யென்றும், தாம் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லையென்றும், தம்மில் வாசமாயிருக்கிற பிதாவே தமது மூலமாய் எல்லாவற்றையும் செய்கிறார் என்றும் திரும்பத்திரும்பச் சொல்லியிருக்கிறார். கிறிஸ்துவின் சிந்தையை உடையவராயிருந்த பரிசுத்த பவுலின் மேலான ஜீவியத்தின் ரகசியமும் அதுதான். அவர் தமது ஒன்று மில்லாமையை உள்ளபடி உணர்ந்திருந்தார், அதுபோலவே தமக்குள் வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கும் கிறிஸ்துவின் பரிபூரணத்தையும் அறிந்திருந்தார். “என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது” என்று ஆண்டவர் சொல்லும்போது: “என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு” என்று பவுல் முழங்குகிறார் (யோ. 15:5; பிலி. 4:13). கூடாமை கூடிற்று.

அருமையான சகோதரனே, சகோதரியே, இந்த ஆசீர்வாதமான ஜீவியத்திற்குட் பிரவேசிக்க உண்மையாய் விரும்புகிறாயா? நீ ஆசீர்வதிக்கப்படவும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கவும் உனக்கு வாஞ்சையுண்டா? கர்த்தருக்குப் பிரியமாய் நடக்கவும் அவர் சித்தம்போல்



பிழைக்கவும் உனக்கு மனதுண்டா? நாம்தான் இதைத் தீர்மானிக்கவேண்டும். நமக்கு **மனதில்லையென்றால்** சர்வவல்லமையுள்ள கடவுளாலும் நம்மை ஆசீர்வதிக்கமுடியாது. நமக்கு மனமானால் அன்புள்ள ஆண்டவர் இப்பொழுதே நமக்குள் பிரவேசித்து இந்த மேலான ஜீவியத்தில் நம்மை நடத்த வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். இனி நாமல்ல, கிறிஸ்துவே நமக்குள் பிழைக்கிறவர். **எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமானதைச் செய்து, அவருடைய சித்தத்தின்படி பிழைத்த** இயேசுகிறிஸ்து தாமே தமது ஆவியின் மூலமாய் நமக்குள் வந்து, தம்மை நமக்குள்ளும் நமது மூலமாகவும் வெளிப்படுத்துகிறார். மற்றவர்கள் நம்மில் காணும் இந்த மேலான ஜீவியம் அவருடையதேயல்லாமல் நம்மாலாகிறதல்ல. அவருக்கும் நமக்குமுள்ள இந்த ஐக்கியத்தை வேதவசனத் தியானத்தாலும், விசுவாசத்தாலும் தனி ஜெபத்தாலும், நாள்தோறும் புதுப்பித்துக் கொண்டே போக வேண்டும். இவ்வாறு இடைவிடாமல் நாம் அவரைச் சார்ந்து பிழைக்கும்போது, அவர் நமது ஜீவியத்தைக் கனிகள் நிறைந்ததாக்குகிறார். தமது சாயலுக்கு ஒப்பாக நம்மை மாற்றுகிறார். அநேகருக்கு நாம் ஆசீர்வாதமாயிருப்போம். பிதாவுக்கு மகிமையுண்டாகும். தன்னை முற்றிலுமாய் ஆண்டவருக்கு ஒப்புவித்து, அவரையே சார்ந்து பிழைக்கும் ஒரு விசுவாசியைக்கொண்டு, அவர் செய்யக்கூடிய காரியங்களை அளவிடமுடியாது. அவர்கள் தங்கள் ஜீவியத்தில் மகிமையின் மேல் மகிமையடைந்து நித்திய மகிமைக்குள் பிரவேசிக்கிறார்கள்.

எங்களை மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும் என்று **ஜெபிக்கிறவர்கள்** மோட்சமகிமையைக் காண்பது சந்தேகம். மகிமைக்குப் போகிற வழியில் **நடக்கிறவர்களே** மகிமைக்குள் பிரவேசிப்பார்கள். நமக்குள் ஜெபிக்கிறவர்கள் சரீரத்துக்கு வேண்டிய சகல காரியங்களுக்காகவும் வேண்டிக்கொண்டபின்,

இவைகள் யாவற்றையும் எங்களுக்குக் கொடுத்துக் **கடைசியிலே** உமது நித்தியராஜ்ஜியத்திலே சேர்த்துக் கொள்ளும் என்று சொல்லி ஜெபத்தை முடிப்பார்கள். மோட்சத்திற்காக ஜெபிப்பது தப்பிதம் என்று நாம் சொல்லுகிறதில்லை. கிறிஸ்துவைச் சொந்தமாக்காமலும் அவருடைய சித்தத்தின்படி பிழைக்காமலுமிருக்கிறவர்கள் மோட்சத்திற்காக ஜெபிப்பது தவறு. நமது ஜெபங்களைக்கேட்டு எத்தனையோ சரீர நன்மைகளை நமக்குக் கொடுக்கும் ஆண்டவர் நாம் **வேண்டிக் கொண்டதினிமித்தம்** மகிமையிலே நம்மைச் சேர்க்க முடியாது. **மகிமையிலே சேர மகிமைக்குரிய தகுதி வேண்டும்.** அந்தத் தகுதியும் மோட்ச உரிமையும் கிறிஸ்துவினால் நமக்குக் கிடைக்கிறது. அவரே மகிமைக்கு வழி. அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவன் மோட்சத்திற்காக ஜெபிக்கமாட்டான். விவாகமான ஒரு பெண் தன் புருஷனைப் பார்த்து: நீங்கள் வசிக்கப்போகிற வீட்டில் எனக்கும் கொஞ்சம் இடங்கொடுப்பீர்களா என்று கேட்டால் எப்படியிருக்கும்? அருமை மனைவியே என்னுடையவைகள் யாவும் உன்னுடையவைகளாயிருக்க நீ இப்படி என்னைக் கேட்கலாமா? நீ இப்படிக் கேட்டது எனக்கு ஆச்சரியமும் துக்கமுமாயிருக்கிறதென்று புருஷன் சொல்ல மாட்டானா? மகிமையின் ஆண்டவர் நமக்குச் சொந்தமாயிருக்கும்போது அவருடைய மகிமையின் ராஜ்யம் நமக்குச் சொந்தமாகாதா? அவர் எங்கே இருப்பாரோ அங்கே நாமும் அவரோடே கூடயிருப்பது நிச்சயமல்லவா? ஆகையால் அவரைச் சொந்தமாக்காமலும், அவர்மூலமாய் பரம மகிமைக்குத் தகுதியாக்கப்படாமலும் இருக்கிறவர்கள், மோட்சத்திற்காக எவ்வளவு ஊக்கமாய் ஜெபித்தாலும் அந்த மகிமையில் அவர்கள் பிரவேசிப்பதில்லை. இதை அறியாமலும் உணராமலும் இருக்கிற "கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்கள்" சபைகளெங்கும்



திரளாயிருக்கிறார்கள். பீச்சு ஸ்டேஷனில் ஒருவன் முழங்காலில் நின்று: ஆண்டவரே, என்னை செங்கல்பட்டில் சேரும் என்று ஊக்கமாய் ஜெபித்துக் கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஜனங்கள் டிக்கட்டு வாங்குகிறதும் வண்டியில் ஏறுகிறதுமாயிருக்கிறார்கள். நேரம் வந்தவுடனே வண்டி புறப்பட்டது. வண்டிக்குள்ளிருந்தவர்கள் செங்கல்பட்டு சேர்ந்தார்கள். தங்களை செங்கல்பட்டில் சேர்க்கும்படி அவர்கள் ஜெபித்தவர்கள் அல்ல. ஆனால் சேரவேண்டிய வழியைக் கைக் கொண்டார்கள், போய்ச் சேர்ந்தார்கள். செங்கல்பட்டில் சேரும் என்று ஜெபித்தவனோ இன்னும் இங்கே தானிருக்கிறான். நித்திய மகிமையின் அதிபதியாகிய இயேசுகிறிஸ்து மோட்சத்திற்கு வழியாயிருக்கிறார். அவரைச் சொந்த மாக்காமலும், அவருக்குள் பிழைக்காமலுமிருக்கிறவர்கள் மகிமையின் ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டார்கள். ஆண்டவருக்குப் பிரியமாய் நடந்து அவருடைய சித்தத்தின்படி பிழைக்கிறவர்கள் இப்பொழுதே பரத்தில் குடியிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவன் கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது. "நமது ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவோம்." அநேகருக்கு மகிமைக்குட் பிரவேசிப்போம் என்கிற நம்பிக்கையோ நிச்சயமோ கிடையாது. இவர்கள் ஏன்தான் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்களோ தெரியவில்லை. நாம் சரீரத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவோடுகூட பிதாவின் வீட்டில் பிரவேசித்து, பரம மகிமையில் சதாகாலமும் சஞ்சரிப்போம் என்கிற நிச்சயமே கிறிஸ்து மார்க்கத்துக்கும் மற்ற மார்க்கங்களுக்குமுள்ள பெரிய வித்தியாசம். "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களா யிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாயிருப்போம்" (1 கொரி. 15:19).

*****



## அருள்திரு சா. பரமானந்தம் ஐயரின் நூல்கள்

கிருபைப் பிரவாகம்
இருதயத்தில் கிறிஸ்து
நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்
ஏழு வார்த்தைகள்
கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்
சுவிசேஷப் பிரசங்கங்கள்
கிறிஸ்தவ ஜீவியம்
என் சுய சரிதை

## வெளிவர இருப்பவை:

கிறிஸ்துவின் ஜீவியம்
நூறு பிரசங்கங்கள்
கிறிஸ்துவின் சிந்தை

CHRISTHATRA CHRISTHU MĀRKKAM
NEENGAL ARIYADIRUKKIRA ORUVAR
CHRISTHAVA JEEVIAM

by Rev S. Paramanandam Iyer


விலை ரூ. 80/-
(இந்தியாவில் மட்டும்)